ஒரு சிற்பி பேசுகிறான் - வரிசையில் 5

விண்ஞானக் கோயில்கள்

Temples of Space-Science



விண்பொருள்



"Sa bhūmim Vishwato Vrutvā
Atya tishtad dasāngulam"



மண்பொருள்

வை. கணபதி ஸ்தபதி

ஒரு சிற்பி பேசுகிறான் - வரிசையில் 5

4.1.97

விண்ஞானக் கோயில்கள்
Temples of Space-Science

ஆசிரியர்

வாஸ்துவேதி, வாஸ்துவிஞ்ஞானி
வை. கணபதி ஸ்தபதி

வாஸ்துவேத ஆய்வு நிறுவனம், சென்னை-41.

Published by :

'Vastu Purusha' Publishing House,
B-2, Geethalaya Apts.,
3rd Sea Ward Road, Valmiki Nagar,
Thiruvanmiyur, Madras-600 041.
Phone : 044-4916563 (Madras)

First Edition, April, 1995

Price **Rs. 50.00**

Computer Typeset & Printed by

M/s. Sriram Softwares Services, Madras - 41.

விண்ஞானக் கோயில்கள்
Temples of Space-Science

உள்ளுரை

6-4

நெஞ்சுரை

(காணிக்கை)

உழைப்பால் - உணர்வால் - கலைப்பணியால் தாம் பெற்ற ஆன்ம இன்பத்தையும் சுகத்தையும் இந்நாட்டு மக்கட்குப் பகிர்ந்தளித்து, தலைமுறை தலைமுறையாய் ஓயாது ஒதுங்காது, கலைச்சேவை செய்துவந்து, இவ்வுயரிய விஞ்ஞானக் கலை மரபைக் காப்பாற்றித் தந்திட்ட பண்டைச் சிற்பிகள்தம் பொற்பாத கமலங்களில் இச்சிறிய ஏட்டினைச் சமர்ப்பிக்கின்றேன்.

ஆண்டாண்டு காலமாய் இம்மரபுக்கு ஆதரவு நல்கி சிற்பியர் நலம் பேணிய மன்னர்கட்கும், ஞானியர்க்கும், செட்டிநாட்டு அரசர்கட்கும், தமிழ்நாட்டு அமைச்சர் பெருமக்கட்கும் இந்த நூலைக் காணிக்கையாக்கி மகிழ்ச்சியடைகிறேன்.

– வை. கணபதி ஸ்தபதி

விண்ணுரை

"விண்ஞானக் கோயில்கள்" என்ற தலைப்பில் எழுதப்பட்ட இவ்வேட்டில் பல்வேறு ஞான நூல்களிலிருந்தும், வாஸ்து நூல்களிலிருந்தும், மயன் மரபிலிருந்தும் எடுத்தாளப் பெற்ற விஞ்ஞானச் செய்திகள் அனைத்தும் விண்ணியல் தொடர்பான உரைகளாக இருப்பதால் அவற்றை 'விண்ணுரை' என்றே சுருக்கிச் சொல்லி, அவ்வுரைகளைக் கீழே தொகுத்தளித்திருக்கிறேன். இவ்வுரைகளுக்குள்ளே நுழைந்து, ஆய்ந்து அவற்றின் கருத்துக்களை பண்டுதொட்டு நிலவிவரும் தொழில் நுட்பவியலோடு ஒட்டிப் பார்த்துத் தேர்ந்து பல விளக்கங்களையும் இந்நூலிலே சொல்லியிருக்கிறேன்.

என் அனுபவத்துக்கு ஒத்து நிற்பதும், வாஸ்து மரபு வழிப்பட்ட தொழில் நுட்பங்களோடு இசைந்து விளங்குவதுமான பல்வேறு விண்ணுரைகள் மேலும் இருப்பினும் எடுத்துக் கொண்ட தலைப்புக்கேற்ற ஒருசில இன்றியமையா உரைகளையே இங்கே தந்திருக்கிறேன் என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த உரைகளின் சாரத்தை மட்டும் சொல்ல வேண்டுமானால், ஒளிமிகுந்த விண்ணே ஆற்றிலின் இருப்பிடமாய் - அனைத்து ஞாலப் பொருட்களின் பிறப்பிடமாய் - விளங்குகிறது என்ற விண்ணியல்

நுட்பத்தையும், விண்ணே மண்ணாகத்திரிபுறுகிறது என்ற அத்வைத நுட்பத்தையும், விண்பொருளே வடிவம் தாங்கிய சொற்பொருளாகவும் தெரிபொருளாகவும் திரிபுறுகிறது என்ற விஞ்ஞான நுட்பத்தையும் குறிப்பிடலாம்.

மேலும் இவ்விண்ணுரைகளுக்கு இடமாய்த் தமிழும் சமஸ்கிருதமும் விளங்குவதை இடையிடையே உணர்த்தியுமிருக்கிறேன். இக்கால விஞ்ஞானம் கற்ற இளையோர் எளிதில் புரிந்து கொள்வதற்காக நான் கையாளும் மரபுக் கலைச் சொற்களுக்கு நிகர்த்த ஆங்கிலச் சொற்களையும் பயன்படுத்தியிருக்கிறேன்.

தொல்பழங்காலத்தில் தோன்றி, இடைக்காலத்தில் தொய்வுற்று, வரலாற்றுக் காலத்தில் மாற்றுருக் கொண்டு விளங்கிவருகின்ற தொல் பழங்கருத்துக்கள் மீண்டும் உயிர் பெறல் வேண்டுமென்ற எனது இலட்சியத்தை ஓரளவு இந்நூலில் பல இடங்களில் தொட்டுச் சென்றிருக்கிறேன்.

உலக மாந்தர் இனங்கள் அனைத்தையும் ஒருசேர இணைத்து ஒருமுனைப்படுத்தும் ஆற்றலானது விஞ்ஞானத்திற்கே உரியதாகும்; விஞ்ஞானத்திற்கே சாத்தியமாகும். அந்த உயரிய விஞ்ஞானத்தை அனுபவ நிலைக்குக் கொணர்ந்து எல்லோரும் உடல் நலமும் ஆன்மநலமும் பெற்று, இன்பமும் அமைதியும் துய்த்து, இந்நிலவுலகிலேயே பரசுகம் காண வைத்திடப் பணி செய்வதே வாஸ்து விஞ்ஞானத்தின் தலையாய நோக்கம் என்பதை இங்கே சொல்லிடக் கடமைப் பட்டவனாகிறேன். இக்கருத்தை பின்வரும் விண்ணுரைகள் மெய்ப்பிப்பதைக் காணலாம்.

இந்த ஆன்மிக நிலையை மாந்தர் இனம் இந்த நிலவுலகிலே எய்திட, வெறும் சொல்லால் மட்டும் சொல்லிவிட்டு மறைந்திடாது, கணக்கியல் வழி நின்று, நிலைத்த பொருள்களாக ஆக்கித் தருவதே வாஸ்துத் தொழில் நுட்பத்தின் ஆற்றல் என்பதையும் சுட்டிக் காட்டியிருக்கிறேன்.

மயமத வஸ்து சாஸ்திரம்

प्रासादादीनि वास्तूनि वस्तुत्वात् वस्तुसंश्रयात् ।

वस्तून्येव हि तान्येव प्रोक्तान्यस्मिन् पुरातनैः ॥

वस्तुरेव वास्तु ।

परमाणुरिति प्रोक्तं योगिणां द्रृषिगोचरम्

परमाणु क्रमाद् वृद्धं मानाङ्गुलमितिस्मृतम्

सर्वात्मीयं लिंगं आकाशमेव

नागरं शात्विकं प्रोक्तं

राजसं द्राविडं भवेत्

वेसरं तामसमित्युक्तम्

மானசார வாஸ்து சாஸ்திரம்

विमानादीनि वास्तूनि वस्तुतः वस्तुसंश्रयात् ।

तान्येव वस्तुरेवेति कथितं वस्तुविद्बुधैः ॥

சில்பரத்னம்

प्रासादं पुरुषं मत्वा पूजयेत् मन्त्रवित्तमः ।

வேத-உபநிஷத வாக்கியங்கள்

सर्वं खल्विदं ब्रह्म,तत्वमसि,अहंब्रह्मास्मि

रसो वै सः,सो वै रसिकः

द्वे ब्रह्मणी वेदितव्ये शब्दब्रह्म परंचयत् ।
शब्द ब्रह्मणि निष्णातः परं ब्रह्माधिगच्छति ॥

अणोरणीयानू महतो महीयान्

तमसो मा ज्योतिर्गमय

नतत्रसूर्यो भाति नचन्द्रतारकं ।
नेमे विद्युतो भान्ति कुतोयमग्निः ॥
तमेव भान्तं अनुभाति सर्वं ।
तस्य भासा सर्वमिदं विभाति ॥

மயசூத்திரங்கள்

भूमिः प्रधान वस्तु स्यात्
स्थपतिः सर्वशास्त्रज्ञः वेदविच्छास्त्रपारगः

காலமே எவைக்கும் மூலம் காலமே மூல ஆற்றல்
காலமே கோலத் தோற்றம் காலமே ஞாலத் தோற்றம்
காலமே விந்தை செய்யும் காலமே நுணுக்க மாயும்
காலமே அணுக்கள் ஆயும் காலத்தின் ஆற்றல் என்னே!

ஸ்ரீமத் ஸ்காந்தம்
காலः ஸ்ருஜதி भूतानि காலः ஸம்ஹரதி प्रजाः
ஸர்வேகாலஸ்ய வशாகாः ஸகாலோ தஸ்ய வஶேஸ்திதாः
சில்ப வித்யா ரஹஸ்யோபநிஷத்
जगत् सर्वं शिल्पमेव भवति , शिल्पात् प्रतिमाः जायन्ते

அணிதிகழ்

அகழ்வுரை -அறிவுரை

"விண்-ஞானக் கோயில்கள்" என்று பெயர் தாங்கி வரும் -கட்டுரை வடிவிலான - இந்த நூலைப் பற்றி அணிந்துரை யொன்று வரைந்து தர வேண்டும் என்று திரு.வை.கணபதி ஸ்தபதி அவர்கள் என்னை கேட்டுக்கொண்டபோது அதனைச் செய்திட ஒப்புக்கொண்டேன். ஆனால் இப்பணியில் இறங்கிட எனக்கு என்ன தகுதியிருக்கிறது என்று அவ்வணிந்துரையைப் படித்துப் பார்க்கும் ஆய்வர்களுக்கு ஐயமேதும் தோன்றுமானால் அந்த ஐயம் தீர்த்திடல் எனது முதற்பணியாகும் என்பதை உணர்கிறேன். அடிப்படைக் காரணம் யாதெனில், நான் அவருடைய வாஸ்துமரபைச் சேர்ந்தவனல்லன்; ஒரு சிற்பியுமல்லன், நான் நவீனமரபு வழிவந்த கட்டிடங்கட்டும் ஒரு பொறியாளன் (Civil Engineer). ஆகவே, இந்த நிலையில் என்னைப்பற்றிய ஒரு சில செய்திகளையும் இந்த வாஸ்து மரபோடும் மரபினரோடும் நெருக்கம் கொண்டிட எனக்குக் கிடைத்திட்ட வாய்ப்புக்கள் பற்றியும் இங்கேகுறிப்பிட வேண்டியவனாகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் முக்கியமாக ஒன்றை நான் சொல்ல வேண்டியவனாகின்றேன். அது யாதெனில், எனக்கும் திரு.வை. கணபதி ஸ்தபதியார் அவர்களுக்கும், அவரது வாஸ்து மரபுக்கும் விஞ்ஞானக் கொள்கைக்கும் ஏற்பட்டுவிட்ட நெருக்கத்தை எனது முன்னுரையாகச் சொல்லிட கடமைப்பட்டவனாகிறேன்.

நான் நவீனகாலக் கல்வி முறையிலே படிப்பும் பயிற்சியும் பெற்ற ஒரு பொறியாளன். மேலைநாட்டில் வளர்ந்தோங்கிய விஞ்ஞானத்தையும் அது தொடர்பான தொழில் நுட்பங்களையும் படித்துப் பட்டம் பெற்று, அத்துறையில் பல நிர்மாணப்பணிகளை ஏற்றுச் செய்து அனுபவப்பட்டவன். அதன்பின், சுமார் 25 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாடு அரசு சார்ந்த தொழில் நுட்பக் கல்வித் துறையில் தொழிற்கல்வி தொடர்பான "திட்டம் மற்றும் வளர்ச்சி" ப் (Planning and Development) பணிகளுக்கான பொறுப்புமிகுந்த ஓர் இடத்தில் பணியாற்றியிருக்கிறேன். அப்பொழுது தமிழ் மாநிலத்தில் செயல் பட்டுக்கொண்டிருந்த 25 பொறியியல் கல்லூரிகளோடும் 120க்கும் மேற்பட்ட தொழில் நுட்பப் பயிலகங்களோடும் மேலும் எட்டுச் சிறப்புப் பயிலகங் களோடும் நேரடித் தொடர்பு கொண்டிருந்தேன். இதனால் நவீன விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் பரந்த அனுபவம் கிடைப்பதாயிற்று.

அந்த நிலையில் 1957 முதல் 1973 வது ஆண்டு வரை தொழில் மற்றும் வணிகத்துறையின்கீழ் (Department of Industries and Commerce) தோன்றி வளர்ந்து வந்த மாமல்லபுரச் சிற்பக்கலை மற்றும் கட்டிடக்கலைப் பயிலகமானது, அதனுடைய மேல் வளர்ச்சியை முன்னிட்டு, தொழில் நுட்பக் கல்வித் துறைக்கு (Department of Technical Education) தமிழ்நாடு அரசால் மாற்றப்பட்டது. அதன் விளைவாய் 1973-ஆம் ஆண்டிலிருந்து அரசுப் பணியிலிருந்து 1988-ஆம் ஆண்டில் ஓய்வு பெறும்வரையிலான அந்த 15 ஆண்டு கால இடைவெளியில், நான் மாமல்லபுரக் கல்லூரியின் மேம்பாட்டுக்கான திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றில் நெருங்கிய தொடர்பு கொள்ளும்

வாய்ப்பைப் பெற்றேன். அப்பொழுதுதான் முதன் முதலில் (1973ல்) ஸ்தபதியார் அவர்களுடைய தொடர்பும் நட்பும் எனக்கு ஏற்படுவதாயின. அரசுப் பணியிலிருந்து இருவரும் ஓய்வு பெற்ற பின்னர் நான் இன்றுவரை ஸ்தபதியாருடன் சேர்ந்திருந்து அவர்தம் ஆய்வுப் பணிகளையும், அறிஞர்களோடு அவர் நிகழ்த்திய உரையாடல்களையும் ஆர்வத்தோடு உற்றுக் கவனித்திடும் வாய்புக்களையும் பெறலானேன். இப்போது அவருடைய கலைப் பணிகளிலும் பங்கேற்று இணைந்து செயல்பட்டும் வருகிறேன். இவ்வரிய வாய்ப்புகள் மூலம் வாஸ்துமரபின் அதிநுட்ப விஞ்ஞானச் செய்திகளையும், தொழில் நுட்ப அருமைப்பாடுகளையும் ஓரளவு தெரிந்து கொண்டவ்ன் என்ற முறையில் என் கருத்துக்களை அறிஞர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். இயற்கையிலே, இசைத்துறையிலேயும் பொறியியல் துறையிலேயும் ஆர்வம் கொண்ட எனக்கு இந்த வாஸ்து மரபு சார்ந்த துறையில் என்னை அறியாமலேயே ஓர் ஈடுபாடு ஏற்பட்டுவிட்டது என்றும் சொல்லிட விரும்புகிறேன். இசையிலக்கணத்தோடு வாஸ்து இலக்கணமானது இணையாகச் சென்று கொண்டிருப்பதைப் புரிந்து கொண்டதின் விளைவுதான் இதற்கெல்லாம் ஓர் அடிப்படை என்பேன்.

ஒரு சிறிய பயிற்சி நிலையமாக இருந்த ஸ்தபதி அவர்களின் மாமல்லபுரப் பயிலகத்தை ஒரு பெரிய கல்லூரியாக்கிச் சென்னைப் பல்கலைக்கழகத்தோடு இணைத்து வைத்து, வாஸ்து மரபுக்கு ஓர் உயர்வையும் வலுவையும் ஈட்டித்தர ஆர்வம் கொண்ட, முன்னாளில் தொழில்நுட்பக் கல்வித்துறை இயக்குநர்களாகவும், பின்னாளில் அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர்

ளாவும் திகழ்ந்திட்ட டாக்டர். பி.சிவலிங்கம். அவர்களோடும் அதைத் தொடர்ந்து டாக்டர் வி.சி. குழந்தைசாமி அவர்களோடும், மேலும் திரு. எஸ். வையாபுரி அவர்கள் திரு. வி.ஸ்ரீனிவாசன் அவர்கள் ஆகியோரோடும் இணைந்து செயலாற்றிய காலத்தில் அம்மரபோடு ஏற்பட்ட கட்டாயத் தொடர்பு, ஒரு நெருக்கத் தொடர்பாக மாறிவிட்டது. அப்போது கல்லூரி முதல்வராயிருந்த திரு.வை.கணபதி ஸ்தபதி அவர்களோடு நான் அவ்வப்போது அவருடைய கல்லூரிக்குச் சென்று வரும்போதும், அன்னார் இயக்ககத்திற்கு கல்லூரி அலுவலின் பேரில் வந்து போகும் போதும், நான் கொண்டிருந்த அடிப்படைக் கலை ஆர்வத்தின் காரணமாக, பல ஆய்வுக் கணைகளைத் தொடுத்திருக்கின்றேன். துருவித்துருவி பல செய்திகளைக் கேட்டறிந்திருக்கிறேன். அவற்றுக்கான விளக்கங்களையும் ஆதாரங்களையும் சளைக்காமல் என்னிடம் சொல்லியிருக்கிறார். எத்துணைதரம் கோயிலுக்குப் போயிருந்தாலும், அங்கு செய்யப்பட்டிருக்கும் காட்சிகளை எவ்வளவுதான் ரசித்திருந்தாலும், அவை யெல்லாம் ஏன், என்ன, யாரால், எந்த உணர்வில், எந்தக் கணக்கில், எத்தகைய தொழில் நுட்ப அடிப்படையில், எப்படி இயற்றப்படுகின்றன என்ற செய்திகளை கேட்டறிந்து எனக்குள்ளே இருந்த பல ஐயப்பாடுகளைக் களைந்து கொண்டிருக்கிறேன். அவ்வப்போது மரபின் ரகசியங்களை அவர் விளக்கிச் சொல்லச் சொல்ல எனது ஆர்வமும், அறிவும் கொஞ்சம் கொஞ்சமாக மேலோங்கி வருவதாயிற்று. அங்ஙனம் புரியச் சொல்லிய காரணத்தினால் எங்கள் இயக்ககப் பணியாளர் அனைவருமே அக்கல்லூரியைப் பெரிதென மதித்து, அன்பு கொண்டோம். அதனால் நல்ல பல திட்டங்களை அக்கல்லூரியில் புகுத்தி, அக்கல்லூரியின் பயிற்சிகளையும், பாடங்களையும் திருத்தியமைத்தோம். இசை,

மற்றும் நடம் ஆகிய பாடங்களைச் சேர்க்க வேண்டுமென்று ஸ்தபதியார் சொல்லிய போது விவரங்கேட்டு, தொடர்ப்றிந்து வியந்துபோய் அவற்றைப் பாடத்திட்டத்தில் (curriculum) சேர்த்துக் கொடுத்தோம். அங்ஙனமே நவீனப் பொறியியலும், நவீனக் கணிதமும் இடம் பெறலாயின. ஆகமமும் தத்துவப் பாடங்களும் சேர்ந்தன. இங்ஙனம் பாடத்திட்டங்களைப் பெருக்கிட உதவினோம். மேலும், அந்த நேரங்களில் இம்மரபின் வரலாறு, மரபினர் வரலாறு, மரபின் அறிவியல் அடிப்படை, தொழில் நுட்பச் செயல்திறன் ஆகியவற்றை எல்லாம் நன்கு தெரிந்து உதவிடவும் செயல்படவுமான ஒரு கட்டாயச் சூழ்நிலை உருவாயிற்று எனலாம். இது எனக்குக் கிடைத்திட்ட அரியதொரு வாய்ப்பு என்பேன். எவர்க்கும் கிடைத்திடாத ஒரு வாய்ப்பு என்று ஒரு படி ஏற்றிச் சொல்லிடவும் துணிகிறேன். அந்த வாய்ப்பு ஒரு நாள், இரண்டு நாள் தொடர்பு அல்ல. இருபது ஆண்டுக் காலத்திய நெருங்கிய தொடர்பு என்றும் சொல்வேன். இத்தகைய நெருக்கத் தொடர்பு ஒரு மொழி வல்லுநருக்கோ, ஒரு கவிஞருக்கோ ஏற்பட்டிருக்குமானால் வாஸ்து விஷயங்களை கவிதை நூல்களாக இயற்றிக் கொடுத்திருப்பர் என்று சொல்லத் தோன்றுகிறது.

மேலும் ஸ்தபதியார் அவர்கள் அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகும் மரபு தொடர்பான அவர்தம் ஆராய்ச்சிப் பணிகளிலே நேரடிப் பங்கு பெறவும், அவர் பேசிய மாநாடுகளில், கருத்தரங்குகளில், பொறியாளர் குழுமிய மேடைகளில் நானும் உடனிருந்து அவரது ஆய்வுப் பேச்சுக்களையும், குழுமியிருந்த விஞ்ஞானிகள், தொல்பொருள் ஆய்வர்கள், பொறியாளர்கள், கட்டடக்கலைஞர்கள், மொழி வல்லுநர்கள், ஆகியோர் செய்திட்ட கருத்துப்

பரிமாற்றங்களையும் மிக உன்னிப்பாகக் கவனித்து பயன்பெறவுமான சூழ்நிலை வாய்த்திடப் பெற்றேன். ஒரு சிலவற்றில் நானும் எனது கருத்துகளை அறிஞர்களோடு பகிர்ந்து கொண்டுமிருக்கிறேன்.

இத்துறையில் இங்ஙனம் ஈடுபடுத்திக்கொண்ட எனக்கு இயல்பில் வாய்த்திட்ட இசைஞானமும், இசை விஞ்ஞானமும் இவரது மரபு விஞ்ஞானத்தையும், தொழில் நுட்பத்தையும் புரிந்து மகிழ்ந்திடப் பேருதவியாக இருந்தன. இலக்கண அடிப்படையில் அமைந்த இசையமைப்பு தரும் இன்னிசையை, செவிகளால் கேட்டுத் துய்க்கும் இன்பத்தை, இம்மரபிலே இயற்றப்பட்ட படைப்புகள் கண்ணால் பார்த்தறியும் இசைக் காட்சிகளாய் திகழ்கின்றன என்பதை உணர்ந்தேன். மேலும் ஒரு நுட்பத்தை உடனிருந்து உற்று நோக்கி உறுதி பெற்றேன். அதாவது, வாஸ்து நூல்களில் காணப்படும் கணக்குகளை, உள்ளுணர்வில் பதியவைத்து அவற்றைக் கோடுகளாலும் புள்ளிகளாலும், ஸ்தபதியார் அவர்கள் உருக்கொடுத்திடும் வித்தைகளையும், விந்தைகளையும் நேரடியாகப் பார்த்து ரசித்திருக்கிறேன். இச் சந்தர்ப்பம் எவர்க்கும் வாய்த்திராது என்று மீண்டும் ஒருமுறை அழுத்திச் சொல்லிட விரும்புகிறேன். இதுபோன்ற நெருங்கிய சந்தர்ப்பங்களில்தான் பிரயோக நுட்பங்களை (Subtle points of application) அறிந்து இன்புற வாய்ப்புக் கிட்டுகிறது. இது மட்டுமல்ல; இந்தக் கணக்குகள் கனப் பொருளாக (Tridimensional form) அதாவது கட்டடங்களாகவும், சிற்பங்களாகவும் மாற்றம் கொள்ளும் போது செயல்படும் தொழில்நுட்பங்களையும் நெறிமுறைகளையும் செயல்பாடுகளையும் உற்று நோக்கி வியந்து போவேன். பக்திமான்களும் கூட புரிந்து கொள்ளமுடியாத திருக்கோலங்களை இலக்கணப்படுத்தி வைத்துக் கொண்டு மிக

எளிதாகச் செய்திடும் செயல் நேர்த்தியினையும் பார்த்து வியந்திருக்கிறேன். அருவத்தை உருவமாக்கிடும் விந்தைமரபு வாஸ்து மரபு என்பதையும் உற்றறிந்தேன். இந்த வாஸ்து மரபானது சிலர் நினைப்பது போல் சாதாரணத் தொழில் மரபு அல்ல. அவற்றைச் செய்வோர் சாதாரணத் தொழிலாளரும் அல்லர்; ஏழைகள்தான், ஆனால் ஆற்றலில் ஏழைகள் அல்லர். சுருங்கச் சொன்னால் எவரும் சடுதியில் புரிந்து கொள்ள முடியாப் புதிர்களாக விளங்குகிறார்கள் இந்தச் சிற்பிகள் என்றே சொல்லத் தோன்றுகிறது. அன்றாட நடைமுறை உலகில் கண்டிராத வியத்தகு வடிவங்களையும், அறிஞரும் புரிந்து கொள்ளத் திணறும் அமைப்புக்களையும் அவர்தம் படைப்புகளில் வடித்து, செயல்படுத்தி எவரையும் மயக்கிடத் தக்கத் தொழில் நுட்பங்கள், கலை உணர்வுகள் மிக்கதாய் மிளிரும் ஓர் உன்னதக் கலை மரபைப் புரிந்து கொண்டவனானேன்.

ஸ்தபதியார் அவர்கள் எங்கள் இயக்ககத்தோடு இணைந்து செயல்பட்ட காலத்திற்றான் தமிழ்நாடு அரசு அவர்தம் செயல் ஆற்றலையும் உற்றறிந்து பூம்புகார் நகரில் கலைக்கூடங்க ளையும் கலைமன்றங்களையும் அவரது வாஸ்து மரபு இலக்கணங்களுக்கேற்ப செய்து கொடுக்கப் பணித்தது. கோயில்களையும், கோயிற் சிற்பங்களையுமே பன்னெடுங்காலம் செய்து வந்த மரபைச் சேர்ந்த இவர், ஏனைய வடிவமைப்புகளிலும் தனது மரபு இலக்கணங்களை எப்படிப் புகுத்துகிறார் என்ற ஆய்வை மேற்கொண்ட போது தான் இந்த வாஸ்து மரபின் பொதுவியலும் அதன் விரிந்த கொள்கையும் பேராற்றலும் செயல்நெறிகளும் அரசுக்கே புலப் படுவதாயிற்று. இதில் வெற்றி கண்ட அரசு இவர்தம் ஆற்றலை வள்ளுவர் கோட்டப் பணிக்குப் பயன்படுத்தி

வள்ளுவர் பெருமானுக்கு அழியாச் சின்னம் ஒன்றை நிறுவியுள்ளது என்றால் மிகையல்ல. இந்தக் கால கட்டத்தில் இம்மரபின் ஆற்றல் மீது எங்கள் இயக்குநர்களுக்கும் எனக்கும், பெரும் பற்றும் மதிப்பும் உருவாயின.

நவீன காலத் தேவைக்கேற்ப கட்டடங்களைக் கட்டித்தர இம்மரபுக்கு ஆற்றல் இருக்கிறதா என்ற கேள்வி எங்கள் உள்ளத்தில் தோன்றிட்ட நேரத்தில் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு, தமிழ்க்கலை மரபிற்கேற்ற கட்டடங்களைக் கட்டிக் கொடுத்திட அந்த நேரத்தில் துணை வேந்தராயிருந்த டாக்டர் வி.அய்.சுப்ரமண்யம் அவர்கள் ஸ்தபதியைக் கோரிட, அதற்கு அவர் தீட்டித் தந்த வரைபடங்களை இயக்குநர் திரு. வி. சீனிவாசன் அவர்களும் நானும் வியந்து பேசி இந்த வாய்ப்பினை ஸ்தபதியாருக்குக் கிடைக்குமாறு செய்திட்டோம். வட்ட வடிவமைப்பைக் கொண்ட பெரிய நூல் நிலையக் கட்டடம் (Libraray Building) ஒன்றும், நிர்வாகக் கட்டடம் (Adminstrative Building) ஒன்றும் இவருக்கு வழங்கப்பட்டன. அப்பணியை மிகச் சிறப்பாகச் செய்து வாஸ்து மரபின் தொய்வுறாத ஆற்றலை வெளிப்படுத்தினார் ஸ்தபதியார் அவர்கள். ஏன் இவற்றை யெல்லாம் சொல்லுகிறேன் என்றால், இந்தப் பழைய மரபு நவீன காலத் தேவைகளைப் பூர்த்தி செய்திட முடியுமா என்று இக்காலத்தில் கேட்கப்படும் கேள்விகளுக்குத் திருப்திகரமான பதிலாக அக்கட்டடங்கள் அமைந்திருப்பதைச் சொல்லி, உடனிருந்த காரணத்தால், அத்தகைய பணிக்கு ஸ்தபதியார் கையாளும் யுக்திகளை நேரே அனுபவித்து, அதனால் அம் மரபின் ஆற்றல் பற்றி நான் பெற்றிட்ட உறுதிப்பாட்டை உங்களிடம் பகிர்ந்து கொள்ளவே சொன்னேன். எனவே, இந்த மரபானது முன்னைப்

பழமைக்கும் பழமையாகவும், பின்னைப் புதுமைக்குப் புதுமையாகவும் ஏற்றதாயும் இருந்து ஈடு கொடுத்திடத் தக்க ஆற்றல் பெற்றதாய் விளங்குவதைக் கண்டேன்.

இத்தகைய பின்னணியில்தான், அவரது விண்-ஞானக் கோயில்கள் என்ற இச்சிறு நூலுக்கு அணிந்துரை கொடுத்திடத் துணிந்திட்டேன் என்பதை மிக அடக்கத்தோடு சொல்லிக் கொள்ள விழைகிறேன். எடுத்த எடுப்பிலேயே ஒன்றைச் சொல்லி ஆய்வர்களைச் சிந்திக்க வைக்க விரும்புகிறேன்.

மொழி வல்லுநர்கள், வாஸ்து சாஸ்திரங்களை, தனது மொழி அறிவை மட்டும் வைத்துக் கொண்டு மொழி பெயர்க்கிறார்கள், பெயர்த்திருக்கிறார்கள். வாஸ்து சாஸ்திர ஞானம் பெற்றவர்களாக மேடைகளில் முழங்கிப் பேசுகிறார்கள். இதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. அத்தகையோர் பெரும்பாலும் மதம் பற்றிப் பேசுகிறார்களே தவிர இவ்வாஸ்து மரபின் இயல்பு, விஞ்ஞானம், தொழில் நுட்பம், கலை நுட்பம் பற்றி எவரும் பேசுவதேயில்லை. இதனால் வாஸ்து நூலை ஒரு மதச் சார்புடைய நூல் என்று பெரும்பாலோர் முடிவு கட்டி ஒதுக்கி வைத்து விடுகிறார்கள். வாஸ்து மரபு மதம் என்று ஏதாவதொன்றைப் பற்றிப் பேசுமானால், அஃது எந்த மதம் என்று கண்டு கொள்ள முடியாதிருக்கிறார்கள். அஃது எதை மதமெனக் கொள்கிறது என்பதையும் புரிந்து கொண்டார்களா என்றும் தெரியவில்லை. வாஸ்து சாஸ்திரங்களில் காணப்படும் பதவிந்யாசம் என்ற அத்தியாயத்தை எவரும் ஊன்றிக் கவனித்ததாகத் தெரியவில்லை. இதிலேதான் வாஸ்து விஞ்ஞானம் பொதிந்து கிடக்கிறது. மேலும் வாஸ்து மரபு செய்தளித்த வடிவங்களும் கட்டடங்களும் வழிபாட்டுக்கு எப்படி அருகதையுடையன

வாகின்றன என்ற நுட்பங்களைப் புரிந்து உணர்ந்து சுகித்து எழுதியதாக அம்மொழி பெயர்ப்புகளிலோ விளக்க உரைகளிலோ காணக் கிடைக்கவில்லை. எல்லாம் வரட்டு மொழி பெயர்ப்பாகவே (Literal Translation) இருக்கின்றன. அம்மொழிபெயர்ப்புகள், அந்நூல்கள் உணர்த்தும் உள்ளார்ந்த உணர்வுகளைப் பிரதிபலிக்காமல், சாரத்தை விட்டு சக்கையைத் தருவனவாகவே இருக்கின்றன என்று சொல்லலாம். காரணம் பௌதிக விஞ்ஞானத்திற்கு அப்பாற்பட்ட ஓர் ஆன்ம விஞ்ஞான மரபு (Tradition of Spiritual Science) சார்ந்த சாஸ்திரமாகவேவிருக்கிறது. அகம் எங்கேயோ இருப்பதாகவும் செயல் மட்டும் வாஸ்து கர்மர்களிடம் இருப்பதாகவும், இலைமறை காய்மறைவாக அறிஞர் பலர் பேசுவதைக் கேட்டிருக்கிறேன். இவை உண்மைக்கு முற்றிலும் புறம்பானவை என்பேன். இந்த நூல்கள் மொழிப் புலமைக்கு அப்பால் நின்று வேறு ஏதோ ஒரு நுண் பொருளைத் தொட்டுக் கொண்டு விதிமுறை களையும், பயன்படு கணக்குகளையும் இலக்கண வாயிலாகத் தருகின்றன என்பதை நான் புரிந்து கொள்பவனானேன். அவற்றை நடைமுறை பௌதிக உலகத்திற்குக் கொண்டு வந்து பற்பல பௌதிகப் பொருளாக மாற்றித் தருவதையும் உற்றறிந்தேன். ஸ்தபதியார் அவர்கள் சொல்லுவது போல, சப்தப் பிரம்ம வகையைச் சேர்ந்த வேத நெறி போல, வாஸ்து மரபானது அர்த்தப் பிரம்ம வகையைச் சேர்ந்த ஒரு வஸ்து வேத நெறியாகவே காட்சி தருகிறது என்று கண்டு கொண்டேன். இக்கண்ணோட்டத்தில் இதுவரை எவரும் பார்த்திட்டதில்லையென்பதை அறிஞர்கள் வாயிலாகவும் அறியலானேன்.

ஒரு சிற்பியோடு நெருங்கியிருந்து அவர்தம் உணர்வுகளில் பங்கு பெற்று, அவர்தம் பணிகளிலும் கலந்து உறவாடி, செயல்

முறைகளை உற்று நோக்கித் தேர்ந்து, அதற்கான ஆதாரங்களைப் பார்த்தறிந்து, அவற்றுக்கெல்லாம் அடிப்படையாக உள்ள அவர்தம் ஆத்மானுபவங்களை (Spiritual Experiences) வெளிப்படுத்தும் நேர்த்தியறிந்து, சாஸ்திரங்களைப் புரட்டிப் பார்த்தாலன்றி வாஸ்து சாஸ்திரங்களை மொழி பெயர்த்திடும் முயற்சியானது பயனற்றது என்று சொல்வேன். இக்காலப் பொறியியல் நூல்களைப் போல விளக்க உரைகளைக் கொண்டிராத, மேற்கோள் பெற்றிராத, வரைபடங்கள் யாதொன்றுமில்லாத, நேரடியாகச் செயலுக்கு அழைத்துச் செல்லும் செய்திகளும் கணக்குகளும் மிகுந்து காணப்படும் நூல்களாக இருக்கின்றதைப் பார்க்கிறேன். இதுவரை வெளிவந்துள்ள ஆங்கில மொழிபெயர்ப்புகளும் சரி, தமிழ் மொழி பெயர்ப்புகளும் சரி, பயன்தரு மொழிபெயர்ப்புகளாய் விளங்கிடவில்லை. மீண்டும் சொல்வேன், மொழிக்கு அப்பால் உள்ள உணர்வுகளை, எண்ணங்களை, அவ்வெண்ணங்களை எண்களாக்கிக் காட்டிய நுட்பங்களை, அந்த எண்களை சிற்பிகளின் எண்ணங்களாக விரித்துக் காட்டிடும் அதிசயங்களை எவரும் தொட்டுப் பேசிடவே இல்லை என்பேன். இஃது எனது முதல் அனுபவமும் விமர்சனமுமாகும்.

ஆராய்ச்சி நூல்களோவெனில், ராஜா ராணிக் காலங்களையே திரும்பத் திரும்பப் பேசி, வரலாற்றுக் காலத்துக்குள்ளேயே வாஸ்து மரபை நுடக்கி வைத்து, அந்தக் காலங்களையே வலியுறுத்தி, தோற்றுவாய் தெரியாததும் வளர்ந்து விட்டதும் ஆன ஓர் உன்னதக் கலை மரபை பல காலகட்டங்களுக்குள் அடைத்து வைத்து, வாஸ்து மரபு பற்றிய ஒரு பொய்த் தோற்றத்தையே தந்து கொண்டிருப்பதாக உணர்கிறேன். இதுபற்றி, இம்மரபின்

தொன்மை பற்றி, திறன் பற்றி, தனித் தன்மை பற்றி ஆய்ந்து தேர்ந்திட எவரும் அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. இதற்கு நாட்டுப் பற்றும், கலாச்சாரப் பற்றும், ஒருபாற்கோடா அணுகுமுறையும், ஸ்தபதி அவர்கள் சொல்வது போல "இனஇட வேறுபாடற்ற" திறந்த உள்ளமும் தேவை என்று எனக்குத் தோன்றுகிறது.

வேறுபல நூல்களோவெனில், பகுத்தறிவுக்குப் பொருந்தாத கதைகளையே கலை நுட்பங்களாகப் பேசி, அதுவே வாஸ்து மரபு என்று நினைத்திடும் அளவுக்கு ஒரு மாயத் தோற்றத்தைத் தந்து கொண்டிருக்கின்றன.

இவற்றால் இந்நூல்களைப் படிப்போர், மயக்கமும் தயக்கமும் வெறுப்பும் கொண்டு, இந்த வாஸ்து நூல்களைப் புறக்கணித்து விடுகிறார்கள் என்று நினைக்கிறேன். புரியாததைப் புரிந்ததாகச் சொல்லி, பொது மக்களைக் குழப்பி விடுகிறார்கள் என்பேன். இப்படி எழுதுவோர் மகத்தானதொரு விஞ்ஞான மரபுக்குத் தீங்கு செய்கிறார்கள் என்று சுட்டிக் காட்டிட விரும்புகிறேன். நுனிப்புல் மேய்ந்தோரின் ஆய்வுகள் எத்துணைத் தீமைகளை விளைவிக்கின்றன பார்த்தீர்களா? இதனை மாற்றியாக வேண்டும். இதனை ஸ்தபதியாரும் பிற சிற்பிகளும் ஒருங்கிணைந்து ஓர் இயக்கத்தையே (art movement) மேற்கொண்டிட வேண்டும் என்று இங்கே சொல்லிட விரும்புகிறேன்.

இந்த நிலையில், இந்நூற் செய்திக்கு உரியோரான சிற்பிகள் அவர்தம் நூல்களை மொழி பெயர்க்கவோ, விளக்கம் தரவோ முன்வர வேண்டும். அவர்களும் சொல்லுக்குச் சொல் என்ற அளவில் மொழி பெயர்த்திடாது (literal translation) அவர்தம் அக உணர்வுகளை வடிவமாக்கிடும் செயல்

நெறிகளை விளக்கிப் பேசி, எழுதி, பொது மக்கள்தம் ஐயம் நீக்கிடல்வேண்டும். இவர்களும் செய்திடவில்லையென்றால் வாஸ்து மரபுக்கு நல்ல எதிர் காலம் இல்லை என்றே சொல்வேன். இதன் விளைவு என்ன ஆகும் தெரியுமா? சிற்பிகளை வெறும் கைவினைஞர்களாகவும், செய்ததையே திருப்பிச் செய்யும் தொழிலாளர்களாகவும் சமுதாயம் கருதி மேலும் அம்மரபிற்கு ஒரு பின்னடைவைச் செய்து விடும். அகவுணர்வும், அறிவும், ஆற்றலும் சங்கமித்து ஒன்றி நின்ற ஒரு மகத்தான துறையை பிளந்து விட்ட குற்றத்துக்கு சிற்பிகள் ஆளாவார்கள். இதனை வரலாறு மன்னிக்காது என்பேன். இந்த நிலையில் ஸ்தபதியாரின் "விண் - ஞானக்கோயில்கள்" என்ற நூலிற் கண்ட செய்திகளை வரவேற்கிறேன். இதுவரை கேட்டறியா விஞ்ஞான நுட்பங்களும், கலை நுணுக்கங்களும், தொன்மைச் செய்திகளும், வரலாற்றுக் குறிப்புகளும், கலாச்சார மூலங்களும், சிற்பியர்தம் பணி நுட்பங்களும் ஆத்மானுபவங் களும் ஸ்தபதியார் கூற்றுகளில் திரண்டு நிற்பதைக் கண்டு மகிழ்ந்து இந்நூலை வரவேற்கின்றேன்.

மேலும், நானும் ஸ்தபதியார் அவர்களிடமிருந்து வாஸ்து சாஸ்திரங்களை வாங்கிப் புரட்டிப் பார்த்திருக்கிறேன். எந்தப் பக்கம் திருப்பினாலும் எண்கள், அளவைகள், எண்ணற்ற கோட்பாடுகள் ஆகியவை காணப்படுகின்றன. எடுத்துக் காட்டாக ஒரு வாஸ்து நூலின் பெயரே "அளவுகளின் சாரம்" என்று பொருள் தொனிக்குமாறு அமைந்திருப்பதைக் காணலாம். அதன் பெயர் "மானசாரம்" (மானம் = அளவு) என்பதாகும். அவையெல்லாம் எளிதில் புரிந்து கொள்ள முடியாதவை என்பதைக் கண்டேன். அதனை நேரடியாகப் படித்து எவரும் ஒரு கோடு கூடப் போட முடியாது என்பதை

மனம் திறந்து சொல்லிட விரும்புகிறேன். வாஸ்து சாஸ்திரத்தில் காணப்படும் எண்கள் எல்லாம் உருவங்கள்; எண்களைக் கொண்டே உருவங்களை இயற்றிடும் ஓர் அதிசய முறை கையாளப்படுகிறது, அந்த எண்களுக்குள்ளே அல்லவா அவர்தம் எண்ணங்கள் பதிந்திருக்கின்றன? வெறும் மொழியறிவுடையோர் அந்த எண்ணங்களைத் துய்த்தோ, புரிந்தோ, மொழி பெயர்த்திடவோ, எழுதிடவோ சாத்தியமில்லை என்பதை நான் தெளிவாகக் காண்கிறேன். இந்த வாஸ்து சாஸ்திரம் ஏதோ ஒரு மகத்தானப் பிரபஞ்ச உண்மையை மூலப் பொருளாக வைத்துக் கொண்டு, அந்த மூலத்தின் குணம் தெரிந்து, செயல் நெறி தெரிந்து, அதன் இயக்கக் கணக்கறிந்து அவற்றை சுகித்து, அந்தச் சுகிப்பின் வெளிப்பாடாக பல கணக்கு வழக்குகளை இயற்றி வைத்துக் கொண்டு, நாம் தெரிந்து கொள்வதற்கு ஏற்ப நடைமுறை பௌதிக உலகத்தில் காணப்படும் உயிர்ப் பொருள்களை "சொற்களாக" வைத்துக் கொண்டு தான் மேற்கொண்ட பொருளுக்கேற்ற குண வடிவங்களைப் படைத்திடும் ஆற்றல் மிக்கதாய் இருப்பதைக் காண்கிறேன். இங்ஙனம் உணர்வு மயமான ஒன்றைப் புரிந்து அதற்கு சொல் வடிவம் கொடுப்பதை விட கண்ணால் பார்த்தறி வடிவம் கொடுப்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல என்பதையும் தெரிந்து கொண்டேன். அஃதும் காணமுடியா, அறிய முடியா, அளந்தறிய முடியாப் பரம்பொருளை அளவுக்குள் கட்டுப் படுத்தி அழகு சேர்த்து அழகு மேனிகளாகச் செய்தளித்தல் ஒரு பிரம்ம வித்தையே என்பேன். எத்துணை நாயன்மார்களை, ஆழ்வார்களை இவ்வடிவங்கள் ஈர்த்திருக் கின்றன? மெய்மறந்து பாடச் செய்திருக்கின்றன? இசையைப் பற்றி என்னதான் பேசினாலும், இசைக் காட்சியின்

அமைப்பியலையும், அதன் இலக்கணத்தையும் நுட்பங்களையும் என்னதான் படித்துப் பார்த்திட்டாலும் அவற்றைப் பாடினால் அன்றி, அவ்இசைக் காட்சிகள், நமக்குப புரிந்திடுவதில்லை. இப்படித்தான் இந்த வாஸ்து மரபு இருக்கிறது. இங்ஙனம் இசையொற்றிய ஒரு மரபாகவிருக்கிறது இந்த வாஸ்து மரபு என்பதைக் கண்டு கொண்ட நான், வாஸ்து மரபை உச்சி மீது வைத்து மெச்சுபவனானேன். இந்தக் கோணத்தில் நின்று நான் இங்கே எழுதிடும் போது 1977 ல் திரு. கணபதி ஸ்தபதி அவர்கள் எழுதிய "சிற்பச் செந்நூல்" என்ற கலை நூல் என் நினைவுக்கு வருவதோடு அந்த நூல் என் மதிப்பீட்டில் தலையிடம் பெறுகிறது என்று சொல்லிட விரும்புகிறேன். அஃதொரு தொழில் நுட்பக் கல்வித் துறை வாயிலான அரசு வெளியீடாகும். அந்த நூல் ஒரு மொழி பெயர்ப்பு நூல் அல்ல. ஒரு சிற்பியின்-ஒரு பெரிய மரபின்-அகவுணர்வுகளைச் சித்திரிக்கும் ஓவியல் மற்றும் அளவியல் ஆய்வு நூல் என்பேன். இந்நூல் பல ஆய்வறிஞர்களின் கண்களைத் திறந்து விட்ட நூல் என்றும் அறிகிறேன். எனவே சிற்பிகள் கைபடாத சிற்பங்களும், சிற்பிகள் தொடர்பில்லா இம்மரபு பற்றிய ஆராய்ச்சி நூல்களும் மொழி பெயர்ப்புகளும்-பயனற்ற-உயிரற்ற -நூல்களே என்று சொல்லக் கடமைப் பட்டவனாகிறேன். இதனை மறைத்துப் பேசி நம்மையே ஏமாற்றிக் கொள்வதில் பயனில்லை-விவேகமுமில்லை. இக்காரணம் பற்றியே, என் விமர்சனத்திற்குள்ளாகும் இந்நூல் சிறு நூலாக இருந்தாலும் பெருநூல் என்று கூறி மனதார வரவேற்கிறேன்.

நடராஜனின் கண்ணாடிப் பிரதிபலிப்புதான் (mirror image) விஷ்ணுவின் திருக்கோலம் என்று ஸ்தபதியார் காட்டும் ஒரு விஞ்ஞானச் செய்தியே இந்த நூலின் கனத்தை எடை

போட்டுச் சொல்லப் போதுமான சான்று என்பேன். எத்துணை அழகாக-சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் இடையே ஓர் இணைக் கோட்டைப் போட்டு இதுவரை பிரித்து நோக்கப்பட்ட இரு பெரும் தத்துவ வடிவங்களைச் சமரசப்படுத்தி விட்டார்! பாம்பின் கால் பாம்பறியும்தானே! இந்த நூலுக்கு மேலுமொரு கனம் கூட்டும் செய்தியை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். உளத்துடிப்பைக் காலமென்றும், காலமே ஞாலமாகவும், ஞாலமே (space) ஞாலப் பொருள்களாகவும் உருமாற்றம் கொள்கிறது என்று சொல்லி, காலத்திற்கும் ஞாலத்திற்கும் உள்ள தொடர்பு காட்டி, காலமும் இடமும் ஒன்றே Time and Space are equal. என்று சமன்பாடு செய்கிறார் கணபதி ஸ்தபதியார். வியப்பாக இல்லை? ஸ்தபதியார் இன்னொன்றைச் சொல்லி என்னை மெய் மறக்கச் செய்திருக்கிறார். இசைத் துடிப்பையும், ஆன்மத் துடிப்பையும் (Musical vibration, Individual Spiritual Vibration) சமன்பாடு செய்து இசைத் துடிப்பை வைத்து, ஆன்மத் துடிப்பை அளந்து காட்டி அதுவே ஞாலத்துடிப்பு (Universal Vibration) என்று விளக்கிக் காட்டி, இம்மூன்றும் செயல்படும் இடமே ஞாலக்கோயில் என்றும் அதுவே ஞாலத்தோர் வணங்குவதற்கு ஓர் ஒப்பற்ற இடம் என்றும் உறுதிப்படுத்தி அத்தகைய இசைத்துடிப்பை திண்பொருளாக (Material objects) வாஸ்து மரபு உருமாற்றம் செய்து காட்டி, அவற்றை உறைந்திட்ட இசை (frozen music) என்று சொல்லும் போது நான் மெய் மறந்து போவேன்.

மேலுமொன்றை இத்தருணத்தில் வெளிப்படுத்திட விரும்புகிறேன். ஸ்தபதியார் அவர்கள் பேசும் போதும் சரி, எழுதும் போதும் சரி, சர்ச்சைகளில் ஈடுபட்டிருக்கும் போதும் சரி ஏதோ ஒரு நுட்பச் செய்தியைத் தனது உள்ளத்தின்

அடித்தளத்திலே வைத்துக் கொண்டு அவஸ்தைப் பட்டுப் பேசுவதாகவே நான் உணர்கிறேன். அந்த ஒரு நுண் உணர்வுதான் அவர்தம் ஆராய்ச்சிகளுக்கும் தொடர் பேச்சுகளுக்கும் எழுத்துக்களுக்கும் காரணம் என்று நினைத்ததுண்டு, அவை என்னளவில் என்ன என்பதை சுட்டிக் காட்டிட விரும்புகிறேன்.

இந்த வாஸ்து மரபை மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் போது மதச் சார்புடைய மரபாக (Sectarian) இருக்கிற தென்று பொதுமக்கள் கணித்து, இம்மரபை ஒதுக்கிட முற்படுகிறார்களோ என்ற ஓர் ஐயப்பாடு அவர் உள்ளத்தில் தோன்றி அதனால் இந்த ஒப்பற்ற விஞ்ஞான மரபுக்கு ஏதாவதொரு ஆபத்து நிகழ்ந்து விடுமோ என்று அச்சப்படுவதாக எனக்குத் தோன்றுகிறது. மதக் கொள்கையினால் பாதிக்கப்பட்டோரும், மதத்தை வெறுத்திடுவோரும், இம்மரபை ஒதுக்கிப் பேசுவதையும் கேட்டு அவர் மனம் புழுங்குவதாகத் தெரிகிறது. இக்கருத்தை மாற்றியமைப்பதற்காக பல முயற்சிகளை அவர் மேடைகளிலேயும் சரி, பிற இடங்களிலேயும் சரி உணர்த்தி வருவதாகச் சொல்லத் தோன்றுகிறது. அதிர்ச்சி கொண்ட அவர்தம் மனம் இக்கட்டுரையில் இங்ஙனம் பேசுவதையும் நான் காண்கிறேன். இவர் என்ன சொல்ல விரும்புகிறார் எனில் கோயில் கட்டடங்களும், அவற்றின் அகத்தேயும் புறத்தேயும் நிறுவப் படும் சிற்பங்களும், வழிபாட்டுக்குரிய பொருள்களாகத் தொன்று தொட்டு வந்திட்டாலும், அவை எந்த ஒரு சமயச் சார்புடையதாகவும் தொடக்கத்தில் இருந்ததில்லை; அங்ஙனம் வாஸ்து மரபு படைத்துத் தந்திடவில்லை என்பதை ஆய்ந்தும் உணர்ந்தும் ஆழ்ந்தும் பேசுகிறார். அவற்றை அனைத்து மக்களும் போற்றி வணங்கிடத் தக்க ஞாலக்கோலங்களாக

(Universal forms, phenomena) ஞாலக் கோயில்களாக (Universal Temple) வாஸ்து மரபு ஆக்கித் தந்ததாகவே சுட்டிக் காட்டுகிறார். இதுவே வாஸ்து சாஸ்திரத்தின் விஞ்ஞான அடிப்படை அணுகுமுறை என்றும் வாதிக்கின்றார். அங்ஙனம் அவற்றை நிறுவிடவும் ஆசைப்படுகிறார். அதாவது அவற்றையெல்லாம் பிரபஞ்ச விஞ்ஞானத் தத்துவங்களை உருவகித்திடும் கற்பனை உருவங்கள், வடிவங்கள் என்றுகூட அல்லாமல் விஞ்ஞான மயமாக விளங்கிடும் பிரபஞ்ச மூலப்பொருள் ஒன்றின் தத்ரூபமான (exact replica) கணக்குக்கு உட்பட்ட (mathematical) குணவடிவங்களாகவே (actual manifestation of the saguna Brahman) வாஸ்து சிற்ப சாஸ்திரங்கள் பேசுகின்றன - உணர்த்துகின்றன என்று உறுதிசெய்திட விரும்புகிறார். வாஸ்துக் கோயில் கட்டடங்கள் இருக்கின்றனவே அவை எழிலார்ந்த கட்டடங்கள் மட்டுமல்ல என்றும், பிரபஞ்சத்தின் இயல் வடிவங்களே (structure of the orderly universe) என்றும் அவை வணக்கத்துக்குரிய வடிவங்களே என்றும் கணக்கோடும் ஆதாரத்தோடும் பேசுகிறார்.

அப்படிப்பட்ட அரிய உருவங்களையும் வியத்தகு அமைப்புகளையும் எடுத்து வைத்துக் கொண்டு ஏற்றிப் போற்றிப் பேசிட - சொந்தபந்தம் பேசிட - முனைந்த காலகட்டத்தில்தான் மதங்களும், மத மாத்ஸர்யங்களும் தலை தூக்கி விட்டன என்றும் நினைக்கிறார். வாஸ்து சாஸ்திர தொடர்பான அத்துணைப் பொருள்களும் உருவங்களும் இப்பூவுலகில் மானுடராய்ப் பிறந்திட்ட எவர்க்கும் சொந்தமானவை, பொதுவானவை என்று உறுதிபடப் பேசுகிறார். வாஸ்து மரபு சார்ந்த சமய நிலையங்களுக்கு அனைவரும் சென்று இறையின்பம் துய்க்கலாம், எதுபோல?

இசை மேடைக்குச் சென்று இசையைத் துய்ப்பது போல என்பதே அவர் கண்டு கொண்ட நுட்பம். மத உணர்வு மனித இனத்தை ஒன்று படுத்த வேண்டும் என்று கருத்துக் கொண்டிருக்கும் ஸ்தபதி அவர்கள் அங்ஙனம் ஒன்று படுத்திய வாஸ்து மதம்தான் பிற்காலத்திலும் இன்றும் பல பிரிவினைகளை விளைத்திடும் களமாக மாறிவிட்டதென்று சொல்லி வருந்துகிறார். பிரிவினை மனப்பான்மை கொண்டிராத மரபு (non sectarian tradition) வாஸ்து மரபு என்பதற்குச் சான்றாக தனது வாஸ்து சாஸ்திரங்களில் சமணத்துக்கும் பௌத்தத்துக்கும் உயர்வான இடமளித்தி ருப்பதைச் சான்றாகப் பல மேடைகளிலே காட்டியிருக்கிறார்.

அதாவது, விஞ்ஞானமே சமயமாக, சமய அனுபவமாக இருக்கிறது என்ற ஒரு பேருண்மையை நிறுவிட விரும்புகிறார். ஆகவே தனது பேச்சுக்களிலும், உரையாடல்களிலும், வாஸ்து மரபு தோற்றிய கோயில்களெல்லாம் சமயச் சார்பற்ற விஞ்ஞானக் கோயில்கள் என்ற தோரணையில் பேசியும், எழுதியும் வருகிறார். இக்கருத்தை அனைவரும் நின்று, நிதானித்து உற்றறிதல் வேண்டும். இது புரியுமானால் மதப்பூசல்களுக்கு இடமே இல்லை என்கிறார். இந்த முறையில்தான் முதுபெரும் கோயில்களான திருச்சிற்றம்பலம், திருவரங்கம் ஆகிய இரண்டு பழைய கோயில்களையும் உள்ளடக்கிய மூர்த்தங்களையும் எடுத்துக் கொண்டு இவர்தம் மரபு வழி நின்று பார்த்ததையும், படைத்ததையும், இந்நூலில் சுவையும், எளிமையும் கொண்ட சொற்களால் விளக்குகிறார். ஆனால் தீவிர மத உணர்வுகள் இந்த நுட்பத்தை மறைத்து விட்டதை இலைமறை காய்மறைவாகச் சொல்லியிருப்பதை நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். அவர்தம் இந்த அணுகுமுறையை - யாரையும் புண்படுத்தா எழுத்தை - நான் மனதார வரவேற்கிறேன்.

இருப்பினும், பக்தி என்பது ஒருவனுக்கும், பரம் பொருளுக்கும் இடையே நிகழும் உணர்ச்சிபூர்வமான ஒரு விஞ்ஞான நிகழ்ச்சி என்றும் அத்தகைய உணர்ச்சிப் பெருக்கினைக் கோயில் கட்டடங்களும் கடவுட் படிவங்களும் ஊட்டிடும் இயல்பின என்றும், இப்படித்தான் இந்த உணர்ச்சியால் கிளர்ச்சியுற்ற ஆழ்வார்களும், நாயன்மார்களும், தியாகராஜ ஸ்வாமிகளும், அவரொத்த இசைஞர்களும் இறைமீது மெய்மறந்து பாடினார்கள் என்றும், இசைவழியிற்றான் பக்தியுணர்வு முகிழ்ந்திட வேண்டும் என்றும் இதற்குத்தான் கோயில் கடவுட் படிவங்களும் உதவின என்றும் உணர்ந்து பேசுகிறார். Bhakti cult மிகுந்து விட்ட காலத்திலே "இஷ்டமான தேவதைகளை வணங்கிடலாம்" என்ற ஒரு சமரசக் கொள்கையும் இந்த சமயத்துறையில் புகுந்து பலம் பெற்று விட்டதால், பல கொள்கைகள், பல பூசை முறைகள், பல நெறி முறைகள், பல திருவிழாக்கள், பல சமயச் சடங்குகள் என்று வளர்ந்தோங்கி அவற்றோடு இம்மரபும் இணைந்து செயல்பட வேண்டிய ஒரு காலக் கட்டாயம் வரலாற்றில் ஏற்பட்டதின் விளைவாக, இவ்விஞ்ஞான மரபு தொய்வுறவும், ஒதுக்கமுறவும், மறைந்தும், மறைக்கப் பட்டும் கிடந்திட்ட நேரத்தைப் புரிந்து எழுதுகிறார் ஸ்தபதியார் என்றே கருதுகிறேன். வேதமும் சரி, ஆகமமும் சரி, அவையெல்லாம் ஓர் உன்னதப் பொருளின் விரிவாக்கமும், நெறிவிளக்கமும் கொண்டு விளங்குகின்றன என்பதை இவர் மதித்திட்டாலும், வாஸ்து வழிப்பட்ட கோயில்களானவை விஞ்ஞான மயக் கோயில்கள் (temples of science) என்ற உண்மை இவற்றின் தாக்கத்தால் ஒரு படி இறக்கம் கொண்டு விட்டதாகக் கருதுகிறார். எனவே வேத. ஆகமக் கொள்கைகளையும், பூசைகளையும் பூசைக்குரிய

விதிமுறைகளையும் தனித்தனியே ஆயந்து, தெரிந்து, இவை இரண்டும் ஒரு பொருளைக் குறித்தே செல்லும் இரு பெரும் அனுபவ விஞ்ஞானப் பாதைகள் (two streams of experience and expression) என்பதை நிறுவிட அறிஞர்களைக் கூவி அழைக்கின்றார்.

கடவுள் வடிவங்களை வெற்றுச் சின்னங்கள், அடையாளங்கள், என்றுஒரு சிலர் சொல்வதை ஸ்தபதியார் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அப்படிச் சொல்லு பவர்களுக்கு பிரதிமாமானலக்ஷணம் புரியவில்லையே என்று வருந்துகிறார். வைணவ சமய மரபானது பிரதிமைகளை அர்ச்சாவதாரம் என்று ஐயமறச் சொல்லியும் இந்த நிலை ஏன் என்று கேட்கிறார். சிற்பி வழங்கிடும் படிமங்கள் இறைவடிவங்களே என்பதை, உறுதியாக இக்கட்டுரையில் சுட்டிக் காட்டுகிறார். அதற்குரிய கணக்கைச் சொல்லுகிறார். கடவுளே கணக்காக இருக்கிறார் என்றும் காட்டுகிறார். இந்த இடத்தில்தான் ஆராய்ச்சியாளர்கள் நின்று கவனித்து கருத்துச் சொல்லிட வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்.

இவை இறைவடிவங்களே என்று சொல்வதற்கு அவர் கொண்டு வந்து காட்டும் கணக்கியல் பிரபஞ்சக் கோலங்கள் தோன்றுவதற்கான லயக் கணக்கியலாக இருப்பதை பல இடங்களில் அழுத்திப் பேசுவதைக் காணலாம். கணக்கில்லாமல் பொருள்கள் தோன்றுவதற்கில்லை என்பதை உறுதிப்படுத்துகிறார். அதாவது கடவுளும் கணக்காய் இருந்து கொண்டு அக்கணக்கின் விரிவாக்கமாய்த் தன்னைப் பல்வேறு கோலங்களில் புலப்படுத்திக் கொள்கிறார் என்றுதான் பேசுகிறார். வேறுபட்டிருக்குமானால் அவற்றுக்குச் செய்திடும் பூசைகள் வெற்றுச் செயல்களாகிவிடும் என்பதையும் சுட்டிக் காட்டிப் பேசுகிறார்.

சமயக் கருத்துகள், அவற்றின் விளக்கங்கள், வடிவங்கள் என்று ஒரு புறம் இருந்து வந்திட்டாலும், அதே கணக்கில் நாடு-நகரங்களையும், வீடு-மனைகளையும், மாளிகை-மன்றங்களையும் படைத்திடும் கணக்கியலாக அவையெல்லாம் இருப்பதையும் இம்மரபில் காணலாம். அவ் அமைப்புகளையெல்லாம் ஆன்மத் துடிப்புடைய உயிர்ப் பொருள்கள் என்று தனது கட்டுரையில் விளக்கிச் சொல்லுகிறார். இவரது கட்டுரையை நிறுத்திப் படித்துச் சுவைத்துப் பார்த்து, இவ் உண்மையை நாமே உணர முடியும் என்று சொல்லிட விரும்புகிறேன்.

மேலும் இந்த நூலில் இதுவரை கேட்டிராத செய்திகளை அங்கும் இங்கும் தெளித்திருக்கிறார். ஒட்டு மொத்தமாகப் பார்க்கின் இக்காலத்தில் விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் செய்திட்ட விந்தைகளுக்கும் வித்தைகளுக்கும் ஒப்பான படைப்புகளையும், புதினங்களையும், இவர் சொல்லும் வாஸ்து விஞ்ஞானம் செய்திருக்கிறது என்பதை சொல்லிக் காட்டும் பொழுது, அவ்விஞ்ஞானம் பௌதிக விஞ்ஞானத்திற்கு அப்பால் சென்று, புதியதொரு விஞ்ஞானப் பாதையை வகுத்துக் கொண்டு படைத்திட்ட உணர்ச்சிப் பொருள்களாக இருக்கின்றன என்ற ஒரு புதிய செய்தியை தொழில் நுட்பப் பார்வையுடனும், விஞ்ஞானப் பார்வையுடனும் ஒரு சில இடங்களில் விளக்கியிருக்கிறார். இக்கால விஞ்ஞான அறிவு பெற்ற நமக்கு அவை ஏற்றுக் கொள்ளத் தக்கனவாகத் தோன்றச் செய்து விடுகிறார்.

என்னுடைய கோணத்திலிருந்து பார்க்கும் பொழுது அவை ஒப்புக் கொள்ளுவதற்கேற்ற செய்திகள் என்று சொல்லத் தோன்றினாலும், அவை பற்றி ஆழ்ந்தும், அகழ்ந்தும் அவற்றைத் தனித்தனியான நூல்களாகவும் எழுதி மக்கள் மன்றத்தில் வைக்க வேண்டும் என்று ஸ்தபதியாருக்கு ஆலோசனை கூறிட விரும்புகிறேன். இவரையொத்த பிற

ஸ்தபதிகளும் இதனைச் செய்யலாமே?

நான் கேட்டவரையில், நான் பார்த்தவரையில் இவருடைய ஆய்வுகளும், கருத்துக்களும் அறிஞர்கள் மத்தியில் நல்ல வரவேற்பினைப் பெற்று வருகின்றன. நீங்களும் இக் கட்டுரையினைப் படித்து அவ்வுணர்வு பெறுவீர்கள் என்று நம்புகிறேன். இது நிகழ்ந்து விட்டால் இதைவிட அவருக்கு ஏற்படும் மகிழ்ச்சி வேறு ஏதுமில்லை என்பேன்.

ஸ்தபதியார் இன்னொன்றையும் தனது உள்ளத்தின் அடித்தளத்தில் வைத்துக் கொண்டு பல செய்திகளை இங்கொன்றும் அங்கொன்றமாகக் காட்டி வருவதைக் காணலாம். இவர் ஒழுகி வரும் வாஸ்து மரபின் தந்தை மயன் என்பான் ஆவன். இவன் ஓர் இந்தியன். தென்னாட்டில் பிறந்தவன். இவனது விஞ்ஞானமும் விஞ்ஞானக் கலாச்சாரமும்தான் பல்வேறு பெயர்களில், பல்வேறு இடங்களில், பல்வேறு நாடுகளில் பேசப்படுவதாகவும், ஒழுகப் படுவதாகவும் காண்கிறார்.

பாரத நாட்டுக் கலாச்சாரமே மயன் வழிபட்ட கலாச்சாரமாக இருக்குமோ என்று இந்நாட்டு இலக்கிய செய்திகளையும் பிறநாட்டு வரலாற்றுச் செய்திகளையும் அருகருகே வைத்துப் பார்க்கிறார். அங்ஙனம் பார்க்கும் பொழுது இக்கருத்தில் இனமறியா ஒப்புணர்வு ஒன்று நமக்கும் தென்படுவதைப் பார்க்கலாம். நவீன காலப் பொறியாளனாக இருந்திட்டாலும், வாஸ்து மரபும் ஒருவகை பொறியியல் தன்மை கொண்டு விளங்குவதினாலும் இந்நிலைக்கு நானும் வருபவனாகிறேன். பற்பல இடங்களில் இச்செய்திகளை அவர் விளக்கிப் பேசும்போது என் அறிவும் அனுபமும் அவர் விளக்கங்களில் ஒட்டிக் கொள்கின்றன.

இவர் மயன் பற்றி இன்னொன்றையும் சொல்லிக் கொண்டிருக்கிறார். இஃது ஆய்வுக்குரியதே. இவர்

வாயிலிருந்து மயன் செய்திகள் வரும் போது அதற்கு அவர் தரும் பட விளக்கங்கள் நம்மை வேறு உலகத்திற்கு அழைத்துச் செல்வதாக உணரலாம். இதனை ஒரு சிறிது நீட்டிப் பேசுவோம்.

இந்திய நாட்டில் "மயன்" என்ற ஒருவனும் அமெரிக்க நாட்டில் மெக்ஸிகன் மாநிலத்தில் "மாயன்" என்ற ஒருவனும் இருந்தார்கள் என்ற செய்திகளை நம்நாட்டுப் பத்திரிகைகளில் அத்தி பூத்தது போல அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பார்த்திருக்கிறோம். இந்த மெக்ஸிகோ மாயனுக்கும் நம் நாட்டு மயனுக்கும் கருத்திலே, அவர்தம் படைப்பிலே, ஒருமைப்பாடு இருப்பதை ஸ்தபதியார் கண்டு பேசும் பொழுது இரட்டையர்களாக விளங்கும் "மாயனும் மயனும்" ஒரே கால கட்டத்தில் வெவ்வேறு இடங்களில் வாழ நேர்ந்திட்ட ஒருவனே என்று அவர் சொல்வதற்கு முன்பாக நாமே சொல்வதற்கு ஏற்ற விளக்கங்களைத் தருகிறார் ஸ்தபதியார் அவர்கள். இதைப் பார்க்கும் போது இந்த நாட்டு வரலாறு மட்டுமல்லாமல் எந்த நாட்டு வரலாறும் சரிவர எழுதப்படவில்லை என சொல்லத் தோன்றுகிறது. குறிப்பாக பாரத நாட்டு வரலாறு தெற்கிலிருந்தும் மேலை நாட்டு வரலாறு மெக்ஸிகோவிலிருந்தும் திருப்பி எழுதப் பட வேண்டும் என்றும் நினைக்கத் தோன்றுகிறது. இப்படித்தான் ஸ்தபதியாரும் ஒரு கருத்தை உருவகித்துக் கொண்டு பேசுவதாக அவர்தம் வரிகள் உணர்த்துகின்றன.

இன்னொரு பெரிய செய்தியை தம் அகத்தில் நிறைத்துக் கொண்டு சொல்லொணா பெருமிதத்தோடு இந்நூலில் ஸ்தபதியார் பேசுகிறார். இவரது கட்டுரையை நுணுகிப் பார்த்தால் தமிழகத்தின் இரு பெரும் கோயில்களில் ஒன்றை (சிற்றம்பலத்தை) வஸ்து என்றும், மற்றொன்றை (திருவரங்கத்தை) வாஸ்து என்றும், ஒன்றை 'E' (subtle energy)

என்றும் மற்றொன்றை 'mc^2' (gross energy) என்றும் ஒப்பிட்டுப் பேசும் பொழுது இந்த ஒருமைப்பாட்டை அவர் எப்படித்தான் கண்டு கொண்டாரோ! அவரை இதற்காக நெஞ்சாரப் பாராட்டுகிறேன். "வஸ்துவே வாஸ்துவாகிறது" எனும் மாபெரும் வாஸ்து விஞ்ஞானத் தத்துவத்தை பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே கண்டு கொண்டு செயலாற்றிய வாஸ்து மரபைப் பார்க்கும் போது நாம் வியந்து போகிறோம். ஸ்தபதியாரின் விஞ்ஞான ஆய்வுகள் வளர்ந்தோங்கிட அந்த வஸ்துவை வழுத்துகிறேன்.

எனது வாழ்த்துரையை முடிக்கும் முன்பு ஸ்தபதியார் அவர்களுக்கு மேலுமொரு யோசனையைச் சொல்லிட விழைகிறேன். சோழர் காலச் சிற்பியர்தம் அரிய படைப்புகளான தஞ்சைப்பெருவுடையார் கோயிலும், கெங்கை கொண்ட சோழீசர் கோயிலும் ஸ்தபதி அவர்களின் உள்ளங் கவர்ந்த கோயில்கள் என்பதை நான் அறிவேன். அக் கோயில்களை இரட்டைக் காப்பியங்கள் - விஞ்ஞானக் காப்பியங்கள் - என்று 20 ஆண்டுகளுக்கு முன் ரேடியோவில் பேசினார். இக்கோயில் அமைப்பில் பொதிந்து கிடக்கும் விஞ்ஞான நுட்பங்களை சடுதியில் எழுதி பொது மக்கள் ஆர்வத்தைத் தூண்டிடவும், ஆதரவைப் பெற்றிடவும் வேண்டும் என்று சொல்லிட விரும்புகிறேன். வாழ்க வாஸ்து வேதமும் வாஸ்துக் கலையும் என்று வாழ்த்தி அமைகிறேன்.

18, பரமேஸ்வரி நகர்,
சென்னை 25.
28 - 1 - 95.

வி. இராமமூர்த்தி B.Sc., B.E.,
Joint Director (Retd.)
(Planning and Development)
Directorate of Technical Edn.,
Madras.

விண்-ஞானக் கோயில்கள்
Temples of Space-Science

1

முன்னுரை

"உயிர்ப்புள்ள வாஸ்து மரபு – ஒரு சிற்பி பேசுகிறான்" என்ற தலைப்பில், முதன் முதலில் வீடியோ டாக்குமெண்டரி ஒன்றை 1991 ஆம் ஆண்டு, எனது நண்பர்கள் எடுத்தார்கள். இந்தப் படத்தை இயக்குநர் திலகம் திரு. கே. பாலசந்தர் அவர்களின் திருமகனார் திரு. பாலாகைலாசம் இயக்கினார். அந்த டாக்குமெண்டரியில் என் உள்ளத்தின் மேற்பரப்பில் எப்போதும் சஞ்சரித்துக் கொண்டிருந்த ஒரு சில மரபு விஞ்ஞானச் செய்தி களையும் எனது தொழில் வழிப்பட்ட ஆன்மிக அனுபவங் களையும் வெளிப்படுத்தினேன். இயக்குநர் திரு.பாலா கைலாசமும் காமெராமேன் திரு. ராம்ஜியும் அதனைச் சுவைமிகு இலக்கியமாகப் படைத்தளித்தார்கள். இந்தியாவில் ஒரு சில முக்கிய நகரங்களிலும், இந்தியத் தலைநகர் டெல்லியிலும் இந்தப் படம் திரையிடப்பட்டது. அப்பொழுது 1991 - Film festival ஒன்றும் நிகழ்ந்து கொண்டிருந்ததில் இப்படமும் தேர்வுக்குள்ளாகித் திரையிடப்பட்டது. இப்படம் சிறந்த ஒரு டாக்குமெண்டரியாகத் தேர்வு செய்யப் பெற்று ஜனாதிபதி பரிசும் பெற்றது. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு டெல்லி தூர்தர்ஷன் Net work ல் இது காட்டப் பெற்றது. இப்படத்தை நேரில் பார்த்திட்ட கலை உலகப் பிரமுகர்களும், கலைஞர்களும், கலாரசிகர்களும்,

கலைத்துறை ஆராய்ச்சியாளர்களும், தொழில்நுட்ப வல்லுநர்களும் பாராட்டினர். இத்தகைய மரபு விஞ்ஞானச் செய்திகள் நிறைந்த படங்கள் ஏராளம் வரவேண்டுமென்று அவர்தம் ஆசையினைப் புலப்படுத்தி ஆசியும் நல்கினார்கள்.

இது பற்றிய விமர்சனங்கள் The Hindu , Madras; Indian Express, New Delhi; மற்றும் The Economic Times, Delhi; ஆகிய பத்திரிகைகளிலும் வந்தன. அந்தப் பேரிதழ்களின் ஆசிரியர்க்கு நன்றி கூறி ஒரு சில வரிகளைக் கீழே தகவலுக்காகத் தருகின்றேன்.

•

.............As he talks, cosmic concepts are no longer abstruse. The relationship between inner and outerspace, time and eternity, the microcosm and the macrocosm, akasam and agni, the manifest and the unmanifest, the form and the formless become simple affairs of every-day reality! One sees this tension as the basis of creation impelling the definition of form in time.........

The Hindu, Madras, March 1, 1991.

.........Ganapati Sthapati is one of his kind --- a rare combination of artistic skill and an incisive intellect. In the film, he says: `The Universe is subject to a mathematical formula and architecture is yet another manifestation of this formula'. A statement that opens your window to the universe........

The Economic Times, Delhi, 20th January, 1991.

Co-winner of the national award for the Best Documentary Film on Art and Culture, this is one of the outstanding films among this year's award winners and is one of the most revealing analyses of traditional aesthetics that we have yet had in film documentation.

It represents a study which, in the critic's opinion, far surpasses the work being done on contemporary art.

Indian Express, Delhi, May 12th, 1991.

இதற்குப் பிறகு 1994 ல் சென்னைத் தொலைக்காட்சியினர் என்னைப் பேட்டி கண்டு அதனை ஒளி பரப்பினார்கள். மேலும் 'முத்திரை பதித்த வித்தகர்கள்' என்ற வரிசையில் எனக்கும் ஓர் இடம் அளித்து மீண்டும் பேசவைத்தார்கள். என்னையும் காட்டினார்கள், என் பணிகளையும் காட்டினார்கள். மேலும் Hinduism Today என்ற ஓர் அமெரிக்கப் பத்திரிக்கையிலும் டாக்குமெண்டரியைப்பற்றிய ஒரு கட்டுரையும் விமர்சனமும் வந்தன. இதனால் இதனைப் பார்வையிட்ட மேலைநாட்டுக் கலைத்துறை ஆய்வாளர்கள் இந்தியா வந்து போகும் பொழுதெல்லாம் ஒரு பிரதி (cassette) வாங்கிக் கொண்டு வந்து, என்னொடு அப்படத்திலே பேசிய விஞ்ஞானச்செய்திகள் பற்றி மேல் விளக்கம் கேட்டு, மகிழ்ச்சியோடு திரும்புவது வழக்கமாகியது.

மேலும் 1993 ஜனவரியில் சென்னையில் நானும் எனது நண்பர்களும் சேர்ந்து உருவாக்கிய Vāstu Vedic Research Foundation என்ற ஆய்வகம் நிகழ்த்திய International Seminar on Mayonic Science and Technology பற்றிய கருத்தரங்கிற்கு வந்திருந்த கலைத்துறை ஆய்வாளர்களுக்காகவும் இப்படம் திரையிடப்பட்டது. அங்ஙனமே சென்னை அடையாறு Theosophical Society நடத்திய convention ஒன்றுக்கு உலகத்தின் பல பகுதியிலிருந்து வந்திருந்த பிரம்மஞானியர்க்கும் இப்படம் காட்டப்பட்டது. இதனால் பல ஸ்தாபனங்களைச் சேர்ந்த மூதறிஞர் பலர் முன்னிலையில் மரபு விஞ்ஞானம் பிரபலம் அடைந்தது. இஃதொரு முதல் எடுப்பே தவிர அப்படத்தில்

எல்லா நுட்பங்களையும் சொல்லிவிட்டதாகப் பொருளில்லை. இந்த வாஸ்து மரபின் விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் பற்றிய செய்திகளில் ஒரு துளியே அப்படத்தில் பேசிடவும் காட்டிடவும் முடிந்தது.

அதைத் தொடர்ந்து டாக்குமெண்டரிகள் எடுத்திட முடியாது போனதால் நான் சிறுசிறு நூல்களை எழுதி இக்கால இளைஞர்களின் ஆர்வத்தைத் தூண்டிடவும் கவனத்தை ஈர்த்திடவும் முற்பட்டேன். பலநூறு ஆண்டுகள் தமது பணியிலேயே மூழ்கிக்கிடந்த சிற்பிகள் தமது படைப்பாற்றல் பற்றியும் இம்மரபு விஞ்ஞானம் பற்றியும் இந்த விஞ்ஞானத் தொடர்பு கொண்ட தொழில் நுட்பங்களைப் பற்றியும், இலக்கண நுட்பங்களைப் பற்றியும் பேசிடாமல் வாய் மூடிக்கிடந்தமையால் பல உண்மைகள் புதையுண்டு போயின. இதனால் அவர்தம் பணிமேன்மை பணி உரிமைகளெல்லாம் அவர்களை விட்டு அகன்றுவிட்டன. அறிவுக்கும் ஆன்ம உணர்வுகளுக்கும் பொருந்தாத செய்திகள் பல தோன்றி மூடநம்பிக்கை படர்ந்து ஒரு செம்மையான மரபு சீர் கெட்டுப்போய்விட்டது. எனவே பெற்றவன் பிள்ளையைப் பற்றிப் பேசிட வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு இப்பணியிலும் பயணத்திலும் ஈடுபட்டேன். பேசிட எழுதிட ஆர்வம் கொண்டேன். தெரிந்ததை, அனுபவித்ததை, படித்ததை, கேட்டறிந்ததைப் பேசுகிறேன் அவ்வளவுதான். எனவே 'ஒரு சிற்பி பேசுகிறான்' என்ற ஒரு பொதுத் தலைப்பிட்டுக் கொண்டு 60 பக்கங்கட்கு மிகாமல் சிறுசிறு ஏடுகளைப் பிரசுரம் செய்தேன். தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதினேன். பயணம் செய்யும் காலத்தில் கையடக்கமாய் எடுத்துப் போகவும், குறுகிய காலத்துக்குள் படித்து முடிக்கவும், சுலபமாக இருக்க வேண்டுமென்று இப்படிச் செய்தேன். பெரிய ஏடாக இருப்பின் அது நூல் நிலையத்துக்குப்

போய்விடும், அப்புறம் மறந்து போய்விடும். நாம் இப்பொழுது அவசர உலகத்தில் அல்லவா வாழ்கின்றோம்? மறத்தல் இயல்புதானே? அறிஞர்களுக்கும் இளைஞர்களுக்கும் இவை கிடைத்திட ஏற்பாடுகளும் செய்தேன். 1994 ஆம் ஆண்டில் மட்டும் சுமார் பதினைந்து இடங்களில் இந்தியாவிலும், இதற்கு மேல் அமெரிக்காவில் வாஷிங்டனிலும், கனடாவில் எட்மெண்டனிலும், ஆஸ்திரேலியாவில் சிட்னியிலும், ஜெர்மனியில் மியூனிச்சிலும் இவ்விஞ்ஞானம் பற்றி அறிஞர்களிடையே பேசினேன். நான் பேசிடும் செய்திகள் தொழில் நுட்பம் மற்றும் விஞ்ஞானம் பற்றியதாகையால், அடுத்துப் பொறியாளர்கள், கட்டடக்கலைஞர்கள் குழுமிய இடங்களில் பலமுறை பேசினேன். சென்னை, சேலம், புனா ஆகிய இடங்கள் குறிப்பிடத்தக்கவை. மேலும் பம்பாயில் Indian Institute of Technology யில் நடைபெற்ற Congress on traditional sciences and technologies ஒன்றில் keynote address ஒன்றும், ஆந்திர மாநிலத்தின் Andhra University விசாகப்பட்டினத்தில் நடத்திய International Seminar on Repairs / Renovation and Rehabilitation பற்றிய ஆய்வரங்கத்தில் Keynote address ஒன்றும் செய்தேன். சென்னை, அரசினர் மியூசியத்தில் World Heritage Day (1994) கொண்டாடப் பட்டதையொட்டி நிகழ்ந்ததொரு சிறப்புக் கூட்டத்தில் வாஸ்து விஞ்ஞானம் பற்றி முன்னாள் மத்திய அரசின் நிதி அமைச்சரும், மாநில அரசின் முன்னாள் கல்வி மற்றும் நிதி அமைச்சருமாக இருந்து சிறப்புற்று விளங்கிய திரு. சி. சுப்ரமண்யம் அவர்தம் முன்னிலையில், அவர்கள் மகிழ்ந்திடப் பேசி, அவர்தம் ஆசிகளையும் பெற்றிட்டேன். இங்ஙனம் பல சந்தர்ப்பங்களில் பல இடங்களில் பல அறிஞர்முன் பேசி வந்ததின் விளைவாக எல்லோரும் இந்த வாஸ்து விஞ்ஞானத்தைப் புரிந்து கொண்டு பாராட்டினார்கள்.

மேலும் இவ்வழி தோன்றிய Housing Architecture ஐயும் நன்றாகப் புரிந்து கொண்டு Industrial Architecture அளவுக்கு இதனை உயர்த்திப் பயன் துய்த்திடச் செய்ய பெரியோர்கள் பலர் உதவினார்கள். இப்போது வாஸ்து விஞ்ஞானத் தத்துவங்கள் பலன்தரு தத்துவங்களாக அனுபவிக்கப்பட்டு நல்ல வரவேற்பும் பெற்று வருகின்றன. Shilpa Shastra Study Circle என்ற பெயரில் கலந்துரையாடற்குரிய 'வட்டத்தொட்டி' ஒன்றை ஒரு பொறியாளர் சென்னையில் தொடங்கி வைத்துப் பணியாற்றி வருகிறார். இவற்றையெல்லாம் கேள்விப்பட்ட மத்திய அரசின் National Institute of Sciences and Technologies and Development Studies என்ற ஸ்தாபனத்தின் அழைப்பை ஏற்று, 1994 ஆம் ஆண்டு என் நண்பர்களுடன் டெல்லி சென்று அங்குள்ள பிரபல விஞ்ஞானிகளிடம் மரபு விஞ்ஞானத்தை விளக்கிப் பேசினேன். உற்று நோக்கினார்கள், வியந்து பாராட்டினார்கள். மத்திய அரசுக்குத் தெரிவித்து இவ்விஞ்ஞான மரபு மீண்டும் தலை தூக்கிட, தளைத்திட ஆவன செய்வதாகவும் சொன்னார்கள். இப்படி பற்பல சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொண்டேன். என்றாலும் வயதாகி வருவதாலும், என்னோடு இந்தப் பயணத்தை மேற்கொண்டிட இன்னும் உளப்பூர்வமான நேசம் கொண்டவர்களும் இன, இட, மத வேறுபாடு பார்க்காதவர்களும் தொழில் நுட்பத்துறையில் ஈடுபட்டவர்களும் நாட்டுப்பற்றுடையவர்களும் வந்து சேர்ந்து இந்த விஞ்ஞானத்தைப் பரப்பிட வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். இதற்காகவும் சிறுசிறு நூல்களை வெளியிட்டுக் கொண்டிருக்கிறேன். மறைந்து போன நகரங்களைத் தோண்டி எடுப்பதில் அனுபவிக்கும் சிரமங்களைப் போல மறைந்து போன விஞ்ஞான மரபு ஒன்றைத் தோண்டிக் கொணர்வதில் பல சிரமங்களை அனுபவிக்க வேண்டியவனாக விருக்கிறேன். இதற்காக

இடைவிடாது உழைத்துக் கொண்டு இருக்கிறேன். ஆனால் களைப்படையவில்லை என்பேன். காரணம் காண முடியாத தெய்வத்தை கண்முன் நிறுத்திக் காட்டிய மரபு விஞ்ஞானம் இந்த வாஸ்து விஞ்ஞானம்; காண முடியாத அந்த பராசக்தியைக் கணக்குக்குள் கட்டுப்படுத்திக் காட்டிய விஞ்ஞானம் இந்த வாஸ்து விஞ்ஞானம் ; அருவத்தை உருவமாக்கிக் காட்டிய விஞ்ஞானம் இந்த வாஸ்து விஞ்ஞானம். வருணிக்க முடியாத பரவஸ்துவின் அடி முடி காட்டிய அபூர்வ விஞ்ஞானம். அதோடு உறவு கொண்டாடிடவும் சுகம் துய்த்திடவும் வழி வகுத்திட்ட பயன்தரு விஞ்ஞானம். அஃது என் கண் முன்னால் சிதைந்து வருவதைக் கண்டு உருகிப் போனேன். பலமுறை கண்ணீர் விட்டு அழுதிட்டேன். தனியனாக முடிந்ததைச் செய்து விட்டுப் போகலாம், தெரிந்ததை ஏடுகளில் பதித்து விட்டுப் போகலாம் என்ற இந்த ஓர் எளிய முயற்சியை மேற்கொண்டேன். பேச்சும், எழுத்தும்தான். விட்டுச் சென்றபின் பற்றிக் கொள்வோர் யாராவது ஒருவர் அல்லது இருவர் வருவர் என்ற நம்பிக்கையில் எனது செயல் நீடிக்கிறது. அவ்வளவுதான்.

பொள்ளாச்சி தொழிலதிபரும் மூதறிஞரும் ஆன டாக்டர்.என்.மகாலிங்கம் அவர்களைக் கெளரவ ஆசிரியராகக் கொண்ட 'தமிழர் பண்பாடு','Kisan world ' ஆகிய பத்திரிகைகளில் எனது கட்டுரைகளும் வந்து கொண்டிருக்கின்றன. அவ் ஏடுகளின் ஆசிரியர்களுக்கு என் நன்றியை இங்கே பதிவு செய்கிறேன். இசைஞானி இளையராஜா அவர்களும், கவியரசர் வைரமுத்து அவர்களும் என்னை நேரில் வரவழைத்து நான் எழுதி வரும் விஞ்ஞானம் பற்றி விசாரித்து உரையாடித் தங்கள் மகிழ்ச்சியைப் புலப்படுத்திக் கொண்டார்கள். என் பயணக் கால்களுக்கு அவர்களும் வலுவூட்டினார்கள் என்பேன்.

இந்த நிலையில், நடப்பு ஆண்டு கலைமகள் தீபாவளி மலருக்கு இரண்டு பக்கங்கட்கு மிகாத கட்டுரையொன்று கேட்டிருந்தார்கள். ஆர்வத்தோடும் எழுச்சியோடும் எழுதத் தொடங்கிய நான், இரண்டு பக்கத்தைக் கடந்து இருபது பக்கமாக ஆனதையும் இறுதியில் அது நாற்பது பக்கமாக வளர்ந்து விட்டதைக் கையில் வைத்துக் கொண்டு கலைமகள் ஆசிரியர் அவர்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டேன். இத்துணை பக்கங்கள் விரிவு கொண்ட கட்டுரையை வெளியிட இயலுமா? இடம் கிடைக்குமா? என்று வினவினேன். 'அனுப்புங்கள், நாங்கள் சுருக்கிக் கொள்கிறோம்' என்று ஆசிரியர் அவர்கள் கூறினார்கள். அதன்பிறகு யாதொரு தொடர்பும் இல்லை. தொடர்பு கொள்ள இருவருக்கும் நேரமும் இல்லை.பேருள்ளம் கொண்ட இந்த ஆசிரியப் பெருந்தகை அதனை அப்படியே பிரசுரித்து விட்டார்கள். பல படங்களையும் அதோடு சேர்த்து வெளியிட்டுள்ளார்கள். அவர்களுக்கு எனது ஆழ்ந்த நன்றியையும் வணக்கத்தையும் இந்த ஏட்டில் பதிய வைக்கிறேன்.

இதைக் கண்ட எனது நண்பர்கள் ஒரு யோசனையைச் சொன்னார்கள். கலைமகள் மடியேறிய இக்கட்டுரைக்கு பிரிதொரு கனபரிமானம் ஏற்பட்டுவிட்டதாகச் சொல்லிமுதலில் மகிழ்ந்தார்கள். பிறகு அக்கட்டுரையைப் படித்துவிட்டு பல வினாக்களையும் தொடுத்து அவற்றின் விடைகளையும் பிற்சேர்க்கையாக இணைக்கச் சொன்னார்கள். வாஸ்து மரபின் ஆதிச் சிற்பி மயனைப் பற்றியும், தாண்டவக்கோலங்களைப் பற்றிய மரபுச் செய்திகளையும், விசுவகர்மன் என்று பேசப்படும் தேவ சிற்பிக்கும் மயனுக்கும் உள்ள தொடர்பு பற்றியும், மெக்ஸிகோவில் பேசப்படும் மாயனுக்கும் இந்திய மயனுக்கும் உள்ள தொடர்பு பற்றியும் எழுதிடச் சொன்னார்கள். சிற்பக்கலை

மற்றும் கட்டடக்கலை வரலாறு நிரம்பத் தெரிந்த இக்கால ஆய்வாளர்கள் சிற்பிகளைப் பற்றியும் அவர்தம் மரபு விஷயங்கள் பற்றியும் யாதொன்றும் பேசிடுவதில்லையாதலால் சிற்பியே சிற்பக்கலை மரபுச் செய்திகளைப் பேசி ஆய்வாளர்களுக்கு நிரம்பச் செய்திகளைக் கொடுத்து உதவிட்டால் அவர்தம் ஆய்வுகள் முழுமை பெறக்கூடும் என்றும் அறிவுறுத்தினார்கள். எனவே இந்நூல் முன்னுரை, கட்டுரை, பின்னுரை என்று மூன்று பிரிவுகளைக் கொண்டதாய் அமைந்திட வெண்டுமென்றும் சொல்லி, சில படங்களையும் இணைத்திடச் சொன்னார்கள், அதோடு அதனை ஒரு சிறு, ஏடாகவும் அச்சேற்றி இக்கால இளைஞர்கள் பலருக்குப் பயன்படுமாறு செய்ய வேண்டுமென்றும் பணித்தார்கள். அதன் விளைவே இந்தச் சிறு ஏடு. எனவே இஃதோர் ஏடாக உருக் கொண்டிட யோசனை கூறிய எனது இனிய நண்பர்களுக்கு இத்தருணத்தில் எனது நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்தச் சிறு ஏட்டில் தமிழ்நாட்டில் தோன்றிய இரு தொல் பழங்கோயில்களான திருச்சிற்றம்பலத்திலும் திருவரங்கத்திலும் இந்த வாஸ்து விஞ்ஞானம் எங்ஙனம் புகுத்தப் பட்டிருக்கிறது, காக்கப்பட்டிருக்கிறது என்ற செய்திகளோடு எங்ஙனம் மக்களின் ஆன்ம நலத்தையும், உடல் நலத்தையும் வளர்த்திடும் உயிர்ப் புள்ள கோவில்களாக அவை விளங்குவதாயின என்ற நுட்பங் களையும், ரகஸியங்களையும் இக்கால இளைஞர் மனதில் பதிவு பெறுமாறு செய்து, மேலும் அவர்களைச் சிந்திக்கத் தூண்டிடும் தோரணையிலும் முயன்று எழுதியிருக்கிறேன். கோயில் என்றாலே முகம் சுழிக்கக் கூடிய அளவு மூட நம்பிக்கைகள் நான் சொல்ல விரும்பும் விஞ்ஞானத்தை மறைத்துக் கொண்டிருப்பதையும், அதனால் சிறந்த தொழில் ஒன்றை

ஆண்டாண்டு காலம் செய்து வரும் ஒரு தொழில் மரபினர் பின்தள்ளப்பட்டும், ஒதுக்குண்டும், மறைப்புண்டும் கிடப்பதையும் உணர்ந்து விசனமுற்று இவற்றையெல்லாம் எழுதலானேன். அம்மூட நம்பிக்கைகளைக் களைந்திட எத்துணையோ பெரியவர்கள் முயன்றிருக்கின்றனர். வெற்றி பெற்றிருக்கிறார்களா, நானும் வெற்றி பெறுவேனா என்பது உங்களுக்குத் தான் தெரியும். படித்துவிட்டு எனக்கு எழுதுங்களேன்.

அத்துறையிலேயே பல்லாண்டுகாலம் மூழ்கிக் கிடக்கும் பாரம்பரியச் சிற்பி என்ற முறையில் நானும் சிந்தித்தேன்: எழுதினேன் இம்மரபின் மானம் காத்திட. இம்மரபினர் எழுச்சி பெற, மரபின் மீது மீண்டும் பற்றுக் கொண்டிட எழுதிக் கொண்டிருக்கிறேன். மரபு விஞ்ஞான ஆராய்ச்சிக்கென 'வாஸ்து புருஷன்' என்ற ஆங்கிலப் பத்திரிக்கையொன்றையும் நடத்திக் கொண்டிருக்கிறேன். சிற்பக்கலையானது பட்டறையில் தோன்றி வளர்ந்த கலை. நாடாண்ட மன்னர்தம் மடியில் ஒய்யாரமாய் தவழ்ந்து ஓங்குற்ற கலை. ஆனால் அன்னியர் தலையீட்டால் மங்கிப் போன கலை. அத்தகைய கலை இப்போது பண்டிதர் மடியிலும், விஞ்ஞானியர் கையிலும் இருக்கின்றது. ஆனால் மரபு பற்றிய அவர்தம் விளக்கங்கள் என்னைக் கவர்ந்திடவில்லை. பெரும்பாலும் அவை மேலெழுந்த வாரியாகவே அமைந்திருக்கின்றன. ஆழம் போக அவர்களுக்குப் படிகள் கிடைக்கவில்லை. எனவே என் பங்கைச் செய்திட மரபின் வேர் நாடி, உண்மை நாடி, பயணம் ஒன்றை மேற்கொண்டேன்.ஆனால் மரபு விஞ்ஞானம் பற்றி நான் எழுதும் போதெல்லாம் யாரோ என் கையைப்பிடித்து அழைத்துச் செல்வதாக உள்ளூர உணர்கிறேன். எனவே கால் வலி தெரியாமல் அதையொட்டித் தொடர்கிறேன். தேடிடும்

உண்மையோ கடினமானது. உண்மையை விளக்கிடுவோமெனில் அதனிலும் கடினமாக இருக்கிறது. ஆனால் மக்கட்கு இன்று கிடைத்துள்ள மேலைநாட்டு விஞ்ஞான அறிவு, நான் சொல்லிடும் கருத்துக்களைப் புரிந்து கொள்ள அவர்களுக்கு உதவியாகவிருக்கிறது. அதுதான் என் பயணத்தின கைவிளக்கு மற்றும் ஊன்றுகோல். எனவே துணிந்து நடக்கிறேன், எழுதுகிறேன். கோயில் கலையை வளர்த்திட்ட பண்டை மாமன்னர்களையும், தொடர்ந்து வரும் வறுமையினைப் புறம் தள்ளி நடைபோடும் சிற்பிகளையும் இக்கால இளைஞர் மதித்துப் போற்றிட வேண்டுமென்ற நோக்கோடும் எழுதிக் கொண்டிருக்கிறேன்.

நோபல் பரிசு பெற்ற விஞ்ஞான மேதை ஐன்ஸ்டீன் சொன்ன Science should be religion "விஞ்ஞானமே சமயமாக இருக்க வேண்டும்" என்ற வாக்கியத்தையும்,"விஞ்ஞானம் பிரம்ம" என்ற வேத வாக்கையும், "ஜெகத் ஸர்வம் ஸில்பமேவ பவதி" என்ற சிற்பியர்தம் உபநிஷத் வாக்கியத்தையும், "விஞ்ஞானம் ஸில்ப கௌஸல்யம் "என்ற ஶ்ரீமத் பாகவத மகா வாக்கியத்தையும், "வஸ்து ரேவ வாஸ்து" என்ற வஸ்து விஞ்ஞானி மயன் சொன்ன விஞ்ஞானத் தேற்றத்தையும் என்னைச் சுற்றி வைத்துக் கொண்டு கட்டுரை வடிவான் இந்தச் சிறிய ஏட்டை எழுதினேன். இவ்வாக்கியங்களெல்லாம் ஓரளவு புரிந்து கொள்ள வழிவழி வந்திட்ட வாஸ்து சாஸ்திர ஞானமும், எனது தந்தையார் மற்றும் பெரிய தந்தையார் எனக்கு ஊட்டிய தொழில் ஞானமும் பேருதவியாக இருந்து வருகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக வஸ்து விஞ்ஞானி மயன் எழுதிட்ட மயமத வஸ்து சாஸ்திரமும், ஐந்திற வியாகரணமும், ஐந்திரமதம் என்ற சிற்ப சாஸ்திரமும், சிற்பரத்னாகரம் என்ற மயநூலும், மானசாரம் மற்றும் வாஸ்து வித்யை என்ற நூல்களும்,சில்பவித்யா ரஹஸ்யோபநிஷத் என்ற

சிற்பியர் உபநிஷதமும் எனக்குப் பேருதவி புரிந்தன. என் அகக் கண்களைத் திறந்து விட்டன.

இது மட்டுமல்ல, இந்த நுட்பங்களைச் செயல்படுத்தி மக்கட்கு பயன் கூட்டிட ஆசை கொண்ட - என்னை நம்பி எனக்கு ஆதரவு காட்டிய - பெரியோர்களை இந்த நேரத்தில் உளம் நெகிழ நினைக்கின்றேன். இவர்கள் நமது தாயகத்திலும், சிறப்பாக மேலை நாடுகளிலும் நிரம்ப இருக்கின்றார்கள். இவர்களில் என்னை ஊக்குவித்து சாஸ்திரக் கோட்பாடுகளைக் கேட்டனுபவித்ததோடல்லாமல், அவற்றை அவர்தம் பணிகளில் ஏற்றிக் கொண்டு பயன்துய்த்துக் கொண்டவர்களில் மூவர் குறிப்பிடத் தக்கவர். அவர்கள் அமெரிக்காவில் வாஷிங்டனில் மேரிலாண்ட் என்ற பகுதியில் சிவவிஷ்ணு ஆலயம் ஒன்றைக் கட்டித் தர என்னைப் பணித்தவர்கள். ஒருவர் டாக்டர். சிவசுப்ரமணியன், பிறிதொருவர் டாக்டர். நகுலன். மூன்றாமவர் டாக்டர். கிருஷ்ணாரெட்டி என்பவர். திரு. ரெட்டிகாரு சிகாகோவில் இராமர் ஆலயம் கட்டும் திருப்பணிக்குத் தலைவராக இருந்து வெற்றி கண்டவர், பெரிய ரசிகர் இராமகிருஷ்ண பரமஹம்ஸ நெறியொற்றி வாழ்பவர்.

இத்தருணத்தில் ஓர் இராஜயோகியை நான் இங்கே பெருமையோடு நினைவுபடுத்திட விரும்புகிறேன். இவர் ஓர் அமெரிக்க சுவாமிகள். சைவ சமயத்தைக் கட்டித் தழுவி சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக அரிய பல சமயத் தொண்டுகளை அமெரிக்காவிலும் இந்தியர் வாழும் அயல் நாடுகளிலும் செய்து வருகிற மகரிஷி. சிவப்பழமாகத் தோன்றும் இவர், ஹவாய்த் தீவுகளில் ஒன்றான குவைத் தீவில் தனது யோகாஸ்ரமத்தை (hermitage) நிறுவிக் கொண்டு, சைவ சமய நெறியை மிகத் தூய்மையோடும் உணர்ச்சிபூர்வமாகவும் வளர்த்து வருகிறார். இன்னும் சொல்லப் போனால் விஞ்ஞான

ரீதியாகவும் மரபு வழுவாமலும் ஏற்றிப் போற்றி வருகின்றார். 1980 லிருந்து இன்று வரை அப்பெரியாரொடு நெருங்கிய தொடர்பு கொள்ளும் பேறு பெற்றேன். இயல்பாக நவீன கால விஞ்ஞான நுட்பங்களை நன்கு தெரிந்து கொண்டிருக்கும் இந்த அமெரிக்க சுவாமிகளிடம் வஸ்து விஞ்ஞானம் பற்றிப் பல நிலைகளில் பலவாறாக உரையாடியிருக்கிறேன். விஞ்ஞானமே நமது சைவ சமயமாக, வைணவ சமயமாக, சாக்த சமயமாக உருமாற்றம் கொண்டிருப்பதையும் பயன் தருவதையும் விளக்கிப் பேசியிருக்கிறேன். Science should be religion என்று விஞ்ஞானி ஐன்ஸ்டீன் சொன்னதை இடையிடையே நினைவு கூர்வேன். விஞ்ஞான நுட்பத்தைத்தானே இசையாகச் சுவைத்து இன்பம் துய்க்கின்றோம். அதே விஞ்ஞான நுட்பத்தைக் கொண்டு உருப்பெற்ற சிற்பத்தை மற்றும் கட்டடத்தைத் தானே காட்சியாகச் சுவைத்து இன்பம் துய்க்கின்றோம், கடவுளாகக் காணுகிறோம், அனுபவிக்கிறோம் என்று சொல்லும் நேரத்தில் மெய்மறந்து போவார்கள். ஏன் எப்படி என்றால் அந்த சுவாமிகள் நாத சம்பிரதாயத்தை ஒழுகுபவர். சப்தப் பிரம்மத்தை அனுபவிக்கத் தெரிந்தவர். ஆகையால் அர்த்தப் பிரம்மத்தையும் அனுபவிக்க அவரால் முடிகிறது எனக் கண்டேன். பெரிய ஆய்வாளர், பேச்சாளர் மற்றும் பெரிய எழுத்தாளர். அவர் எழுதிய Dancing with Shiva என்ற நூல் உலகப் புகழ் வாய்ந்த ஞான நூலாகும். அவர் ஒரு மகா வித்வான். அனைத்து நூல்களையும், சமய நுட்பங்களையும் உற்றறிந்து உண்மை யைத் துணிந்து கூறுபவர். அறிவுலகப் பெரியோர்களையும் விஞ்ஞானிகளையும் பொறியாளர்களையும் ஆன்மிக உலக ஆச்சாரியர்களையும் தன்னைச் சுற்றி வைத்துக் கொண்டிருப்பவர். எனவே வாஸ்து மரபின் நுட்பங்களைக் கேட்டு நெஞ்சார மகிழ்ந்து வாயாரப் பாராட்டுவார்கள். என்

ஆய்வுப் பயணத்தில் மேலும் சென்றிட ஊக்குவிப்பார்கள். தென்னாட்டு மயன் தந்த விஞ்ஞானத்தின் நுட்பங்களை மெக்ஸிகன் மாயனிடம் காண்கிறேன் என்று சான்றுகளுடன் அவர்களிடம் தெரிவித்துக் கொள்ளும் நேரத்தில் பெரும் வியப்பும் மகிழ்ச்சியும் கொள்வார்கள்.

அனுபவ பூர்வமாக பாரத நாட்டுச் சமயங்களைக் கண்டு தேர்ந்து ஒழுகி வரும் அந்த லோக குருவின் ஆணைகளுக்கு இணங்க மூன்று மில்லியன் டாலர் மதிப்பில் ஒரு சிவாலயத்தை முற்றிலும் கல்லால் தனது குவை ஆதினத்தில் கட்டிக் கொள்ளும் பணிக்கு நான் ஸ்தபதியாக ஈடுபடுத்தப் பட்டிருக்கிறேன். அவர்தம் ஆதீனக் கோவிலில் நடராசனே முழுமுதற் தெய்வமாகக் கொள்ளப் பட்டிருக்கிறார். ஏன் இத்துணை தூரம் வளைத்துப் பேசுகிறேன் என்றால், நான் வெளிப்படுத்தி வரும் விஞ்ஞான நுட்பங்களை அவர் புரிந்து பாராட்டுவதோடு அல்லாமல் மரபின் வஸ்து விஞ்ஞானியான மயனின் பேராற்றலை வால்மீகி போல் உணர்ந்து, மெக்ஸிகோவில் இருந்தவனும் அவனே என்று நான் கண்டு சொன்னதையும் புரிந்து கொண்டு, மயனுக்கு ஒரு நினைவுச் சின்னமே எழுப்பிடத் திட்டமிட்டிருக்கிறார்கள். எங்கே? ஹவாயிலேதான். அப்படியானால் East ம் West ம் ஹவாயில் சந்திக்கும் போல் தெரிகிறதே என்பேன், சந்தோஷப்படுவார்கள்.

இங்ஙனம் வாஸ்து விஞ்ஞானத்துக்கும் வாஸ்துத் தொழில் நுட்பத்திற்கும் யோகிகளிடையேயும், பொது மக்களிடையேயும், அறிஞர்களிடையேயும், சமஸ்கிருதப் புலவர்களிடையேயும் நல்ல வரவேற்பையும், ஒத்துழைப்பையும் பெற்றேன் என்பதைக் கூறும் நேரத்தில் மரபுச் சிற்பிகளை ஊக்குவிப்பதற்கென்று ஆண்டு தோறும் சிறந்த ஒரு சிற்பிக்கு ஒரு லட்ச ரூபாய் பரிசு வழங்குமென்றும் அறிவித்து சிற்பியர் நலம் பேணுவதற்கு Shilpa

Kala Academy என்ற தனித்தவொரு நிறுவனத்தையும் கர்நாடக மாநில அரசு இவ்வாண்டு அறிவித்துச் செயல்படத் தொடங்கி விட்டது. மேலும் இந்த மரபுக்கே உரித்தான 'University of Traditional Sciences and Technologies' என்ற பெயரில் பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்கித்தர கர்நாடக மாநிலச் சிற்பிகளே ஒன்று திரண்டு தமது மாநில அரசிடம் கோரிக்கை விட்டிருக்கிறார்கள். முதல் எடுப்பாக Vishwakarma Institute of traditional sciences and technologies என்ற பெயரில் ஒரு கல்லூரியை இவ்வாண்டே தொடங்கவிருக்கிறார்கள் என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இந்தியத் துணைக் கண்டத்தில் எந்த மாநிலத்திலிருந்து வந்தும் இங்கே சேர்ந்திடலாம்; பயிற்சி பெறலாம்; பெண்களும் பயிற்சி பெறலாம். படிப்பும் பயிற்சியும் பிணைந்திட்ட திட்டமாக அஃது உருவெடுத்துளது. வாஸ்து விஞ்ஞானத்தத்துவங்களுக்கும் மரபுத் தொழில் நுட்பங்களுக்கும் யாதொரு தொய்வும தீங்கும் ஏற்படாத வண்ணம், நவீன காலத் தேவைகளையும் பூர்த்தி செய்திடத்தக்க (to be relevant to modern context) ரீதியில் புதிய பாடங்களும் பயிற்சிகளும் இதில் இணைக்கப்பட்டுள்ளன. Housing Architecture ம் Temple Architecture ம் போதிக்கப்பட விருக்கின்றன. மத்திய அரசும், மாநில அரசுகளும் இதற்குக் கைகொடுத்தால் பாரதப் பண்பாடும் நாகரிகமும் மீண்டும் இம்மண்ணில் நிலைத்துப் பயன்தரக்கூடும் என்று நம்புகிறேன். ஒவ்வொரு மாநில அரசும் இத்தகைய சீரமைப்புத்திட்டங்களைக் கொண்டுவந்து மரபுகளைக்காத்துக் கைதூக்கி விடவேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன். இதைத்தான் தேசத் தந்தை காந்தி அடிகள் தன் அகத்தே லக்ஷியமாகக் கொண்டு பேசினார், எழுதினார். இஃது எப்போது உயிர்பெறும் உருப்பெறும்? உயர்வு பெறும்? நல்லதை எதிர்நோக்குவோமாக.

இந்தப் புத்தகத்தைப் கண்ணுறும் அறிஞர்கள் அவர்தம் கருத்தினை எனக்குத் தெரிவித்தால் நான் அவர்களுக்குக் கடமைப்பட்டவனாவேன். இக்கருத்துக்களுக்கு ஏற்ற செய்திகளோ, சாஸ்திர ஆதாரங்களோ தனி நூல்களோ கட்டுரைகளோ கைவசமிருப்பின் தந்து உதவுமாறு கோருகிறேன். கருத்து வேறுபாடுகளோ, மறுத்திடத் தக்க செய்திகளோ இருப்பின் தகுந்த மேற்கோள் காட்டி விளக்கி எனக்கு எழுதினால் அவற்றை மறுபதிப்பில் இணைத்து நன்றி கூறி எனது விளக்கத்தையும் எழுதிடுவேன், வணக்கத்தையும் கூறிடுவேன்.

இந்த ஏட்டில் கடினமான விஞ்ஞானத் தேற்றங்களைப் புரிய வைத்திடும் நோக்கில் ஒரே செய்தியை பல கோணங்களிலிருந்து அணுகியிருக்கிறேன். துண்டு துண்டாகக் காணப்படும் அச் செய்திகளை ஒட்டிப் பார்த்து முழு வடிவத்தைத் துய்ப்பீர்கள் என்று நம்புகிறேன்.

இதனை அழகுபட கம்ப்யூட்டரில் டைப் லேசர் பிரிண்ட் வரை செய்து கொடுத்த சென்னை ஸ்ரீராம் சாப்ட்வேர்ஸ் சர்விசஸ் (Sriram Softwares Services) நிறுவனத்தாருக்கு என்னுடைய நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாஸ்து வேத ஆய்வு நிறுவனம்
திருவள்ளுவர் நகர்
சென்னை - 600 041.

வை. கணபதி ஸ்தபதி

விண்-ஞானக் கோயில்கள்
Temples of Space Science

2

கட்டுரை

தமிழ் நாட்டில் பதிவு செய்யப் பெற்ற கோயில்கள் சுமார் முப்பத்தையாயிரமாகும் என்றும், பதிவு செய்யப்படாத கோயில்கள் இதைவிட இருமடங்காக இருக்குமென்றும் கோயிற்கலை ஆய்வு அறிஞர்கள் கூறுவார்கள். அவற்றோடு அண்டை மாநிலங்களிலும், தூரத்து மாநிலங்களிலும் காணப்படும் கோயில்களைச் சேர்த்துப் பார்த்தால் அம்மதிப்பீடு பல லட்சங்களைத் தாண்டி நிற்கும் என்றும் சொல்லுவார்கள். இத்துணை கோயில்கள் இருந்து வரும் நம் பாரத நாட்டில் ஒவ்வொரு கோயிலையும் உற்று நோக்கின் ஏதாவது ஓர் அம்சம் அங்கே சிறப்புற்று விளங்கிடக் காணலாம். அவற்றையெல்லாம் மக்கள் தம் ஆன்ம நலம் குறித்துப் பாதுகாத்துப் பயன் அடைந்து வருகிறார்கள்.

அதே நேரத்தில், இந்தியத் துணைக் கண்டத்தில் தோன்றிய அத்துணை கோயில்களிலும் இருபெரும் கோயில்கள் தனித்தன்மை வாய்ந்தனவாக விளங்குகின்றன. அவை வரலாற்றுத் தொன்மையாலும், கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைச் சிறப்பினாலும் புகழ் பெற்றவை என்றாலும் அவை காத்து வைத்திருக்கும் அரியதொரு விஞ்ஞானக்

கருத்தால் ஏனைய கோயில்களை விட ஒரு படி ஏற்றம் கொண்டதாக மதிக்கப் படுகின்றன. அத்தன்மை வாய்க்கப் பெற்ற இரண்டு கோயில்கள் தமிழ் நாட்டில் இன்றும் நல்ல நிலையில் இருந்து வருகின்றன என்ற செய்தியையும் அக்கோயில்களின் அமைப்பிலே பொதிந்து கிடக்கும் அரியதொரு விஞ்ஞானக் கொள்கையையும் இளைய சமுதாயத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து அவற்றைக் காத்திடத் தூண்டுவதே இக்கட்டுரையின் அடிநோக்கமாகும். அவ்விரண்டில் ஒன்று சைவர்களுக்குரிய கோயில் என்றும் மற்றொன்று வைணவர்களுக்குரிய கோயில் என்றும் மரபில் கொள்ளப்பட்டிருக்கின்றன. "கோயில்" என்றால் இவ் விரண்டைத்தான் குறிக்கும் என்ற ஒரு வசனம் கூட தொன்று தொட்டு இருந்து வருகிறது. அக்கோயில்கள் திருச்சிற்றம்பலம் என்றும், திருவரங்கம் என்றும் இரண்டு அழகிய பெயர்களைப் பூண்டிருக்கின்றன. அவையிரண்டும் வெறும் புகழ்ச்சிப் பெயர்கள் அல்ல, மாறாக அவ்விரண்டும் விஞ்ஞானப் பெயர்கள் என்பதை இங்கே கோடிட்டுக் காட்டிட விரும்புகின்றேன். மேலும் அவை சிதம்பரம் கோயில் என்றும் சீரங்கம் கோயில் என்றும் எளிமையாகவும் சொல்லப்படும். இந்த நிலையில் சிதம்பரத்திலே சிவனை நடராஜன் என்றும் சீரங்கத்திலே விஷ்ணுவை ரெங்கராஜன் என்றும் பெயரிட்டுள்ளனர். ராஜன் என்ற பெயரை தொல்பழங்காலத்திலேயே தாங்கிக் கொண்டு விட்ட இரு கடவுளர்கள் இவர்களே என்று மரபில் சிறப்பித்துச் சொல்வதும் உண்டு. இதற்குப் பல காரணங்கள் இருந்தாலும் இவ்விரு தெய்வங்களின் நிலையங்களையும் அங்கேயுள்ள திருமேனிகளையும் தோற்றுவிப்பதில் தொல்பழஞ் சிற்பியர் கையாண்ட ஆழ்ந்த விஞ்ஞானக் கருத்தொன்று அடிப்படையாக இருப்பதை வெளிப்படையாக இன்றும் எவரும்

விரித்துக் கூறவில்லை என்றே சொல்லத் தோன்றுகிறது. நவீன விஞ்ஞான காலத்து இளைய சமுதாயத்துக்கு இக்கருத்து தெரிய வேண்டுமென்று ஆசைப்பட்டு, கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலை தொடர்பான ஒருசில விஞ்ஞான நுட்பங்களை பேச்சு நடையில், எளிமைபட, அவர்தம் முன்னே வைத்திட விழைகிறேன். மேலைநாட்டு விஞ்ஞானிகள் கூட பொதுமக்கள்தம் விஞ்ஞான அறிவு வளர்ச்சிக்காக விஞ்ஞானச் செய்திகளை எளிமையான மொழியில் எழுதி வருவதைக் கண்டு வியந்து அவ்வழி நின்று இந்த முயற்சியை மேற்கொண்டிருக்கிறேன். வரலாற்றுச் செய்திகளையும் இவ்வண்ணம் எழுதிட முயற்சித்துள்ளேன். இத்தகைய நடைக்கு நல்ல வரவேற்பு இருப்பதைக் காண் கிறேன். பண்டிதர் மொழி இக் காலத்துக்கு ஒத்து வரவில்லை என்பதையும் உணர்கிறேன்.

இவ்விரண்டு கோயில்களில் சிதம்பரம் கோயிலைப் பற்றியும் நடராஜனைப் பற்றியும் அறிஞர் பெருமக்கள் நிரம்பப் பேசியும், எழுதியும் வைத்திருக்கிறார்கள். ஆனால் ரெங்கராஜனைப் பற்றி அவ்வளவாக எவரும் பேசிடவில்லை. அவர் பற்றி எழுதிய தனி நூல்களுமில்லை என்றே தெரிகிறது. ஏதுமிருப்பின் உதவிட வேண்டுகிறேன். நடராஜனின் எழில் நடனத்திலே மயங்கிவிட்ட ஆய்வறிஞர்கள் மற்றும் விஞ்ஞானிகள், ரெங்கராஜனின் அமைதி தவழ் துயிலிலே கவனம் செலுத்தாது போய்விட்டனரே என்ற நிலை என்னைச் சிந்திக்க வைத்துவிட்டது. அதன் விளைவே இக்கட்டுரைக்கு நான் கொடுக்க நேர்ந்திட்ட தலைப்பாகும். இந்தியத்துணைக் கண்டத்தில் மிகப் பெரிய கோபுரத்தைக் கொண்டு விளங்கிடும் கோயில் அரங்கநாதன் கோயிலே என்ற பெயரும் புகழும் மட்டும் இப்போது தலை தூக்கி நிற்கிறது. ஆனால் இச்சிறப்பைப் பெற்றிட அதற்கு வாய்த்திட்ட தகுதி

என்ன? விஞ்ஞானக் கருத்தென்ன? அதன் அருமைப்பாடு என்ன? என்ற வினாக்களை எழுப்பிட நமக்கு உணர்ச்சி மேலிடுகிறதல்லவா? எனவே கோயில் நிர்மாணச் சிற்பி என்ற முறையிலும் விடு கட்டும் சிற்பி என்ற முறையிலும் எனக்குத் தெரிந்த, என் முன்னோர் பேசிய, எனக்கு சொல்லிக் காட்டிய, என் ஆய்வுக்கும் அனுபவத்திற்கும் ஒத்துப் போகக் கூடிய ஒரு சில செய்திகளை இங்கே சொல்லிட விழைகிறேன். பிரபஞ்ச விஞ்ஞானக் கருத்துக்களுக்கு (scientific concepts of the cosmos) உருக் கொடுத்திடும் பணி தானே முற்காலச் சிற்பியர்தம் தலையாய பணியாகவிருந்தது? அப்பொழுது சிற்பிகளெல்லாம் கட்டடக் கலைஞர்களாக இருந்த காலம்; இப்படியும் சொல்லலாம், கட்டடக் கவிஞர்களாக இருந்த காலம். அதிலும் பௌதிக விஞ்ஞானத்திற்கு (physical science) அப்பால் நின்று துய்த்திடும் ஆன்ம அனுபவங்களை - ஆன்ம விஞ்ஞானத்தை - விளக்கிடல் தானே கட்டடக் கவிஞர் மேற்கொண்ட திருப்பணியுமாகும்? கவிஞர்களும் இசைஞர்களும் இதனைத்தானே செய்தார்கள்? இசையிலே விஞ்ஞானத்தின் பயனைத்தானே துய்க்கிறோம்? கடவுளை எப்படி ஒரு விஞ்ஞானப் பொருளாக (வஸ்துவாக) இவர்கள் கண்டு கொண்டார்கள் என்ற நுட்பத்தையும் இங்கே சுட்டிக் காட்டிட விரும்புகிறேன். தர்க்கரீதியில் இதுவும் சரிதானே? 'ஞானமயம் பிரம்ம' 'விஞ்ஞானம் பிரம்ம' என்று தானே வேதங்களும் பேசுகின்றன? எனவே நான் இட்டுக் கட்டிப் பேசிடவில்லை என்பதை இப்போதே சொல்லிவிடுகிறேன். வேதம் சொல்லிக் காட்டுவது எத்தகைய விஞ்ஞானம் என்பதையும் உங்களுக்கு அறிமுகப் படுத்துவேன். வேதம் தனது இதயத்தில் கொண்டுள்ள அந்த விஞ்ஞானக் கடலில் ஒருசில துளிகளைத்தான் இங்கே காட்டப் போகிறேன்.

எடுத்துக்கொண்ட பொருளுக்குள்ளே நின்று எழுதிட ஒரு வளையத்தை நானே தோற்றுவித்துக் கொண்டு விட்டதால் மரபு விஞ்ஞானம் பற்றிய எல்லாச் செய்திகளையும் இக்கட்டுரையிலே சொல்லிவிட்டதாகக் கொண்டிட வேண்டாம்.

சிற்பியர் ஆற்றி வந்த கலைப் பணிகளை ஒதுக்கி வைத்துவிட்டு, அவர்தம் பணிகளில் உள்ளொளிந்து கிடக்கும் விஞ்ஞானக் கருத்துக்களை இக்கால விஞ்ஞானிகள் ஆய்ந்து வெளிக் கொணர்ந்து நூல் பல எழுதியிருக்கிறார்கள். மேலும் தொடர்ந்து எழுதிக் கொண்டுமிருக்கிறார்கள். இப்பொழுது தானே சிற்பிகளையும் சிற்பக் கட்டடங்களையும் ஆய்வர்கள் அணுகிப் பார்க்கிறார்கள்; உற்று நோக்குகிறார்கள்; சிற்பிகளையும் மதிக்கிறார்கள்; அவர்களோடு பேசுகிறார்கள். கோயில் கட்டடங்களை ஆய்வு செய்தோர் அக்கட்டடங்களைக் கடவுட் படிமங்களை உள்ளே வைத்து வழிபடக் கட்டப் பெற்ற அழகுமிகு கட்டடங்களாகத்தானே (pretty buildings) நினைத்துப் பேசினார்கள், எழுதினார்கள்? இப்போது அப்படியில்லை. அவற்றை, பிரபஞ்ச விஞ்ஞானக் கொள்கையின் திருக்கோலங்களாக இருக்குமா என்று யோசிக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். சிற்பியர் தம் கூற்றுக்களுக்கும் அவர்தம் செயல்களுக்கும், அனுபவங்களுக்கும் இப்போது தானே செவிமடுக்கவும் பார்வை செலுத்திடவும் தொடங்கி இருக்கிறார்கள்? எனவே கலை மரபுசார் விஞ்ஞான நுட்பங்கள் மெல்ல மெல்ல வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்றால் மிகையாகாது. அதுமட்டுமல்ல, சிற்பியர்தம் தோற்றம், அவர்தம் சமுதாய அமைப்பு, தொழில் மரபு, தொழில் நுட்பங்கள், அவற்றுக்கு ஆதாரமாகவிருந்த நூல்கள், நூலாசிரியர்கள் அவர்கள் வகுத்துத் தந்திட்ட ஸ்தாபனங்கள், செயல் நெறிகள், செய்திட்ட வியத்தகு பணிகள், அவர்தம் கலைஞானம்,

ஆதாரமான விஞ்ஞானம், இந்திய நாகரிகத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சியில் அவர்தம் மகத்தான பங்கு, சமயத்துறையில் அவர்தம் தனித்தன்மை வாய்ந்திட்ட அனுபவங்கள், விளக்கக் கருத்துக்கள், கருத்தோவியங்கள் ஆகியவற்றை விருப்பு வெறுப்பின்றி அணுகி ஆய்ந்து எந்தக் குறிப்புகளையும் எந்தவொரு ஆராய்ச்சியாளரும் பொது மக்கட்குக் காட்டினார்கள் இல்லை. இக்காலத்திலே கட்டடக் கலைஞர்களும், பொறியாளர்களும் செய்து வரும் அனைத்துப் பணிகளையும் - நாடு நகர நிர்மாணம், கோட்டை கொற்றள அமைப்புகள், விடு - மாளிகைகள், நீர் நிலைகள், ஊர்தி மற்றும் மரத்தாலும் உலோகத்தாலும் செய்திட்ட பொருள்கள், கோயில் மற்றும் சிற்பங்கள், போர்த்தளவாடங்கள் மற்றும் விட்டுக்கும் தொழில்களுக்குமுரிய கருவிகள் ஆகிய அனைத்தையும் செய்வதையே உரிமையாகவும் பணியாகவும் மேற்கொண்ட தொல்பழஞ் சமூகம் சிற்பியர் சமூகம் என்பதைத் தெளிவாக எடுத்துச் சொல்லவில்லை, அன்னியர் ஆட்சிக் காலத்தில் ஒதுக்குண்ட இவர்கள் கொஞ்சம் கொஞ்சமாகத் தமது நிர்மாண உரிமைகளை இழந்து, கோவில் கட்டுதல், சிற்பங்கள் செதுக்குதல் ஆகிய இருபெரும் பணிகளை மட்டும் கைவிட்டுவிடாது தொடர்ந்து ஒழுகி வந்ததால் இவர்தம் பிற தகுதிகள், தொழில் ஞானம், ஆற்றல்கள் இக்கால சமுதாயத்திற்குத் தெரியாமலே போயிற்று. பாரத நாடு முழுவதும் ஐந்து கோடி மக்களாக இருந்திடும் இவர்தம் குறைகளை அரசிடம் முறையிட்டு மீண்டும் தலை தூக்கிட மாநிலச் சட்டமன்றங்களிலோ பாராளுமன்றங்களிலோ இவர்தம் பிரதிநிதிகள் எவரும் இல்லை. ஜப்பான் நாட்டில் நிகழ்ந்தது போல, மகாத்மா காந்தி கனவு கண்டது போல, இவர்தம் பாரம்பரிய ஆற்றலை ஒருமுகப்படுத்திப் பாரதத்தின்

முன்னேற்றப் பணிகளில் ஈடுபடுத்தியிருந்தால் ஜப்பானையும் மிஞ்சிடும் தொழில் மேம்பாட்டையும் சாதனைகளையும் இவர்கள் செய்திருப்பார்கள். இதற்கு மாற்றாக, சாதாரண மதவாதிகளுக்குத் துணைபோனவர்கள் என்று முதுகில் முத்திரை குத்திப் புறம் தள்ளிவிட்டார்கள். இவர்களுக்கு மதமும் தெரியாது, மதத்தில் ஊடுருவி நிற்கும் அரிய விஞ்ஞான விஷயங்களும் தெரியாது. அந்த விஞ்ஞானத்தின் அளப்பரிய ஆற்றலும் சிறப்பும் தெரியாது போயிற்று. இந்த நிலையில் தமிழ்நாடு அரசு சிற்பக்கலைக்கென்று மாமல்லபுரத்தில் ஒரு கல்லூரி அமைத்து, முதற் படியாக பாரம்பரியத் தொழில் நுட்பத்தைக் காப்பாற்றிவிட்டது. இத்தகைய காரியத்தைி இந்தியத் துணைக் கண்டத்தில் எந்தவொரு மாநில அரசும் செய்திடவில்லை என்றால் வெறும் புகழ்ச்சியில்லை. நடந்துவிட்ட வரலாற்று உண்மையாகும். இந்தப் பாரம்பரிய ஞானம் இன்றைய இளைய சமுதாயத்தின் கையில் சிறப்பாக இருந்து வருகிறது எனினும் மேல் வளர்ச்சிக்கு யாதொரு குறிப்பும் இன்னும் காணப்படவில்லை.

இந்தப் பின்னணியில் திருவரங்கமும் திருச்சிற்றம்பலமும் எத்தகைய விஞ்ஞான அடிப்படையைக் கொண்டு விளங்குகின்றன என்பதை ஒரு சிறிது பார்ப்போம். இதன் மூலம் சிற்பியர்தம் விஞ்ஞானம் எத்தகையது என்பது புலனாகிவிடும் என்று நம்புகிறேன். விஞ்ஞான அடிப்படை என்று சொல்லும் நேரத்தில் அவ்விஞ்ஞானம் எத்தகைய விஞ்ஞானம் என்ற கேள்வியும் எவர் நாவிலும் தோன்றுவது இயல்புதானே? விஞ்ஞானம் எனப்படுவது இக்காலத்தில் இரண்டு வகையினதாகவிருக்கின்றன என்ற கருத்து நம் நாட்டு மரபுக் கலைஞர்களுக்கும் மரபுக் கவிஞர்களுக்கும் தெரிந்திருக்க வேண்டும். அவ்விரண்டில் முதல் வகையைச் சிறிது உற்று நோக்குவோம்.

இயற்கையின் புறத்தைப் பார்த்து, அவ் வியற்கையின் புறச் சலனங்களை உற்று நோக்கி, அதன் நுண் இயக்கங்களையும் அமைப்புக்களையும் ஆய்ந்து, அவற்றைக் கணக்குக்கு உட்படுத்தி, கணித வழி நின்று, புதியன படைத்துப் புற வாழ்க்கைக்குப் பயன்படுத்துவது ஒரு வகை விஞ்ஞான மரபாகும். இதற்கு அறிவியல் என்ற சொல்லே நிரம்பப் பொருந்தும் என்று கருதுகிறேன். காரணம், இது பகுத்தறிவையே முழுக்க முழுக்கப் பயன்படுத்தி வளர்ந்திட்ட ஒரு மரபாகும். இந்தப் பௌதிகப் பிரபஞ்சம் நொடி நொடி மாறிக் கொண்டும் செல்வதால், இந்த விஞ்ஞானம் நாளுக்கு நாள் விரிந்து கொண்டும் முடிவின்றியும் சென்று கொண்டே யிருக்குமோர் இயல்புடையதாகும். இம்முறையினை மேலைநாடுகள் வளர்த்துக் கொண்டுவிட்ட விஞ்ஞான மரபில் சிறப்பாகக் காணலாம். ஆனால் ஒன்று; அந்த மகத்தான விஞ்ஞானமும் தொழில் நுட்பங்களும் மாந்தர்தம் புறவாழக்கையின் சுக போகத்திற்கே (physical comforts or material prosperity) வெகுவாகப் பயன்படுகின்றன என்ற ஒரு குறைபாடு இதன் மீது சுமத்தப்படுகிறது.

இன்னொரு விஞ்ஞான மரபு இருக்கிறதே அஃது என்றும் நிலையானது, மாறாதது; அறிவுக்கும் அப்பாற்பட்ட ஆன்மத் தொடர்புடையது. இஃது ஆன்மத்தையும் ஆன்மச் செயல் நெறிகளையும் மையமாகக் கொண்டு (spirit centric) வளர்ந்துவிட்ட மரபாகும். இதனை அறிவியல் என்று சொல்வதற்கு மாற்றாக ஞானவியல் அல்லது உளவியல் என்று கூறலாம். இதனை ஒரு சிறிது உற்று நோக்குவோம். இயற்கையின் அகத்தை நேரடியாக உற்று நோக்கி, உணர்ந்து, அதன் குணங் கண்டு, அதன் செயல் நெறி தெரிந்து, அனுபவித்து, அதனைக் கணக்காக்கி, அக்கணக்கை

இலக்கணமாக அமைத்துக் கொண்டு, அவ்விலக்கணப்படி புறப் பொருள்களை ஆக்குவதும், அதற்குள் இயற்கையைப் புகுத்தி வைத்து அவ் வியற்கையோடு ஒத்து வாழச் செய்வதும் இந்த இரண்டாவது வகை விஞ்ஞான மரபின் சிறப்பம்சமாக இருந்து வருகிறது. இத்தகையதொரு விஞ்ஞான மரபு தான் நமது நாட்டில் பண்டு தோன்றியதாகும் என்று இப்போது சொன்னால் அதனை யாரும் நம்பமாட்டார்கள். இதனை ஆன்மிக விஞ்ஞானம் என்று சொன்னால் அப்படியொரு விஞ்ஞானம் உண்டா? அதனால் ஏதாவது பயன் உண்டா? அனுபவிக்கத் தகுந்த பொருள்களை அதனால் ஆக்கித் தர முடியுமா? அப்பொருளைக் கண்ணால் பார்த்திடத்தான் முடியுமா? அல்லது மன நிலையில் அனுபவிக்கப்படும் பொருள்தானா? அஃது எங்குளது? யாரிடமுளது? யார் அதனை வைத்திருந்தார்கள்? என்ற அடிப்படைச் செய்திகளையும் வரலாற்றுச் செய்திகளையும் கிளறுவார்கள். அச்செய்திகள் இன்னும் வெளிவரவில்லை. அவை எதிர்வரும் காலங்களில் திரும்பி வரக்கூடும். இந்த விஞ்ஞானத்தைச் சிற்பியராகிய நாங்கள் ஆன்மிக விஞ்ஞானம் என்று சொல்வதற்கு மாற்றாக 'வஸ்து விஞ்ஞானம' என்றும் 'வாஸ்து விஞ்ஞானம' என்றும் சொல்லுகிறோம். இத்தகைய விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்திட்ட தொழில் நுட்ப நூல்களைத்தான் 'வஸ்து சாஸ்திரம்' என்றும் 'வாஸ்து சாஸ்திரம்' என்றும் சொல்லி வருகிறோம். மறைந்து கிடந்திட்ட, மறந்து போய்விட்ட, இந்த விஞ்ஞானமானது இன்று இக்காலத்து அறிஞர் நாவிலும், இக்காலத்து விஞ்ஞானக் கூடங்களிலும் அன்றாடச் சொல்லாக, பேச்சாக, ஆய்வுப் பொருளாக இருந்து வருகின்றது.

உலக மக்கள் கண்டு தேர்ந்திட்ட விஞ்ஞான மரபுகளில் வாஸ்து விஞ்ஞான மரபானது தனியொரு அடிப்படையும்

ஆற்றலும் நுட்பமும் ஆக்கமும் சிறப்பும் கொண்டு விளங்கு கிறது என்று சொல்லிட விரும்புகிறேன். இஃது ஓர் உயிர்ப்புள்ள மரபாக இன்றுமுள்ளது. இவ்விஞ்ஞானமானது காண வொண்ணா ஓர் அரிய பொருளைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டு, ஆன்ம சோதனை செய்து, அதனால் வளர்ந்து, தொழிற்பட்டு, பல விந்தைகளை இப்பாரத மண்ணில் நிகழ்த்திவிட்டது.

நமது மரபானது நிலம், நீர், நெருப்பு, காற்று, வெளி (ஆகாயம்) ஆகிய நுண் பொருள்களை பஞ்ச பூதங்கள் என்று உறுதி செய்து கொண்டு, அவ் ஐந்தும் இந்த ஞாலப் பெருவெளியில் மட்டும் அல்லாமல், ஞாலத்தில் அடங்கிய அத்துணை உயிர் இனங்களிலும் பொருள்களிலும் அடக்கமுற்று விளங்குகின்றன என்றும், அவற்றில் ஆகாஸமே எல்லாவற்றுக்கும் மூல ஆற்றல், தோற்றுவாய், இடம், என்ற ஒரு விஞ்ஞானக் கோட்பாட்டை வேத காலத்திலுருந்தும் ஏன் வேத காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தும் இன்று வரை கொண்டு செலுத்தி, அவ்வழி நின்று செயல் பட்டு வந்துள்ளது. அது மட்டுமல்லாமல் மேலுமொரு நுட்பத்தையும் அம்மரபு கொண்டுள்ளது. ஆகாஸமே (space) பிரபஞ்சப் பொருள்களாகத் திரிபுகிறது. (Space turns into spatial forms) என்பதும் அங்ஙனம் இடத்தை இடவடிங்களாக மாற்றிட அதனிடம் அதற்கொரு கணக்குள்ளது (dynamics of the space) என்பதும் அது கொண்டுள்ள விஞ்ஞானச் செல்வமாகும். இக்கணக்கை வைத்து இவ்விஞ்ஞானம் படைத்துத் தந்தவைதான் பாரதம் கண்ட, பெருமைமிகு நாகரிகமும் பண்பாடும் என்றால் மிகையாகாது. பிற நாட்டினரால் வியந்து பாராட்டப்படும் அனைத்துக் கட்டடங்களும், வேறு பல பயன்படு பொருள்களும், கோயில் சிற்பங்களும், பல்வேறு கலைப் பொருள்களும் நான் சொல்லும்

ஆன்மிக விஞ்ஞான மரபு வழி வந்த படைப்புகளேயாகும். எனவே இப்படைப்புகளை அனுபவிப்பவர்களுக்கு உடல்சுகம் மட்டுமன்றி அதற்கும் மேலான ஆன்ம ஆரோக்யமும் அமைதியும் சுகமும் கிடைப்பதால் இஃது ஆன்மிக விஞ்ஞானம் (spiritual science) என்ற மற்றொரு பெயரைத் தாங்குவதுமாயிற்று. இன்னும் சுருக்கிச் சொன்னால் இசை போல, நடம் போல, கவிதை போல அதன் படைப்புக்களை - கட்டடங்களையும் கலைப்பொருட்களையும் - நம் ஆன்ம உணர்வோடு தொடர்பு படுத்தி வைத்து, ஆன்ம சுகம் துய்த்திட இவ்விஞ்ஞானம் வகை செய்கிறது.

இந்த நிலையில் ஒரு சில மரபுகள் நிலம், நீர், நெருப்பு ஆகிய மூன்று பூதங்களை மட்டும் ஏற்றுக் கொண்டு எஞ்சிய இரண்டுக்கு மாற்றாக தாமிரம், வெள்ளி போன்ற தாதுப் பொருள்களை சேர்த்துக் கொண்டு பஞ்ச பூதங்கள் என்று சொல்லி வருகின்றன. இத்தகைய கருத்தைச் சீன மரபில் காணலாம். அது போல இக்கால விஞ்ஞான மரபானது ஆகாஸத்தை நீக்கிவிட்டு பிரபஞ்சத்தில் நான்கு பூதங்களே இருக்கின்றன என்று பேசுகிறது. 'ஆகாஸம்' எனப்படுவது ஐந்து பூதங்களில் மூலமானது, முதலானது என்ற இந்தியக் கொள்கையினை ஏற்க முடியாமலிருக்கிறது. இந்த ஆகாஸத்தின் குணங்களை ஆய்ந்தும் தேர்ந்தும் சொல்ல முடியாமலும் அவற்றைப் பயன் கொள்ள முடியாமலும் இருக்கிறது. எனவே இவர்தம் கொள்கைப்படி, இந்த ஞாலத்தில் நான்கு பூதங்களே இருக்கின்றன. ஆகாஸம் என்பது இக்கணக்கில் சேராது என்பது மட்டுமல்ல ஆகாஸமே அனைத்து பொருள்களுக்கும் தோற்றுவாய், மூலம், இடம் என்ற கூற்றையும் ஏற்க மறுக்கிறது. இப்பிடிவாதத்துக்கு அடிப்படைக் காரணம் யாதெனில், இந்த ஆகாஸப்

பொருள்களைச் சோதனைக் கூடத்தில் அடக்கி வைத்து அறிவியல் ஆய்வுகளை நிகழ்த்திட அதனால் முடியவில்லை. அறிவியல் சோதனைக்கு உட்படாத ஒன்றை இக்கால விஞ்ஞானம் ஏற்க மறுப்பதில் நியாயம் இருக்கத்தானே செய்கிறது? இப்படிப்பட்ட நவீன கால விஞ்ஞானமானது நான்கு பூதங்களை மட்டும் வைத்துக் கொண்டு மகத்தான சாதனை பல புரிந்து, உயர்வும் மதிப்பும் பயனும் கொண்ட விஞ்ஞானமாக விளங்குகிறது அல்லவா? இக்காட்சியை ஒரு பக்கம் வைத்துக் கொண்டு பாரதீய வாஸ்து விஞ்ஞானத்தை மறுபக்கம் ஆழ்ந்து பார்த்தால் ஒருண்மை புலப்படும். அதி உன்னத நிலையடைந்திட்ட இக்கால விஞ்ஞானமானது இந்த விஞ்ஞானம் தொட்டிட்ட சிகரத்தை இன்னும் தொடமுடியாமல் இருக்கிறது என்று சொல்லத் தோன்றும். காரணம், நவீன விஞ்ஞானம் புறம் தள்ளிவிட்ட ஓர் அரிய பொருளை இந்திய விஞ்ஞானம் எடுத்து வைத்துக் கொண்டு ஆய்வு பல செய்து, தேர்ந்து, பெரும் பயன் பல நல்கி விட்டது. அவ்வரிய பொருளே இந்த ஆகாஸமாகிற நுண் பொருள்தான். இத்தகைய ஆகாஸத்தை உற்று நோக்கி, உள் நுழைந்து, ஆய்வு பல செய்து அதன் குணங்களையும் அதன் செயல் நெறிகளையும் (order) கணித்தறிந்து, 'ஆகாஸமே உணர்வுற்று உருவங்களாகத் திரிபுறுகின்றது' என்ற ஓர் உளவியல் நுட்பத்தை மையக் கருத்தாகக் கொண்டு அதனைத் தொழில் நுட்ப நிலைக்கு இறக்கி, ஓர் அரிய கலைத் துறையை தோற்றுவித்துக் கொடுத்து, மாந்தர்தம் வாழ்க்கைக்குரிய நாடு - நகரம், வீடு - மனை, மாட - மாளிகை, கோயில் - சிற்பம், ஊர்தி - படுக்கை ஆகியவற்றை உயிர்ப் பொருள்களாகத் தோற்றுவித்துக் கொடுத்து, பௌதிகச் சூழ்நிலையோடு மட்டுமல்லாமல், இயற்கைதனில் உள்ளுறையும் ஆன்ம சக்தியோடு ஒத்து வாழவைக்கும் அமைப்புகளையும் சுகம் தரும்

படைப்புகளையும் கொடுத்தது நம் நாட்டு விஞ்ஞானம் ஆகும். .இஃதொரு தத்துவப் பேச்சல்ல; எழுத்தல்ல; நிகழ்ந்திட்ட வரலாறும், தொடர்ந்து வரும் உண்மையுமாகும். இக்கருத்தை எளிமைப் படுத்திப் பிறகு புரிய வைப்பேன். ஒன்றை மட்டும் இப்போதே சொல்லி விடுகிறேன்.

இவ்விரு விஞ்ஞானங்களின் நுட்பத்தை மேலும் சுருக்கிச் சொல்லிட வேண்டுமானால் இப்படிச் சொல்லலாம். நவீன விஞ்ஞானமானது பொருளில் சக்தியைத் தேடுகிறது. அச்சக்தியைக் கொண்டு புதிய பொருள்களையும் சாதனங் களையும் ஆக்கித் தருகின்றது. (searches energy in matter)' வாஸ்து விஞ்ஞானமானது சக்தியில் பொருளைத் தேடுகிறது. (searches matter in energy) தேர்ந்திட்ட பொருளைக் கொண்டு சக்தி மிகுந்த - உயிர்ப்புள்ள - பொருள்களையும் சாதனங் களையும் ஆக்கித் தருகின்றது. இவைதான் அடிப்படைச் செயல் நெறிகள்.

நவீன கால விஞ்ஞானம் அளப்பரிய ஆற்றலும், ஆக்கும் திறனும் பெற்றிருந்தாலும் ஆன்ம அமைதிக்கும், ஆன்ம சுகத்துக்கும் ஒன்றும் அது செய்திடவில்லை என்ற ஒரு குறைபாடு தொக்கி நிற்பதைப் பலர் இப்போது அதிகமாகவே பேசி வருகிறார்கள். எதற்கும் பயன்தானே பெரிது? (end product and its after effect) இதனை வேறொரு விதமாகக் கடுமையாகவும் விமர்சிக்கிறார்கள். நவீன கால விஞ்ஞானப் படைப்புகளோடு அவற்றின் நிழல் போலத் தீமைகளும் அடியொற்றி வருகின்றன. பயனும் பயமும் சேர்ந்தே இருப்பதை அப்படிச் சொல்லுகிறார்கள் என்று நினைக்கிறேன்.

நான் ஒரு சிற்பியாகையினால்,. ஆன்ம சுகம் தரும் விஞ்ஞானப் படைப்புகள் பற்றி சொல்லும் போது, கோவிலையும் கடவுள் வடிவங்களையும் மதக் கோட்பாடுகளையும் மனத்திலே


வைத்துக் கொண்டு பேசுவதாக எவரும் நினைத்திடல் இயல்பே. ஆனால் அவற்றை விடுத்து, மரபு விஞ்ஞானத்தை ஆதாரமாகக் கொண்டு கலைத்துறை வழி வந்த அத்துணை அமைப்புகளும் ஆன்ம நலம் கூட்டுவிக்கும் பொருள்கள் என்பதை உணர்ந்து, அதனையே அகத்தில் வைத்து இலைமறை காய்மறைவாகப் பேசி வருகிறேன். நீட்டாமல், உங்களைக் காக்க வைக்காமல், சுருக்கமாகவும், சடிதியிலும் சொல்ல வேண்டுமானால் ஒன்றைச் சொல்லுவேன். ஒரு சிறிய விளக்கத்தைச் சொல்லுவேன். இந்திய மரபு விஞ்ஞானமானது நாம் குடியிருக்கும் வீட்டை ஓர் உயிர்ப் பொருளாகவும் (living organism) இசை வடிவமாகவும் (musical form) படைத்துத் தந்து அதனுள்ளே இருந்து வாழும் நம்மை இசை இன்பம் பெறச் செய்கிறது; ஆன்ம சுகம் பெற வைக்கிறது.

உளத்திற்கு உவகையும், அமைதியும் தானே எல்லோரும் எக்காலத்தும் தேடி அலையும் பொருள்கள்? இதனை வாஸ்து மரபு சார் கட்டடங்கள் தருகின்றன என்பது தான் உங்களிடம் சொல்ல நினைத்திட்ட செய்தியாகும். இதனை புற அழகினாலும், அக அமைப்பினாலும் இந்த மரபு ஏற்படுத்தித் தருகிறது. இதற்கென ஒரு கணிதம் வாஸ்து மரபில் உளது. இதனை வாஸ்து ரகஸ்யம் என்று சொல்லுவர். ஓர் அரிய விஞ்ஞானச் செய்தியைத் தான் மரபானது ரகஸ்யம் என்ற சொல்லால் உணர்த்துகிறது.


ஆகாஸம் என்பது சக்தி நிறைந்த இடமாகையால் அந்த சக்தியாகாஸத்தை (energetic space) நான்கு சுவர் கொண்டு அடைத்து விடுவோமேயானால் அதனால் ஏற்பட்ட கட்டடம் ஒரு living organism மாக - உயிர்ப் பொருளாக மாறிவிடுகிறது என்று இந்த மரபு விஞ்ஞானம் சொல்லுமேயானால் இந்த விஞ்ஞானத்தை என்னவென்று சொல்லுவீர்கள்? மேலும் நம் உடம்பில் அடைபட்ட அந்தராகாஸம் போல் அவ்விடு உணர்வும்

துடிப்பும் கொள்கிறது என்றும் அவ்விஞ்ஞானம் சொல்லுமேயானால் இக்கூற்றை நம்ப முடிகிறதா? அதுமட்டுமல்ல, அந்தத் துடிப்போடு நமது அகத் துடிப்பும் ஒரு கணித முறையில் ஒத்தொலிக்கச் (to resonate with our inner vibration) செய்யப்படுகிறது என்றும், அதனால் அவ்வீட்டில் வாழ்வோன் ஆகாஸமாகிற பேரான்மாவோடு தொடர்பும் ஆன்ம சுகமும் பெறுகிறான் என்றும் சொன்னால் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? வியப்படைகிறீர்களா? எனவே நீங்கள் கோயிலுக்குப் போய்ப் பெற்றிடும் இன்பத்தை, ஆன்ம சுகத்தை, ஆன்ம ஆரோக்கியத்தை வீட்டிலேயே பெற்றிடலாம், அதனை, வீடே கொடுக்கிறது என்ற நுட்பமே இந்த விஞ்ஞானத்தின் ஆற்றலும், உட்கிடையும், பயனுமாகும்.

இதனைத்தான் சிதம்பரம் கோயிலிலே நீங்கள் பார்க்கிறீர்கள்; துய்க்கிறீர்கள். அந்தக் கோயில்தான் எப்படியுளது? தெரியுமா? அஃதொரு வீடு. இக்காலக் கோயில் போல் அல்லாமல் நீண்ட சதுர மனை மீது நிற்கும் சிறியதொரு வீடு. அத்னை அடைப்பதோ மரத்தாலான சுவர். அச்சுவர் மீது அமைவதோ மரத்தாலான கூரை. சுருங்கக் கூறின் அஃதொரு பொன் ஓடு போட்ட குடிசைவீடு. அவ்வளவுதான்.



தரைப்படம்



சிற்றம்பலம்

இக்குடிசையைக் காத்திடவே தில்லைதாண்டாத் தீட்சிதப் பெரியோர் 3000 பேரை அங்கே தமிழ் மன்னன் ஒருவன் அமர்த்தியுள்ளான். ஒரு குடிசையைக் காத்திட 3000 பேரா? இது போல் வேறு எங்காவது நடந்திருக்கிறதா? உளதா? இப்படி எவரும் இதுவரை கேட்கவில்லையே? அப்படிப்பட்ட வீட்டுக்குள்ளே என்னதான் இருக்கிறது? தெரியுமா? வெற்றிடம்தான். வெட்டவெளிதான். இதைத்தான் ஆகாஸமென்கிறோம். இஃது எப்படிப் பட்ட பொருள்? (அங்குள்ள ஆடவல்லானின் உருவம் வேறு காரணத்துக்காக உளது. அதனைப் பிறகு பார்க்கலாம்.)

இந்த ஆகாஸம் உணர்வுறும் இயல்புடையது. உணர்வே மயமானது. அந்த உணர்வைத் தனது துடிப்பால் துடிப்பலைகளால் வெளிப்படுத்திக் கொண்டேயிருக்கிறது. இத்துடிப்பலைகள் ஒரு கணக்குக்கு உட்பட்டு வெளிப்படுகின்றன. கட்டட அளவுகள் இதனை நிர்ணயிக்கின்றன. இதன் முன் நிற்பவன் இதனால் தீண்டப்படுகிறான். பாதிப்புக்குள்ளாகிறான். இதன் முன்னி--லையில் நிற்பவனின் அகத் துடிப்பும், அம்பலத்தின் அகத் துடிப்பும் ஒத்துப் போகுமானால் அந்த ஆகாஸத்தோடு அதன் உணர்வோடு ஐக்கியமாகி விடுகிறான். எப்படி? ஒரே ஸ்தாயியில் ஒலித்திடும் இரு வீணைகளின் அதிர்வலைகளினால் ஏற்படும் ஓசைகள் இணைவது (harmony) போல என்று சொல்லலாம். ஒன்று மற்றொன்றை ஈர்ப்பது தானே இங்கே அனுபவப்படுவது? இந்த response தான் - ஒத்தொலிப்புத்தான் பக்தி எனப்படுகிறது. இதுதான் பக்தியுணர்வுக்கு விஞ்ஞான விளக்கம். இந்தப் பக்திக்கு மறுபெயர்தான் அன்பு. அன்புணர்வு. இந்த அன்புதான் ஆன்ம ஆரோக்கியத்தையும், ஆன்ம அமைதியையும், ஆன்ம சுகத்தையும் நமக்கு அளிக்கிறது. வாஸ்து விஞ்ஞானம் எப்படி

இருக்கிறது? பார்த்தீர்களா? எளிமையாகவும் இனிமையாகவும் உளதல்லவா? எளிமையிற்றானே இனிமையும் உண்மையும் உள

இத்தகைய ஆன்ம நலம் தரும் ஆகாஸ விஞ்ஞானத்தைத்தான் 'வாஸ்து விஞ்ஞானம்' என்றும் நம் நாட்டு சில்பி ரிஷிகள் சொல்லி வைத்து, ஓர் ஒப்பற்ற விஞ்ஞான மரபையும் தொழில் நுட்பத்துறையையும் இந்தப் பாரத மண்ணிலே சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்பாகவே தோற்றுவித்து விட்டார்கள். இத்தகைய அரும்பெரும் விஞ்ஞான மரபை, வழி வழியாகத் தொடர்ந்து வரும் வறுமையினையும், ஒதுக்கல்களையும், மறைத்தல்களையும் விலக்கிக் கொண்டு, முண்டி, முணகி, தாண்டிக் குதித்து, இம்மரபினைக் காத்துத் தந்திருக்கிறார்கள் இக்காலச் சிற்பிகள் என்ற செய்தியை இங்கே பெருமையுடன் சொல்லிடக் கடமைப்பட்டுள்ளேன்.

ஆகாஸம் என்பது நம்முடைய சாதாரணக் கண்களுக்குப் புலப்படுவதில்லைதான். அத்தகைய ஆகாஸம் நம்மையும் இவ்வுலகத்தையும் கோள்களையும் வேறுபல ஞாலப் பொருள்களையும் சூழ்ந்து கொண்டிருக்கும் ஓர் உணர்ச்சியே மயமான 'பொருள்' என்று இந்த வாஸ்து விஞ்ஞானம் உச்சக் கருத்தொன்று கொண்டுள்ளது. வேதம் சொல்லுவது போல ஆகாஸத்திலிருந்து காற்று, நெருப்பு, நீர், நிலம் ஆகியவை ஒரு படிமுறையில் உருமாற்றம் கொண்டு வந்ததோடல்லாமல், அவ் ஆகாஸமே அனைத்துப் பிரபஞ்சப் பொருள்களுக்கும் மூலமாகவும்', தோற்றுவாயாகவும் இடமாகவும் உள்ளது. அது மட்டுமல்ல, அத்தகைய ஆகாஸம் நமக்குள்ளும் அனைத்து உயிாப் பொருள்களுக்குள்ளும் இருந்தும் இயக்கியும் வரும் ஒரு பேராற்றல் வாய்க்கப் பெற்ற நுண் பொருள் என்று இம்மரபு கண்டு தேர்ந்துள்ளது. இங்ஙனம் உயிர்ப் பொருள்களுக்குள்ளே அவ்வாற்றல் தங்கியிருப்பதைத் தான் 'அந்தர்யாமி' என்றும்

அனைத்துப் பொருள்களும் தோன்றுவதற்கு விண்-கருவாக (essence of the space, foetus) விருப்பதால் 'லிங்கம்' என்றும் வாஸ்து விஞ்ஞானம் சொல்லுகிறது. இவ்விஞ்ஞானக் கூற்றை இந்த வாஸ்து மரபைத் தோற்றுவித்த 'வஸ்து விஞ்ஞானி' மயன் என்பான் தன்னுடைய மயமத வஸ்து சாஸ்திரத்தில் सर्वात्मीयं लिंगं आकाशमेव 'சர்வாத்மீயம் லிங்கம் ஆகாஸமேவ' என்று தெளிவாகப் பேசுகிறான். எல்லாப்பொருள்களிலும் உள் உறைவதும், லிங்கம் எனப்படுவதும் ஆகாஸமேயாகும் என்பது பொருள். அது மட்டுமல்ல, உள்ளுறையும் அந்த நுண் ஆற்றலை, (subtle energy) நுண் பொருளை, 'வஸ்து' என்றும் அந்த வஸ்து தங்கிய உயிர்ப் பொருள்களையும் அண்டப் பொருள்களையும் 'வாஸ்து' என்றும் கொண்டிருக்கிறான். அங்ஙனம் வாஸ்துவில் தங்கிவிட்ட ஆற்றலைத்தான் 'வாஸ்து புருஷன்' என்று மயன் சொல்ல, நாமெல்லோரும் தொடர்ந்து சொல்லி வருகிறோம். எனவே நமக்குள்ளும் நம்மைச் சூழ்ந்துள்ள அண்டப் பொருள்களுக்குள்ளும் குறிப்பாக நாம் வாழும் நிலத்திற்குள்ளும் நிறைந்து உறைந்து, தொழிற்படும் இவ்வாற்றலை 'வாஸ்து புருஷன்' என்று வாஸ்து சாஸ்திரங்களும் பேசுகின்றன. இன்னும் சுருக்கிச் சொன்னால், வஸ்து என்பது நுண் ஆற்றல் அல்லது subtle energy என்றும், வாஸ்து என்பது gross energy என்றும் தெளிவாகிறதல்லவா? மேலும் சுருக்கினால், வஸ்துவே unmanifest energy என்றும், வாஸ்துவே manifest energy என்றும் கருத்தாகிறதல்லவா? எனவே, वस्तुरेव वास्तु 'வஸ்துரேவ வாஸ்து' அதாவது 'வஸ்துவே வாஸ்துவாகிறது' என்பது வாஸ்து மரபின் நுட்பமிகு விஞ்ஞான சூத்திரம். இதனை மயன் என்ற அந்த மாமேதை தந்துள்ளான். வஸ்து என்பது ஆகாஸமானால் (subtle space) அந்த ஆகாஸத்திலிருந்து தோன்றியதும் அதில் அஃதும்

(ஆகாஸமும்) இருக்கை கொண்டு விளங்குவதும் ஆன அனைத்துப் பொருள்களும் வாஸ்து என்பது உறுதியாகிறதல்லவா? இஃதொரு அத்வைத விஞ்ஞான நிகழ்ச்சியாகும். (Advaitic scientific phenomenon) எதுபோலவெனில், தங்கம் தங்க நகையாவது போல, நீர் நீர்க்குமிழியாவது போல, ஒலியானது ஒலிப்பொருள் (அல்லது சொற்பொருள்) ஆவது போல, ஆகாஸமே ஆகாஸப் பொருளாக மாற்றம் கொள்கிறது. எனவே நாமும் வாஸ்துவாகிறோம்; நமது உலகமும் வாஸ்துவாகிறது. ஏன் இந்த ஞாலமும் ஞாலப் பொருள்களும் வாஸ்துவாகின்றன. இதிலிருந்து பிரிதொரு அரிய கருத்தும் நமக்கு உறுதியாகிறது. வஸ்து தங்கியிருக்கும் ஞாலப் பொருள்கள் அனைத்தும் உயிர்ப் பொருள்களே (animated objects). உயிரற்ற பொருள் (inanimate object) என்று ஏதும் இந்த ஞாலத்தில் இல்லை. இல்லவே இல்லை. எனவே ஆகாஸம் என்பது ஓர் 'உயிர்ப் பொருள்', 'முழுப் பொருள்', 'நிலைத்த பொருள்', 'உள்ள பொருள்' என்றும் கருத்தாகிறதல்லவா? 'என்றுமுள' இப்பொருளைத் தான் வஸ்து என்று மரபு விஞ்ஞானம் கூறுகிறது. வஸ்து என்ற இச் சொல் 'வஸ்' என்ற வினைச் சொல்லிலிருந்து பிறந்த வினையால் அணைந்த பெயர் ஆகும். 'வஸ்' என்றால் வசி, இரு, to live, to exist என்பது பொருள். எனவே 'என்றுமுள' (eternal) பொருள் என்பதே அதன் உள்ளிடைக் கருத்தாகும்.

இந்த விஞ்ஞான நுட்பத்தை - வஸ்துவே வாஸ்து ஆவதை - மேலும் சிறிது உற்று நோக்குவோம். நடைமுறை உலகில் நிகழ்வதை உதாரணமாக எடுத்துக் கொண்டு ஆய்வோம். ஒருவர் பேசிடுவாரானால் அதனைக் காதால் கேட்டறிகிறோம். கேட்பது ஒலி, கேட்டறிவது ஒலிப்பொருள் - ஒலியாலான ஒரு வடிவம் - ஒலியணுக்களால் ஆன வடிவம். இஃதொரு (science

of sound) ஒலி சார்ந்த விஞ்ஞான நுட்பம். 'அணுத்திரள் ஒலியே எழுத்தெனப்படும்' என்று தமிழ் இலக்கணம் ஒன்று கூறுகிறதல்லவா? எனவே சொற்பொருள் களெல்லாம் ஒலியணுக்களால் ஆன வடிவங்கள் (sound forms or patterns) என்பது தெளிவாகிறது. ஒலியணு என்பது அணு அளவினதான 'நுண் ஒலி' ஆகும்.

மேலும், நாம் பொருள்களைக் காதால் மட்டும் கேட்டறிவதில்லை. கண்ணாலும் பார்த்தறிகிறோம். அப்படியானால் கண்ணால் பார்த்தறியும் பொருள்கள் எதனால் ஆன பொருள்களாகும், தெரியுமா? இங்கேயொரு மரபு விஞ்ஞானத் தெளிவு அல்லது தேற்றம் தொக்கிநிற்கிறது. இத் தேற்றம் தான் இவ்ஞாலத்தில் விந்தை பல செய்துவிட்டது. அஃதாவது கண்ணால் பார்த்தறியும் பொருள்கள் எல்லாம் ஒளியால் ஒளி அணுக்களால் ஆன ஒளிப்பொருள்கள் என்பதாம். இதில் மறைந்திருக்கும் மேலுமொரு நுட்பம் யாதெனில், இந்த நிகழ்ச்சிகள் நமது உள்ளமாகிற சிற்றாகாஸத்திலும் பேருள்ளமாகிற பரமாகாஸத்திலும் நடக்கின்றன.

எனவே, இத்தேற்றத்தை மறுதலையாகச் சொன்னால், ஒலிப் பொருளுக்கு அதாவது சொல்லுக்கு மூலம் `அணுஒலி' என ஒன்று இருப்பதானால், ஒளிப் பொருளுக்கு அதாவது தெரிபொருளுக்கு மூலம் 'அணு ஒளி' என பிரிதொன்று இருக்க வேண்டுமல்லவா? ஆம். அப்படியானால் இந்த ஒலியணுக்களும் ஒளியணுக்களும் எங்கே கிடக்கின்றன, தெரியுமா? நவீன கால விஞ்ஞானம் ஏற்க மறுத்திட்ட அந்த ஆகாஸத்திற்குள்ளேயே - விண்ணுக்குள்ளேயே - நுடங்கிக் கிடக்கின்றன. வேறிடம் தான் எங்கே இருக்கிறது? 'விண்' ஒரு நுண் பொருளாகையினால் நமது கண்களுக்குப் புலப்படவில்லை. கண்களுக்குத்

தெரியவில்லை என்பதற்காக இல்லையென்று சொல்வதற்கில்லையல்லவா? ஒலி கூட கண்களுக்குத் தெரியவில்லை என்பதற்காக 'ஒலி என்பது இல்லை' என்று நாம் சொல்லுகிறோமா? இல்லை. காரணம், இந்த ஒலியானது நமக்கு உணர்வாகிறது; ஒரு பொருளை உணர்த்துகிறது. உணர்த்துவதால் 'இருக்கும் பொருள்' என்று சொல்லுவதாயிற்று, அதே போல கண்ணால் பார்த்தறி பொருள் இருக்கிறதே அஃதும் உணர்வாகிடும் பொருள்தான். உணர்வாகுமிடம் உள்ளமே; இதற்குத்தான் ஆகாஸம் அந்தராகாஸம், பஹிராகாஸம் அகவெளி, புறவெளி inner space, outer space என்றெல்லாம் பெயரிட்டிருக்கிறோம். இன்னொரு முக்கியமான செய்தி; உணர்வு, அனுபவம் awareness, experience என்று சொல்லுவதெல்லாம் 'பொருள்' தான். இதற்குப் பொருளுணர்வு என்ற பிரிதொரு சொல்லும் உண்டு. இந்தப் பொருளுணர்வுதான் ஒலிவழியாகவும், ஒளி வழியாகவும் நம்மால் அனுபவிக்கப்படுகின்றது. எனவே ஆகாஸத்தில் ஒலியும் ஒளியும் கூட்டுப் பொருள்களாக இயற்கையில் அடங்கிக் கிடக்கின்றன. இதனைக் கிளப்புவது உணர்வு என்ற ஓர் அபூர்வப் பொருளாகும். (இஃதொரு தனி விஞ்ஞானம். வேறொரு சந்தர்ப்பத்தில் இதனை விளக்கலாம்).

இன்னும் இந்த நிகழ்ச்சியை உற்று நோக்கிச் சுருக்கிச் சொன்னால், புறவெளியாகிற ஆகாஸத்தின் ஒலியுணர்வும் ஒளியுணர்வும் முறையே ஒலி வடிவங்களாகவும் ஒளி வடிவங்களாகவும் உருமாற்றம் கொள்கின்றன. ஒலியணுக்கள், மற்றும் ஒளியணுக்கள் தான் அவ்வடிவங்களுக்கு மூலப் பொருள்கள் (raw material). உணர்வுதான் உருவம் கொடுக்கும் ஆற்றல் அல்லது சிற்பி. இந்தச் சிற்பியைத்தான் விசுவகர்மா என்று வேதம் குறிப்பிடுகிறது. இப்படிப்பட்ட உணர்வு

இருக்கிறதே, அஃது எங்கிருந்து வருகிறது? எப்படித் தோன்றுகிறது என்று எவராலும் சொல்ல முடியவில்லை. அஃதொரு 'சுயம்பூ' - 'தான் தோன்றி' (self manifest energy or substance) இந்தத் 'தான் தோன்றி ஆகாஸ உணர்வு' அல்லது 'உள உணர்வுக்கு'த்தான் 'பிரக்ஞானம்' என்று வேதம் பெயரிட்டு அதையே பிரம்மம் என்று சொல்லித் தனது ஆய்வை முடித்துக் கொண்டுவிட்டது. 'பிரக்ஞானம் பிரம்ம' என்பது தானே அந்தத் தலையாய சூத்திரம்? இன்னொன்றையும் இத்தருணத்தில் வேதாந்தம் வினையமாகப் பேசுகிறது. இதற்கு அப்பால் என்ன உளதென்பதை எவரும் அறிந்தார்களில்லை. ஏன் அந்த பிரம்மத்துக்கே - தெரியுமோ தெரியாதோ என்று சொல்லி இந்த உணர்வை ஓர் உச்ச நிலையில் வைத்து விடுகிறது.

விண்ணில் முகிழ்ந்திடும் இந்த உணர்வானது விண் அணுக்களாகிற raw material - ஐக் கொண்டு உருக்கொள்கிறது. உணர்வே உருவமாக மாறுகிறது என்று சொல்லும் பொழுது, அந்த உணர்வானது ஒவ்வொரு அணுவிலும் இருக்கும் இயல்புடையதாதலால் உணர்வுமய - ஒளிமய - அணுக்களே உருவமாகத் திரிபுறுகின்றன என்று சொல்வதும் கொள்வதும் பொருத்தம்தானே? எனவே, ஆகாஸமாகிற இடமே இடவடிவங்களாக உருமாறுகின்றது. (space turns into spatial forms) என்பது வாஸ்து விஞ்ஞானத்தின் தலையாய கொள்கையாகும். உள்ளமே (இடமே) மூலமாகவும், மூலப் பொருளாகவும் இருந்து கொண்டு, அஃதே உணர்வுற்று, அதன் உணர்வுக் கொத்த பொருளாக அஃதே உருமாற்றம் கொள்கிறது என்பது அந்த விஞ்ஞானத்தின் அபூர்வத் தேற்றமாகும். மேலும், உருவம் ஒன்று தோன்றிட வேண்டுமானால் அதற்குகந்த அளவுகள் இன்றியமையாதனவாகும் அல்லவா? அவற்றையும்

தருவது இந்த உணர்வேயாகும். இந்த அளவுகள் யாவை? இந்த அளவுகளைத் தரும் ஆற்றலின் பெயர் என்ன? அதனை உள்ளமானது எப்படிப் பயன் படுத்துகிறது என்பதையும் அஃது எப்படியொரு தொழில் நுட்பமாக (technology ஆக) நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த வாஸ்து விஞ்ஞானம் தெரிந்து கொண்டுளது. இதற்கொரு கணித முறை சிற்பிகளிடம் உளது. இதனை வாஸ்து நூல்களில் காணலாம். எனவே இது பற்றி இங்கே இப்போது விரித்திடத் தேவையில்லை. இஃதொரு தனி அத்தியாயமாகிடத் தக்க விரிவும் ஆழமும் கொண்டது. பிறகு பார்ப்போம். இங்கல்ல, வேறிடத்தில்.

எனவே, எடுத்துக் கொண்ட பொருளுக்கு மீண்டும் வருவோம். அதைத் தொடர்வோம். இடையே சொல்லிய கருத்துக்கள் அனைத்தும் இனிவரும் செய்திகளைப் புரிந்து மகிழ்ந்திட பேருதவியாகவிருக்கும் என்றே சொன்னேன். ஒலிஒளி அணுக்களைப் பேசும்போது 'அணு ஒலி' என்றும் 'அணு ஒளி' என்றும் குறிப்பிட்டேன். அவற்றில் அணுஒலி என்பதைத்தான் 'ஓம்ஒலி' என்றும் 'ஒலி ஓம்' என்றும் வைதிகத் துறையிலும், ஆகம வழிபாட்டுத் துறையிலும் இடையறாது பேசப்படுகின்றன. அனைத்து மந்திரங்களும் ஓமில் தொடங்கி நம: என்று முடிய வேண்டும் என்ற ஒரு கட்டுப்பாடே உளதல்லவா? அனைத்துச் சொற்களும் 'ஓம்' என்ற மூல ஒலியிலிருந்து வெளிப்படுகின்றன என்பதே மறைகள் கொண்ட கருத்தும் சமயக் கொள்கையுமாகும். ஒலியானது, ஓங்குறும் வளர்ந்தோங்கும் இயல்புடையதாகும். எனவே ஓங்குறு ஒலியானது சுருக்கமாக 'ஓம் ஒலி' என்றும் ஓங்காரம் என்றும் சொல்லப்படுவதாயிற்று. இஃதொரு எளிய விளக்கம். ஆனால் இனிமையாக விருக்கிறதல்லவா?

எனவே சொற்களுக்கெல்லாம் மூலம் 'ஓம் ஒலி' என்று உறுதியாகிறது. ஆனால் அதோடு நாம் நிறுத்திக் கொண்டு விட்டோம்; திருப்தி அடைந்து விட்டோம். உண்மையிலேயே இன்னொன்றைக் கேட்காமல் ஆராயாமல் விட்டுவிட்டோம். எது தெரியுமா? காதால் கேட்டறியும் சொற் பொருள்களுக்கெல்லாம் 'ஓம் ஒலி' மூலம் என்றால் கண்ணால் பார்த்தறியும் காட்சிப் பொருள்களுக்கு (material objects - material universe) எது மூலம் என்று கேட்காமல் விட்டு விட்டோம். இங்கேதான் வாஸ்து விஞ்ஞானம் ஓர் உச்சக்கட்டத்தை எட்டிப்பிடித்து விடுகிறது. கண்ணால் பார்த்தறியும் அனைத்துப் பொருள்களுக்கும் மூலமாய் விளங்குவது 'ஓம் ஒளி' என்று மற்றுமொரு 'ஓமை' இந்த விஞ்ஞானம் கண்டு தேர்ந்துள்ளது. இதுவும் அந்தராகாஸத்திலும் பரமாகாஸத்திலும் தான் தோன்றுகிறது. உள்ளொளி இல்லாவிட்டால் நமது பேச்சுத்தான், எழுத்துத்தான் எங்கிருந்து வரக்கூடும்? எதன் பிரதியாய், படிவமாய் அது வெளிப்பட முடியும்? உள்ளத்திலே நிழலாடும் அகக் காட்சிதானே - ஒளிக் காட்சிதானே - ஒளியுணர்வுதானே - சொல்லுருவாய் வெளிப்படுகிறது? எனவே 'ஓம் ஒலி' மட்டுமன்றி 'ஓம் ஒளி' என்ற பிரிதொரு மூலமும் உளதென்பதைக் காட்டும் காட்சியே சிதம்பரக் காட்சி - திருச்சிற்றம்பலத்தின் தத்துவம்: எனவே திருச்சிற்றம்பலம் வெற்றிடத்தைக் கொண்ட வீடு என்று சொல்வதற்கு மாற்றாக அந்தச் 'சிற்றம்பலம் ஒளி நிறைந்த வீடு' என்று சொல்லிட வேண்டும். எனவே அந்தச் சிற்றம்பலத்தில் வழிபடு பொருள் 'ஒளி' என்பதைத்தான் அக்குடிசைக் கோயிலின் வெற்றிடம் உணர்த்திக் கொண்டிருக்கிறது. இப்பொழுது புரிகிறதா, பொருந்துகிறதா 'திருச்சிற்றம்பலம் ஒரு விண் - ஞானக் கோயில்' என்று வாஸ்து மரபு கொண்டுள்ள கருத்து?

இத்தகைய கருத்தை உருவகித்திட மட்டும் இக்கோயில் நிறுவப்படவில்லை. அதிலிருந்து வெளிப்படும் ஒளி அலைகளால் நாம் பெறும் ஆன்ம ஆரோக்யம், துய்க்கும் அமைதி, சுகம் இருக்கின்றனவே இவையனைத்தும் விஞ்ஞான நிகழ்ச்சிகளாக இயற்கையில் நடக்கின்றன என்பதை நிலை நிறுத்திடவும் மக்களை நேரிடையாக அனுபவிக்கச் செய்திடவும் இக்கோயில் உளதென்பதை உறுதிபடச் சொல்ல விரும்புகிறேன். இந்த நிகழ்சியும் ஓர் அபூர்வ வாஸ்து விஞ்ஞானம்தான்.

எனவேதான், 'உள்ளம் பெருங்கோயில்' (inner space is the seat of the ultimate energy or God) என்றார் திருமூலர். உள்ளம்தான் ஆகாஸம். எனவே, அதனைச் சுற்றிக் கட்டப்பட்ட கட்டிடத்தை 'ஆலயம்' என்றார். சுற்றுச் சுவராய் விளங்குவது உடம்புதானே! எனவே, அதனை 'ஊனுடம்பு ஆலயம்' என்றார். கட்டடத்தை material energy யாகக் கொண்டு அதனை 'வாஸ்து' என்றும் அடைப்பட்ட ஆற்றலை (subtle energy - ஐ) வஸ்து என்றும் சொன்னது நமது மரபு விஞ்ஞானம். எனவே வீடு ஓர் உயிர்ப் பொருள் (living organism) என்று வாஸ்து மரபு சொல்லுவது பொருந்துகிறதல்லவா? இந்த நிலையில் முடிவு யாதெனில், சிற்றம்பலம் ஓர் ஒளி வீடு; ஒளி நிறைந்த வீடு. அங்கு நடப்பது ஒளி வழிபாடு. அங்கு ஒளிர்வது ஒளி நடம் (dance of the light). அங்கு சிற்பமாய் இருப்பது ஒளி நடராசனின் சிலமிகு கூத்து.


இங்கேயொரு கருத்தை இப்போதே செருகி வைக்கிறேன். Traditional Housing Architecture இருக்கிறதே அதாவது 'கட்டடக்கலை' அதனுடைய மூலம், ஆணிவேர் அந்தச் சிற்றம்பலத்திற்றான் இன்றுமுளது. வீட்டை உயிர்ப்பொருளாகப் படைத்துக் காட்டிய இடமே சிற்றம்பலத்திலேதான். மேலுமொரு வினா, இந்த வீட்டுக்குச் சிற்றம்பலம் என்ற பெயர் வருவானேன்?

அம்பலம் என்றால், 'மன்றம்', 'hall' என்று பொருள். இதற்குச் சிற்றவை என்ற பெயரும் ஒன்றுண்டு. பேரம்பலம் என்று சொல்லியிருக்கலாம் அல்லவா? ஆம். சொல்லவில்லை. ஏன்? இங்கேதான் மேலுமொரு விஞ்ஞான நுட்பம் அடங்கிக் கிடக்கிறது. இஃதும் ஆகாஸத்தின் ஒரு பண்புதான்; விஞ்ஞானத் தேற்றம்தான். இதனை ஒரு சிறிது பார்ப்போம்.


ஆகாஸம் ஒளிமயமானது என்று சொல்லும்போது இந்த ஆகாஸத்தில் நுண் அணுக்கள் நிரம்பிக் கிடக்கின்றன என்றும் சொன்னேன். உணர்வுமயமாகக் கிடந்த 'ஒன்று' (வஸ்துப் பிரம்மம்) கிளர்ந்தெழுந்து பரவியதுதான் ஒளிவிண்ணாகும். அவ்வாற்றல் அணுக்களின் விஞ்ஞானப் பெயர்தான் 'பரமாணு' என்பதாம். இவற்றை நாம் காண முடியாது; ஆனால் உணர முடியும். காணமுடியா இந்த அணுக்கள் யோகிகளுக்கு மட்டும் புரியும் என்று வாஸ்து நூல் கூறுகிறது. 'பரமாணுரிதி ப்ரோக்தம் யோகினாம் திருஷ்டி கோசரம்' परमाणुरिति प्रोक्तं योगिणां द्दषिगोचरम् என்று வஸ்து விஞ்ஞானி மயன் பேசுகிறான். அதாவது சிந்தனையாளர்களுக்கே - ஆய்வாளர்களுக்கே - புரிந்திடும் என்பது பொருள். அவ்வளவுதான். கண்களுக்குத் தெரியாத பொருளானாலும் உணர்ந்தறியும் பொருள்ாகவிருப்பதினால் இஃது 'இருக்கும் பொருள்' (existential substance) என்று உறுதியாகிறதல்லவா? வஸ்து, வஸ்து என்று அடிக்கடி சுட்டிக் காட்டினேன் அல்லவா? அதன் literal meaning - கே 'இருக்கும் பொருள்' (etemal substance) என்பதுதான்.

மேலும் பார்ப்போம். பொருள் ஒன்று 'இருக்கிறது' என்றால் அதற்கு மூன்று அளவுகள் தேவை.ஒரு பொருள் two dimensional ஆக இரு அளவுகளோடு மட்டும் இருந்திட முடியாது! Tri dimensional ஆக, மூன்று அளவுகள் கொண்டதாகத்தான் இருக்க முடியும். யோசித்துப் பாருங்கள். ஒரு காகிதமானது

நீளமும் அகலமும் மட்டுமே கொண்டிருப்பதாக two dimensional ஆகத் தோன்றினாலும், கனம் thickness என்ற மூன்றாவது அளவு இல்லையேல் அஃது என்ன ஆகும்? அப்பொருளே இல்லாது போய்விடும். Two dimensional பொருள் என்று இந்தப் பிரபஞ்சத்தில் ஏதும் இல்லை. இல்லவே இல்லை. (கடவுள் 'இருக்கிறார்' என்றால் அவருக்கும் இந்த Tri dimensional விதி பொருந்துமன்றோ !) எனவே ஆகாஸம் - அக விண்ணும் புற விண்ணும் - கனப் பொருள் ஆகிறது. (Space is tri dimensional) எனவே, அதன் அணுக்களும் கனப் பொருளாகத்தானே இருக்க வேண்டும்? இஃது எப்படிப் பட்ட கனப் பொருள் தெரியுமா? எல்லாப் பக்கங்களும் சம



கனசதுரம்



சதுரத்தின் உருமாற்றம்

அளவுடைய ஒரு கனச் சதுரம். (cube) இப்படிச் சொல்லிய வாஸ்து விஞ்ஞானத்துக்கு எத்துணை நோபல் பரிசுகள் கொடுப்பீர்கள் ? இதற்குள்ளேதான் மின்சார விளக்கில் உள்ள filament போல ஒளிக் கீற்று ஒன்று நர்த்தனம் செய்து கொண்டுளது, எப்பொழுதும் ஆடிக் கொண்டேயிருக்கிறது. அந்த ஒளிக் கீற்றின் பிரகாசம்தான் அந்தராகாஸம், பரமாகாஸம், தஹராகாஸம், நுண் வெளி, விண்வெளி, வெட்டவெளி, அகவிண், புறவிண் என்றெல்லாம்

பேசப்படுவதாகும். உள்ளிருந்து ஆடும் அந்த ஒளிக் கீற்றுக்கு - ஒளி நூலுக்கு - பிரம்ம சூத்திரம் என்ற தொழிற் பெயர் ஒன்றுமுண்டு, சீலத்தோடு ஆடும் இக்கீற்றுக்குத்தான் 'ஒளி நடராசன்' என்று பெயர் சூட்டியிருக்கிறோம். அவன் ஆடும் சிலமயக் கூத்துத்தான் ஒளி நடம் (Dance of the light) என்று வருணிக்கப்படுகிறது. இந்தக் கனசதுர ஒளிதான் 'ஒளியணு' என்று சொல்லப்படுகிறது. இந்த ஒளியணுவுக்குத்தான் சிற்றவை (micro abode) என்று பெயர். எனவே சிதம்பரத்துக்குச் சிற்றம்பலம் என்பதுதான் original மூலப் பெயர். இந்தச் சிற்றவை தான் (cubical cell) 'ஓம் ஒளி' என்றும் 'தேஜோ பிந்து' என்றும் மரபில் சொல்லப்படுகிறது. தர்க்கரீதியாக நோக்கினால் 'ஓம் ஒலி' யின் வடிவமும் கனசதுரமாகவே இருப்பதாகும். இப்போது 'ஓ'முக்கே ஒரு வடிவம் கிடைத்துவிட்டதல்லவா? ஆச்சரியமாக இல்லை? ஓமின் வடிவம் கனசதுரம் தான். இந்த 'ஓ'முக்குள் ஒளிநடம் நடக்கிறதல்லவா? இந்த 'ஓம்' ஓங்குற்றுப் பிரபஞ்சப் பொருளாக மாறிடுவதை ஓம்கார நடனம் என்று அழகுபட பொருள்பட மரபில் கூறி வருகிறோம். ஓங்காரம் என்ற சொல்லுக்கு ஓங்குறுதல், ஓங்கி வளர்தல் என்று உரையொன்றை முன்பே சொன்னேன். எனவே, 'உணர்வு ஒளியாகி உணர்வுற்ற அவ்வொளியணு தானாக உடைந்து, மெழுகுபோல் உருகி, உணர்வுக்கொத்த உருவமாய் தானே தன் முயற்சியால் ஓங்குறுகிறது; திரிபுறுகிறது'. நாம் உணர்வுற்றுப் பேசும் போதெல்லாம் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு விநாடியும் ஒளி அணு உடைந்து, உருகி, உருக் கொண்டு மீண்டும் ஒன்றாகி இப்படியே தொடர் நிகழ்ச்சிகளாகத் திரும்பத் திரும்ப நம் உளத்தே நடக்கிறது! எனவேதான் தொடர்ந்து பேசுகிறோம். தொடர்ந்து செயல்படுகிறோம். இந்த நிகழ்ச்சிக்குத் தான் 'ஆக்கம்' என்றும் 'கிருஷ்டி' என்றும் மரபில்

சொல்லுகிறோம். எனவே இந்த ஓங்குறும் நடனமானது 'சிருஷ்டி தாண்டவம்' என்றும் 'படைத்தற் தாண்டவம்' என்றும் சமயத் துறையில் பேசப்படுவதாயிற்று. உண்மையில் இங்கே நிகழ்வது படைத்தலன்று; திரிபுறுதல், அல்லது உருமாற்றம் கொள்ளல்தான் metamorphosis or self manifestation நிகழ்கிறது என்பதைக் கருத்திற் கொள்ளுங்கள். இதல்லவா கடவுள்! இதனைத்தானே நாம் கும்பிடுகிறோம்? தியானிக்கிறோம், நாம் எவ்வளவு பாக்கியசாலிகள்! எவ்வளவு புத்திசாலிகள்!

இந்தப் பரமாணு உணர்வுற்று உடைந்து, உருகி, உணர்வுற்ற கோலமாகி வாய் வழியாகவோ, கை வழியாகவோ வெளிப்படுவதால், இந்தப் படிமுறையில் உருவங்கள் தோன்றுவதால், இதற்கொத்த தொழில் நுட்ப முறையானது நடைமுறையிலும் உளது. செம்பொன்னை (Copper) உருக்கித் தெய்வத் திருமேனிகளை உருவாக்கிடும் தொழில் நுட்பத் துறையில் இதனைக் காணலாம். எனவே நடராசன் வடிவத்தை உலோகத்தால் வார்த்தல் வேண்டும் என்ற கட்டுப்பாடொன்று தோன்றி சிற்பிகளிடம் இன்றளவும் நின்று நிலவுகிறது. வழிபாட்டுக்குரிய நடராச வடிவத்தை வேறு பொருளால் செய்வதில்லை. 'விண்ணின்றிழிந்த' - ''விண்ணைப் பிளந்து கொண்டு இறங்கிய'' ''விண் பொருளாக'' நடராசன் கொள்ளப் படுகிறான். அதாவது விண்ணின் கெர்பத்திலிருந்து வெளிப்பட்டு, விண்வழி பிறந்திட்டவன் நடராசன்; இந்த நிலையில் விண்ணே நடராசனாக உருமாற்றம் கொண்டு விட்டது என்று ஓங்கிச் சொல்லலாம்தானே? இது பாரதநாட்டு வாஸ்து விஞ்ஞானத்தின் Big bang theory என்பேன். தன்னையுணர்ந்தவர்களுக்கும், தன் ஆற்றலால் வெளிப்படு பொருள்களில் தன்னையே பார்க்கக் கொடுத்து வைத்தவர்களுக்கும் இக்கருத்து சடிதியில் புரிந்திடக் கூடும்.

Material உலகத்துக்கும், Subtle உலகத்துக்கும் நிரம்பத் தொடர்புண்டு என்பது புரிகிறதல்லவா? Subtle தானே gross ஆக உருமாற்றம் கொள்கிறது? இனி நமது பொருளுக்குச் சென்று மேலும் ஆய்வுகளைத் தொடர்வோம்.

மேற்சொன்ன கனசதுர வடிவமானது (Cube) அமைதி நிலையில் பரமாணு மேற்கொள்ளும் இயல் நிலையாகும். இஃதொரு குணநிலை: ஆகாஸத்தில் அதாவது உள்ளத்தில் முகிழ்ந்திடும் இந்தக் குணநிலையை சாத்விகம் என்று சொல்லுகிறோம். அடிநிலை, அமைதி நிலை, உண்மை நிலை என்பது அதன் பொருள். மேலும் உருவம் ஒன்றை ஆக்கிடச் செயல் அல்லது முயற்சியொன்று வேண்டுமல்லவா? முயற்சி என்ற ஒன்று இல்லையேல் இந்த உலகமோ ஞாலமோ இல்லையல்லவா? எனவே அமைதி நிலையிலிருந்து, அதாவது அனுபவ நிலையிலிருந்து செயல்படு நிலைக்கு நமது உள்ளம் மாறிட வேண்டியதாகிறது. அங்ஙனம் மாறும் போது இந்தக் கனசதுரமானது, எட்டுப்பட்டம் கொண்டதாகவும் (octogonal prism) இறுதியில் வட்டமாகவும் அதாவது உருண்டையாகவும் (spherical) உருமாற்றம் கொள்ளும் என்பது வாஸ்து விஞ்ஞானத்தின் தேற்றம். இவையெல்லாம் உளத்தின் செயலால் விளைந்திடும் சக்தி அலைகளின் (wave patterns of energy) கோட்டுருக்கள் ஆகும். குணத்தால் மாற்றங்கொண்ட அவ்வடிவங்கள் ராஜஸம், (வீரு, விரைவு, விசை, வேகம்) என்றும் தாமஸம் (விரம் வீரியம்) என்றும் சொல்லப்படும். தாமஸநிலை என்பது ஆற்றலின் இறுதி நிலை அல்லது ஸ்தூல வடிவமாகும்.

இக்காரணம் பற்றியே உலகத்தைத் தாமஸ உலகம் என்று மரபில் சொல்லுகிறோம். Gross world என்பது பொருள். Dull lethargic என்று பொருள் அல்ல. எனவேதான் தமஸோமா

ஜ்யோதிர்கமய तमसो मा ज्योतिर्गमय என்ற வாக்யத்திற்கு lead me from gross to subtle என்று நான் ஓர் அறிஞர் கூடிய சபையில் பொருள் சொன்னேன். இஃதொரு technical approach to Vedic Mantras என்பேன். இந்த ஞாலத்திலே குணங்கள் தானே உருத்தரிக்கின்றன? இந்தக் குண வடிவங்களை (abstract basic material spatial forms) நாகரம், திராவிடம், வேஸரம் என்று வாஸ்து நூல்கள் பேசும்.

नागरं शात्विकं प्रोक्तं
राजसं द्राविडं भवेत्
वेसरं वृत्तमित्युक्तम्

இந்த நிகழ்சிகளை space dynamics என்று சொல்லலாமல்லவா? இது பற்றி நிரம்ப எழுத வேண்டும். எடுத்துக் கொண்ட பொருளுக்கு இப்போது இஃதே போதும், என்றாலும் ஒன்றை மட்டும் நினைவிற் கொள்ள வேண்டும். இதுவரை வருணித்து வந்திட்ட 'உணர்வே ஒளியாகி அவ்வொளி உருகி உருக் கொண்ட 'ஒளி நடராசனின்' வடிவந்தான் திருச்சிற்றம்பலத்தில், ஓர் ஓரத்தில், படிமமாக அல்ல, சிற்பமாக நிறுவப்பட்டுள்ளது. Space Dynamics இன் அதாவது இடத்துடிப்பின் மொத்த வடிவாய் - அத்துடிப்பின் கணக்காய் - (frequency of vibration of space) கணித வடிவாய் (mathematical form) - அக் கணக்குக்குத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு ஆடும் பொருளே ஆடவல்லான் திருக்கோலமாகும். ஆகாஸப் பொருளாய், உள்ளுறையும் ஆற்றலாய் - தன்னைத் தானே படைத்துக் கொள்வதால் அத்வைதப் பொருளாய் - வடிவம் தாங்கிய நிலையில் அம்மையப்பனாய் - இத்திருக்கோலம் அமைந்துள்ளது. இக்கருத்துக்கள் மீண்டும் இடையிடையே விளக்கப் பெறும்.

ஒரு சிற்பியானவன் ஒரு பொருளுக்கு அதாவது ஒரு கருத்துக்கு உருக் கொடுக்க வேண்டுமானால் அவன் அக்கருத்துக்குள்ளே புகுந்து, அக்கருத்துக் கொத்த உருவாக, உணர்ச்சி பூர்வமாக மாற்றம் கொள்கிறான். அக் கருத்தைச் சொல்லிக் காட்டிட விரும்புபவனும் அங்ஙனமே உணர்ச்சி பூர்வமாகத் திரிபுறுகிறான்; அதாவது, சொல்வடிவமாக உருமாற்றம் கொள்கிறான்; பேசுகிறான். முன்னவன் செயல் வடிவம் கொண்டு அதையே செய்து காட்டுகிறான். இந்த நிகழ்ச்சி தானாகவே நடக்கிறது. (self manifestation).எவரும் சொல்லிக் கொடுக்கத் தேவையில்லை. ஏன்? இஃது (ஆகாஸமாகிற) உள்ளத்தின் இயல்பு. இஃது எப்போதும் எல்லோரிடமும் நடந்து கொண்டே இருக்கிறது. இந்த நிலையில் ஆகாஸமாகிய உணர்வானது சூடேறி (அக்னியாகி) உருகி, உருமாற்றம் அடைகிறது என்பது ஒரு சிருஷ்டி நுட்பம் அல்லது படைத்தற் படிமுறை. இந்த அக்னிக்குத்தான் cosmic fire அல்லது வைஸ்வானர அக்னி என்று பெயர். விஸ்வம் என்றால் space / விண் என்று பொருள். நரன் என்றால் மனிதன். எனவே விஸ்வநரம் என்ற பெயர்ச் சொல்லை வைஸ்வானரன் என்று உரிச்சொல்லாக (adjective) பண்டிதர் கொள்ளுவர். இதன் ஒட்டு மொத்தப் பொருள் cosmic man என்பதாகும். உணர்ச்சியே உருமாறிக் கொண்டிட்ட ஒரு நுண் வடிவம் subtle body என்பது இச் சொல்லின் உட்பொருள். இதற்குள் மையமிட்டுக் கிடக்கும் சூடுதான் `அக்னி' என்ற சொல்லால்_உணர்த்தப்படும் cosmic fire ஆகும். இதுதான் அவர்களை உருக்கி உருமாற்றம் செய்திடும் நுண்பொருள் (நுண் உணர்வு). இந்த அக்னியின் சிகையிலேதான் சூடே அதிகமாகவிருக்கும் என்பார்கள். அந்தச் சிகை bluish நீலமேனியாகவுமிருக்கும். இந்த அக்னியானது விண்ணிலும் நமக்குள்ளும் எப்போதுமிருக்கும் ஒரு சூட்டுப்

பொருளாகும். தமிழில் இதற்குப் "பிறழ்நவச் சூடு" என்று பெயர். எனவே வெற்றிடமான ஆகாஸமே உருக் கொள்கிறது என்பதைக் காட்டிடவும், அஃது அக்னியின் இயல்புடையது என்பதை உணர்த்திடவும், அவ்வுருவத்தின் அடிப்படை `அளவு முறைகளை' நிலைநாட்டிடவும், அவை உள்ளிட்ட இலக்கண வடிவாய் நடராசனின் உருவம் அங்கே நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. இல்லையேல் அருவ வழிபாட்டுக்கு நிலைக்களனாய் விளங்கும் திருச்சிற்றம்பலத்தில் உருவம் வைப்பது முரணாகுமல்லவா? எனவே அருவமே உருவமாகும் சிருஷ்டி நுட்பத்தை விளக்கும் மூலச் சிற்பம் நடராச வடிவமாகும். இதனை ஞாலமூலத்தின் கணித வடிவம் (mathematical form) என்று கொள்ளல் வேண்டும். விஞ்ஞான மேதை ஐன்ஸ்டீன் கண்டு சொன்ன $E = mc^2$ என்ற சூத்திரத்தின் மொத்த வடிவமே இஃதாகும் என்றால் மிகையன்று. அவரும் இதனைத்தான் கடவுள் G - O - D என்று நாம் நினைத்திருக்க வேண்டும் என்றும் சொன்னார். ஐன்ஸ்டீன் கடவுளை ஆற்றலாகவும் ஒளியாகவும் கண்டார். நாம் அதோடு விட்டுவிடாமல் அதற்கு மேலும் ஒரு படி சென்று அதன் இயல் வடிவத்தையும் கண்டு தேர்ந்து அதனை ஆராதிக்கும் பொருளாகவும், அனுபவிக்கும் பொருளாகவும் வைத்துக் கொண்டிருக்கிறோம். கடவுள் உணர்ச்சிப் பொருள்; நாமும் உணர்ச்சிப் பொருள். இரண்டு உணர்ச்சி அலைகளும் ஒன்றானால் முகிழ்வது இன்பம்தானே? இதற்குத்தானே பக்தி என்று பெயர்? கடவுள் என்ற உணர்ச்சிப் பொருளை மனிதனாகிய உணர்ச்சிப் பொருள் ஏதேனும் கோரினால் கடவுள் கொடுப்பாரா? நீங்களே விடை தாருங்கள். ரேடியோவைக் கண்டு பிடித்த மார்க்கோனியைக் கடவுள் நிலைக்கு உயர்த்திப் பேசிய critic க்குகளுக்கு ஒன்று சொன்னார். என்ன தெரியுமா? நீங்கள் மனமுருகி ஏசுவை நோக்கிச்

செய்திடும் prayer அவரைச் சென்றடைகிறது என்பதை என் ஆய்வு ஐயமறக் காட்டுகிறது என்று சொன்னார்.

மேலும் மேற்சொன்ன நடராச வடிவத்துக்குத்தான் 'சிற்பம்' என்று பெயர். அதாவது சிற்பம் என்ற சொல் 'நுற்பம்' என்ற பொருளில் எழுந்த சொல்லாகும். மற்றவையெல்லாம் சிற்பத்தின் பிரதிகள்தான். எனவே படிமம் என்றும் பிரதிமா என்றும் சொல்லப் படுவதாயின. மூலமானது தன்னைத் தன் வடிவத்திலே, தானே, புலப்படுத்திக் கொள்கிறது என்ற பொருளிற்றானே இதுவரை சொல்லி வந்தேன். அப்படி இயற்கையில் காணும் போது. மனித வடிவத்தைக் கடவுளின் வடிவம் என்று சொல்வதும் கடவுளை மனித வடிவத்தில் இயற்றுவதும் உணர்வுக்கும் பகுத்தறிவுக்கும் பொருந்து கிறதல்லவா? இன்னும் சொல்லப் போனால், ஞாலப் பொருள்கள் அனைத்துமே அந்த ஆதிமூலத்தின் வடிவங்கள்தான். இஃது இந்திய வாஸ்து விஞ்ஞானத்தின் கொடுமுடி என்றால் மிகையாகுமோ?

நாம் பேசுவதை casette ல் ஒலிப்பதிவு செய்து வைக்கிறோம். முதல் casette தான் சிற்பம். அடுத்துப் பதிவாகிடும் பிற casette கள் எல்லாம் பிரதிகள் என்று சொல்லப்பட வேண்டும். இந்தப் பிரதிகளை இயக்கினால் பேச்சு அப்படியே திரும்பக் கிடைக்கிறது. மூலம் மறைந்திருப்பதாலே casette கள் பேசிட மறுப்பதில்லை. அது போலத்தான் மூலத்தின் கணக்கொத்த படிமங்களும் மூலத்திற்கு ஒத்த உருக்கள் ஆகும் என்பது தேற்றம். நம்முடைய prayer தான் (உணர்ச்சிதான்) அப்படிமத்தை இயக்கும் கருவி; இயக்கி. இதனைத்தான் பூசை புனஸ்காரம் என்று சொல்லி, கோவில் வழிபாட்டிலே ஆகம வழிபாடு, வைதிக வழிபாடு என்றெல்லாம் வகுத்துக் கொண்டு முறைப்படுத்தி ஒழுகி வருவோராயினோம். இவற்றிலெல்லாம் அடிப்படையாகத்

தேவையானது வழிபடுவோரின் உணர்ச்சியேயாகும். வழிபாடு என்பது உணர்ச்சிபூர்வமாக இருக்க வேண்டும். இந்த உணர்ச்சிப் பொருளைத்தான் சொற் பொருளாக்கி, `பாட்டு` என்று அமைத்துக் கொண்டு, அழகிய வடிவமும் கொடுத்து, பாடலையே இறைவடிவமாகக் கண்டு அதற்கு சப்தம் பிரம்மம் என்று நாமகரணமும் செய்து வைத்துத் தனித்த ஒரு வழிபாட்டுத் துறையையே நமது நாட்டில் தோற்றுவித்து அது சிறப்புற்று விளங்கி வருகிறது.

ஞாலப் பொருள்கள் அனைத்தும் சிற்பங்கள் என்பது வாஸ்து விஞ்ஞானத் தெளிவு ஆகும். ஆகாஸம் உணர்ச்சி யுற்றும், திரிபுற்றும் நேரடியாகத் தோன்றிய வடிவங்கள் என்பது இதன் பொருள் ஆகும். எனவேதான் "ஜெகத் ஸர்வம் சில்ப மேவ பவதி'' जगत् सर्व शिल्पमेव भवति என்று "சில்ப வித்யா ரஹஸ்யோபநிஷத்'' என்ற சிற்பியர் வேதநூல் ஒன்று குறிப்பிடுவதாயிற்று. சிருஷ்டி நுட்பமே இதுவாகையால், இதை விளக்குவதே உண்மை விஞ்ஞானமாகுமாதலால் ''விஞ்ஞானம் சில்ப கௌசல்யம்'' என்பர் பண்டைச் சிற்பிகள். பிற சிற்பங்கள் தோன்றிட மூலக் கணக்காகவும், கணக்கொத்த மூல வடிவமாகவும் நடராசர் உருவம் உளது என்பதை மறந்து விடாதீர்கள். ஞாலப் பொருள் அனைத்தின் தோற்றத்துக்கும் அடிப்படையான சிற்பம் என்று முன்பு சொன்னேன். எனவே ஓவியமும் சிற்பமும் ஒன்றே யாகும். ஓவியம் கோட்டுரு. சிற்பம் கனஉரு. இஃதும் space dynamics - இன் தேற்றமேயாகும்.

முன்புவிட்டுப் போன விஞ்ஞான விளக்கத்தை மீண்டும் தொடர்வோம். இடையிடையே எனது உணர்வுகளையும், சிறு சிறு செய்திகளையும் இழுத்து வைத்துச் சொன்னால்தான் இக்கால விஞ்ஞான மூளைக்கு ஒத்துப் போகும் என்பதினால் இப்படி பேச்சு நடையில் எழுதிக் கொண்டிருக்கிறேன். எனவே முன்பு சொன்ன இந்த கனசதுரப் பெட்டகம் (Cubical Prism) தான்

பண்டைக் காலத்தில் வீட்டுக்கு 'வாஸ்து வேதிகள்' கொண்டிட்ட மூல அமைப்பாகும். இது 'தெண்டக சாலை' என்றும் 'ஏக சாலை' என்றும் 'ஒரு கட்டு வீடு' என்றும் சொல்லப்படும். சாலை என்றால் வீடு என்பதுதான் பொருள். வீட்டை ஒரு சிருஷ்டிப் பொருளாகக் காட்டப்பட்டிருக்கிற நுட்பத்தை உங்களால் உணர முடிகிறதா? மேலும் சொன்னால் வீடு ஓர் உயிர்ப் பொருள் மட்டுமல்ல, மனித உடம்பின் தத்துவங் கொண்ட Principle of human organism வடிவமாகவும் ஆகிறது (இந்த நுட்பத்தை Vastu technology பற்றிப் பேசும் போது விரித்துக் கூறுவேன். இங்கல்ல வேறு நூலில்). இந்த உயிர்ப் பொருளுக்குள்ளே இருந்துதான் நாம் வசிக்கின்றோம்; சுவாசிக்கின்றோம். இப்படித்தான் பண்டைக் குடியிருப்புகள் வீடு - மனைகள், மாட - மாளிகைகள், கூட - கோபுரங்கள், உளருதிகள், படுக்கைகள் உருவாயின நமது பாரத நாட்டில்.. வாஸ்து மரபுசார் வீடுகள் ஆன்மிகத் தொடர்புடைய இடங்கள் (spiritual spaces) ஆன்ம நலம் தரும் வீடுகள் (spiritual abodes), உடல் ஆரோக்யம் கூட்டுவிக்கும் வீடுகள் (healthy buildings) ஆன்மாவையும் அதன் செயல் நிலைகளையும் புறத்தே வடிவமாகக் காட்டி, அதோடு ஒத்து வாழ வைத்திட்ட விந்தை நிலையங்கள் (peculiar abodes) என்பதை நன்றாகப் புரிந்து, அனுபவித்துக் கொண்ட இன்றைய சமுதாயத்தின் ஒரு பகுதி வாஸ்து சாஸ்திரங்களையும் வாஸ்து வேதிகளையும் தேடிச் சென்று கொண்டிருக்கிறது என்று சொன்னால் மிகையன்று. இப்பொழுதெல்லாம் நான் அடிக்கடி வாஸ்து மரபு ஓர் உயிர்ப்புள்ள மரபு என்று பேசி வருகிறேன். இக்கருத்தை மக்கள் நன்றாகச் சுவைக்கிறார்கள். விதிமுறைக்கு மாறி அமைந்த சூழல் மனிதனின் உள்ளத்தையும் உடலையும் பாதிக்கிறது என்பதை அனுபவ பூர்வமாகக் கண்டு இக்கருத்தை ஏற்கிறார்கள். வீட்டுக்குள் சுழலும் காற்றினால் மட்டுமல்லாமல் அதையும் சுற்றிச் சூழந்து நிற்கும் பிராண சக்தியின் அளவுக் கணக்கும் காரணமாகும் என்பதைப் புரிந்து கொள்கிறார்கள். இந்தக்

கணக்குதான் வாஸ்து சாஸ்திரங்களில் (Vastu technology) அளவு இலக்கணங்களாக அமைந்திருக்கின்றன. வீடே, வீட்டின் அமைப்பே சுகவீனங்களுக்கும் (illness) வளர்ச்சிக்கும், தேய்வுக்கும் (Prosperity and decay) காரணம் என்பதை கண்டு கொள்கிறார்கள். நிலவெளியில், காடுகளில், குகைகளில் வாழ்ந்திட்ட தொல் மக்கள் கண்டு சொன்ன விஞ்ஞான நுட்பங்கள்தானே வேதமாக, வான சாஸ்திரமாக சிரஞ்சீவி இலக்கண இலக்கியங்களாக, நம்மிடையே இன்னும் இருந்து வருகின்றன. எவ்வளவு உயரம் பறந்தாலும், எத்துணை வேகம் சென்றாலும் ஒரு வீட்டிலிருந்து இன்னொரு வீட்டிற்குத்தானே போகிறோம். இந்த வீடு சரியில்லை என்று சொல்லி, வேறு வீட்டுக்கல்லவா - பேரின்ப வீடு -போகப் பாதை காட்டுகிறார்கள் நம் ஞானியர்கள். அந்தப் பேரின்ப வீட்டை இங்கேயே இந்த நிலவுலகிலே ஆக்கித் தருவதே, அனுபவிக்கச் செய்வதே வாஸ்து விஞ்ஞானத்தின் நோக்கம். அதன் ஓர் எளிய மாடல்தான் சிற்றம்பல வீடு என்று சொல்லுகிறேன்.

இம்மரபு மீண்டும் பாரதம் முழுவதும் பரவிடும் வாய்ப்பு நன்றாகவே உளது. அரசு மனது வைத்தால், இக்கால இந்திய விஞ்ஞானிகள் இதனைப் புரிந்து கொண்டால், இம்மரபு விஞ்ஞானம் ஓங்குறும், மக்கள் ஆரோக்கியமான வீடுகளைப் (spiritual abodes / healthy buildings) பெற்று அவர்தம் உடல் நலமும் ஆன்ம நலமும் ஓங்குறும் என்பேன். மீண்டும் எடுத்துக் கொண்ட விஞ்ஞானப் பொருளுக்குச் செல்லுவோம்.

ஆகாஸமானது ஒளிஅணுக்கள் நிறைந்த இடம் என்று சொல்லும் நேரத்தில் இந்த ஒளியானது, அவ் அணுவுக்குள் ஒளி நூலாக - (இதற்குப் பிரம்ம சூத்திரம் என்று வாஸ்து விஞ்ஞானப் பெயர்) - காட்சி தருகிறதல்லவா? இந்த ஒளி நூலின் (thread of light / thread of consciousness)அதிர்வைத்தான் 'ஒளி நடம்'

என்றும் 'ஒளி நடராசன்' என்றும் சொல்லுகிறேன். இந்த ஒளியானது எப்படிப்பட்ட ஒளி என்று சொல்ல முயற்சித்த ஓர் உபநிஷதம் இக்காட்சியை மிகநுட்பமாக வருணிக்கின்றது. இனிமையாகவும் உளது. இதைவிட எவராலும் எவ்வண்ணமும் இவ்வொளியை வருணித்திட முடியாது என்று சொல்லலாம் அஃதொரு விஞ்ஞானக் கவிதை. இதோ அந்தப் பாடல்.

नतत्रसूर्यो भाति नचन्द्रतारकं ।
नेमे विद्युतो भान्ति कुतोयमग्निः ॥
तमेव भान्तं अनुभाति सर्वं ।
तस्य भासा सर्वमिदं विभाति ॥

- முண்டகோபநிஷத்

இந்த ஒளியைத்தான் நாம் பரம்பொருள் என்றும் முதற்பொருள் என்றும் நிலைப்பொருள் என்றும் கலைப்பொருள் என்றும் நமது மரபில் சொல்லி வருகிறோம்.

மேற்குறிப்பிட்ட உபநிஷதவாக்கியத்தின் பொருளைப் பார்ப்போம். ஒளியே மயமான அந்தப் பிரம்மத்தின் ஒளிக்கு ஈடாக சூரிய ஒளியோ, சந்திரன் மற்றும் நட்சத்திரங்களின் ஒளியோ ஒளிர்-வதற்கில்லை. ஓங்கி நிற்பதற்கில்லை. ஒளிகளுக் கெல்லாம் மூல ஒளியாக இருந்து கொண்டு, தானும் ஒளிர்ந்து அனைத்துப் பொருள்களையும் ஒளிரச் செய்வதே அந்தப் பேரொளி ஆகும். இதனைத்தான் பிரம்ம தேஜஸ், அருட்பெருஞ்ஜோதி, பரஞ்ஜோதி என்றெல்லாம் சொல்லுகிறோம். இதனைத்தான் ஆங்கிலத்தில் (spiritual light) என்று சொல்லுகிறோம். பேரொளி என்பது தமிழ் வழக்கு இந்தப் பேரொளியானது `உணர்ச்சியே மயமான பொருள்` என்பதுதான் அந்த வாக்கியத்தின் உட் பொருளாகும். பார்ப்பதும், பார்க்கச் செய்வதும், கேட்பதும் கேட்கச் செய்வதும் உணர்ச்சிதானே?

மற்ற உறுப்புகளெல்லாம் கருவிகள் தானே? எனவே பிரம்மமும் பிரம்மத்தின் ஆற்றலும் இஃதே ஆகிறது. இதனைத்தான் ஒளி நடராசன் என்றேன், `ஒளி` என்றால் உணர்வு என்பது பொருள். இஃது `ஒள்` என்ற வேர்ச் சொல்லிலுருந்து `ஒள்ளி` என்ற வினைச்சொல்லாகி இறுதியில் `ஒளி` என்ற பெயர்ச் சொல்லாகிவிட்டது. Gross Light ஆகிய சூரிய ஒளியானது சூரியனின் உணர்ச்சியேயாகும். Solar energy - என்பதும் அதே உணர்ச்சிதான். இந்த உணர்ச்சி நமது அக உணர்ச்சியைத் தூண்டி பொருள்களைப் பார்க்க வைக்கிறது. சூரியனுடைய ஒளியை நமது கண்களால் நேரடியாகப் பார்த்திட முடியாது. கண்கள் கூசும் என்போம். இதைவிட அக உணர்ச்சியாகிற அகவொளி வருணிக்க முடியாத பிரகாசம் உடையது என்றால் அவ்அகவொளி எத் தன்மையாயினதாகும்? எண்ணிப் பாருங்கள். அத்துணை அடர்த்தியும் வீரியமும் (power) அதற்கு இருப்பதால் இதயகுஹையாகிற இருட்டறையில் நிகழ்ந்திடும் அகக் காட்சியை நம்மால் பார்க்க முடிகிறது, அதாவது உணர முடிகிறது. இந்த உணர்வைத்தான் (inner vision) என்கிறோம். இந்த உணர்வின் துடிப்பு அதாவது சீலமிகு துடிப்பானது நடம் ஆகிறது. அதாவது ஒளி நடம் ஆகிறது. அந்த ஒளி நடமானது, வடிவம் பெற்ற நிலையில் ஒளி நடராஜன் என்பதாயிற்று. நடராஜனின் நடம் இருக்கிறதே அது கற்பனையான வடிவம் அல்ல என்றும், அஃது ஒளியின் ஆதித் தோற்றம் என்றும், அஃது இயற்கையானது, தன்னைச் சிற்றவை (microbode) க்குள்ளிருந்து விடுவித்துக் கொண்டு வெளிப்படும் போது நிகழ்ந்திடும் சிருஷ்டிச் செயலின் முதலாவதான (primary) விஞ்ஞானக் கோலம் என்றும் பண்டைச் சிற்பிகள் கூறுவர். இதன் பின்னரே ஒளி ஒலிகளின்

சுழல் நடனம் தொடருமாம். ஒளிக்கட்டி(ஒளி அணு) யாகிய சிற்றவை வெடித்து (Big Bang) அதனால் ஏற்படும் ஒளிச்சிதறல் அல்லது ஒளிக்கீற்றுகளின் சீரான ஓவியக் காட்சியே ஒளி நடனம் அல்லது ஒளி நடராஜனின் ஒளிக்கூத்து ஆகிறது. இஃதொரு மரபுச் சார்ந்த அணுவிஞ்ஞானம் அல்லது atomic theory or explosion of atom into material form. சிற்பக்கலைத் துறையில் இது போன்ற விஞ்ஞான நுட்பங்கள் கேட்பாரின்றி, கவனிப்பாரின்றி செத்துப் போயின, அவற்றைத்தான் நான் பேசிக் கொண்டிருக்கிறேன்; எழுதிக் கொண்டிருக்கிறேன்.

மூலத்தின் துடிக் கணக்குதான் (vibration) நடராசப் படிமத்தில் பதிய வைக்கப்பட்டிருக்கிறது என்றும் அக்கணக்கின் வடிவமாக (mathematical form or numerical measure expressed in physical terms) உருக் கொண்டிருக்கிறதாக முன்பொரு முறை சொன்னேன். இப்போது இக்கருத்து தொடர்பான வேறு சில செய்திகளையும் சேர்த்து மீண்டும் ஒருமுறை இந்த இடத்தில் பேசிட ஆசைப்படுகிறேன். நடராசனைக் கடவுள் என்று கொள்வோ மேயானால் கடவுளே கணக்குக்குள் கட்டுப்பட்டு விட்டார் அல்லது கணக்காகவே உள்ளார் (numerical existence) என்றும் சொல்லலாம்தானே? இக்கணக்கானது, பிரபஞ்ச சக்தி (spirit) தன்னைத்தானே புலப்படுத்திக் கொள்வதன் (manifestation or evolution of space into spatial form). கணக்கு என்றால், இக்கணக்கால் செய்திட்ட உருவங்கள் எல்லாம் அந்தப் பிரபஞ்ச சக்தியின் தர்க்க ரீதியான (logical or sequential from) வடிவங்கள் என்று சொல்லுவதுதானே அறிவுக்குப் பொருந்தும்? இங்ஙனம் இப்பிரபஞ்ச மூலமாகிய உள்ளுணர்வை அதன் துடிப்புக் கணக்கால் (inner vibration) உற்றறிந்து, அதன் நெறியைத் தேர்ந்து, கணக்காக்கி வாஸ்து மரபு வழி

யாக (through Vastu technology) அவ்வுணர்வுக்கு உருவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எத்துணை வழிகளாக இந்தக் கணக்கைக் கையாள்கிறோமோ அதனால் விளைந்திட்ட அத்துணை உருக்களும் அக்கணக்கின் உருக்கள் (எண்ணுரு) ஆகும் என்பது ஓர் அறிவு சார்ந்த விளக்கம் ஆகும். இப்படித்தான் வெற்றுக் கோடுகள் அர்த்தப் புஷ்டியான meaningful - சின்னங்கள் அல்லது அடையாளங்கள் ஆயின. இவற்றைப் படிமங்களின் கைகளிலே விளங்கிடும் பற்பல ஆயுதங்கள் மூலம் உணர்த்தப்படுவதாயின. இவை பல கோட்டுருக்களாகவும் (linear diagrams) மரபில் இருக்கின்றன. சொற்களுக்கு நிகர்த்த கோட்டுருக்கள் என்று இவற்றைச் சொல்லிடலாம். என்றாலும், அந்த மூலசக்தி அங்ஙனம் கணக்காகத் தன்னை மாற்றிக் கொள்ளும் போது அகத்துக்குள்ளே அக விண்ணிலே அச்சக்தி கொள்ளும் உருவின் திரிபுகளை (transformation and development in its material behaviour) உற்று நோக்கித் தேர்ந்து கண்டு கொண்ட நடராச வடிவத்தின் அமைதி (form) என்பதுதான் வாஸ்துக் கொள்கை ஆகும். இதனை வாஸ்து தர்மம், வாஸ்து மதம் என்றும் சொல்லுகிறோம். இதனை மயன் கண்டுபிடித்ததால், அவன் சிற்பியாகவும் இயல்பிலே இருந்து விட்டதால், மேற்சொன்ன அனுபவங்களுக்கு மேலே ஒரு படி சென்று ஒரு material form - மையும் இதற்குக் கொடுத்து, அதனைக் கண்முன்னே நிறுத்திக் காட்டி காணும் பொருளாகச் செய்துள்ளான் என்றால் பகுத்தறிவுக்குப் பொருந்து கிறதல்லவா? சொல்லுங்கள். எனவே இக்கருத்தின் அடிப்படையிலேதான் மயனால் உருப்பெற்ற இந்த விஞ்ஞானக் கொள்கையானது அவனது பெயரால் `மயமதம்` என்று சொல்லப்படுவதாயிற்று. மேலும் அவன் இயற்றிய அல்லது

அவன் பெயரால் வெளிவந்த நூலுக்கு `மயமதம்` என்ற பெயர் ஒன்றும் ஏற்படுவதாயிற்று. இக்கருத்திற்காக சிலப்பதிகார ஆசிரியர் `மயன் விதித்துக் கொடுத்த மரபின இவைதாம்` என்று சொன்னார். `விதித்துக் கொடுத்த` என்ற இளங்கோவின் பதப் பிரயோகம் சாதாரணமானதன்று. அஃதொரு order அல்லது நெறி என்ற பொருளுணர்த்தும் ஆழமான, அதிகாரம் நிறைந்த சொல். நான் இதுவரை சொல்லி வந்த செய்திகளைப் பின்னணியாக வைத்துப் பார்த்தால் அதனை Orderly behaviour of the divine energy என்று பொருள்பட இளங்கோவடிகள் சொல்லியிருக்கிறார் என்பது எல்லோருக்கும் புலப்படும் என்று நம்புகிறேன். இங்ஙனம் கண்டு சொன்னது அமானுஷ்யமான ஆற்றல் என்பதால் மயனை அறிமுகப்படுத்தும் போது மஹாதேஜஸ்வி (பேருணர்வு கொண்டவன்) என்றும் `மாயாவி` (மருள் கொளச் செய்பவன்) என்றும் வால்மீகி தனது காப்பியத்தில் எழுதி வைத்துள்ளார். சமஸ்கிருதத்தில் இராமாயணம் ஆதிகாவ்யம் என்று சொல்லப்படும். அது போலத் தமிழில் சிலப்பதிகாரமானது வரலாற்றுக் காப்பியம் என்று சொல்லப்படும். அவ்விருவரும் காவியத்தில் வரும் கற்பனைப் பாத்திரங்களாக மயனைக் கொள்ளவில்லை என்பதை காவிய ஆராய்ச்சியாளர்கள் ஏற்பர் என்று கருதுகிறேன். அவனுக்கே சொந்தமான வாஸ்து மரபில் அவன் எக்காலத்தும் கற்பனைப் பாத்திரமாகக் கொள்ளப்படவில்லை என்பதை இங்கே வலியுறுத்திச் சொல்லிட விரும்புகிறேன். வால்மீகியும் இளங்கோவடிகளும் சொல்வது போல அவன் தென்னாட்டில் பிறந்தவன்தான். ஆனால் தனது அரிய ஆராய்ச்சியைப் பாரத நாடு முழுவதும் கொண்டு சென்று பரப்பி தேசியக் கலைஞனாகத் திகழ்ந்தவன். இச்செய்தியை மகாபாரதத்தில் காணலாம். இவன் கடல் கடந்தும் சென்று

தனது கொள்கையை நிலைநாட்டினான் என்பதை மெக்ஸிகன் மாயன் கலாச்சாரத்தில் இன்று காண்கிறோம். மயன் கண்டு சொன்ன `விதித்துக் கொடுத்த` மரபிலே வழி வந்திட்ட இந்த நாட்டு சிற்பிகளாகிய நாங்கள் அவன் தந்த கணக்கைக் கொண்டே இன்று வரைக் கடவுள் வடிவங்களைச் செய்து வருகிறோம். இந்தக் கடவுள் வடிவங்களுக்கெல்லாம் மூலமான கடவுளின் வடிவம்தான் `நடராசனின் தாண்டவக் கோலம்`. இந்தக் கோலந்தான் இக்கால விஞ்ஞானியர் அனைவரையும் வசீகரித்திட்டக் கோலமாகும். இதனைச் சிற்பிகளாகிய நாங்கள் மூலச் சிற்பம், முதற்சிற்பம் என்று சொல்லுவோம். இதையொற்றிச் செய்திட்ட பிற வடிவங்கள் எல்லாம் படிமங்கள் என்றும் பிம்பங்கள் என்றும் பிரதிமைகள் என்றும் பேரங்கள் என்றும் சொல்லப்படுவதாயின. அதாவது replica of the original form என்றாயின. வாஸ்து சூத்ரோபனிஷத் என்ற அதர்வண வேதத் தொடர்புடைய ஓர் உபநிஷத்தில் இக் கருத்தொற்றிய ஆழ்ந்த வாக்கியம் ஒன்று காணப்படுகிறது. 'சில்பாத் பிரதிமா: ஜாயந்தே' शिल्पात् प्रतिमाः जायन्ते என்பது அஃதாகும். சிற்பத்திலிருந்து பிரதிமைகள் பிறக்கின்றன என்பது அதன் பொருள். எவ்வளவு நுட்பம் இந்தச் சின்ன வாக்கியத்தில் உளது பார்த்தீர்களா? நான் இதுவரை பக்கம் பக்கமாகச் சொல்லி வந்ததை இரத்தினச் சுருக்கமாகச் சொல்லி விட்டது இந்த உபநிஷத வாக்யம். எனவே `சில்பம்` என்றால் ஒளி வழிப் பிறந்த இந்த நடராசனின் அதி நுட்ப வடிவமேயாகும். ஆதி வடிவமும் இஃதே ஆகுமென்பது கருத்து. இதனை மீண்டும் வேறொரு சந்தர்ப்பத்தில் தொடர்வேன். விளக்குவேன்.

இப்போது மீண்டும் கட்டுரைத் தலைப்புக் கொத்த விஞ்ஞான விளக்கத்தை எடுத்துக் கொள்வோம். முன்பு

குறிப்பிட்டுப் பேசிக் கொண்டிருந்த கனசதுரப் பெட்டகம் (சிற்றவை) (cubical prism) தான் ஒரு சீர்த்தியால் (order) - சீரான இயக்கத்தால், நீண்ட கனசதுரமாகவும் இயல்பில் மாறிவிடுகிறது என்றேன். இறுதியில் அந்தச் சிற்றவை தன்னை இரட்டிப்பாக்கிக் கொள்கிறது. ஸ்திரமாக எப்போதும் நிலைத்து நிற்பதற்கு இது காரணமாகிறது. இதற்கோர் உதாரணம் சொல்லுகிறேன். ஒலியின் திரிபை எடுத்துக் கொள்வோம்.

ச, ரி, க (ம) ப, த, நி என்ற சரளி வரிசையில் மத்யமம் என்பது ஒலிக் கோட்டின் நடுப்பகுதியாகும். மத்தியமத்துக்கு முன்னால் 3 ஸ்வரங்களும், அதற்குப் பின்னால் 3 ஸ்வரங்களும் இருக்கின்றன. மத்யமத்துக்கு முன் புறமுள்ளதைப் போல பின்புறமும் உளது. மூன்று ஸ்வரங்கள் ஆறு ஸ்வரங்களாக மாற்றம் கொள்வது மூன்றின் இரட்டிப்பு இல்லையா? மேலும் ஸ்வரத்தை மேலே ஏற்றினால் எங்கே வந்து சேருவோம்? மீண்டும் `ச` வுக்கு அதாவது மேல் சட்ஜமத்துக்கே வந்து சேருவோம். இந்த மேல்சட்ஜமத்தின் நாதம் கீழ் சட்ஜமத்தின் இரட்டிப்பு இல்லையா? அளவு மூலம் (numerical measure) நிரூபிக்க வேண்டுமானால் கீழ் சட்ஜமத்தின் அதிர்வு vibration- ஐப் போல இரட்டிப்பு அதிர்வு மேல் சட்ஜமத்திற்கு உண்டா இல்லையா? எண்ணிப் பாருங்கள். மேலும் மேலும் உயர்ந்து போனால் அதிர்வுகள் எத்தன்மையினவாகின்றன? கீழ் சட்ஜமம் மேல் சட்ஜமமானது போல கீழ் `ரி` மேல் `ரி` ஆகவும் கீழ் `க` மேல் `க` ஆகவும் இப்படியே ஒவ்வொன்றும் இரட்டிப்பாகிறது. இஃது ஒலியின் இயல்பு. இதனை நம்மால் மாற்றியமைக்க முடியாது. இந்த இரட்டிப்பைத்தான் resonance என்கிறோம். Resonance என்பதற்கு மறுபெயர் Repetition. இந்த repetition - க்குத்தான் rhythm என்று ஒரு கலைப் பெயரைச் சூட்டியிருக்கிறோம்

இதே இயல்பில் உள்ளதுதான் Vibration of light. ஒளியின் அதிர்வும், ஒலியின் அதிர்வும் இயல்பில் இப்படித்தான் இருக்கின்றன. ஒளி தோன்றியபின் ஒலி தோன்றுவதால் உணர்வு நிலைக்குப் பிறகே பேச்சுத் தோன்றுவதாயிற்று. இந்த ஒலியானது ஆகாஸத்தில் வளைவுற்று நடுக்கத்துடன் வெளிப்படுகிறது. முதல் தோன்றிய ஒளியோ நேர்க் கோட்டில் பாய்கிறது.

இந்த ஒளி ஒலிகளின் இரட்டிப்புக் கணக்கை வைத்துத்தான் கட்டடத்தின் உயரக் கணக்குகள் வாஸ்து மரபில் தோன்றின. உதாரணமாக ஒரு கட்டடத்தின் அகலத்தைப் போல அதன் உயரம் இரட்டிப்பாகவே இருக்க வேண்டுமென்பது ஒரு பொது விதி. ஒரு கட்டடத்தின் அடி அகலம் 10 அடி என்றால் அதன் மொத்த உயரம் 20 அடி இருக்கலாம் என்பது பொருள். இஃது இயற்கைக்கு ஒத்துப் போகும் உயரமாகும். உயரம் அதிகமாக இருக்க வேண்டுமானால் அகலத்தை அதிகரிக்க வேண்டும் அல்லது செயற்கையாக வேறு உபாயத்தை மேற்கொள்ள வேண்டும். இசைஞர்கள் மேல் சட்ஜமத்திற்குச் சென்றிடச் சிரமப்படுவதையும், அப்படியே முயன்று சென்று விட்டால் இரசிகர்கள் கைதட்டி மகிழச்சி கொள்வதையும் நினைவுப் படுத்திப் பாருங்கள். இயற்கையை மீறி நடக்கும் செயல் அல்லவா அஃது? கோபுரம், விமானம் கட்டும் சிற்பிகளும் இப்படிச் சிரமப்படுவதுண்டு. சாஸ்திரமும் சிரமப்பட்டு விதிவிலக்கென்று கூறி (Poetic licence) இரண்டுக்கு மேல் 1/8 பங்கு கூட்டலாம் என்று விதித்துளது. இதற்கு மேல் கூடினால் என்ன ஆகும் தெரியுமா? கட்டிடம் சாய்ந்து விடும் அல்லது அதோடு கட்டிடத்தின் எழிலார்ந்த உருவமும் பாதிக்கப்படும். இதனை இசையொட்டிச் செய்யப்படும் சிற்பக் கட்டடங்களில்

வெகுவாகக் காணலாம். ஏன் மனித வடிவத்துக்குக் கூட இந்த விதி பொருந்தும்தானே! `Abnormal height' என்று கூறுவதின் கருத்து என்ன? கண்களுக்கு குளிர்ச்சியாக - மனதுக்கு இன்பம் தருவதாக - இல்லை என்பதுதானே பொருள். இயற்கையை ஒத்துச் செய்வதும், வாழ்வதும், இயற்கையையே அனுபவிப்பதும் தானே வாஸ்து தர்மத்தின் அடிப்படைக் கொள்கை? இந்த இயற்கையின் இலக்கணம் கொண்ட நமது ஆடல், பாடல், கவிதை, கட்டடம், சிற்பம் எல்லாம் இயற்கையின் மறுபதிப்புகள் என்றால் மிகையுமில்லை, எவரும் மறுப்பதற்குமில்லை.

நடராசனை நிரம்பப் புகழ்ந்து பேசி விட்டோமல்லவா? புகழ்ச்சிக்கு உரியவன்தானே! மிகையில்லை அல்லவா? இறுதியாகச் சொல்லுகிறேன், ஒளியின் நடம் வஸ்துவின் நடம். வஸ்து விஞ்ஞானத்தின் நடம். இந்த உண்மையை மறைத்து விடாதீர்கள, மறந்தும் விடாதீர்கள். இன்னொரு நுட்பத்தையும் இங்கே பதிய வைத்திட விரும்புகிறேன். ஆடற்கலையின் ஆணிவேரே இந்த ஆடவல்லான் வடிவ அளவியலிலும் (measure) வடிவ அமைதியிலும் (form) மறைந்து கிடக்கிறது.

மனிதர்களாகிய நாமும் சூக்ஷ்மத்திலே நடராஜனுடைய அளவிலேயும் அமைதியிலேயும் தான் வடிவம் கொண்டு பிறந்திருக்கிறோம். இந்த அளவிலே ஏற்பட்ட பேதங்களினாற்றான் மனித வடிவ அமைதியில் பேதங்கள் தோன்றுவதாயின. புற உருவத் தோற்றத்திற்றான் பேதங்களெல்லாம். ஆனால் உள்ளுறையும் ஆற்றல் சக்தி அதாவது ஆன்ம சக்தி ஒன்றேயாகும். இந்த superficial differences in physical form ஐ நாம் மாற்றிக் கொள்ள முடியாது. இந்த மேனி அழகிற்கு நல்ல துடிப்பளவுகள்தான் அடிப்படைக் காரணம். இந்தத் துடிப்பளவுகள் ஒரு `யாப்புக்குள்` அடங்கி

வெளிப்படுமானால், வெளிப்பட்ட material form கண்களுக்கு இனிமையான காட்சியாக அமையும். இந்தத் துடிப்பைச் (vibration of the inner spirit) சீலப்படுத்திக் கொள்ள வேண்டும், அதாவது பயன்படுத்திட வேண்டும். இதனை culturing of the spirit என்று சொல்லிப் புரிய வைப்பார்கள்.

அகத் துடிப்பை அளவுகளாகக் (vibrational measures) கொண்டே உயிரினங்கள் அனைத்தும் கரு நிலையிலிருந்து உரு நிலைக்கு (from seed to form) வளருகின்றன. உருவாக மாறிய நிலையிலிருந்து மேலும் அவற்றுக்குள்ளிருந்து துடிப்புறும் சக்தியால் மேல்வளர்ச்சி பெறுகின்றன. மேலும், மேலும் துடித்து இறுதியில் இவ்வலைகள் ஓய்வு கொள்ளுகின்றன. இந்த நிகழ்ச்சிகளை உற்று நோக்கினால் துடிப்பலைகளே அல்லது துடிப்பே ஆக்கல், காத்தல், மறைத்தல் ஆகிய முத்தொழிலுக்கும் காரணகாரியமாய் இருத்தல் புலனாகும். இந்த அகத் துடிப்பிருக்கிறதே இதனை biological rhythm என்று இக்காலத்து விஞ்ஞானம் பேசிடும். இஃது அனைத்து உயிரினங்களின் உள்ளே நிகழும் ஒருவித கணக்கே ஆகும். இப்படித்தான் வீட்டுக்குள்ளே அடைபட்ட energetic space துடிக்கிறது. கணக்கு கொண்டு இத் துடிப்பளவுகளை மாற்றியும் ஏற்றியும் அமைத்திடலாம் என்பது மரபு விஞ்ஞானக் கண்டு பிடிப்பு! இதனை பிறகு பார்ப்போம். வாஸ்து விஞ்ஞான மானது இதனை ஆன்மத் துடிப்பு spiritual rhythm என்று சொல்லுகிறது. இத்தகைய துடிப்பின் அளவை திருத்தியமைத்து அக அழகைச் செப்பனிடலாம், திருத்தியமைத்து அக அழகைச் செப்பனிடலாம், செம்மையாக்கலாம் என்பது வாஸ்து விஞ்ஞானம் கொண்ட கொள்கையாகும். ஆனால் பிறந்த பிறகு புற அழகை மாற்றிடல் கடினம். பிறக்கு முன் சீர் செய்து கொள்ளலாம்.

அகத் துடிப்பை, அதன் இனிமையை ஓர் உதாரணத்தினால் விளக்குவோம்.

இரண்டு வீணைகள் அருகருகே இருக்கின்றன. ஒன்றை சட்ஜமத்திலும் மற்றொன்றைப் பஞ்சமத்திலும் மீட்டி வைப்போம். இவ்விரண்டிலும் ஒலி எழுப்பினால் எப்படி இருக்கும்? வெவ்வேறான ஒலிகள் தோன்றும் இரண்டும் ஒத்தொலிப்பதில்லை. முரண்பட்ட ஒலிகளாக (disharmony) ஆக இருக்கும். காதுக்கு இனிமை தராது. இஃதொரு விஞ்ஞான நிகழ்ச்சி, விஞ்ஞான அனுபவம் என்றும் சொல்லலாம்.

சட்ஜமத்திலிருக்கும் வீணையை மட்டும் மேல் நோக்கி முடுக்கினால் ரிஷபம், காந்தாரம், மத்யமம் என்ற ஒலி நிலைகளுக்கு (ஸ்தானங்களுக்கு) நாதம் மேலே படிப்படியாக ஏறிடும். மேலும் முடுக்கி பஞ்சமத்துக்குக் கொண்டு போய் நிறுத்தி விட்டு அல்லது அந்த நிலையை அது தானாகவே அடைந்திட்ட போது, அந்த வீணையை ஒலித்திட்டால், என்ன நிகழும் தெரியுமா? இப்போது ஒலித்த வீணையானது, அருகிலே பேசாமற் கிடந்த வீணையைத் தீண்டி, தட்டி எழுப்பி, அதனையும் ஒலிக்கச் செய்து விடும்; தன்னையொத்து ஒலிக்கச் செய்து விடும். இதனை யார் செய்தது? நீங்களா செய்தீர்கள்? நீங்களா ஒலித்தீர்கள்? இதற்கு உடனடி விடை ஆம்/இல்லை என்பதுதான். இந்த நிகழ்ச்சியை உற்று நோக்கி அலசிப் பார்த்தால் பிரபஞ்ச சிருஷ்டி ரகசியங்கள் துலக்கம் பெற்று நிற்கும் என்று சொல்லுவேன். உங்கள் வினாக் களுக்கும் சரியான விடை கிடைத்திடும் என்பேன். மேலும் பார்ப்போம்.

சட்ஜம வீணையில் ஒலியாகிய உயிர்ப்பு இருந்தது உண்மையல்லவா? இதனை முடுக்கி விடுவதால் இந்த

விணையின் விசையில் என்ன மாறுதல் ஏற்பட்டது? தெரியுமா? முதல் விணையிலிருந்து கிளம்பிய ஒலி அலைகள் ஒரு நிலையிலிருந்து அல்லது ஓர் அளவிலிருந்து (quantum) பிரிதொரு அளவுக்கு உயர்ந்தன எனலாம். அங்ஙனம் படிப்படியாக உயர்ந்து சென்ற அந்த அலைகள் பஞ்சமஸ்தாயிக்கு எட்டியவுடன் இரண்டாவது விணையைத் தூண்டி விட்டு அதனை ஒலிக்கச் செய்து இரண்டும் ஒத்தொலிப்பதாயின. இதனை resonance / response/ sympathetic vibration என்று சொல்லுகிறோம். ஆகவே விணையின் ஒலிப்புக்குக் காரணம் தந்திகளின் அதிர்வும் அவ்வதிர்வின் அளவுகளும் ஆகின்றன. (quantum and frequency of vibration) இந்த ஒத்தொலிப்புக்குக் காரணம் அதிர்வுகளின் ஒத்த எண்ணிக்கைகளே (numerical measure) என்பதும் புரிகிறதல்லவா? உருத்தெரியா உணர்ச்சியை இப்போது கணக்காக்கி விட்டோமல்லவா? இந்த நிலையில் அருவப் பொருளாகிய `ஆன்மா` அல்லது `கடவுள்` என்ற பொருளுக்கு உடலும் உயிரும் கொடுக்கப் படுகிறது. குணங்கள் வடிவம் கொள்ளும் என்பது வாஸ்து விஞ்ஞானத் தேற்றம்; அவை குண வடிவம் எனப்படும். அப்படியானால் இறைப்பொருளின் குணங்களை உற்றறிந்து வடிவம் கொடுத்திட முடியுமல்லவா? எனவே, இயற்கையின் குணங்களின் பிரதிபலிப்பாக பல்வேறு உருவங்கள் ஏற்படுவதாயின. இதனை உணர்வு கொண்டு நாம் உறுதி செய்கிறோம். நம் உணர்வும், விணைகளின் உணர்வும் ஒத்துப் போய்விட்டன என்பதுதானே மேற்காட்டிய நிகழ்ச்சி? (இப்படித்தான் கடவுள் வடிவத்தோடு ஒத்தொலிக்கிறோம்)

எனவே அதிர்வினால் ஏற்பட்ட அலைகளும், அலைகளின் அளவுகளும் நான் சொல்லும் சிருஷ்டிக் கிரியைக்கு (creativity) அடிப்படைக் காரணம் என்பது இந்த நிலையிலேயே உங்களுக்குத் தெளிவாகிட வேண்டும்.

இன்னொன்று தெரியுமா? நமது சரீரமும் ஒரு வீணையே. சரீர வீணை என்றே அதற்கொரு பெயரும் உண்டு. இந்தச் சரீரத்துக்குள்ளே இதயகுஹையிலிருக்கும் ஆகாஸ அணுவுக்குள்ளேதான் `ஒளிநூல்` (thread of consciousness) என்ற ஒன்று நின்று ஆடுவதாகச் சொன்னேன். அது நினைவிருக்கிறதா? அந்த நூல்தான் சரீர வீணைக்குத் தந்தி ஆகிறது. (wire / string) அது கொள்ளும் அதிர்வுதான் அதன் உணர்வுக்கொத்த வடிவமாகிறது. இதையொற்றிப் பிறகு உணர்வே நாத வடிவம் கொள்வதுமாகும். ஒலி துடித்து நாத வடிவம் கொள்வது போல, ஒளியானது துடித்து, ஒளிர்ந்து ஒளி வடிவம் (உருவம்) கொள்கிறது. உண்மையில் ஒளிதுடித்து ஒளிவடிவம் தோன்றிய பின்னரேதான் ஒலி தோன்றி ஒலி துடித்து ஒலிவடிவம் கொள்கிறது. ஒளிவடிவம் தோன்றியபின் அதனைச் சொல்லிக் காட்டிட முயலும் போது ஒலியானது துடித்து ஒலிவடிவமாக மாற்றம் கொள்கிறது என்பது பொருளாகிறது அல்லவா? வாய் இதற்குக் கருவியாக இயங்குகிறது. ஒளி வடிவமானது கை வழியே உருக் கொள்கிறது. இந்நிகழ்ச்சிகள் அகத்திலேயும் நடக்கின்றன. புறத்திலேயும் நடக்கின்றன. அகத்தில் நடப்பதெல்லாம் உணர்வினாலேயே நடக்கின்றன. தோன்றுவதெல்லாம் உணர்வுமயக் காட்சிகள், ஒளிக் காட்சிகள். புறத்திலேதான் கருவிகள் தேவைப்படுகின்றன. அகத்திலே ஒளியும் புறத்திலே உளியும் தேவைப்படுகின்றன. புறத்தே தோன்றுவதெல்லாம் உறுதி பெற்ற (tangible) வடிவங்கள் (material forms). உணர்வு, அதிர்வு, அலை, அளவு ஆகியவற்றை வைத்து முதன் முதலிற் தோற்றுவித்த வடிவம்தான் நடராஜனின் வடிவம். ஆகாஸத்தின் துடிப்பலைகளால் விளைந்திட்ட வடிவம்தான் நடராஜனின் வடிவம். இதற்கு மேலும் பல நுட்பங்கள் இருக்கின்றன. இங்கே இப்போது அவை தேவையில்லை.

இந்த சிருஷ்டி நுட்பத்தைக் கண்டு தேர்ந்திட சோதனைக்கு எடுத்துக் கொண்ட பொருளே மனித வடிவம் தான். எனவே நடராச வடிவத்திலே நாமும், நம் வடிவத்திலே நடராசனும் இருந்து ஒத்தொலிக்கின்றோம் ஒத்தொளிர் கின்றோம் என்று சொல்வதில் ஏதேனும் குறையுண்டோ? பிழையுண்டோ? எண்ணிப் பாருங்கள்.

இப்போது சொல்லுங்கள். கடவுள் வடிவங்கள் இந்தத் துடிப்புக் கணக்குக்கு ஏற்ப அமையுமானால், அவை இசை வடிவம் போல உருவ அமைதியும் இனிமையும் உயிர்ப்பும் ஈர்ப்பும் கொண்டதாக விளங்கிடல் இயல்புதானே? கடவுள் வடிவத்திலிருந்து வெளிப்படும் அதிர்வு அலைகள் அடிப்படையானவை. நம் அகத்திலிருந்து வெளிப்படும் அலைகள் இதற்கு ஒத்தும் இருக்கலாம், வேறுபட்டும் இருக்கலாம். குறைபாடுடைய அதிர்வுகளை அடிப்படை அதிர்வுகளுக்கு ஏற்றி அமைத்திட்டால் இரண்டும் ஒத்து நின்று இன்பம் துய்க்க ஏதுவாகும். இதனை அனுபவிக்கும் இடம் தான் கோயில். இதனை வீட்டிலும் அனுபவித்திடலாம் என்பதுதான் சிதம்பரத் தத்துவம். நடராசன் இப்படியே ஆடிக் கொண்டிருக்கட்டும். அவரது ஆட்டம் இப்போது நிற்பதிற்கில்லை. அஃது ஊழிக்கூத்து; நீண்ட நெடிய கூத்து.

ஸ்ரீ ரெங்கநாதனை சற்று உற்று நோக்குவோம். அவரைத் துயில் எழுப்புவோம். ஆகாஸமானது ஆற்றலே மயமானது என்றும், உணர்ச்சியே மயமானது என்றும் பார்த்தோம். பஞ்ச பூதங்களில் மூலமான - முதலாவதான - பூதம் `ஆகாஸம்` என்றும் பேசினோம். பஞ்ச பூதங்களில் இறுதிப் பொருளாக - உறுதிப் பொருளாக (solidified material form) - விளங்குவது பூமியாகிய மண்பொருள் அல்லவா? மரபு விண்-ஞானம் (space science) ஆனது விண்ணில் தொடங்கி மண்ணில் முடிகிறது.

விண்ணே மண்ணாக உருமாற்றம் கொண்டு விடுகிறது! மிகையில்லை அல்லவா? விண்ணிலும் தங்கியிருப்பது ஆற்றல், மண்ணிலும் தங்கியிருப்பது ஆற்றல். இரண்டும் ஒரே ஆற்றல் தான்; ஒரே உணர்ச்சி தான். இந்த ஆற்றலை `நுண்பொருள்` என்றும் சொன்னோம். எனவே நிலமானது வாஸ்து எனப்பட்டு அதில் தங்கிய சக்தியை `புருஷன்` என்று சொல்லி பூமி சக்தியை வாஸ்து புருஷன் என்று மரபில் கொண்டுள்ளோம். இந்த வாஸ்து புருஷனும் தன்னுடைய உணர்ச்சியினால் துடிப்புறும் இயல்பினன். தன்னோடு ஐக்கியமாகிவிடும் பொருளில் ஊடுறுவி அதனைத் துடிப்புறச் செய்பவன் அதோடு ஒத்தொலிப்பவன் என்பது ஒரு விஞ்ஞானத் தேற்றம். இந்தத் துடிப்போடும் (pulsation) மனிதன் ஒன்றித்து வாழ வேண்டும். (man is to live in harmony with the vibration of earthly energy) விண்ணின் தன்மையொத்தது மண்ணும் என்பது கொள்கை. விண்ணையும் மண்ணையும் கூட்டி வைக்க வேண்டும். இதற்கு வகை செய்வது மரபு சார் கணித நுட்பமாகும். `பூமி` என்ற ஒன்று இல்லையானால் நாமும் உயிரினங்களும் எங்கே வாழ முடியும்? எனவே பூமியை பிரதான வஸ்து என்று வஸ்து விஞ்ஞானி மயன் மீண்டும் ஒரு கருத்தைச் சொன்னான். भूमिः प्रधान वस्तु स्यात् என்பதே அவனுடைய விஞ்ஞான வாக்கு.

அமைதியுற்றுக் கிடப்பவனாய் நான் காட்டும் பூமி புருஷன் புறத்தே அங்ஙனம் காணப் படினும், அவன் உயிர்ப்புள்ள பரமபுருஷன் ஆவன். துடிப்புறும் இந்தப் பூமி புருஷனைத்தான் - மண் பொருளைத்தான் - விஷ்ணு என்று நமது சமய மரபில் சொல்லி வருகிறோம். இக்கருத்திற்கேற்ப ஸ்ரீரெங்கநாதனின் இதய கமலத்திலே அன்றாடம் காலையில் வாஸ்து புருஷனை ஆவாஹனம் செய்திடும் மரபு அங்கே இன்றும் உளது. இதனை

வழுவாமல் உணர்ந்து செய்திடும் அந்த அர்ச்சகப் பெருமக்களுக்கு நமது வணக்கம் உரித்தாகுக

மண்பொருள் என்ற கருத்தைக் காத்திடவே - உணர்த்தவே - அனுபவிக்கவே விஷ்ணு பிம்பங்களை (பக்குவப்படுத்தப் பட்ட) மண்ணால்செய்திடும் மரபானது பல நூறு ஆண்டுகளைக் கடந்து வந்து இன்றளவும் நடை முறையில் உளது எனலாம். மண் பருப்பொருளாதலால் - கருப்பொருளாதலால் (gross energy) மண்ணால் உருக்கொண்ட விஷ்ணுவைக் கண்கண்ட தெய்வம் (manifest energy) என்று சொல்வது எத்துணை பொருத்தம்! மண்ணால் செய்வதால் வர்ணலேபனம் (painting) செய்யும் மரபும் நிலைத்து விட்டது. அசையாப் பொருளாதலால் பார்த்தறியும் ஸ்திரப் பொருளாக ஆக்கப்படுவதால் `துருவ பேரம்` `அசையாப் படிமம்` அசலம் என்ற சிறப்புப் பெயர்களைப் பெறுவதாயிற்று. இதற்கொப்ப நிலத்தில் படுத்த வண்ணம் `ஜல` சயனப் பெருமாளாக (இதுவும் உண்மையில் தலசயனம் தான்) மாமல்லபுரக் கடற்கரைக் கோயிலிலும், ஸ்தலசயனப் பெருமாளாக நகரத்துக்குள் கட்டடப்பட்ட நிலமங்கைத் தாயார் கோயிலிலும் காணலாம். இவையிரண்டும் தொல்பழம் மரபைச் சார்ந்த கோயில்கள், படிமங்கள்.

இவையெல்லாம் ஒரு சிலர் நினைப்பது போல வெறும் சின்னங்கள் (symbols) அல்ல. துடிப்புறும் உயிர்ப் பொருள் களாக வாஸ்துத் தொழில் நுட்பம் Vāstu Technology ஆக்கியுள்ளது என்பதை வலியுறுத்திச் சொல்லிட விரும்பு கிறேன். பிரபஞ்ச சிருஷ்டி சார்ந்த கணக்கொன்றால் இப்படிமங்கள் செய்யப்படுவதால் இந்த உயிர்ப்பு நிலையும், உயர் நிலையும் இப்படிமங்களை வந்தடைவதாயின. சின்னங்கள்தான் என்று சொல்வோமேயானால் அவற்றுக்குச் செய்திடும் பூசைகள் அர்த்தமற்றதாகி விடும்.

இவர் நிலத்தில் தங்கியிருக்கும் ஆற்றல் மட்டுமல்லாமல், அனைத்து ஞாலப் பொருள்களிலும் நம்முள்ளும் தங்கிடும் வஸ்துவாக இருப்பதால் `அந்தர்யாமி` என்ற சிறப்பும் பெறுகிறார். சுருக்கமாகச் சொன்னால் சிவனின் ஆகாஸ தத்துவம் விஷ்ணுவின் பிருத்வீ தத்துவம் ஆகிய ஒவ்வொன்றின் சாரமாகத் தொல் பழங்காலத்தில் வடித்துக் கொடுக்கப்பட்ட விஞ்ஞானப் படிமங்கள்தான் ஆடலன் மற்றும் அரங்கன் படிமங்கள். அங்ஙனமே நிர்மாணிக்கப்பட்ட கோயில்கள்தான் அம்பலமும் அரங்கமும் ஆகும்.

வாஸ்து விஞ்ஞானமானது தான் படைத்த பொருள்களை வெற்றுச் சின்னங்களாகக் (symbols) கொள்வதில்லை என்று முன்பு சொன்னேன். மாற்றாக அவற்றை உயிர்ப்புள்ள பொருள்களாகவே படைத்துத் தருகின்றது. வாஸ்து மரபானது விட்டை மட்டும் உயிர்ப்பொருளாக தோற்றுவித்து விட்டு நிறுத்திக் கொள்ளாமல் அதன் ஆளுகைக்கு உட்பட்ட அனைத்துப் பொருள்களையும் உயிர்ப் பொருள்களாகவே படைத்துத் தருகின்றது என்பதுதான் மாபெரும் விந்தையாகும்; நுட்பமாகும். இதனை உடனடியாக பெரும்பாலோர் ஏற்பது கடினம் என்றாலும் இஃதே உண்மை. இதற்கொரு கணிதம் இருப்பதாக இடையிடையே சொல்லி வந்தேனல்லவா? அந்த ஒரே கணிதத்தைக் கொண்டுதான் எண்ணற்ற உயிர்ப்புள்ள படைப்புகளை - உயிர்ப் பொருள்களை - இந்த வாஸ்து விஞ்ஞானம் நமக்குத் தந்தது, மேலும் தரவல்லதாக இருக்கிறது.

கண்களுக்குத் தெரியாமல் சஞ்சரிக்கும் மூலப் பொருளை உணர்வால் அனுபவித்து, அந்த உணர்வின் துடிப்புக் கணக்கால் (vibrations) அளவிட்டு, உணர்வு கொண்டே செய்யப்படுவதால் உணர்வின் பிரதிபிம்பங்களாயின. இந்த

உணர்வை, பார்ப்போர் உள்ளத்திலும் முகிழச் செய்வது இந்தக் கணக்கு முறையிற்றான். இசையுணர்வுகளும் இசை வடிவங்களும் எப்படி உணர்ச்சி மயமான வடிவங்களோ, எப்படி ஓர் அளவு முறை சார்ந்த வடிவங்களோ அத்தகைய இசை வடிவங்கள் எத்தகைய உணர்வை கேட்போர் உள்ளத்தில் ஏற்படுத்துகின்றனவோ அத்தகைய உணர்ச்சியுள்ள, உயிர்ப்புள்ள வடிவங்கள்தான் அம்பலமும் அம்பலக் கூத்தனின் வடிவமும், அரங்கமும் அரங்கநாதனின் படிமமும் ஆகும் என்பது கருத்தாகும். காதால் கேட்பதையே கண்ணால் பார்க்கிறோம். இன்னும் சுருக்கிச் சொன்னால் நமக்கு அப்பால் உள்ள ஒரு நுண்பொருளை நமக்கு அருகே நம் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்திக் காட்டுவது வாஸ்து மரபின் நோக்கம் ஆகும். எனவே `அதுவே` `இது` வாகிறது என்பது வாஸ்து விஞ்ஞானத் தேற்றம். இது தான் இந்தியச் சிற்பக்கலை மற்றும் கட்டடக் கலையின், நீண்ட நாள் புதிராகக் கிடந்திட்ட நுட்பமாகும். இதனால்தான் இந்தியச் சிற்பங்களும், கட்டட அமைதிகளும் உலகக்கலை மரபு வடிவங்களுக்கு முற்றிலும் வேறுபட்டுக் காணப்படுவதாயின. இது தெரியாமல் இந்தியச் சிற்ப வடிவங்களை barbarous sculptures என்று கூட ஏசினார்கள். விளையாட்டுப் பொருளாகப் பாவித்தவர்களும் உண்டு. இந்த வாஸ்து வடிவங்களில் பொதிந்துள்ள நுட்பத்தைப் புரிந்து கொண்ட வைணவ மரபானது சிற்பியினால் ஆக்கப்படும் படிமங்களை அர்ச்சாவதாரம் என்று உயர்த்திப் போற்றுகிறது; அர்ச்சிக்கிறது. இந்தப் பிம்பங்களைப் பார்த்து இதன் மூலம் கண்களுக்குப் புலப்படாமல் நமக்கு அப்பால் இருக்கும் நுண்பொருளின் மீது வைப்பதை பக்தி என்பதை ஏற்றுக் கொள்வதிற்றான் முரண்பாடு உளது. உருவ வழிபாடு இந்த முரணைத் தகர்த்து,

அப்பாற்பட்ட பொருளை நேருக்கு நேரே காணவைத்து பக்தியுணர்வைத் தூண்டி, அதனை இங்கேயே உணரவைத்து நிலைக்கச் செய்து விட்டது என்றும், இச்செயலானது பிரதிமா விஞ்ஞானத்தின் மாபெரும் வெற்றி என்றும் உருவத்தை ஆக்குவோனின் செயல் நெறி உணர்வோடு இங்கே உறுதிபடக் கூற விரும்புகிறேன். இதனை ஆதாரத்துடன் சொல்ல வேண்டுமானால் இப்படிச் சொல்லலாம். இந்த ஞாலத்தில் தோன்றியுள்ள பொருள்கள் அனைத்தும் ஒருவகையான கணக்கின் அடியாகத் தோன்றியுள்ளன. இயற்கையின் ஒரு கூறாகிய நாமும் அதே கணக்கின் அடியாக உருப் பெற்றவர்கள்தான். இந்தக் கணக்கை வைத்தே இசை வடிவங்களும் தோற்றுவிக்கப் படுகின்றன; அங்ஙனமே சிற்பங்களும் கட்டடங்களும் இசை வடிவங்களாகத் தோற்றுவிக்கப்படுகின்றன.

இதுவரை வாஸ்து விஞ்ஞானத்தின் நுட்பங்களை எளிதிற் புரிந்து கொள்வதற்காக மேலெழுந்த வாரியாக ஒருசில செய்திகளைச் சொல்லி வந்தேன். இந்த இடத்தில் கொஞ்சம் ஆழமாக ஒருசில நுட்பங்களைச் சொல்லிச் சிற்பங்களும் கோவில் கட்டடங்களும் வெற்றுச் சின்னங்களோ, எழிலார்ந்த வெறும் கலை வடிவங்களோ மூளைக்கு விருந்தாகும் பொருள்களோ (intellectual creations) அல்ல என்பதைப் பிரிதொரு கோணத்திலிருந்து சொல்லிட விரும்புகிறேன். `கலைமகளுக்கு` எழுதிய கட்டுரையில் இதனைச் சொல்லிட இடமில்லை என்பதால் விட்டு விட்டேன். இப்போது இங்கே சேர்த்து எழுதி வைக்கிறேன். உங்களுக்கு மரபு பற்றி நிரம்பச் சொல்லி வைக்க வேண்டும் என்ற ஆசையினால் சேர்க்கிறேன்.

இந்தியக் கலை மரபில் இயல், இசை, நட வடிவங்க ளெல்லாம் இறைவடிவங்கள் என்று ஏற்றுக் கொள்ளப்

பட்டிருக்கின்றன. அம்மூன்றில் இயலும் இசையும் உயிர்ப்புள்ள ஒலி வடிவங்கள். நடம் என்பது ஒலியும் ஒளியும் சேர்ந்த காட்சி எனலாம். இந்த நிலையில் சிற்ப வடிவங்களும், கட்டட வடிவங்களும் கண்ணால் பார்த்திடும் இசை வடிவங்கள் என்பது மரபுக் கருத்து. இது பற்றியே architecture is frozen music என்ற சிறப்புப் பெயர் நமது கட்டடக் கலைக்கு ஏற்படுவதாயிற்று. `கவிஞன் பாட்டைக் கட்டுகிறான்; கலைஞன் வீட்டைக் கட்டுகிறான்` என்ற சொற்றொடரும் தமிழ்க்கலை மரபில் சொல்லப் படுவதாயிற்று. பாட்டைக் கட்டுவதற்கும் வீட்டைக் கட்டுவதற்கும் ஏற்பட்ட கணக்கு இருக்கிறதே அஃது ஒன்றுதான் என்பது இதன் பொருள். கல்லை வைத்துக் கட்டடம் கட்டுவது போல சொல்லை வைத்துச் சொற் கட்டடமாக பாடலை இயற்றுகிறோம். இதே போல எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்தியல் இலக்கணமானது இரண்டுக்கும் ஒன்றுதான். ஆனால் அவை இரண்டும் உணர்த்திடும் பொருள் மட்டும் ஒன்றே. அப்பொருளைக் கேட்டறிகிறோம் அல்லது அதையே பார்த்தறிகின்றோம். இஃது எப்படி என்பதற்கோர் உதாரணம் சொல்லுகிறேன். தமிழ்த்தாய் என்ற புதியதொரு சிற்பம் செய்தேன். தமிழ் என்பது மொழியாயிற்றே? எப்படி அவ்வுருவம் தமிழின் உருவமாகிடும் என்று `நின்று கேட்டுப் பார்த்துப் போக நேரமில்லாதோர்` என்னை வினவினர். நான் சொன்னேன், நாம் எல்லோரும் தமிழை, தமிழின் இனிமையை, அதன் சிறப்பை, அதன் ஏற்றத்தை, அதன் பயனைக் காதால் கேட்டனுபவித்திருக்கிறோம். அவற்றைக் கண்ணால் பார்த்த னுபவிக்க நீங்கள் விரும்பினால் நான் செய்திட்ட அச்சிற்பத்தைப் பார்த்துச் செல்லுங்கள் என்று சொன்னேன். அதுதான் தமிழ்த்தாய்ச் சிற்பம் என்றேன். அது தமிழின் சிற்பம்

என்றேன். மேலும் சொன்னேன், அஃதொரு மரபு இலக்கணப்படி செய்யப்பட்ட சிற்பக் கவிதை என்றேன். அஃது உங்களோடு பேசிடும் என்றேன். அதிலிருந்து வரும் ஒளி அலைகள் உங்களை ஈர்த்திடும், அஃதொரு live form என்றேன். காரணம், மரபு இலக்கண வரம்பிற்கு உட்பட்ட பாடல் ஒரு living organism என்பது வாஸ்து மரபின் கருத்து. அங்ஙனம் ஆவது அதன் இயல்பே. அப்படி அது தானாகவே ஆகி விடுகிறது. நாம் எவரும் அதற்குக் காரணமல்ல, அதற்கு வாய்த்திட்ட இலக்கணமே அதற்குக் காரணமாகிறது! தமிழில் மரபுக் கவிதை செய்வோர்க்கு இக்கருத்து நன்கு புலனாகு மென்று நம்புகிறேன். அல்லது பெரியோர் சொல்லக் கேட்டிருக்கலாம். தமிழ்க் கவிதைகள் ஆன்மிக விஞ்ஞானப் படைப்புகள். Spiritual sound forms. சமஸ்கிருதக் கவிதைகளும் இப்படித்தான் இருக்கின்றன. இக்கருத்திற் கொத்த ஒரு கணக்கும் இலக்கணமும் வாஸ்துக் கலை மரபில் நிலவுகிறது. இந்த அடிப்படையில் கலைத்துறை மொழித்துறையினைச் சார்ந்ததோ என்று நினைக்கத் தோன்றுகிறதல்லவா? ஆம். முன்னையது language of aural forms; பின்னையது language of visual forms. ஓர் உணர்வின் இரு கூறுகளாக Two streams of expression ஆக விளங்குகின்றன. சொல்லால் உணர்த்த முடியாத நுட்பங்களை ஓவியத்தாலும் உருவத்தாலும் காட்டிட முடியுமல்லவா? Visual language க்குக் கிடைத்திட்ட ஒரு தனிச் சிறப்பு என்று இதனைச் சொல்லலாம். மேலும் சொல் வடிவத்தைக் காட்சியாகக் காணும் போது கூடுதல் உணர்ச்சி ஏற்படுவது சகஜம்தானே? இங்ஙனம் பண்டைச் சிற்பமாமுனிவர்கள் அத்தகையதொரு பொருள் இலக்கணத்தை அமைத்துத் தந்திருக்கிறார்கள். எனவே வாஸ்து மரபின் இலக்கணப்படி செய்திட்டவை அனைத்தும்

உயிர்ப் பொருள்கள். இந்த இலக்கணம் இயற்கையின் படைப்பு இலக்கணமானதினால் இயற்கைப் பொருள்களைப் போல உயிர்ப்புள்ள பொருள்களாக ஆகின்றன. இந்த நுட்பத்தை அற்புதத்தைப் புரிந்து கொண்டால் சிற்பத்தை உயிர்ப் பொருளாக வழிபடு பொருளாக ஏற்றிடத் தயங்கிட மாட்டீர்கள் என்று நம்புகிறேன். இந்தக் கணக்கை ஏற்கனவே பிரிதொரு இடத்தில் சுட்டிக் காட்டியிருக்கிறேன். மீண்டும் கொஞ்சம் விரித்து வேறிடத்தில் சுட்டிக் காட்டிடுவேன்.

உலகக் கலை மரபுகளில் இலக்கணம் கொண்ட ஒரே கலை மரபு நமது இந்தியக் கலை மரபு என்றால் மிகையாகாது. உணர்வொன்றைப் பேச்சால் பேசி பிறரைப் புரிய வைக்க, அனுபவிக்கச் செய்திட மொழி இலக்கணம் இன்றியமையா ததாகுமல்லவா? அதுபோல அதே உணர்வைக் கண்ணால் காட்சியாகப் பார்க்கச் செய்திட, அனுபவிக்கச் செய்திட இலக்கணம் ஒன்று தேவைப்படுவதாயிற்று. பேசுவதும் பார்க்கப்படுவதும் ஒன்றாகவும் இருக்க வேண்டும். சொல் ஒன்றும் பொருள் வேறாகவும் இருக்கலாகாதல்லவா? ஒரு காலத்தில் சொல்லுக்கு இலக்கணம் வகுத்திட்ட நேரத்தில் சொல்லுணர்த்தும் பொருளுக்கும் இலக்கணம் வகுத்திட நேர்ந்திருக்கிறது. இதைச் செய்திட்டவன்தான் வஸ்து விஞ்ஞானி மயன் என்பான். இவன் "விதித்துக்" கொடுத்த பொருளுக்குரிய இலக்கணம்தான் வாஸ்து சாஸ்திரம் என்ற பெயரில் இன்றும் சிற்பிகள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதையே சிற்ப சாஸ்திரம் என்றும் சொல்வதுண்டு. வாஸ்துவும் சிற்பமும் ஒரே பொருளை உணர்த்தும் இரு சொற்கள். அவ்வளவுதான்.

வாஸ்து சாஸ்திரம் இலக்கண நூலாக இருப்பதால் தஞ்சைப் பெருவுடையார் கோவிலையோ, கெங்கை கொண்ட

சோழீசர் கோவிலையோ, மாமல்லபுரக் கற்கோவில்களையோ, பாரத மண்ணில் தோன்றிட்ட நாடு நகரங்களையோ, விடு மனைகளையோ, நேரடியாக இந்த இலக்கண சாஸ்திரங்களில் காண முடியாது. எதுபோல எனில், கம்ப ராமாயணத்தையோ, மணிமேகலையையோ, சிலப்பதிகாரத்தையோ தொல்காப்பியர் யாத்த இலக்கண நூலில் காண முடியாததைப் போல என்பேன். ஆனால் அந்த இலக்கணம் தழுவிய இலக்கியமாக இலக்கணமே உருமாற்றம் கொண்டு சிலப்பதிகாரமாகவும், கம்ப ராமாயணமாகவும் மிளிர்வதைக் காணலாம். இதே போல மூலப் பொருளின் இலக்கணமாக வாஸ்து இலக்கணத்தின் இலக்கியமாகத்தான் கோவில்களும் சிற்பங்களும், நாடு நகர அமைப்புகளும், வீடுகளும் மன்றங்களும் வாஸ்துக் கலை மரபில் தோன்றுவதாயின.

இயல், இசை, நடம் என்ற தொகுப்பை முத்தமிழ் என்று கொண்டாடுகிறோம். பொருளுக்கும் இலக்கணம் கண்ட தமிழ் மரபில் சிற்பத் தமிழும் கட்டடத் தமிழும் இருந்திருக்க வேண்டுமல்லவா? அவையெல்லாம் எங்கே போயின? இதுபற்றி எவரும் அக்கறை கொள்ளவில்லை. இக்காலச் சிற்பிகளும் அப்படித்தான் இருக்கிறார்கள். கண்டு தேர்ந்திடவும் முடியவில்லை. இன்றைய நிலையில் கைவசமிருக்கும் சிற்ப நூல்கள் தான் கட்டடத்துக்கும் சிற்பத்துக்குமுரிய 'பொருள் இலக்கண நூல்கள்' என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இம்மண்ணின் உணர்வுகள் அவ்விலக்கியப் படைப்புகளில் மிளிர்வதால் முத்தமிழ் என்பதை விடுத்து ஐந்தமிழ் என்று சொல்வதே சாலப் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முத்தமிழை விடுத்த இரு தமிழ்கள் வடிவம் தாங்கி நம் முன்னால் நிற்கின்றனவே! அவை போதாதா என்ன? இதற்கு மேல் என்ன வேண்டும்? ஏற்றுக்

கொள்ளுங்கள். ஏற்றம் கொள்ளுங்கள். விட்டு விடாதீர்கள். வீழ்ந்து கிடக்கும் நாம் எழுந்து நிற்கவே இப்படியெல்லாம் சொல்லுகிறேன்.

இந்திய மொழிகளில் பாடல் இயற்றும் அளவுக் கணக்கைக் கால மாத்திரைகள் (time units) நிர்ணயிக்கின்றன. இதனைத் தமிழ்க் கவிதை இலக்கணத்திலும் அதே போல் சமஸ்கிருத இலக்கணத்திலம் காணலாம். ஒரு கருத்தை உருவகித்துப் பாடல் இயற்றிக் கொண்டு வரும் போது நாம் நமது செயலை உற்று நோக்கினால் இந்தக் கால மாத்திரைகள் செய்யும் விந்தைகளைப் புரிந்து கொள்ளலாம். சொற்களை-சொல் ஒலிகளைக் கட்டுப்படுத்தி, ஒரு சீரில் அமைத்து, அந்தப் பாடலை வளர்த்து, அதற்கொரு இனிய வடிவம் கொடுத்து விடுகிறது இப்பொருள். ஒரு கருத்து கட்டமைப்புக் கொண்டபின் அதோடு உவமை அணிகளும் சேர்ந்திடுமானால் அப்பாடல் உணர்ச்சிமிகு, சுவைமிகு வடிவமாக உருப் பெற்று விடுகிறது. கால மாத்திரை அதாவது காலக்கணக்கொன்று இந்த உருவ அமைப்புக்கு ஒரு சிற்பியாக செயல்படுகிறது அல்லவா? இதை வைத்துக் காலமே சிற்பி என்று சொல்லிடலாமா? ஆம். இந்தச் சிறிய நிகழ்ச்சியில் ஒரு பெரிய நுட்பமே 'ஒரு பெரிய ஆற்றலே ' ஒரு பெரிய கணிதவியலே மறைந்து நிற்பதை உணரலாம் அல்லது காணலாம். கவிதை இயற்றும் பணியிலே இந்த நுண்பொருள் 'காலம்' என்று சுருக்கிச் சொல்லப்படுகிறது. இந்தக் காலக் கணக்கை, இசையில், நடத்தில், சிற்பத்தில், கட்டடத்தில் தாளக் கணக்கென்று சொல்லி வருகிறோம். இதற்கு ஆங்கிலத்தில் rhythm என்று பெயர். காலமே பாடலையும் ஆடலையும் ஆக்குவது போல அந்தக் காலமே கட்டடத்தையும் சிற்பத்தையும் ஆக்குகின்றது. இஃதொரு மாபெரும் விஞ்ஞான

நுட்பமாகும். இதைத்தான் தனிநூலாக எழுதி வருகிறேன். இந்தக் தாளத்தின் ஆற்றலைத்தான் கலைத்துறையில் 'கால புருஷன்', 'தாள புருஷன்', 'சங்கீத புருஷன்' என்றும் வாஸ்து மரபில் வாஸ்து புருஷன் என்றும் சொல்லி வருகிறோம். இத்தகைய தாளக் கணக்கே ஒளிமயமான பாடலுக்கு வடிவம் தரும் கணக்காகும். இசைப்பதால் இசை அலைகளாகிற உணர்ச்சி அலைகள் அவற்றுக்குப் பிரிதொரு கன பரிமாணத்தைச் சேர்க்கின்றன. இது பாடுவோனின் உளத்திறத்தால் ஏற்படுவதாகும். பாடலியற்றும் மரபில் தாளக் கட்டாகிய சொற்கட்டும் இதில் அடிப்படையாக அமைந்து விடுகிறது. சொல்லில் அடங்கிய சொற்பொருள் பாடலின் ஆன்மா. இதனைத்தான் 'அர்த்தம்' என்கிறோம். சொல்லைப் 'பதம்' என்கிறோம். இதனையே 'பதார்த்தம்' என்று கூட்டிச் சொல்லுகிறோம். கவி காளிதாசன் வாக்+அர்த்தம், 'வாகர்த்தம்' என்று சொல்லுவான். அம்மையை வாக்காகவும், அப்பனைப் பொருளாகவும் உருவகிக்கிறான். (இங்கே படிமக்கலை தோன்றி விடுகிறதை உங்களால் உணர முடிகிறதா?)

ஒலி என்ற சொல்லுக்கு நிகராக விளங்கிடும் சமஸ்கிருச் சொல் 'ஸப்தம்' என்ற சொல் ஆகும். இந்த ஸப்தத்துக்குள் எத்துணையோ கோடிச் சொற்கள் - (sound forms) அடங்கி ஒடுங்கிக் கிடக்கின்றனவல்லவா? இந்த நிலையில் எல்லாவற்றையும் தன்னுளே அடக்கி வைத்திருக்கும் அந்த மகத்தான பொருளை 'பிரம்மம்' என்கிறது வேதம். எனவே அதற்கு 'ஸப்தப் பிரம்மம்' என்ற பெயர் சூட்டியுமிருக்கிறது. இந்த ஸப்தம் என்ற ஒலியானது ஒலி வடிவமாக (sound form) எப்படி உருமாற்றம் அடைந்து நமது காதுகளால் உணரத் தக்க பொருளாக (aural and material forms) வெளிப்படுகிறது என்பதைத்தான் பல இடங்களில் பலவாறு இக்கட்டுரையில் சொல்லியிருக்கிறேன்.

இந்த நிலையில் பொருளொன்று இல்லையாயின் சொல் ஒன்று பிறப்பதற்கில்லையல்லவா? இத்தகைய பொருள் களைத்தான் நம்மைச் சுற்றிலும் பார்க்கிறோம். நாமும் செய்கிறோம். இந்தப் பொருள்களெல்லாம் பிரிதொரு நுண் பொருளில் அடங்கிக் கிடக்கின்றன. ஒலிப் பொருள்களும் இதற்குள்ளேதான் ஒடுங்கிக் கிடக்கின்றன. இந்த ஒளி ஒலிப் பொருள்களைத் தன்னகத்தே அடக்கி வைத்துக் கொண்டிருக்கும் மகத்தான பொருளுக்கும் 'பிரம்மம்' என்றுதான் பெயர். இதனை 'அர்த்தப் பிரம்மம்' என்று வாஸ்து மரபில் ஒரு படி ஏற்றிச் சொல்லுகிறோம். இதற்கு மறுபெயர்தான் 'பரப்பிரம்மம்' அல்லது 'பரம்பொருள்' என்பதாகும். இதனையே வஸ்துப் பிரம்மம் என்று சிற்பிகள் சொல்லுவர். இக்கருத்தை ருசுப்பிக்கிறது கீழ்க்கண்ட பிரம்ம பிந்தோபநிஷதச் சுலோகம்

द्वे ब्रह्मणी वेदितव्ये शब्दब्रह्म परंचयत् ।

शब्द ब्रह्मणि निष्णातः परं ब्रह्माधिगच्छेति ॥

இதன் பொருள் யாதெனில் `பிரம்மங்கள் இரண்டாகும். ஒன்று ஸப்தப் பிரம்மம். மற்றொன்று பரப்பிரம்மம். ஸப்தப் பிரம்மம் என்பது எப்படியிருக்கிறது, அதன் இயல்பு என்ன என்று எவருக்குப் புரிகிறதோ அவருக்கே பரப்பிரம்மம் புரிந்திடக் கூடும் என்பது இந்த சுலோகத்தின் பொருள். இங்கே பரப்பிரம்மம் என்பது அர்த்தப் பிரம்மம் அல்லது வஸ்துப் பிரம்மம் தான் என்பது புலனாகிறதல்லவா? `விஞ்ஞானம் பிரம்ம` என்று வேதம் பகன்றிடும் விஞ்ஞானம் இந்த `வஸ்து விஞ்ஞானமே` என்றால் மிகையாகாதன்றோ!

இதனை நுண்பொருள் என்றும், முழுப் பொருள் என்றும் கலைப் பொருள் என்றும் மேலும் விளக்கிச் சொல்லுகிறோம்.

சொல் உணர்த்தும் பொருளும், பொருள் தோற்றிய சொல்லும் ஒன்றே ஆவதால் அதனை 'ஒளி' என்றேன். எனவே நாம் காணும் பொருளெல்லாம் ஒளிச் சொற்கள் ஆகின்றன. நாம் கேட்கும் பொருள்களெல்லாம் ஒலிச் சொற்கள் ஆகின்றன. இந்த ஒளிப் பொருளைத்தான் அகவெளியிலே ஆன்மாவாய் புறவெளியிலே பேரான்மாவாய்க் காண்கிறோம், உணருகிறோம். இந்த உணர்வைத்தான் (awarness) வேதமானது 'பிரக்ஞானம் பிரம்ம' என்று சொல்லுவதாய்ப் பலமுறை பல இடங்களில் சொல்லியிருக்கிறேன். எனவே பிரக்ஞானமும் ஒளியும் ஒன்றே என்று உறுதியாகிறது. இந்த ஒளியைத்தான் சக்தி என்றும், ஆற்றல் என்றும், கலை என்றும், ஆங்கிலத்தில் Energy என்றும், வாஸ்து மரபில் 'வஸ்து' என்றும் சொல்லுகிறோம்.

இந்த 'ஒளி' யானது தனித்தும், தன்னால் ஆன ஒலிப் பொருள்களுக்குள்ளும் பரவி நின்றும், எங்கும் எதிலும் எப்போதும் விளங்கிடும் பொருளாக இருப்பதைப் புரிந்து கொண்டால் பிரம்மஞ் ஞானம் மற்றும் வாஸ்து விஞ்ஞானம் தெரிந்தவர்களாக நாமெல்லோரும் ஆகி விடுவோம். இஃது எளிதாகத் தோன்றிடவில்லையா? ஆம். அப்படித்தான் அந்தப் பிரம்மமே இருக்கிறது. அதற்குள் நாமும் நமக்குள் அதுவும் உளதை மிக எளிதாகப் புரிந்து கொள்ளலாம். இதில் யாதொரு சிரமும் இல்லை. கொஞ்சம் அகப் பார்வைதான் தேவை.


இயல், இசை, நடம் மூன்றும் ஒலிவெளியை (sound space) மூலமாகக் கொண்டது (ஸப்தப்பிரம்ம வகை) என்றும் சிற்பமும் கட்டடமும் ஒளிவெளியை (material space) மூலமாகக் கொண்டது என்றும் (அர்த்தப்பிரம்ம வகை) இரண்டு பெருந்துறைகளாக நமது நாட்டில் பண்டு தொட்டு இன்று வரை உயிர்ப்புடனிருந்து வருகின்றன. பொது மக்களும் இக்கால இளையோரும் இதனைப் புரிந்து கொண்டால் இயல்,

இசை, நடத்திற்குக் கொடுத்து வரும் மதிப்பு, மரியாதை, ஆதரவு ஆகியவற்றை வஸ்துப் பிரம்ம வகைக்கும் கிடைத் திடச் செய்வார்கள் என்று நினைக்கிறேன்; எதிர் பார்க்கிறேன்; நம்புகிறேன்; வாஸ்துக் கலைஞர்களுக்குத் தனியொரு மதிப்புளது; அது நிலையானதும், உண்மையானதும் கூட. எப்படியெனில் 'உண்மைக்கு' வடிவம் கொடுத்து இம்மண்ணில் நிலைக்க வைத்து விட்டதினால் என்பேன். ஆனால் அதனைக் கட்டிக் காப்போராகிய சிற்பியர்க்கு ஆதரவு இல்லை என்பதால் இப்படிச் சொன்னேன். இந்த ஐந்து கலைகளும் அல்லது துறைகளும் ஒன்று சேர்ந்திடின் இந்திய மண்ணில் தோன்றிட்ட பண்டைப் பஞ்ச மரபு காக்கப்பட்டதாகும். இந்தியனின் உயிர் நாடியே இந்த பஞ்ச மரபிற்றான் தொக்கி நிற்கிறது என்பேன்.

மீண்டும் விஞ்ஞானக் கட்டுரைப் பாதைக்குச் செல்வோம். விஞ்ஞானம் தான் சமயமாகத் திகழ வேண்டும், அப்பொழுதுதான் சமயத்தை அனுபவிக்க முடியுமென்று நேற்றுச் சொன்னார் விஞ்ஞான மேதை ஐன்ஸ்டீன். நாம் இதனை எத்துணை ஆயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே கண்டு தேர்ந்து, ஸ்ரீ ரெங்கத்திலும் சிதம்பரத்திலும் பாதுகாத்து வைத்திருக்கிறோம்! ரெங்கநாதனைக் காத்திட காவிரி ஆறு ஜலதுர்க்கமாகவும் (நீர் கோட்டையாகவும்) கல்லாலான ஏழு பிராகாரங்கள் சிலாதுர்க்கமாகவும் (கற்கோட்டையாகவும்) அரண்களாக அமைவதாயின. திருச் சிற்றம்பலத்தைக் காத்திட அம்பலத்தைச் சுற்றி தில்லை வனத்தைக் கோட்டையாக (வன துர்க்கம்) அமைத்து, அது போதாதென்று தியாகசீலர் தீட்சிதர் 3000 பேரை மேலும் அரணாக வைத்து (உயிர்க் கோட்டையாக வைத்து) நமது

முன்னோர்கள் நம் நாட்டில் தோன்றிய அரியதொரு விஞ்ஞான மரபைக் காப்பாற்றி விட்டார்கள். அவர்தம் திசை நோக்கித் தண்டனிட்டு மரியாதை செய்திடல் நம் கடமையாகிறது.

விண்கருவாகிய `ஓம்` ஓங்குற்று மலர்ந்திட்ட விளைந்திட்ட இறுதிப் பொருள் மண் பொருளாகையாலும் (material substance) அந்த ஓம் என்பது பிரணவம் என்றும் சொல்லப்படுகிறதாகையாலும் ஸ்ரீ ரெங்கத்துக் கருவறைக் கட்டடத்திற்குப் பிரணவாகார விமானம் அல்லது ஓம்கார விமானம் என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது. கருவறையையும் முன் மண்டபத்தையும் சேர்த்துப் பார்த்திடின் தமிழ் `ஓ` வின் வடிவத்தைக் காணலாம். அந்த விமானம் முட்டை வடிவினதாக - விதை வடிவினதாக (elliptical form) அமைக்கப் பட்டிருக்கிறது. `எழுத்து` இருக்கிறதே அஃது ஒளியும் ஒலியும் ஓங்கி எழுந்து உருக் கொண்ட ஒரு தெரி பொருள் என்பது ஓர் ஒலி விஞ்ஞானத் தேற்றம். `ஒலி- ஒளிப் பொருளாய் ஓங்கும் எழுத்தே` என்பது அந்த விஞ்ஞான வாக்கியம்.



ஸ்ரீரங்க விமானம் ஓம்கார விமானத்தின் தரைப்படம்

இதனை `ஓ` வின் இயல்பு என்று ஏற்கனவே சொன்னேன். இந்த விமானம், ஓம் ஒளியும் ஓம் ஒலியும் ஒன்றித்த ஒரு தெரி பொருளை நினைப்பூட்டும் `ஓ` எழுத்து அமைப்புடையதாக

விளங்குகிறது. வலம்புரி விநாயகரின் ஓம் - சுழிப்புப் போல இவ்விமானம் வலம்புரி விமானமாக - வலம்சுழி விமானமாக அமைக்கப்பட்டிருக்கிறது.

இக்கோயில்கள் இரண்டும் சமகாலத்தில் ஒரே விஞ்ஞானியால் உருவாக்கப் பட்டிருக்க வேண்டும் என்று கருத்துக் கொள்ள நற்சான்றுகள் பல உள. விஞ்ஞானத்தை சமயமாக்கிய பெருமை அப்பெருந்தகையையே சாரும்.

ஏற்கனவே காட்டிய அத்வைத விஞ்ஞானச் செய்திகளை விடுத்து ஒருசில புதிய செய்திகளைக் கேட்டு மகிழ்வோமாக! நடராஜனையும், ரெங்கராஜனையும் ஒப்பு நோக்கி மகிழ்வோமாக! சூன்யமாகத் தெரியும் விண்ணை உற்றுணர்ந்து மண்ணிலே விந்தை பல இயற்றிய வாஸ்து விஞ்ஞானத்தைப் போற்றுவோமாக!

1. அம்பலம், அரங்கம் ஆகிய இரண்டு கோயில்களும் தெற்குப் பார்த்த ஆதிக் கோயில்கள். (இந்த விசேடம் இந்த இரண்டு கோயில்களுக்குத் தான் உரித்தானதாகும். இவ்விரண்டும் முன்னொரு காலத்தில் பூமத்ய ரேகைக்குத் தெற்கே தென்கோளத்தில் இருந்ததாகப் பண்டைச் சிற்பிகள் கூறுவர். தொல்பழங்காலத்தில் நிலப்பகுதி பிரிவுற்றுச் சிதைந்து நீரில் அமிழ்ந்து போனபின் வட கோளத்தில் புனர் நிர்மாணம் செய்யப்பட்ட புதிய கோயில்கள் என்றும் கூறுவர். `சிற்றம்பலம்` இருந்த ஊருக்குப் பழைய பெயர் சிவபுரம். தில்லைவனம் என்றும் பிரிதொரு பெயர் உண்டு. (வனத்திற்குள் சிவபுரம், சிவபுரத்திலே இருந்த கட்டடம் சிற்றம்பலம், அவ்வளவுதான்.)

2. நடராஜன் ஆடிக் கொண்டே இருக்கிறார், ரெங்கராஜன் அமைதி தவழ் கோலத்தில் கிடந்த வண்ணம் இருக்கின்றார்.

3. நடராஜன் ஆகாஸத்தை (பேருள்ளத்தை) இடமாகக் கொண்டிருக்கிறார். ரெங்கராஜன் ஞாலப் பொருள்களின் அந்தராகாஸத்தை (சிற்றுள்ளங்களை) இடமாகக் கொண்டிருக்கின்றார்.

4. நடராஜனுக்குப் பரவெளியே (subtle space) மேடை. ரெங்கராஜனுக்கு நிலவெளியே (gross space or gross body) மேடை.

5. ஒருவர் ஞாலமாக விளங்குகின்றார்; மற்றவர் ஞாலக் கோலங்களாக விளங்குகின்றார்.

6. ஒருவர் விண்பொருள் (ஒளி) subtle space, subtle substance மற்றவர் மண் பொருள் (ஒலி) gross substance / material sound space. (ஒலியும் ஒரு பொருள்தானே, எனவே ஒலி என்றேன்).

7. ஒருவர் நுண்பொருள் (subtle energy or substance) மற்றவர் திண்பொருள் (gross energy or substance).

8. மேலும் சொன்னால் ஒருவர் energy with matter பொருள் உள்ளிட்ட ஆற்றல்; மற்றவர் matter with energy ஆற்றல் உள்ளிட்ட பொருள்.

9. ஒருவர் எங்கும் நிறைந்தவர்; மற்றவர் எதிலும் நிறைந்தவர்.

10. ஒருவர் அண்டம் (macro cosm). மற்றவர் பிண்டம் (micro cosm).

11. ஒருவர் வஸ்து புருஷன்; மற்றவர் வாஸ்து புருஷன்.

12.. ஒருவர் `வஸ்து`; அடுத்தவர் `வாஸ்து`.

13. ஒருவர் ஐம்பொன்னால் உருக்கி ஆக்கப்படுகிறார்;

மற்றவர் மண்ணால் திரட்டி ஆக்கப்படுகிறார்.

14. ஒருவர் விண்அணுவுக்குள் ஆடுகிறார். மற்றவர் மண் அணுவுக்குள் உயிர்ப்புடன் உய்கிறார்.

15. நடராசன் மண்டுகபத நாயகன், ரெங்கராசன் பரமசாயிக பத நாயகன்.

16. ஒருவர் சதுரத்தில் கட்டுண்டவர், மற்றவர் வட்டத்தில் நீண்டு கிடப்பவர்.

17. இக்கால விஞ்ஞான சூத்திரத்தால் விளக்கிட வேண்டுமானால் பேராசிரியர் ஐன்ஸ்டீன் சொல்லும் E ஆகிய subtle energy தான் நடராஜன்; mc^2 ஆகிய material energy தான் ரெங்கராஜன். இவர்கள் தான் இந்த ஞாலத்தில் முன்னும் பின்னுமிருந்து உயிராகவும் உயிர்தாங்கிய பொருள்களாகவும் இருக்கின்றார்கள்.

மேலும் ஒரு சில விஞ்ஞானச் செய்திகளை இங்கே காண்போம். படித்து இன்புறுக. விண்பொருளே மண் பொருளாக உருமாற்றம் கொண்டிட்டாலும் அம் மண் பொருளானது எப்போதும் உயிர்ப்புடனிருக்க விண் பொருளின் தொடர்பு வேண்டும். விண்ணிலிருந்து தான் அனைத்து உயிர்களும் தத்தம் வளர்ச்சிக்கான ஆற்றலை ஈர்த்து வாழ்கின்றன. இக்கருத்தை விளக்கிடும் பாவனையில் திருவனந்தபுரம் அனந்த பத்மநாபஸ்வாமியின் மூலப் படிமம் அமைக்கப்பட்டுள்ளது. சயனக் கோலத்தில் இருக்கும் பத்மநாபன் தனது வலது கரத்தை ஒரு சிவலிங்க வடிவத்தின் தலை மீது வைத்துக் கொண்டிருப்பதாகச் செதுக்கப் பட்டுள்ளது. ஆகாஸமாகிற சிவனிடமிருந்து ஆற்றலை மண்பொருள் (உலகம்) பெற்றுய்யும் காட்சி ஒரு விஞ்ஞான நிகழ்ச்சிதானே? இதே கருத்து ஸ்ரீ ரெங்கத்திலும் இருக்கிறது

என்று சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள். அரங்கநாதனுக்கு நேர் எதிரே தங்கத் தகடு போர்த்தப்பட்ட துவஜஸ்தம்பம் (கொடி மரம்) உளதல்லவா? அந்தக் கொடிமரத்தைப் பார்த்த வண்ணம் அரங்கநாதன் கிடக்கின்றார். அக் கொடிமரத்தின் வடக்குப் பக்கத்தில் அரங்கநாதனைப் பார்த்த வண்ணம் நடராஜனின் நடனக் கோலம் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. விண் பொருளை எதிர் நோக்கி இந்த மண்பொருள் உளதென்ற குறிப்பு அல்லது விஞ்ஞான உண்மை அதில் தொனிப்பதைக் காணலாம். விண்ணிலிருந்து தனது ஆற்றலை மண்பொருள் பெறுகிறதென்பது தானே விஞ்ஞான நுட்பம்?

இன்னுமொரு விஞ்ஞான நுட்பமானது நடராஜன் படிமத்திலும் ரெங்கராஜன் படிமத்திலும் மறைபொருளாய்த் தொக்கி நிற்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நடராஜனின் மேற்கைகளில் வலது பக்கம் உடுக்கையும், இடது கையில் அக்னியும் இருக்கின்றன. மீதி இரண்டு கைகளில் அபிநய முத்திரைகள் தான் உள. சிவன் ஆகாஸப் பொருளாகையினால், ஆகாஸத்தின் குணங்களாகிற ஒலி, ஒளி ஆகியவைகளை உடுக்கையும் அக்னியும் காட்டுவதாயின. இவ்விரண்டில் இடப்பக்கத்திலிருந்து அதாவது `இட'த்திலிருந்து (from the space) முதலில் செயல் தொடங்கி (ஒளியாகி) சுழன்று தன்னைச் செயல் படுத்திக் கொள்கிறது (ஒலியாகிறது) என்பது மூலம் பற்றிய ஒரு விஞ்ஞானக் கருத்து. இடமிருந்து வலிந்து வலமாகச் சுற்றிச் சுழன்றுதானே ஆடலன் ஆடுகிறார்? இதற்கொப்ப இடது கால்தானே தூக்கப் பெற்று வலமாகச் சுழித்துள்ளது? (இக்கருத்திற்றான் 'வலம்' என்ற சொல் தோன்றியதாகச் சொல்லலாமா?) இதற்குப் பிரதிபிம்பமாக mirror image ஆக விஷ்ணுவின் மேற்கரங்களில்

சங்கும் சக்கரமும் முறையே இடது வலது பக்கங்களில் இருப்பதைக் காணலாம். இதன் கருத்தென்ன தெரியுமா? இந்தப் பிரபஞ்சமே மூலத்தின் பிரதி, பிரதிபிம்பம் mirror image என்பதேயாகும். இதனை ஒலியின் எதிரொலி என்றும் ஒளியின் எதிரொலி என்றும் கூறலாம். மண் பொருளானது விண்பொருளின் பிரதி பிம்பம் என்றும் விளக்கிடலாம்.

இந்த இடத்திலே இதுவரை எவரும் சொல்லிடாத ஒரு நுட்பத்தைச் சொல்லி வைத்து ஆய்வர்களுக்கு வேலை கொடுத்திட ஆசைப்படுகிறேன். இது வேடிக்கை அல்ல; வினையம். மரபின் நீண்ட காலச் செய்தியை - கொள்கையை மாற்றி விட்டதாகத் தூற்றாதீர். சொல்லிட வேண்டாம் என்றுதான் நினைத்தேன். நான் எழுதும் பொழுதெல்லாம் ஒரு unseen hand என்னை இழுத்துப் போகிறதாக எங்கேயோ ஒருதரம் இக்கட்டுரையில் சொன்னேனே. அதுதான் என்னை எழுத வைத்து விட்டது. எனவே நான் பொறுப்பல்ல. இச்செய்தி மாறுகால் தாண்டவம் பற்றிய செய்தியாகும். மதுரைச் செய்தியாகும்.

இன்னும் ஒரு சில சிறு சிறு துண்டுச் செய்திகள் இருக்கின்றன. அவற்றைச் சொல்லிவிட்டு மாறுகால் தாண்டவ நுட்பத்துக்குப் போவோம். சரிதானே !

திருவரங்கக் கோவிலுக்குரிய பாரமேஸ்வர சம்ஹிதையில் பூசை வழிபாடு பற்றிய செய்திகள் விரிவாகவுளதே தவிர, அக்கோயில் அமைப்பைப் பற்றியோ அவ் அமைப்பில் உள்ளடக்கிய கருத்து பற்றியோ ஏதும் காணப்படவில்லை. அதாவது வாஸ்து நிர்மாண விஷயங்கள் அங்கே காணப்படவில்லை என்று சொல்லுகிறேன். அங்ஙனம் சிதம்பர நடராஜன் சிற்றம்பலம் பற்றிய விஞ்ஞான-தொழில் நுட்பச்

செய்திகள் பதஞ்சலியோக சூத்திரத்திலோ பிறிதொரு நூலிலோ காணக் கிடைக்கவில்லை. இந்த நிலையில் 'திருமந்திரமும்' 'உண்மை விளக்கமும்' பாராட்டுக்குரியவை எனலாம். ஆனால் இவற்றுக்குரிய மூலாதாரமான விஷயங்களும் வடிவமைப்புகளும் வாஸ்து சாஸ்திரத்தில் இருந்துவிட்டதால் என்னால் அவ்விரு அமைப்புக்களை உற்றுத் தேர்ந்திட முடிந்தது என்பதைச் சொல்லிட விரும்புகிறேன். இந்த அடிப்படையில் தான் அவற்றை விஞ்ஞானக் கோயில்கள் என்றும் ஆதிக் கோயில்கள் என்றும் எனது முன்னோர் சொல்லியதை என்னால் ஏற்க முடிந்தது. இந்த நேரத்தில் இன்னுமொரு செய்தி. தஞ்சை மாவட்டத்தில் திருவெண்காடு என்ற தலத்திலே நடராஜனுடைய சிற்றம்பலக் கட்டடம் ஒன்றுளது. மரமும் கல்லும் சேர்ந்தமைந்த அழகிய கட்டடம். ஆனால் சதுர வடிவினதாகும். நீண்ட சதுரமானதாக அல்ல. பழைய மரபிலே அமைந்திருந்ததை புனர்நிர்மாணக் காலத்தில் செம்மையாக்கிய குறிப்பு அதில் காணப்படுகிறது. இதனை ஆதிச் சிதம்பரம் என்பர் தொல் மரபினர். ஆய்வர் கவனிப்பார்களாக!

பிற்காலச் சைவ சமயத்துக்கும், வைணவ சமயத்துக்கும் மூலமாய் - மூலச் சமயமாய் - விளங்கியவை இவ்விரண்டு கோயில்களே ஆகும் என்றால் இந்த நிலையில் மிகையாகாதல்லவா? மேலும் இவ்விரண்டு கோயில்களிலும் ஆகம வழிபாடு இல்லை. ஒளி-ஒலி வழிபாடுதான் சிறப்பு. கோயில் கட்டடமே (சிற்றம்பலமே) வழிபடு பொருளாகக் கொள்ளப்பட்டிருப்பதால் இத்தகைய சமயத்தைக் "கோயிற் சமயம்" என்று எங்கள் முன்னோர் கூறுவர். வாஸ்துவே கோயிலாகையினால் வாஸ்து சமயம் என்ற பெயர்

ஒன்றுமுண்டு. இதற்கேற்ப கட்டடத்தைப் `பிராஸாத புருஷன்' Embodied energy என்று மதித்து அதனைப் பூசித்திடுக என்று ஒருவாக்யம் மரபில் உளது. प्रासादं पुरुषं मत्वा पूजयेत् मन्त्रवित्तमः வாக்கியமாகும். கோயில் கட்டடத்துக்கு முதலில் குடமுழுக்குச் செய்திடும் கும்பாபிஷேகக் காட்சி இதனை ருசுப்பிக்கிறதல்லவா?

`ஒரு தெய்வ வழிபாடு' வேண்டுமா? (Worship of one God)

இக்காலத்தில் அயல் நாடுகளில் வாழும் நமது இந்திய மக்கள் யாதொரு மத பேதமின்றியும், மொழி பேதமின்றியும் ஒருமித்து வாழ `ஒரு தெய்வ வழிபாட்டை'ப் பெரிதும் விரும்புகிறார்கள். அப்படியொன்று வேண்டுமென்று துடியாய்த் துடிக்கிறார்கள். காரணம், கோயில் ஒன்று அங்கே முளைத்திடு முன்பு ஒற்றுமையாய் - ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளாய் - வாழ்ந்து வந்த அவர்கள், கோயில் கட்டுவதற்காக ஒன்று கூடி எந்த வடிவத்தை மூலப் பொருளாக வைத்தல் வேண்டுமென்று யோசித்திடும் போது `அது வேண்டும்', `இது வேண்டும்' என்று சர்ச்சைகள் கிளம்பி அவர்தம் நட்பு வெகுவாகப் பாதிக்கப்பட்டு பிளவுபட்டு விடுகிறார்கள். இவை நான் பார்த்து விசனித்திட்ட காட்சிகளாகும். ஒரு தெய்வத்தை வழிபட - அதற்கொரு கோயில் உருவாக்கித்தர முடியாது போனால் உங்கள் வாஸ்து சாஸ்திரத்தின் பயன் தான் என்ன என்று கடிந்தும் பேசுகிறார்கள். ஆகம வழிபாட்டு முறைகள் பல இருப்பதைச் சுருக்கி, அந்த ஒரு தெய்வ வழிபாட்டுக்கு ஏற்றதாக ஒரு சிறப்பான பூசை முறையைச் செய்து கொடுக்க முடியாதா? என்று கேட்கிறார்கள். நியாயம்தானே? அங்ஙனம், `ஒரு தெய்வ வழிபாடே வேண்டும்' `அது போதும்', என்று

ஏங்கி நிற்போர், ஓங்கிக் கேட்ப்போர் அம்பலக் கூத்தனின் கோயிலைக் கட்டி ஒளி வழிபாடு செய்தால் போதும் என்று வாஸ்து வேதியாக இப்பிறவியில் பணி செய்யக் கொடுத்து வைத்திட்ட நான், மிகுந்தவொரு பொறுப்புணர்வோடு சொல்லிட விரும்புகிறேன். அம்பலக் கட்டடமே விஷ்ணு (வாஸ்து); அடைப்பட்ட ஆகாஸமே சிவன் (வஸ்து). வஸ்துவே வாஸ்துவாகிறது என்பதைப் புரிந்து கொண்டீர்கள். எனவே சிவ விஷ்ணு ஒருமைப்பாட்டில் திருச் சிற்றம்பலம் அமைந்திருப்பதை ஒரு கடவுள் வழிபாடு விரும்புவோர் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன். விஞ்ஞானப் பொருள் களாய் சிவனும் விஷ்ணுவும் காட்டப்பட்டிருக்கும் நுட்பத்தையும் நயத்தையும் அருமைப்பாட்டையும் நோக்குக. விஞ்ஞானமே சமயமாகிய ஆதிநிலை இஃதென்பது இப்போது புரிந்து விட்டதால் இப்படியொரு கருத்தைச் சொன்னேன். இனி உங்கள் பாடு. ஒலி விஞ்ஞானத்தின் உச்சப் பயன் இசை வடிவங்கள் தானே? இறைவனை `இசையாய் இசைப் பயனாய்' என்று தானே அனுபவித்தார்கள் நமது பெரியோர்கள். அதுபோல ஒளி விஞ்ஞானத்தின் மேலான பயன் கண்ணால் பார்த்தறியும் இசை வடிவங்களாய்த் திகழும் சிற்பங்களும் சிற்பக் கட்டடங்களும் தான் என்பேன். ஆன்ம அனுபவங்களோடு கலந்து நிற்றல் தானே பக்தி? அங்ஙனம் கலந்து ஒன்றி நின்று பக்தி செலுத்திடக் கட்டடமே உங்களை ஈர்த்திட ஏற்றவொரு கணக்கை இந்த வாஸ்து விஞ்ஞானம் வைத்துக் கொண்டுருக்கிறது என்பதை சுட்டிக் காட்டினேனல்லவா? அதன் விரிவைப் பிரிதொரு சந்தர்ப்பத்தில் விளக்குவேன். எனவே வஸ்துவும் வாஸ்துவும் ஒன்றித்த - எளிமையான - ஒரு தெய்வ வழிபாட்டுக்கு அம்பலமும்

ஆடலனும் போதும் என்ற கருத்தை பொதுமக்கள் ஆய்வுக்கு வைக்கிறேன்.

பாரத நாட்டில் மாபெரும் விஞ்ஞான மேதை ஒருவன் இருந்தான். அவன் வாஸ்து மரபின் தந்தை, அவன் பெயர் மயன். அவன் எழுதிய வாஸ்து நூலுக்கு மயமதம் என்று பெயர். அவனுடைய விஞ்ஞானக் கொள்கையினைத்தான் இக்கட்டுரையின் இடையிடையே குறிப்பிட்டேன். இவன்தான், வால்மீகி ராமாயணத்திலும், இளங்கோவின் சிலப்பதி காரத்திலும் கம்பராமாயணத்திலும் மாபெரும் சிற்பி என்றும் கட்டடக் கலைஞன் என்றும் விஞ்ஞானப் பாடலியற்றும் ஆற்றல் மிகு கவிஞன் என்றும் ஆய்வுகள் மூலம் தெரிய வருகிறது. இக்கலை மரபு இவனைச் சார்ந்தது என்பதற்குச் சான்றாக இளங்கோவடிகள் `நுண்வினைக் கம்மியர் காணா மரபின, மயன் விதித்துக் கொடுத்த மரபின இவைதாம்' என்று ஒரு வரலாற்றுக் குறிப்பை அக்காப்பியத்தில் எழுதி வைத்துள்ளார். இதனைப் பல இடங்களில் இந்தக் கட்டுரையில் காணலாம். இக்குறிப்பை இதுவரை எவரும் எடுத்தாளவோ, ஆய்வுகள் செய்திடவோ இல்லையாயினும், இவனையொட்டி வளர்ந்த மரபு - இந்த வாஸ்து மரபு - இன்னும் உயிர்ப்புடனுளது. இம்மயனைப் பற்றி மற்றுமொரு வரலாற்றுச் செய்தி இப்போது ருசுவாகியுள்ளது. பாரத நாட்டுத் தொன்மைமிகு வான சாஸ்திரமான சூரிய சித்தாந்தத்துக்கு இந்த மயன் தான் மூலாசிரியன் என்பதாகும். இதற்கான சான்றுகள் இந்த நூலின் முகப்பிலேயே உளது.

மேலும், பாரத நாட்டு மயன் போல அமெரிக்க நாட்டில் மெக்ஸிகன் கலாச்சாரத்துக்கு மூலமாக அங்கொரு மயன்

இருந்தான் என்று கேள்விப்பட்டிருக்கிறோமல்லவா? அவனுக்கு மாயன் என்பது அங்கு வழங்கி வரும் பெயராகும். அமெரிக்க நாட்டு மாயன் இந்திய நாட்டைச் சேர்ந்தவன் என்று சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னரே மேலை நாட்டு ஆய்வர்கள் உறுதி செய்திருந்தாலும், இச்செய்தி பற்றி நம் நாட்டவர்கள் கிஞ்சிற்றும் அக்கறை காட்டவில்லை. இதற்கிடையில், மாயன் நாகரிகம் பற்றி அமெரிக்க நாட்டு ஆய்வர் பல நூறு ஆய்வு நூல்கள் எழுதிவிட்டார்கள். அவர்தம் ஆர்வத்தை வார்த்தைகளால் வருணித்திட முடியாது. அந்த நூல்களில் Mayan factor - path beyond technology - என்ற ஒப்பற்ற ஓர் ஆய்வு நூலை JOSE' ARGUELLES Ph. D. என்பவர் எழுதியுள்ளார். இவருக்கு முன்பு எழுதப்பட்ட நூல் களை விட ஆதாரமான விஞ்ஞானச் செய்திகள் பல இந்த நூலில் இருக்கின்றன. இந்த ஆய்வில் நமக்கு என்ன உளது என்று நீங்கள் கேட்கலாம் அல்லவா?

நானும் சிறுவயதிலிருந்தே இந்திய மயன் பற்றிச் சிந்தித்ததும் சிறிய அளவில் ஆய்வு செய்து வந்ததும் உண்டு. மாயனின் கட்டடக்கலையானது மயனின் கட்டட நுற்பத்துக்கு ஒத்துப் போவதைக் கண்டு வியந்து இருவரும் ஒருவராகத்தான் இருக்க முடியும் என்றவொரு கருத்து உளத்தே உருவாகி இப்போது அக்கருத்துக்கு ஒத்துப் போகக் கூடிய பல விஞ்ஞான - தொழில் நுட்பச்சான்றுகள் Mayan Factor - ல் காணக்கிடைக்கின்றன. அவற்றில் இரண்டு பெரும் அடிப்படைச் செய்திகளை மாயன் கலாச்சாரத்தில் கண்டேன். அந்த அடிப்படைச் செய்திகள் பாரத மயனின் விஞ்ஞான கலாச் சாரத்திலும் இருப்பதைக் கண்டு வியந்து போனேன். ஒன்று `சிதம்பரம்' பற்றிய நூல். இதற்கு மாயன் மொழியில்

`சிலம்பலம்' என்பதாகும். மற்றொன்று இந்திய மயனுடைய கலை ஞானத்தில் வாஸ்து புருஷ மண்டலம் என்பது ஜீவாதாரமான விஞ்ஞான நுட்பமாகும். "மாயன் காலண்டர்" என்ற பெயரில் இந்த மண்டலமும் Mayan factor - ல் காணப்படுகிறது. இஃது ஆச்சரியமான ஒற்றுமையல்லவா? எனது ஆய்வுகள் இந்த மாயன்- மயன் பற்றியும், சுற்றியும் வருகின்றன என்ற செய்தியையும் இங்கே செருகி வைத்திட விரும்புகிறேன். நீங்களும் மாயன்- மயன் பற்றி ஆராய்ச்சி செய்திடலாமே!

இறுதியாக இந்திய சமய உலகத்தில் அற்புதம் ஒன்று நிகழ்ந்து வருவதைச் சுட்டிக் காட்டிட இங்கே முற்படுகிறேன். மோரீஸ் தீவில் வாழ்ந்திடும் இந்தியப் பெருங்குடி மக்கள் ஒரு பெரிய காரியம் ஒன்றைச் செய்து வருகிறார்கள். இந்தப் பிரபஞ்சத்தின் subtle energy ஆகிய ஒளி நடராசனின் சிற்றம்பலக் கோயிலையும், gross energy ஆகிய திருவரங்கப் பிரணவாகாரக் கோயிலையும் ஒரே கூரையின் கீழே (under one canopy) கொண்டு வந்து தெற்குப் பார்த்த கோவில்களாகவே வைத்து இந்தத் தத்துவத்தை மீண்டும் அவர்தம் பழைய மண்ணில் ஊன்றி வைத்திட பணி மேற் கொண்டிருக்கிறார்கள். இரண்டாண்டு காலத்திற்குள் இருவரும் அருகருகே இருந்து இவ்வுலகத்தைக் காத்திட, மரபு விஞ்ஞானத்தைப் பறை சாற்றிடவிருக்கிறார்கள் என்ற நற்செய்தியை இங்கே கூறுகிறேன். இதனை இரு தெய்வ வழிபாடென்று அவசரப் பட்டுச் சொல்லி விடாதீர்கள். ஒன்று மற்றொன்றின் mirror image என்றுதானே சொன்னேன்? இரண்டையும் ஒன்றாக்கி "ஒரு தெய்வ வழிபாடு"க்கு இஃதொரு தொடக்கம் என்பேன். என்னைப் பொறுத்த வரையில் இதனை நான்

ஆதரிக்கிறவனாக உள்ளேன். சென்னை தியாகராய நகரில் சிவ விஷ்ணு ஆலயம் ஒன்று நீண்ட நாட்களாகச் சிறப்புடன் விளங்கி வருகிறது. முற்காலத்தில் இதனை மறுத்தவர் பலர் என்று சொல்லுவர். ஆனால் இந்த முதலெடுப்பு இப்போது பாராட்டப் படுகிறது என்று சொல்லிட விரும்புகிறேன். நடராஜனும், ரெங்கராஜனும் இப்போது இங்கே இல்லாவிடினும் சிவனும் விஷ்ணுவும் ஒரு நிழலில் வந்து விட்ட நிகழ்ச்சியானது வரலாற்று முக்கியத்துவம் பெற்று விட்டது எனலாம். இஃது என் மனதைக் கவர்ந்து விட்ட ஒருமைப்பாட்டு நடவடிக்கை யாதலால் வெளிநாடுகளில் புதிதாகக் கட்டப்படும் கோவில் களை சிவவிஷ்ணுக் கோவில்களாகவே செய்து வெற்றி கண்டேன் என்பதை மிக அடக்கத்துடனும் மகிழ்ச்சியுடனும் சமர்ப்பித்துக் கொள்கிறேன். இதனால் எனக்குக் கிண்டலாக ஒரு பட்டப் பெயரையும் சூட்டி விட்டார்கள்- father of Siva Vishnu Complex என்று. அமெரிக்காவில் இப்போது பல சிவ விஷ்ணுக் கோவில்கள் தோன்றி விட்டன. சைவர்களும் வைணவர்களும் ஒரு பாதையில் கை கோர்த்துச் செல்லுகிறார்கள் என்பேன். எனக்கென்ன பயன் என்று கேட்கிறீர்கள் அல்லவா? நமது வாஸ்து விஞ்ஞானத்தின் தூய்மையை, உண்மையை உணர்ந்த பெரியோர்கள் எனக்கு 'வாஸ்து விஞ்ஞானி' என்றும் 'வாஸ்து வேதி' என்றும் விருதுகள் வழங்கினார்கள். இதனை வாஸ்து விஞ்ஞானத்திற்குக் கிடைத்த social recognition என்று பணிந்து ஏற்றுக் கொண்டேன். அவ்வளவுதான்.

இவ்வேட்டில் குறிப்பிட்டுள்ள விண் தத்துவத்தையும் மண் தத்துவத்தையும் ஸ்திரப் படுத்திக் காட்டிட்ட அம்பலத்தையும், அரங்கத்தையும் விடுத்து எஞ்சியுள்ள வாயு,

தீ, நீர், ஆகிய மூன்றையும் நம் முன்னோர்கள் இம்மண்ணில் ஸ்திரப் படுத்திச் சென்றிருக்கிறார்கள். இவற்றை பிரதிபலித்திடும் மூன்று சிறப்பான விஞ்ஞானக் கோயில்கள் தமிழ் நாட்டில் இருந்து வருகின்றன. திருப்பதிக்கு அணித்துள்ள காலஹஸ்தியில் வாயு ஸ்தலமும் திருவண்ணாமலையில் அக்னி ஸ்தலமும் திருவானைக்காவில் அப்பு (நீர்) ஸ்தலமும் சிறப்புடன் விளங்குவதை வாசகர் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இம்மூன்றில் திருவண்ணாமலைக் கோயிலும் திருவானைக்கா கோயிலும் ஐந்து பிரகாரங்களைக் கொண்ட பெருங்கோயில்களாகும். வாயு ஸ்தலமாகக் கொண்டாடப்படும் காலஹஸ்தி ஒரு சிறு கோயிலாக இப்போது காணப்பட்டாலும், இக்கோயிலுக்கும் மேலும் பல பிரகாரங்களைக் கட்டுவித்துச் சிறப்பிக்கும் முயற்சியின் தடயங்களை இன்றும் நாம் காண முடிகிறது. திருவானைக்கா கருவறையில் நீர் கொப்பளித்து வந்து போவதையும், திருவண்ணாமலையில் பெரிய கார்த்திகை தினத்தன்று நெய்விளக்கு மலை முடியில் ஏற்றப்படுவதையும் நீங்கள் கேட்டிருக்கலாம் அல்லது பார்த்திருக்கலாம். காலஹஸ்தியில் மூலக் கருவறையில் இரண்டு தூண்டாமணி விளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன. இவ்விரண்டு விளக்குகளைக் கொண்ட இக்கோவிலானது வாயு ஸ்தலம் என்ற குறிப்பை மிக நுட்பமாகச் சிற்பியர் அங்கே காட்டியிருக்கிறார்கள். எப்படியெனில், எரிந்து கொண்டிருக்கும் இரண்டு சுடர்களில் ஒன்று காற்றினால் தூண்டப்பட்டு முன்னும் பின்னும் அசைந்து ஒளிவீசிக் கொண்டிருக்கிறது. பிரிதொன்று முன்னையதின் அருகிலேயே இருந்த போதும் அசைவற்று, அலுங்காமலும் குலுங்காமலும்

செங்குத்தாக நிலையாக மேல் நோக்கி எரிந்து கொண்டிருக்கிறது. (இது பிரம்மத்தின் உயிர்ப்புள்ள அமைதியைக் (vibirant stillness) காட்:டிட்ட நுட்பமாகும்). வாயுவின் தன்மையை எவ்வளவு நுட்பமாக நமது சிற்பிகள் காட்டியிருக்கிறாகள்! இத்தகைய விஞ்ஞான நுட்பங்களைக் கட்டிக் காத்திடவும், அதன் மூலம் ஆன்ம நலம் பெற்றிடவும் பெரிய பெரிய கட்டட அமைப்புகளைச் செய்திருக்கிறார்கள் நமது முன்னோர். அதுமட்டுமல்ல, பௌதிக விஞ்ஞானத்தைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் அதற்கு அப்பாற்பட்ட பிரபஞ்ச விஞ்ஞானத்தை (cosmic science) அத்துணை காலத்திற்கு முன்பே, எடுத்தாண்டு, தெளிவு பெற்று, வஸ்து விஞ்ஞானம் என்ற பெயரில் நம் நாட்டுச் சிற்பக்கலைஞர்கள் பயன்தரு விஞ்ஞானமாக மாற்றியுள்ளார்கள் என்பதை அனைவரின் கவனத்திற்கும் கொண்டு வருகிறேன். வாஸ்து விஞ்ஞானிகள் விண்ணையும், மண்ணையும் அகழ்ந்தறிந்து விண்ணே மண்ணாகிய நுட்பச் செய்தியையும், மண்ணே விண்ணாக விரும்பும் இயல்பினையும் இப்பாரத மண்ணில் ஊன்றி விட்டார்கள். ஒலி விஞ்ஞானத்தை (science of sound) இசையாக்கி இன்புறச் செய்தது போல ஒளி விஞ்ஞானத்தைக் (science of light) கண்ணால் பார்த்தறியும் இசை வடிவங்களாக்கி இன்புறச் செய்திருக்கிறார்கள் நம் நாட்டுச் சிற்பிகள் என்று பெருமிதத்தோடு சொல்ல விரும்புகிறேன். பஞ்ச பூதங்களிலே, ஆகாஸத்திலும் நீரிலும், நெருப்பிலும், காற்றிலும், மண்ணிலும் ஒரு நுண் பொருள், ஒரு நுண் ஆற்றல் ஊடுருவி நின்று அவற்றின் உயிர்ப்பாய் விளங்குவது எது? என்பதே விண்-ஞானத்தின் தலையாய கேள்வியாகும். அந்த ஆற்றலைத்தான் இந்த ஏட்டில் (light) என்று சொல்லி

எனக்குத் தெரிந்த பல விளக்கங்களைக் கூறியுள்ளேன். அதற்குச் சான்றாய் அம்பலத்தையும் அரங்கத்தையும் உங்கள் முன் எடுத்து வைத்துள்ளேன். இந்த ஒளிப் பொருளைத்தான் நமது விஞ்ஞான மரபும் சமய மரபும் பெரிதெனக் கொண்டாடியுள்ளன. இந்த ஒளிப் பொருளைத்தான் லிங்க வழிபாட்டின் மையப் பொருளாக முன்னொரு காலத்தில் வைத்துக் கொண்டிருந்தோம். இதனைத்தான் ஆகாஸ வழிபாடு என்றும் (worship of space) பிற்காலத்தில் சொன்னோம். ஆகாஸம் என்ற சொல்லுக்கே `ஒளி' என்ற பொருளுண்டு என்றும் மொழி வல்லுநர் கூறுவர்.

இந்த லிங்க வழிபாடானது நாடு தழுவிய வழிபாட்டு நெறியாக தொல் பழங்காலத்தில் இருந்திருக்கிறது. இடைக்காலத்தில் மங்கி மறைந்திடும் சந்தர்ப்பங்கள் தோன்றிட்டாலும் நமது முன்னோர்கள் இந்த நெறியைக் காப்பாற்றிவிட்டார்கள் என்று துணிந்து கூறலாம். இந்திய நாட்டில் பிரபலமடைந்திருந்த பன்னிரெண்டு ஸ்தலங்களை ஒருங்கிணைத்து `துவாதெசஜ்யோதிர் லிங்கங்கள்' (பனிரெண்டு ஒளித் தூண்கள் என்பது அதன் பொருள்) என்று சொல்லி, அவற்றைக் கண்டு அனுபவித்திட பயணத் திட்டங்களையும் வகுத்து, இந்த நாட்டை சமயக் கயிற்றால் கட்டி வைத்து விட்டனர். இதனால் வடக்கும் தெற்கும் மேற்கும் கிழக்கும் பேதமற்ற நிலையை அடைவதாயிற்று. இந்தச் சாதனையை வஸ்து விஞ்ஞானத்தின் வெற்றி என்பேன்.

நான் இதுவரை சொல்லி வந்த தெய்விகக் கலைஞானத்தைப் பெற்று இந்நானிலத்தில் மக்கள் தொண்டு செய்துவரக் கொடுத்து வைத்த தொல் பழங்குடி மக்களே விஸ்வகர்மர் ஆவர். இம்மரபுச் சிற்பியர் `விஸ்வகர்மர்' என்ற

தொழிற் பெயரைத் தாங்குவாராயினர். இக்குடியிற் பிறந்திட்ட அத்துணை பேரும் வாஸ்து மரபை ஒழுகியவர்கள்தான். உழைப்பின் மொத்த வடிவமாகப் பல்லாயிரம் ஆண்டுகள் இருந்து வந்த இவர்கள் இன்று உருக்குலைந்து போயிருக்கிறார்கள். விஸ்வகர்மர்கள் என்பது ஜாதிப் பெயர் அல்ல என்பதையும், அஃதொரு தொழிற்பெயரே என்று இந்த ஏட்டில் பிறிதொரு இடத்தில் விளக்கிக் காட்டியிருக்கிறேன். எதுபோல எனில் "பொறியாளர்கள்" என்ற பெயர் ஜாதிப் பெயர் இல்லையல்லவா? அதுபோல என்பேன்.

இன்னுமொரு செய்தி. நான்கு வருணத்திற்குள் இந்த விஸ்வகர்மர்கள் அடக்கப்படவில்லை என்ற வரலாற்று நுட்பத்தையும் இங்கே இணைத்து வைத்திட விரும்புகிறேன். இப்படிச் சொல்லலாம். நான்கு வருணத்திற்கும் ஏற்றத் தாழ்வின்றி ஒருபாற்கோடாத் தொண்டு செய்து உயர்வு கொண்ட ஓர் இனம் என்று சொல்லலாம். அவ்வளவுதான்.

இவர்களுக்குக் கைகொடுத்து மீண்டும் பழைய நிலையை அவர்கள் எய்திட-இக்கால தேசியப் பணிகளில் பங்கு பெற-மீண்டும் தொழில் உரிமை அளித்து main stream க்கு வந்தடைய மத்திய மாநில அரசுகளும் பொது மக்களும் ஆதரவு காட்டிட வேண்டுமாறு கோரிக் கொள்கிறேன்.

அவர் கொள்ளும் அளவு முறையிலேதான் வாஸ்து விஞ்ஞான மரபின் அதி ரகஸ்ய விஞ்ஞான நுட்பம் அடங்கிக் கிடக்கிறது. அஃது என்ன என்பதை திருச்சிற்றம்பல கட்டுரையில் நான் கோடிட்டுக் காண்பித்திருக்கிறேன். இதற்கென்று தனித்த அளவியல் நூல் ஒன்றை எழுத விரும்புகிறேன்.

இன்னும் ஒரு சில துண்டுச் செய்திகளை உங்கள் முன்னால் ஆய்வுக்காக வைத்திட விரும்புகிறேன். சொல்லுவதெல்லாம் விஞ்ஞானத் தொடர்புடையனவே என்பதால் இப்படிச் சொன்னேன். இலக்கண இலக்கியத் துறையில் சர்ச்சைக்குரிய இரு பெருங் கருத்துக்கள் நீண்ட நெடுங்காலமாக நின்று நிலவுகின்றன. ஒரு சாரார் இலக்கியத்திலிருந்துதான் இலக்கணம் தோன்றியது; தோன்ற வேண்டும் என்பர். பிரிதொரு சாரார் இலக்கணத்திலிருந்து தான் இலக்கியம் தோன்றியது; தோன்ற வேண்டும் என்பர். மேலெழுந்த வாரியாகப் பார்த்திட்டால் இரண்டுமே சரியென்று சொல்லத் தோன்றும். இந்த சமரஸ (compromise) மனப்பான்மையிற்றான் இந்த வினாவிற்கான விடை இன்று வரை இருந்து கொண்டிருக்கிறது என்றாலும் இதனைத் திருப்தியான விடையாகச் சொல்லிட இயலாது. விஞ்ஞானக் கண்ணோட்டத்தில், இதுவரை நான் உணர்த்தி வந்த ஆன்மிக விஞ்ஞானக் கண்ணாடி கொண்டு பார்த்திட்டால், இலக்கணமே இலக்கியமாக இருத்தல் வேண்டுமென்ற உறுதிப்பாடு ஏற்படும் என்று நம்புகிறேன்.

இலக்கியத்திலிருந்து இலக்கணம் உண்டாயிற்று என்போர் இந்த லௌகிக வாழ்க்கையைப் பின்னணியாக வைத்துப் பேசுவார்கள். இதுவரை சரிதான். அதே சமயத்தில் இலக்கணமே இலக்கியமாக வேண்டும் என்று வாதிக்கும் போது திருப்திகரமாக வாதங்களை எடுத்து வைக்க முடியாத ஓர் இக்கட்டான நிலையும் இருந்து வருகிறது என்பேன். இத்தகையோர் எதை இலக்கணமாகக் கொள்ளச் சொல்ல வேண்டும் என்பதைத் தெளிவாகச் சொல்லச் சிரமப் படுகிறார்கள். இஃது இயல்பே. எவரும் வருத்தப் பட வேண்டாம். குறைபட்டுக் கொள்ள வேண்டாம். இஃது

விடைகாணா வினாவாக இன்றுமுளது என்று சொல்லி முடித்தால் கூட தவறில்லை. ஆனால் உண்மை அஃதில்லை.

எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா என்று வியந்து பாடினார் தேசியக் கவிஞர் பாரதி. கனியிலே இனிப்பதென்ன என்றும் வினவினார் பாரதி. எதைப் பார்த்து இப்படியெல்லாம் பேசினார்? இந்த ஞாலத்தையும் ஞாலக் கோலங்களையும் பார்த்து அப்படிச் சொன்னார் அல்லவா? இந்த ஞாலத்திற்றான் எத்துணை இன்பங்கள்? ஆண், பெண்கள், மரம் செடி கொடிகள், பூக்கள்,காய் கனிகள், விலங்குகள் பறவைகள், வானத்து விண் மீன்கள் சூரியன் சந்திரன் முதலிய நவ கோள்கள், பஞ்ச பூதங்கள் எல்லாம் விண்ணின்றிழிந்த பூக்கள்.,விண் பூத்த பூக்கள், விண் தோற்றிய இனிய காட்சிகள். அப்படியானால் இவற்றுக்கெல்லாம் உருக்கொடுத்திட்ட கலைஞன் யார்? கவிஞன் யார்? இவற்றையெல்லாம் அக்கலைஞனின் இலக்கியப் படைப்புகள் என்று சொல்லலாம்தானே. ஏனென்றால் இவையெல்லாம் சுவை தரு பொருள்கள். அப்படியானால் அந்தச் சுவைஞன் யார்? கனியிலே இனிப்பவன்தானே அந்தச் சுவைஞன். அவன்தானே சுவையாகவும் இருக்கிறான்? இப்படி அலங்காரமாக நாம் பேசுகிறோம். எழுதுகிறோம். வினாக்களைத் தொடுக்கின்றோம். இவற்றையெல்லாம் இலக்கியங்களாகச் சொல்ல வேண்டுமென்றால் இவற்றுக்கோர் இலக்கணம் இருக்கத்தானே வேண்டும்? அந்த இலக்கணம் யாது? அப்படியானால் இந்த இலக்கணத்தை யார் கண்டு சொல்வது? இது நம் வேலை இல்லை. இது விஞ்ஞானியர் பணி. இந்த இயற்கையின் இலக்கணத்தை வைத்து இலக்கியம் அமைய வேண்டுமென்றுதான் இந்தியப் பெரியோர்கள் சொல்லி வந்திருக்க வேண்டுமென்று இப்போது புலனாகிறதல்லவா?

ஏன்? இயற்கையோடு ஒத்து வாழ்வதற்குத்தான். அப்போதுதான் அமைதி, சாந்தி எல்லாம் வாழ்க்கையில் நிலவும் என்பதற்காகத்தான். இயற்கைக்கு முரண்பட்ட வாழ்க்கை துன்பமிகு வாழ்க்கைதான்.

இந்த நியைில் நாம் வைத்துக் கொண்டிருக்கும் மொழி இலக்கணத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? நமது இலக்கணம் நமது வாழ்க்கை என்ற இலக்கியத்தினின்று உருவான இலக்கணமா? அல்லது இலக்கணத்தின் இலக்கியமாக வாழ்க்கை இருக்கிறதா? சொல்லுங்கள். நடைமுறைவாழ்க்கை நிகழ்ச்சிகளிலிருந்து இலக்கணம் யாத்திருக்கிறதைக் காண்கிறோம். அன்றாட லௌகிக புற வாழ்க்கைக்கு இத்தகைய இலக்கணம் தேவை. ஆனால் அதற்கும் மேலான அகவாழ்க்கைக்குரிய ஓர் இலக்கணமும் தேவை தான். அல்லவா? மொழி ஒரு பாலமாக இதற்கு உதவிட வேண்டும். இங்கே மீண்டுமொரு சமரசம் compromise தேவைப்படுகிறதல்லவா? உண்மைதான், தேவைதான். இப்படித்தான் மொழி இலக்கணம் இருக்கிறது. இருக்க வேண்டும். நான் குறிப்பிடும் மேலான அந்த அக வாழ்க்கையின் பெயர் என்ன? தெரியுமா? தமிழில் உளவியல் என்று சொல்லுவதை சமஸ்கிருதத்தில் ஆன்மிகம் என்று சொல்லுகிறோம். உளம் என்பது ஓர் உணர்ச்சிக் களஞ்சியம. அத்துணை சுவைகளையும் பருகுவது இந்த உளமே தான். உளம் பருகுவதைச் சுவை என்றும் பருகும் உளத்திற்குச் சுவைஞன் என்றும் பெயர். இந்தச் சுவையுணர்வு மயமான அந்த உள்ளத்தைத் தான் 'அவன்' என்று சொல்லியது உளவியல் நூலாகிய வேதம், சுவையும் அவனே சுவைஞனும் அவனே रसो वै सः सो वै रसिकः என்பன வேதத்தின் அனுபவங்கள். இந்தச் சுவையானது இந்த மனிதன்

படைப்புக்களிலே வெளிவர வேண்டும் அப்பொழுதுதான் பாரதி கண்ட இன்பச் சுவையை மாந்தர்தம் படைப்புகளிலே காணமுடியும். அங்ஙனம் எந்தத் துறைகளிலே அதனைக் காண்கிறோம்? அச்சுவையானது கவிதையாக, ஆடலாக, பாடலாக, சிற்பமாக, கட்டிடமாக நமது கலைமரபுகளிலே வடிவங் கொள்கின்றன. பாரதி இவற்றையும் சேர்த்துப் பாடியிருக்க வேண்டும்! இந்த வடிவங்களை ஆக்கு வதற்கென்று ஓர் இலக்கணம் இந்தக் கலைமரபில் உளது. இந்த இலக்கணம்தான் அனைத்துக்கும் மூலஇலக்கணம், இஃது சுவையின் இலக்கணம்; சுவைஞனின் இலக்கணம். இந்த மூல இலக்கணத்தைக் கொண்டே இந்த ஞாலத்தையும் ஞாலக் கோலங்களையும் 'அவன்' என்ற அந்த இயற்கை தோற்றுவித்திருக்கிறது. வாஸ்து மரபுப்படி 'அவனே' ஞாலமாகவும் ஞாலக் கோலங்களாகவும் உருமாற்றம் கொள்கிறான். இந்த இலக்கணத்தை 'அவன்' இலக்கணம் என்றும் சொல்லலாம் தானே? ''அவனுடைய'' அந்த இலக்கணத்தை வைத்துப் படைத்திடும் மரபுக் கவிதை, மரபு இசை மற்றும் மரபுக் கூத்து, மரபுச் சிற்பம் மற்றும் மரபுக் கட்டிடம் ஆகியவற்றை எப்படிச் சொல்லிக் காட்டலாம்? யோசித்துச் சொல்லுங்கள். ''அவனே'' செய்திட்ட ஞாலக் கோலங்கள் என்று சொல்வது தானே logic தர்க்கரீதி யாகும். இப்படிச் சொல்வது யார் தெரியுமா? வஸ்து விஞ்ஞானி மயன் தான் சொல்லுகிறான். அவன் தான் இதனைக்கண்டு தேர்ந்து விதித்துக் கொடுத்தான். நாம் படைக்கின்றோம். இப்போது இலக்கணப்படி தானே இலக்கியம் ஆக்கப்படுகிறது. இளங்கோவடிகள் சொன்னாரே ''மயன் விதித்துக் கொடுத்த மரபின இவைதாம்''. அந்த வாக்கியத்தை ஒரு மஹா வாக்கியம் என்று சொல்லுவேன். இந்தியச் சிற்பியர் மானம்

காத்திட்ட வாக்கியம் என்பேன். இந்தியப் பண்பாட்டின் ஆணிவேர் என்பேன். இளங்கோவடிகள் இருந்திட்ட திசை நோக்கிச் சிற்பிகள் தெண்டனிடுவார்களாக.

இந்த இடத்தில் நவீன கால விஞ்ஞானச் சூத்திரம் ஒன்றைச் சொல்லி இக்கால விஞ்ஞானியர் கவனத்தை வாஸ்து விஞ்ஞானத்தின்பால் ஈர்த்திட விரும்புகிறேன். இந்த இடத்திற்றான் நவீன விஞ்ஞானம் மரபு விஞ்ஞானப் பாதையில் நுழைகிறதாக முன்பொரு இடத்தில் சொன்னேன். நினைவிருக்கிறதா?

பேராசிரியரும் நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானியுமான ஐன்ஸ்டீன் என்பவர் $E = mc^2$ என்ற ஓர் அதி உன்னத விஞ்ஞானச் சூத்திரத்தைச் செய்தார், இதனை விளக்கிப் பேசிய அப்பேரறிஞர், தன்னுடைய அந்தச் சிறிய சூத்திரத்துக்குள் பிரபஞ்ச நிகழ்ச்சிகள் மற்றும் காட்சிகள் அத்துணையும் அடங்கும் அல்லது கட்டுப்படும் என்று கூறினார். இறுதியில் இதுதான் உங்களுடைய G-O-D ஆக இருக்கலாம் என்று சொல்லி முடித்துக் கொண்டார். இறுதியில் அவர் சொல்லியதை அந்த நேரத்தில் எத்துணைபேர் புரிந்து கொண்டார்களோ தெரியவில்லை. இன்று விஞ்ஞான உலகமானது இந்த சூத்திரத்தை உச்சிமேல் வைத்து மெச்சுகிறது. இஃதொரு குறைபாடுடைய சூத்திரம் என்று சொல்லுவோரும் இருக்கத்தான் செய்கிறார்கள், எப்படி அங்ஙனம் சொல்லுகிறார்கள் என்றும் தெரியவில்லை. இதற்கிடையில் இந்த சூத்திரத்தின் சாரம் அல்லது தெளிவு எனக்கு ஓரளவு புரிகிறது என்பதை இங்கே சொல்லிட விழைகிறேன். இதற்குப் பேருதவியாகவிருந்தவை வஸ்து விஞ்ஞானமும் வஸ்து விஞ்ஞானத்தின் தந்தையும், சூரிய

சித்தாந்தத்தின் மூலாசிரியனுமான மயன் தான் - மய நூல்கள் தாம் என்பதையும் சொல்லக் கடமைப் பட்டவனாகிறேன்.

$E = mc^2$ என்ற சூத்திரத்தை மேலெழுந்தவாரியாகப் பார்த்தவுடனேயே எனக்குப் புரிந்த ஒன்று. E என்பதை subtle energy ஆகவும், mc^2 என்பதை material or gross energy ஆகவும் கண்டேன். கலைமொழியில் சொல்லிட வேண்டுமானால் E என்பது வஸ்துவாகவும் mc^2 என்பது வாஸ்துவாகவும் எனக்குப் பளிச்சிட்டன. E க்கும் mc^2 க்கும் சொன்ன சாம்யத்தை அல்லது சமன்பாட்டைப் பார்த்தவுடன்

वस्तुरेव वास्तु வஸ்துவே வாஸ்துவாகிறது என்ற மயசூத்திரம் அதிலே தொனிப்பதையும் கண்டு கொண்டேன். இன்னும் நுணிகிப் பார்த்தேன். அதனையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். எதற்காக? நம் நாட்டு விஞ்ஞானியர்தம் ஆய்வுக்காகவும் மறைந்து கிடக்கும் நமது விஞ்ஞான நூல்களைத் தேடுவதற்காகவும் கிடைத்தவற்றை, கிடப்பனவற்றைப் பேணுவதற்காகவும்தான்.

$E = mc^2$ என்ற சூத்திரத்தில் E என்பது Energy ஆகும். நான் இதனை 'சக்தி' 'ஆற்றல்' 'ஒளி' என்று இதுவரை சொல்லிவந்தேன். ஒட்டு மொத்தமாக அதனை உணர்ச்சி awareness என்றும் சொன்னேன். இங்ஙனம் சொல்லும்போது Energy இல் matter உருகி இரண்டற அத்வைதமாய்க் கிடப்பதாகவும் சொன்னேன். இந்த நில உலகிலும் பொருள்களிலும் matter ல் Energy யாகப் பரவிக் கிடப்பதைச் சொன்னேன். இத்தகைய நிலையில் எங்கும் ஆற்றலாய்ப் பரவி நிற்பதையும், சூழ்ந்து நிற்பதையும் ஆகாஸம் என்றும் விண்வெளி என்றும் சுட்டிக் காட்டினேன். அதுமட்டுமல்ல, அந்த விண்ணில் அணுக்கள் நிரம்பிக் கிடப்பதாகவும் அவற்றுக்கு ஆற்றல் அணு அல்லது பரமாணு என்று பெயர்

என்றும் அதனை 'ஒளி' என்றும் 'விண்கரு' என்றும் விளக்கிச் சொன்னேன். கண்களுக்குத் தெரியாமல் உலாவும் இவ்வணுவின் வடிவம் அல்லது அணு நிறைந்த ஆகாஸத்தின் வடிவமே அமைதி நிலையில் - கனசதுரம் என்றும், அப்படி இருத்தல் அதன் இயல்பு என்றும் சொன்னேன். இதனை முழுமுதற் பொருளின் முதற் தோற்றம் (Primal manifestation என்றும் சொன்னேன்.

இப்பின்னணியில் mc^2 ஐப் பிரித்துப் பார்த்தேன். m என்பது mass - coherent body of matter என்றும் c என்பது ஒளியின் வேகம் என்றும் தெரிந்து கொண்டு c^2 என்பது cxc ஆகிய ஓர் ஒளிச் சதுரம் square field of energy என்றும் தேர்ந்தேன். இந்த ஒளிச் சதுரத்துக்குக் கனம் தருவது, கனபரிமாணம் தருவது இந்த `m' தான் என்பதை எனது கணித அறிவைக் கொண்டும் மொழி அறிவைக்கொண்டும் வாஸ்து ஞானத்தைக் கொண்டும் முடிவு செய்தேன். E யும் கனப் பொருள் mc^2 ம் கனப் பொருள் என்பதையும் தேர்ந்து கொண்டேன். $E = mc^2$ இல் $m = 1$ ஆனால் E என்ற energy ஆனது c^2 (ஒளிப் பொருளுக்கு) நிகராகிறதல்லவா? ஒளியின் வேகத்தால் - விளைந்திட்ட பொருளாகிறதல்லவா?

$E = mc^2$ என்ற தத்துவச் சமன்பாட்டில் c என்ற ஒளிதான் m என்ற பொருளில் ஊடுறுவி நிற்கும் இறைப் பொருள் என்பது விளக்கமாகிறது என்பேன். இதை மனதில் வைத்துக் கொண்டுதான் இந்த சூத்திரம் உணர்த்தும் நுட்பத்தை G-O-D என்று ஐன்ஸ்டீன் சொல்லியிருக்க வேண்டும் என்று கருதலானேன்.

ஆகவே, நான் வாஸ்து விஞ்ஞானத்தின் சிறப்பியல்புகளை ஒட்டுமொத்தமாகச் சுருக்கி "வஸ்துரேவ வாஸ்து" அதாவது வஸ்துவே வாஸ்து ஆகிறது என்ற விஞ்ஞானக்

கொள்கையோடு சமன் செய்து பார்த்திட்டேன். எனவே ஐன்ஸ்டீன் சொன்னது போல வஸ்துவே (energy யே) வாஸ்துவாகிற (mc^2 ஆகிற) சுருக்கத்தைக் கண்டு வியந்து போனேன். இதற்காக யாரைப் பாராட்டுவது? மயனையா அல்லது ஐன்ஸ்டீனையா? இந்த முடிவை உங்களிடம் விட்டுவிடுகிறேன். ஆனால் நான் பாராட்டிடவும் வணங்கிடவும் விரும்பியோர் வால்மீகியும் இளங்கோவும்தான். இவர்கள் மயன் ஆற்றலை வாயார, மனமாரப் புகழ்ந்து சொல்லியிரா விட்டால் சூரிய சித்தாந்தத்தில் அவனது பெயரை நான் கண்டிராவிட்டால் நானும் மயனைச் சாதாரணச் சிற்பி என்று நினைத்து ஒதுக்கித்தள்ளியிருப்பேன். என் கணிப்பில் விண்ணையும் மண்ணையும் அளந்திட்ட மானுடப் பிறவிகள் 'மயனும்' 'ஐன்ஸ்டீனுமாவர்' என்று உறுதிபடச் சொல்லக் கடமைப் பட்டவனாகிறேன்.

இன்னொன்று நான் சொல்ல விரும்பியது யாதெனில், இந்த வஸ்துவே வாஸ்துவாகிற சூத்திரத்தை சூத்திரமாகவே வைத்துவிட்டு போய்விடாமல் அதற்கொரு அளவியல், அணுகுமுறை, தொழிலியல் ஆகிய மூன்றையும் அந்த மயன் இந்திய நாட்டுச் சிற்பியர் அனைவரிடமும் கொடுத்துவிட்டு நாடு நகரங்களையும், வீடு மனைகளையும், கோயில் சிற்பங்களையும் பயன்தரு பல்வேறு பொருள்களையும் ஆக்கித் தர சிற்பியர்க்கு விதி யொன்று செய்துவிட்டு, அதன் மூலம் இந்திய மக்கள் ஆன்ம ஆரோக்யம், ஆன்ம சுகம் ஆகியவற்றை இந்த நில உலகிலேயே அனுபவிக்கச் செய்துவிட்டான். இந்தியப் பண்பாட்டையே உயர்த்திவிட்டான்.

இந்திய நாட்டின் ஆன்மிகக் கலாச்சாரத்தின் தோற்றுவாய், வளர்ச்சி, பயன் மற்றும் இன்றைய நிலை தழுவிய செய்திகளை பலவாறாகக் கேள்விப்பட்ட இக்கால சமுதாயத்திற்கு

இச்செய்தி புதிதாகத் தோன்றுமானால் ஆச்சரியப் படுவதற்கில்லை. மறைந்து போன, மறந்து போன, கண்டு சொல்ல முடியாமற் கிடந்த உண்மைகள் வெளிப்படும் போது ஆச்சரியப்படுவதும் வினாக்கள் எழுப்புவதும் தொடுப்பதும் ஏன் சண்டை போடுவதும் இயற்கைதானே? வினாக்கள் வருமானால் எதிர் கொண்டழைப்பேன். எதற்காக எனில், உண்மைகள் மேலும் துலக்கம்பெற. சான்றுகளுடன் வினாக்கள் வருமானால் எனக்கும் வஸ்து விஞ்ஞானத்துக்கும் வலுவேற்படும். இதற்காகவே இப்படி எழுதுகிறேன். தவறுகள் சுட்டிக் காட்டப்படின் திருத்திக் கொள்ளத் தயங்க மாட்டேன்; நன்றியும் சொல்லுவேன். காரணம் நான் ஒரு அனுபூதி, நான் ஒரு ஸ்காலர் (Scholar) அல்ல.

இந்த விஞ்ஞானக் கொள்கையின் அடியொற்றி வருவன சிற்பக் கலை மட்டுமல்ல. இயல், இசை, நடம் என்ற முத்தமிழும் ஆகும் என்பதைப் பிரிதொரு இடத்தில் விளக்கி இருக்கிறேன்.

இத்தகைய விஞ்ஞானக் காரணம் பற்றித்தான் மேற்குறிப்பிட்ட ஙங்கலைகளும் உலகக் கலை மரபுகளிலிருந்து பெரிதும் வேறுபட்டும் தனித்தும் விளங்குவனாயின. இவையெல்லாம் இயற்கையின் இயக்க இலக்கணத்துக்கு ஒத்து இயங்குவனவாம். இயற்கைக்கு வாயிருந்து பாடுமானால் அது கருநாடக இசையாகவே இருக்கும். இயற்கைக்குக் கை, கால்களிருந்து நம்முடன் ஆடுமானால் அஃது நம் நாட்டுக் கூத்தாகவே அமையும். இயற்கை ஒரு கவிஞனாகவிருந்து பாடல் இயற்றுமானால் அது மரபுக் கவிதையாகவே இருக்கும். இயற்கையே ஒரு கலைஞனாக இருந்திட்டால் நீங்கள் இன்று பார்த்திடும் பண்டைக் கட்டடங்களையும், நாடு நகரங்களையும் தான் அது ஆக்கித் தந்திடும்.

சுருக்கமாகச் சொன்னால் இக்கலைகளுக்கு வாய்த்திட்ட இலக்கணமே இயற்கையின் இலக்கணமாக இருப்பதால் அஃதும் ஒரே அடிப்படைக் கொண்ட இலக்கணமாக இருப்பதால் இவ்விலக்கணத்தின் இலக்கியங்களாய் இவையெல்லாம் அமையும் என்று சொல்லிட விரும்புகிறேன். அத்துணை பொருள்களும் வெவ்வேறாக இருக்க முடியாதல்லவா? Material மாறும். வடிவம் மாறுவதற்கில்லை.

நான் சொல்லும் இலக்கணம் ஒலிக்கும் ஒளிக்கும் பொதுவான இலக்கணமாகும். எனவே வஸ்துவே வாஸ்துவாகிறது என்ற சூத்திரம் அல்லது இலக்கணம் ஒலி வடிவங்களுக்கும் ஒளி வடிவங்தளுக்கும் ஒன்றே என்பதைத்தான் நான் மேலே வலியுறுத்தினேன். அதாவது $E = mc^2$ என்ற சூத்திரம் ஒளிப் பொருள்களுக்கு மட்டுமல்ல, ஒலிப் பொருள்களுக்கும் உரியதாகும் என்று சொல்லுகிறேன். இந்த சூத்திரமானது மேற்கையும் கிழக்கையும் இருகக் கட்டிடும் சூத்திரம் - கயிறு– என்பேன். இதனால்தானோ என்னவோ $E = mc^2$ உங்களுடைய G - O - D ஆக இருக்கலாம் என்று கடவுளை நம்புவோரைப் பார்த்து ஐன்ஸ்டீன் சூசகமாகச் சொல்லி யிருக்கிறான் என்று எனக்குச் சொல்லத் தோன்றுகிறது.

இந்த வஸ்துவே வாஸ்துவாகிற விந்தை மிகு நிகழ்ச்சியானது (phenomenon) இயற்கையில் எங்கும் எதிலும் எப்போதும் நிகழும் காட்சியாகும். ஒரு தாயின் கெர்பத்தில் இந்த E தான் (வஸ்துதான்) ஒளி அணுவாக நுழைந்து mc^2 (வாஸ்து) ஆன குழந்தையாக உருமாற்றம் கொள்கிறது என்பேன். இந்த உருமாற்றத்துக்கு, உருவம் தோன்றுவதற்கு அளவியல் ஒன்று தேவையல்லவா அதையும் இந்த E அல்லது வஸ்துவே தருகிறது, நம் முயற்சியால் அல்ல என்பது மிகப்

பெரிய நுட்பமாகும். இந்த அளவியலை இந்த வஸ்து விஞ்ஞானம் சிற்பிகளுக்குச் சொல்லிக் கொடுத்து மரபுச் சிற்பியர்களை ஒரு தாயின் நிலைக்கு உயர்த்தி விட்டது என்றும் சொல்லுவேன். "மாதா சில்பி" என்ற மரபுக் கூற்று ஒன்றுண்டு. தாயாக இருக்கிறான் சில்பி என்பது இதன் பொருள். இக்காரணம் பற்றியும் இத்தகைய அனுபவம் பெற்றதின் பயனாயும் நான் செய்திட்ட ஒரு சில புதினங்களில் என்னையே நான் கண்டு களித்தேன் என்று சொல்லி அவற்றையெல்லாம் எனது குழந்தைகளாக எனது ஆத்மாவின் பிரதிகளாகப் பாவித்திடும் உணர்வும் கண்ணும் பெற்றேன். எனவே வாய்திறந்து அவற்றை எனது ''ஆத்மஜா'' என்றும் ''ஆத்மஜன்'' என்றும் ரசிகர்களிடம் வருணித்தேன். இறுதியில் சிற்பியே சிற்பமாகிறான்; கவிஞனே கவிதையாகிறான் என்று ஓங்கிச் சொன்னேன். உணர்வுகள் வடிவங்களாகின்றன என்று சொல்லும்போது இறை ஆற்றல் பெற்ற, ஆன்ம ஆற்றல் பதியப் பெற்ற Spiritual form ஆக வெளிப்பட உதவியது எது தெரியுமா? நான் முன்பு சொன்ன அளவியல்தான். இயற்கை கையாளும் அளவியல்தான். வேறுபட்டிருப்பின் அனைவரையும் ஈர்த்திடும் ஆற்றல் தகுதி அப்புதினங்களுக்கு இல்லாது போய்விட்டிருக்குமல்லவா? அதாவது அவற்றில் தெய்விகம் DIVINITY இராது போயிருக்கும் என்று சொல்லுகிறேன். எனவே மரபுச் சிற்பிகள் செய்வன வெல்லாம் வஸ்துவின் திரிபாகிய வாஸ்து எனவாயிற்று; வணக்கத்திற்குரிய, அர்ச்சித்தற்குரிய பொருள்களாக விளங்குவதாயின. இதே காரணம் பற்றி இயல், இசை நட வடிவங்களும் வணக்கத்திற்குரிய வடிவங்கள் தாம். ஜன்ஸ்டீன் காதுகளுக்கு இந்த மரபு விஞ்ஞானமும் அதன் நுட்பமும் அதன் பயனும் எட்டியிருந்தால் எவ்வளவு சந்தோஷப்பட்டி ருப்பான்! யூகிக்க முடிகிறதா?

கடைசியாக ஒளிநடத்தின் மதுரையம்பதி மாறுகால் தாண்டவக் கோலத்தை நுணுகி ஆய்ந்து அதோடு இக் கட்டுரையினை முடித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாறுகால் தாண்டவம் பற்றிய ஒரு விஞ்ஞான விளக்கத்தை இனிக் காண்போம். நடராசன் ஆடிய தாண்டவங்கள் 108 என்று சிற்ப நூல்கள் கூறும். ஆடற்கலைத் துறையிலும் இங்ஙனமே சொல்லுகிறார்கள். அந்த 108 ல் ஒன்பது தாண்டவங்களைப் பொறுக்கி எடுத்து நவதாண்டவம் என்று ஒரு தொகுப்பைச் சொல்லுவார்கள். சிற்ப நூல்களும் அங்ஙனமே கொள்ளுகின்றன.

नृत्तमपृशतविधं प्रोक्तं तत्रादौ नवकथ्यते ।

भानुरुद्रदशांशं वा तुंगं नृत्तं नतं भवेत् ॥


அம்சுத் பேத காஸ்யபீயம்.

மேலும் இவற்றையும் சுருக்கி ஐந்து வகைத் தாண்டவம் என்றும் சொல்லுவதுண்டு. அவற்றை முறையே சிருஷ்டி (படைத்தல்) தாண்டவம், ஸ்திதி (காத்தல்) தாண்டவம், சம்ஹார (துடைத்தல்) தாண்டவம், திரோபவ (மறைத்தல்) தாண்டவம், அநுக்ரஹ (அருளல்) தாண்டவம் என்றும் சொல்லுவார்கள். மேலும் இவற்றையும் சுருக்கி மூவகைத் தாண்டவமாக சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் என்றும் கூறுவர். இந்த மூன்றிலும் சிருஷ்டியும், சம்ஹாரமும் ஆகம வழிபாட்டுத் துறையில் வெகுவாகப் பேசப்படுவதாகும். இவ்விரண்டில் சிருஷ்டி தாண்டவத்தைத்தான் அனைத்து இடங்களிலும் சிதம்பரத் திலும் காண்கிறோம். சம்ஹார தாண்டவம் என்பது சிருஷ்டி தாண்டவக் கோலத்திற்கு எதிர்மறையான கோலம் என்று இக்கால வழக்கில் வைத்துக் கொண்டிருக்கிறோம். இஃதொரு அரிய கோலம் ஆகும். பிறகு இதனை ஊன்றிக் கவனிப்போம்.

சிருஷ்டி தாண்டவமாகிற படைத்தல் தாண்டவக் கோலத்தில் நடராசப் படிமம் வலது காலை மடக்கி ஊன்றி, இடது காலைத் தூக்கி வலது பக்கமாகச் சுழற்றி அமைத்து, ராஜச பாவத்தில் தலையை நிமிர்த்தி, தனது கரங்களில் வலத்தே அபய முத்திரை காட்டி, இடக்கையை யானைத் துதிக்கை போல் நீட்டி, கைத் தளத்தைக் கீழ்நோக்கிக் காட்டி அமைத்து மேற்கரங்களில் வலக்கரத்தில் உடுக்கையையும், இடக்கரத்தில் நெருப்பையும் ஏந்தியிருப்பதாய் அமைந்து இருக்கும். தலையில் சடை முடியோ அல்லது விரித்த சடையோ இருக்கும். இந்த வடிவம் முயலகன் என்று சொல்லப்படும் ஒரு (சிறு) ராக்ஷஸன் வடிவத்தின் மீது நிற்க வைக்கப்பட்டிருக்கும். ராக்ஷஸனின் தலையானது சிற்பத்தில் வலப்பக்கம் அமைய, கைகளிலே கத்தி, கேடயம் அல்லது பாம்பு பிடித்ததாய் இருக்கும். இத்தகைய அமைப்பில் இருக்கும் நடராசனுடைய வடிவம் இன்று உலகப் புகழ் வாய்ந்ததாக விளங்குகிறது. உலகப் பெரும் கலைஞர்களாலும், விஞ்ஞானிகளாலும் வியந்து பாராட்டப்படுகிறது.

இதற்கு மறுதலையான தாண்டவக் கோலமானது இடது காலை ஊன்றி, வலது காலை இடுப்பளவு தூக்கி நீட்டி இடமாக வீசி நின்று, வலக்கரத்திலே நெருப்பும் இடக் கரத்திலே உடுக்கையும், தனது வலக்கரத்திலே கஜஹஸ்த முத்திரையும் இடக்கரத்திலே அபய முத்திரையும் பிடித்து ஆடுவதாய் இருக்கும். இது சம்ஹார தாண்டவம் என்று சமய மரபில் சொல்லப்படுகிறது. இதற்கு மாறுகால் தாண்டவம் என்ற பிரிதொரு பெயரும் உண்டு. இதுதான் சரியான பெயர். காரணம் இதற்கு ஒரு விஞ்ஞான நுட்பம் அடித்தளமாக இருக்கிறது. இத்தகைய தாண்டவக் கோலம் இரண்டு

இடங்களில் சிறப்பாகக் காணப்படுகிறது. ஒன்று மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மன் கோவிலில் சுமார் 12 அடி உயரமுடையதாய்க் கல்லால் செய்யப்பட்டிருக்கிறது. இன்னொன்று (சென்னை மியூசியத்தில்) செம்பொன்னால்



மாறுகால் தாண்டவம்

செய்யப்பட்டிருக்கிறது. முன்னையது மதுரைச் சிற்பியர் தம் நடையிலும், பின்னையது சோழச் சிற்பியர் நடையிலும் இருக்கின்றன. இவை வெவ்வேறு காலத்தைச் சேர்ந்தவையாகும். கல்லால் நடராச வடிவத்தைச் செய்தல் மரபுக்கும் கருத்துக்கும் மாறுபடும் என்று சொல்லும் போது, மதுரைப் படிமம் ஆய்வுக்குட்படுவதாகிறது. காரணம் அது கால் மாறி ஆடிய தாண்டவம். பொருளில்லாமல் முற்காலச் சிற்பியர் செய்ய மாட்டார்கள்.

இது பற்றி தலவரலாறு வேறு விதமாக ஒரு கதையைச் சொல்லி மாறுகால் நிலைக்கு விளக்கம் சொல்லுகிறது. வலது காலை ஊன்றி இடது காலை வலத்தே வீசித் தொடர்ந்து நின்றால் ஆடலனுக்குக் கால் வலிக்குமே என்று கவலைப்பட்டு ஒரு பாண்டிய மன்னன் இறைவனை கால் மாறியாட வேண்ட, ஆடலன் மாறுகால் தாண்டவம் ஆடினான் என்பது தலவரலாறு. இதனை அப்படியே ஏற்றுக் கொள்வது கதையளவில் பொருந்துமானாலும், கருத்தளவில்

வேறுபட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. கதையைப் பொறுத்த வரை பாண்டிய மன்னன் காலத்தில் எழுதப் பட்டதாகத் தெரியவில்லை. அம்மன்னனுக்குப் பிற்பட்ட ஒரு காலக் கட்டத்தில் எழுதப்பட்டதாகத்தான் இருத்தல் வேண்டும்.

இந்திய வாஸ்து விஞ்ஞானத் துறையில் தலையானதும் அடிப்படையானதும் அதி நுட்பமானதும் ஆன விஞ்ஞான வடிவம் ஒன்று உள்ளது. இப்படியெல்லாம் சொல்லாமல், அதற்கு இருக்கும் பெயரைச் சுட்டிக் காட்டாமல், "சதுரம்" என்ற பெயரைச் சொல்லி அதன் செயல் முறைகளை மேல் எழுந்த வாரியாக இக்கட்டுரையில் சொல்லிச் சென்றேன். சதுரம் எட்டுப்பட்டம் ஆவதும் அதுவே வட்டமாவதும் அந்த சதுரத்தின் குண வடிவங்கள் என்றும் (Geometrical design representing the qualities of Space) சொன்னேன். இவற்றை விடுத்து இது பற்றிய வேறு நுட்பங்களை நான் இதுவரை சொல்லவில்லையாதலால் இங்கே அவற்றை ஒரு சிறிது காண்போம்.

இந்தச் சதுரம் வெறும் நான்கு பக்கங்களைக் கொண்ட சமசதுரமான வடிவம் என்று சொல்லிய நேரத்தில் அதுவே கனப் பொருள் நிலையில் கனசதுரம் (cubical prism) என்றும் சொன்னேன். அதோடு இது விண் அணுவின் நுண் வடிவம் என்றும் சொன்னேன். இந்த நிலையில் ஒரு மகத்தான கருத்தைச் சொல்ல வேண்டியவனாகிறேன். பிரம்மத்தைப் பற்றிப் பேசிய வேதமானது அப்பிரம்மத்தின் வடிவத்தை சூசகமாக अणोरणीयान् महतो महीयान् 'அணோரணீயான், மஹதோ மஹீயான்' என்று உருவம் கொடுத்துப் பேசி விடுகிறது. அதாவது அணு வடிவத்திலும் இருப்பான், மிகப் பெரிய அண்ட வடிவத்திலும் இருப்பான் என்பது இதன் கருத்தாகும். நான் முன்பு சொன்னபடி அணு ஒரு Cubical prism . ஆனால் அண்டமும் ஒரு Cubical prism மாகத்தானே

இருக்க முடியும்? இப்படித்தான் இருக்க முடியும் என்று வாஸ்து விஞ்ஞானத்தில் ஒரு கருத்துக் கொண்டு அளவிட முடியாத பிரபஞ்சத்தை மகத்தான Cubical prism ஆக அளவிட்டுச் சொல்லுகிறது. வடிவம் தோன்றி விட்டால் அதோடு அதற்குரிய அளவுகளும் அடிப்படையாக இருக்கத்தானே வேண்டும்?

அண்டமென்பதை பிரபஞ்சமென்றும், ஞாலம் என்றும் சொல்லுகிறோம். அப்படியானால் அமைதி நிலையில் இருக்கும் இந்தப் பிரபஞ்சம் என்ற கட்டடத்திற்குத் தரைப்படம் சதுரமாக ஆகிறதல்லவா? இந்தத் தரைப்படத்திற்குத்தான் வாஸ்து புருஷ மண்டலம் என்று பெயர்.

வாஸ்து சாஸ்திரங்களிலும், வாஸ்து சாஸ்திர விஷயங்களை வைத்துக் கொண்டிருக்கும் வேறு பல நூல்களிலும் இந்த வாஸ்து புருஷ மண்டலத்தின் தோற்றுவாய் பற்றி விநோதமான கதை ஒன்றைச் சொல்வதைப் பார்க்கலாம். ஆகாஸத்தில் ஒரு பூதம் தோன்றியதாகவும் அதற்கு 'மகா பூதம்' என்பது பெயர் என்றும் அந்தப் பூதம் விண்வெளியை ஆக்ரமித்துக் கொண்டு பயங்கரமாக இருந்ததென்றும் அதனைப் பார்த்த தேவர்கள் பயந்து போய் அந்த பூதத்தின் மீது ஏறி அமர்ந்து கொண்டு அதனை அப்படியே கீழ் நோக்கித் தள்ளி விட்டனர் என்றும் சொல்லி அங்ஙனம் விழுந்திட்ட அந்த மகா பூதம் பூமியின் மீது குப்புற விழுந்ததாகவும் அங்ஙனம் விழுந்து விட்ட அப்பூதம் அதைவிட்டு எழுந்திருக்காமல் இருக்க அந்த தேவதைகள் அப்பூதத்தின் உறுப்புகளின் மீது ஏறி அமர்ந்து அப்படியே கிடத்தி விட்டன என்றும் அந்தப் பூதமே வாஸ்து புருஷன் என்று சொல்லப்படுகிறதாக அந்தக் கதை இப்படி பேசப் படுவதாயிற்று.

இக்கதையைக் கேட்டிடும் எவராயினும் இதை உண்மை என்று நம்பி விட மாட்டார்கள். ஏதோ பேத்தல் என்று எத்துணையோ பேர் சொல்லிக் கேட்டதும் உண்டு. மேலை நாட்டினர் இதனை Mythology என்று சொல்லி ஒதுக்கியும் விட்டனர். இதற்கு யாதொரு முக்கியத்துவம் இதுவரை கொடுத்தார்கள் இல்லை.

இந்த நிலையில் வாஸ்து சாஸ்திரங்களும் ஆகம சாஸ்திரங்களும் இந்த மகா பூதத்தை பிரபஞ்ச நுட்பப் பொருளாகவும், முதற் பொருளாகவும், வணக்கத்திற்குரிய பொருளாகவும் கொண்டு, வீடு - மனை, கோயில் - குளம், நாடு - நகரம். மற்றும் புதுமனை புகுவிழா மற்றும் லௌகிக - காரியம் அனைத்தையும் தொடங்கும் போது இந்த வாஸ்து புருஷனை பூசித்தல் வேண்டும் என்றும் பூசித்த பின்னரே காரியங்கள் தொடங்கப் பட வேண்டும் என்றும் இவற்றை மரபாகவும் விதியாகவும் வைத்து வழிபாட்டு நெறியில் முதற்படியாகக் கொண்டிருந்தார்கள். இத்தகைய வழக்கு அண்மைக் காலத்தில் உயிர் பெற்று மீண்டும் நடைமுறைக்கு வந்து கொண்டிருக்கிறது. காரணம் இக்கால விஞ்ஞானியர்கள் தங்கள் கையில் வைத்துத் துருவித் துருவி ஆராய்ந்து கொண்டிருப்பது இந்த வாஸ்து புருஷ தத்துவத்தையும் வாஸ்து புருஷ மண்டலத்தையும்தான்.

நான் இது பற்றி உங்களிடம் சொல்ல விரும்பியது யாதெனில் இஃது இந்திய விஞ்ஞானத்தின் ஒரு Big Bang theory என்று சொல்ல விரும்புகிறேன். விண்வெளியில் தானாகவே ஜெனித்து, ஜெனித்த ஒன்று தானாகவே வெடித்து தன்னை அணுக்களாக சிதறடித்துக் கொண்டு அண்டத்தைப் பிளந்து கொண்டு வெளிவந்து பல பிண்டங்களாக உருமாறிய, தொடக்க நிலையில் நிகழ்ந்து போன "பிரபஞ்ச சிருஷ்டி கால நிகழ்ச்சியாகும்."

இத்தகைய நிகழ்ச்சியானது ஒவ்வொரு வினாடியும் நமக்குள்ளே நிகழ்வதாக பலமுறை சொல்லி வந்ததை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து மீள்பார்வை செய்திட்டால் இந்த Big Bang theory என்பது பிரபஞ்ச சிருஷ்டி கால நிகழ்ச்சியாக மட்டுமல்லாமல் எப்பொழுதும் நிகழ்ந்துக் கொண்டு இருக்கும் நிகழ்ச்சி என்பதும் புலனாகும்.

அதாவது விண்ணே உணர்வுற்று ஒளியாகி உருகி உருக்கொண்ட வடிவங்கள்தான் இந்த ஞாலத்தில் ஞாலப் பொருள்களாக மிளிர்கின்றன என்று முன்பு சொன்னேன் அல்லவா? அதைப் பெரிதுபடுத்தி, குறிப்பிட்டுப் பேசிய, விஞ்ஞான நிகழ்ச்சிதான் வாஸ்து புருஷ இலக்கணத்தில் சொல்லிட்ட கதையின் சாரமாகும்.

எனவே 'அணோர்அணீயான், மஹதோ மஹீயான்' என்ற பிரம்ம சூத்திரத்தைப் பின்னணியாக வைத்து இந்தப் பிரபஞ்சக் கட்டடத்தை ஆழ்ந்து பார்ப்போம். விண் அணுவானது கனசதுர வடிவம் கொண்டதாக முன்பு காரண காரியத்தோடு சொல்லியதை நினைவுபடுத்திக் கொண்டு பார்த்தால் இந்தப் பிரபஞ்சத்தின் வடிவமும், மகத்தானதொரு கனசதுரமாக இருக்கும் அல்லது இருக்கிறது என்று தர்க்க ரீதியாகக் காணலாம். இங்ஙனம் அணு நிலையில் கனசதுரமாக இருப்பது அந்த நுண் அணுவின் இயல்பாகும் என்பது வாஸ்து விஞ்ஞானத்தின் முடிவு ஆகும். இந்த அணுதான் தனது தாமஸ நிலையாகிய மூன்றாவது நிலையில் கோளமாக உருமாறி விடுகிறது என்பதுதான் அதைத் தொடர்ந்து வரும் தேற்றமாகும். இதைப் புரிந்து கொள்வதற்கு விதைக்குள் ஆலமரமும் ஆலமரத்துக்குள் விதை இருக்கும் சூட்சுமத்தை நினைவுபடுத்திக் கொண்டாலே போதுமானது. இந்தப் பிரபஞ்ச நுட்ப நிலையும் (fractal universe), திட்ப நிலையும் (whole) இப்படித்தான் இருக்கின்றன. இதைச் சுருக்கமாக தமிழ்க் கலை மரபில் "அணுவே அண்டமாகிறது" என்று சொல்லிட்ட


கருத்து ஒன்று நிலவுவதாயிற்று. இவ்வடிவொற்றிய நடராசன் அணுவுக்குள்ளிருந்தும் அண்டத்துக்குள்ளிருந்தும் ஒரே ஆட்டத்தைத்தான் ஆடுகிறான் என்ற விளக்கமும் வாஸ்து சமய மரபுகளில் காணலாம்.

வாஸ்து புருஷ மண்டலத்திலே அடைபட்டு இருப்பது ஒளி (light) விண்ணின் ஒரு பகுதியாகும். விண்ணே மண்ணாயிற்று என்று முன்பு சொன்னேன் அல்லவா? அத்தேற்றத்தின் கோணத்திலிருந்து இந்த உலகைப் பார்த்தால் இந்த மண்வெளியும் மண்வெளியின் ஒரு பகுதியும் ஒன்றேதான் என்பது துலக்கம் பெறும். இந்தச் சதுர வடிவத்தை பூமியிலே வரைந்து அவ்வரை கோட்டின் மீது நீள, அகல, உயரம் கொண்டு கட்டப்படும் கட்டடம் வாஸ்து புருஷ மண்டலத்தின் மீதமர்ந்த கட்டடம் ஆகும் என்று சொன்னால், அதுவே பிரபஞ்சாகாரம் என்று சொனனால் உங்களுக்கு நன்றாகப் புரியும் என்று நினைக்கிறேன்.

நான் இவ்வளவு தூரம் வாஸ்து புருஷ மண்டலத்தின் தோற்றத்தைச் சொல்லிய நிலையில், இம்மண்டலத்தைப் பற்றிய பிற நுட்பச் செய்திகளை ஒதுக்கி வைத்து விட்டு மாறுகால் தாண்டவத்தை இந்த வாஸ்துபுருஷ மண்டலத் திற்குள் வைத்துக் காட்டி விண்ணே மண்ணாகிறது என்ற கருத்தையும் விண்ணின் mirror image தான் மண்வெளி என்பதையும் சாஸ்திர ரீதியாக ருசிப்பிப்பதற்கு மேற்கொண்ட முகவுரைதான் இதுகாறும் நான் சொல்லி வந்தது எல்லாம்.

இப்பொழுது நடைமுறைத் தொழில் துறைக்கு வந்திறங்கி வாஸ்து புருஷ மண்டலத்தை உற்று நோக்குவோம். வாஸ்து விஷயத்தை ஓரளவாவது தெரிந்து கொண்டிருக்கும் பெரியோர்களுக்கு இனிச் சொல்லப் போகும் விஷயங்கள் அன்றாட விஷயங்களாகவும் எளியதாகவும் இருக்கும். வாஸ்து புருஷ மண்டலத்தை படமாகக் காட்டிடும் போது

அப்படத்தின் மீது வாஸ்து புருஷனுடைய உருவப்படத்தையே வரைந்து காட்டியிருப்பார்கள். வாஸ்து புருஷ நாபியை வாஸ்து புருஷ மண்டலத்தின் மையமாகக் கொண்டு மேல் உடம்பையும், தலையையும் கோண வாக்கில் வைத்து



வாஸ்துபுருஷன் கிடக்கை

(putting the figure along the diagonal line of the square) கால்களை மடக்கி இரு பாதங்களையும் எதிர் மூலையில் ஒன்று சேர்த்து அமையுமாறு வைத்து, கைகளை மடக்கி கைத்தலங்களை அஞ்சலி முத்திரையோடு அமைத்து முழங்கைகளைக் கோணங்களை முட்டி நிற்குமாறு செய்து (putting the elbows along the next diagonal line) அம்மண்டலத்தை முழுமையாக ஆக்ரமித்துக் கொண்டு இருக்குமாறு அமைப்பார்கள். பரவெளியை வாஸ்து புருஷன் என்ற மகா பூதம் தொடக்க காலத்தில் எங்ஙனம் வியாபித்துக் கொண்டிருந்தது என்பதைக் காட்டும் வரைபடமாக இருப்பதைக் காண்க. இதுதான் வாஸ்து பூதத்தின் உறுப்புகளின் அமைதி என்று தலைமுறை தலைமுறையாக வரைந்தும் சொல்லியும் வருகிறோம். விதைக்குள் ஆலமரம் இப்படித்தான் நுண்பொருளாக அடக்கமுற்றுக் கிடக்கிறது என்றும் சொல்லலாம். நாமும் நம் முன்னோர்களும் இப்படித்தான் விந்து என்று சொல்லப்படும் விண்

அணுவுக்குள் கை, கால்களை முடக்கிக் கொண்டு ஆலமரம் விதைக்குள் கிடந்தது போல இருந்து, பிறகு அந்த வாஸ்து புருஷத் துடிப்பாலும், துடிப்புக் கணக்காலும் சிறிது சிறிதாகப் பருத்து, பெருத்து, இன்று பார்க்கும் பெரு வடிவமாக உருமாறி இருக்கின்றோம் என்றால் உங்களால் ஏற்க முடிகிறதல்லவா? ஆகையாற்றான் அணுவைப் பிளந்து வெளி வந்த குழந்தை முதல் அத்துணை ஜீவ ராசிகளும் 'வாஸ்து புருஷன்' என்று வாஸ்து விஞ்ஞான மரபில் சொல்லி வருகிறோம்.

வாஸ்து புருஷனுடைய படம் அங்ஙனம் பொதுவாக இருக்க, மானசாரம் போன்ற பிற நூல்களில் வாஸ்து புருஷனுடைய அமைதி அங்ஙனம் காட்டப்படவில்லை. நான் ஒன்றை சொல்லப் போகிறேன். அதைக் கேட்கும் பண்டிதர் முதல் அனைத்து மக்களும் ஆச்சரியத்தால் மூக்கில் விரல் வைக்கப் போகிறீர்கள். மானசார வாஸ்து சாஸ்திரத்தின் வாஸ்து புருஷனை மாறுகால் தாண்டவ நடராசக் கோலத்தில் சித்தரித்திருப்பதைத்தான் இங்கு சொல்கிறேன். வாஸ்து புருஷன் உடல் அமைப்பை மானசார இலக்கணப்படி வரைந்து பார்த்தால் இது தெள்ளிதில் புலனாகும். இதனை ஏன் சொல்கிறேன் என்றால், இந்தப் பிரபஞ்சமானது வஸ்து புருஷனாகிய நடராசனின் பிரதி பிம்பமாக (mirror image) கொள்ளப் பட்டிருப்பது ஒரு விஞ்ஞான அதிசயமாகும். அதாவது வஸ்து புருஷன் வாஸ்து புருஷனாக மாறிய நிலைதான் இந்த பிரபஞ்ச நிலை என்பதை அழகுபட இந்த நூல் சித்தரிக்கிறது. மகா பூதத்தை தேவர்கள் குப்புறத் தள்ளினார்கள் என்ற கதை ஒரு விஞ்ஞான நுட்பம் என்று சொன்னால் நம்முடைய mythological language எத்துணை அழகாக அவ்வரிய கருத்தைக் காப்பாற்றி விட்டது பார்த்தீர்களா? எனவே மாறுகால் தாண்டவம் சம்ஹார தாண்டவம் அல்ல என்றும் வாஸ்து புருஷன் வாஸ்துவுக்குள்ளிருந்து எப்பொழுதும் உயிர்ப்புடனும்

துடிப்புடனும் கிடக்கின்றான் என்ற செய்தியை உள்ளடக்கி இருப்பதை உணரலாம். எனவேதான் நான் முன்பு சொன்ன வண்ணம் விஷ்ணுவின் மேற்கரங்களில் வலது கையில் சக்கரமும் (அக்னியும்) இடது கையில் சங்கும் இடம் மாறி அமைந்திருந்த நுட்பத்தைச் சொன்னேன். இக்கருத்தை எவர் மறுத்தாலும் இக்கால விஞ்ஞானியர் நூற்றுக்கு நூறு ஏற்பர் என்று துணிந்து சொல்லுவேன்.

இங்ஙனம் ஒவ்வொரு அணுவிலும் வாஸ்து புருஷன் உயிர்ப்புள்ள பொருளாக இருக்கிறான் என்பது தேற்றமாகிறது. வஸ்து புருஷனாகிய நடராசன் போல துடிப்புமிகக் கொண்டு வெளிப்படுபவன் இல்லையானாலும் வெளிப்பட்டதை எதிர் ஒளிப்பவனாக இந்த வாஸ்து புருஷன் இருக்கிறான் என்றால் இதனையும் விஞ்ஞானியர் ஏற்பர் என்றே கருதுகிறேன். இங்ஙனம் விதைக்குள் அடங்கிய மரம் போல மண் அணுவுக்குள் அடங்கிய பொருளாய் இருப்பதைத் துயில் நிலை என்று நமது முன்னோர் கொண்டு சயனக் கோலத்தில் விஷ்ணுவை அமைத்துக் காட்டினார்கள். இந்த விஞ்ஞானத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? வாஸ்து விஞ்ஞானம் $E = mc^2$ என்ற நிலையிலிருந்து தொடங்கி விண் நோக்கிச் செல்லும் விண்-ஞானமாக இருக்கிறதா? இல்லையா? மனம் திறந்து சொல்லுங்கள். வாஸ்து விஞ்ஞானத்தை உற்று நோக்கி ஆய்வு செய்யுங்கள். விஞ்ஞானிகளிடம் பேசுங்கள். விஞ்ஞானிகள் அனைவரது ஆதரவையும் திரட்டித் தாருங்கள்.

மண்ணில், மண் அணுக்களில் ஒடுங்கித் துடிப்புடன் திகழும் வஸ்து புருஷனின் அமைதியே மதுரையம்பதியில் மாறுகால் தாண்டவமாக உளதென்பதும், இக்காரணம் பற்றியே அத்தாண்டவக் கோலம் கல்லால் செய்யப்பட்டிருக்கிறது என்றும் நன்கு புலனாகிறதல்லவா? மதுரைச் சிற்பிகளின் மதி நுட்பத்தை மனம் திறந்து பாராட்டுவீர்களா?

பொறுமையோடு படித்திட்ட, கேட்டிட்ட உங்கள் அனைவர்க்கும் வணக்கம் கூறி அமைகிறேன்.

விண்-ஞானக் கோயில்கள்
Temples of Space Science

3

பின்னுரை

நமது பாரத நாட்டில் பிறந்த சிற்பிகள், தென்னாட்டிலேயும் சரி, வடநாட்டிலும் சரி, மகத்தானதொரு கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலை மரபைத் தழுவியும் ஒழுகியும் வருகிறார்கள். இதனைத்தான் "வாஸ்து சில்ப மரபு" என்று காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையிலும், கூர்ஜரம் முதல் வங்காளம் வரையிலும் வாழ்வோர் சொல்லி வருகின்றார்கள். ஒரு காலத்தில் முழுக்க முழுக்க ஒரே நடையில் ஒழுகிவரப்பட்ட இந்தக் கலை மரபில் நாளாவட்டத்தில் தொழில் வழிப்பட்ட பல கட்டட அமைப்புகள் (types) தோன்றுவதாயின. பல அமைதிகள் தோன்றுவதற்கு மேலெழுந்த காரணம் யாதெனில், ஆங்காங்கே கிடைத்திட்ட கட்டட நிர்மாணப் பொருள்களும் அவற்றின் இயல்பும், இயற்கைச் சூழ்நிலையுமேயாகும் என்று ஆய்வர் கூறுவர். அதோடு அவை குணபேதத்தால் ஏற்பட்ட அமைதிகள் என்பதை முன்சென்ற கட்டுரையில் பார்த்தோம். மரபின் அடிப்படைக் கருத்தில் இந்நாள் வரை சிதைவு ஏதும் ஏற்படவில்லை என்று உறுதியாகக் கூறலாம். அங்ஙனம் தோன்றிய அமைப்பு முறைகளில் நாகரம், திராவிடம், வேஸரம்

ஆகிய மூன்று அமைதிகள் முதலில் தோன்றிப் பிறகு ஆந்திரம், காளிங்கம், வாராடம் என்று மேலும் மூன்று அமைதிகள் இணைந்திட, இறுதியாக ஆறு சிறப்பான அமைதிகளும் நடைமுறைகளும் தோன்றலாயின. இவற்றை அமைதிகள் (types) என்று சொல்ல வேண்டுமே தவிர நடைகள் (styles) என்று சொல்லக் கூடாது. ஆனால் இலக்கணத்தைப் பொறுத்த வரையில் அவை எல்லாம் வாஸ்து சில்ப மரபு என்ற ஒரு பொது மரபைச் சேர்ந்தவையே என்று ஆய்வர்கள் உற்றறிதல் வேண்டும்.

இருபதாவது நூற்றாண்டில் தொல் பொருள் ஆராய்ச்சி யாளர்கள் பழைய சின்னங்களை ஆராய்ச்சி செய்து நூல்கள் பல எழுதிட்ட நேரத்தில், இவை வேறு பல பெயர்களைத் தாங்குவதாயின. இந்தியா அகண்டதொரு துணைக் கண்டமாகவும் (ஜம்பூத்வீபம் நாவலந்தீவு என்பது பழைய பெயர்) பல மொழிகள் பேசிடும் மக்கள் வாழ்ந்திடும் நாடாகவும் இருக்க நேரிட்ட காலத்தில் இந்நாடு மொழி வழிப் பிரிவுண்டு பல ராஜ்யங்களாகப் பண்டு தொட்டு விளங்கி வருவதாயின. ஆங்காங்கே அரசோச்சிய மன்னர்கள் பேராதரவு நல்கி இக் கலை மரபைக் காத்தும் வளர்த்தும் புதிய அமைதிகள்ளத் தோற்றுவித்தும் வந்தமையால் தத்தம் அரச பரம்பரைகளின் பெயரையே தத்தம் மாநிலக் கலைப் படைப்புகளுக்குச் சூட்டிடும் ஒரு புதிய முறையை இக்காலத்து ஆய்வறிஞர் பின்பற்றினார்கள். உதாரணமாக மேலை நாட்டு ஆராய்ச்சி யாளர்கள் நமது கலை மரபு விஷயங்களிற் புகுந்து ஆய்வுகள் பல நிகழ்த்திய காலத்தில் சேர, சோழ, பாண்டிய, சாளுக்கிய, ஹோய்சால, ராஷ்டிரகூட என்ற பல மாநில மன்னர்களின் வம்சப் பெயர்களைச் சூட்டி வேறுபடுத்தியும் சிறப்பித்தும் காட்டுவாராயினர். ஆனால் இந்தப் படைப்புகளுக்குள்ளே இருந்து இந்த நடைமுறைகளை ஒழுகி வந்த சிற்பி

களுக்குள்ளே வேறுபாடுகளோ, போட்டிகளோ, பூசல்களோ, சண்டை சச்சரவுகளோ, கருத்து வேறுபாடுகளோ யாதொன்றும் இதுவரை ஏற்பட்டதே இல்லையாயினும் இந்த வம்ஸப் பெயர்கள் இக்கால வரலாற்று நூல்களில் நின்று விட்டன. இதனைப் பார்க்க நேரிட்ட இக்கால மக்கள், ஒரே மரபைச் சார்ந்து வளர்ந்து வந்த இக்கலை மரபைப் பிரித்துப் பேசிடவும், பிரித்து எழுதிடவும், பிரித்துக் காட்டிடவும் முற்பட்டார்கள். இதனால் இந்திய மரபு ஏதோ ஒரு மொசைக் தளமிட்ட நிலம் போன்று இன்று காட்சியளித்து வருகிறது. இப்படி இருக்கக் கூடாது. நாட்டின் உணர்ச்சி பூர்வமான ஒருமைப் பாட்டை இது சிதைத்து விடும் என்பேன்.

இவ்வளவு விரிவுகள் ஏற்பட்ட போதும் நான் முன்பு சொன்னது போல, அந்தக் கலை-ஞானமும் கலைத் தொழில் நுட்பங்களும் ஒரேயொரு மரபைச் சார்ந்து நிற்கின்றன என்பதை மீண்டும் வலியுறுத்திட விரும்புகிறேன். வேதம் என்பது எப்படி இந்த நாட்டுக்குச் சொந்தமோ, பொதுச் சொத்தோ, அது போல இந்தக் கலை மரபும் இந்த நாட்டுக்குச் சொந்தமானதும் பொதுச் சொத்துமாகும். வேத பாராயண முறையில், உச்சரிக்கும் முறையில், மாநில வேறுபாடுகள், மாநில நடைகள் தோன்றி விட்டதைப் போல, வாஸ்து சில்பக் கலை மரபில் மாநில வேறுபாடுகள் தோன்றி விட்டன என்று கூறிடலாம்; அவ்வளவுதான். இந்தப் பாரத நாடு தனித்ததொரு பரந்த நாடு அதாவது "ஏகஇந்தியா" என்று சொல்லவும், கட்டிக் காத்திடவும் அடிப்படையாக விளங்குவது இந்த வாஸ்து வேதமும், அதன் தனித்தன்மையும், அதனால் விளைந்திட்ட விசேட வாழ்க்கை முறையும் ஆகும் என்பதை இங்கே சொல்லி வைத்திடல் தகும் என்று கருதுகிறேன். இக் காலத்தில் ஒரு குழப்பம் இருப்பதால் இதனைச் சொல்ல வேண்டியவனாகிறேன்.

மேலுமொரு செய்தியை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். வாஸ்து சாஸ்திரம் என்று சொல்லப்படும் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலை நூல்களில் எந்தவொரு மன்னனின் பெயரோ, மாநிலத்தின் பெயரோ எந்த இடத்திலும் குறிப்பிடப் படவில்லை என்பதை அழுத்தத்துடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் கல்வெட்டுகளில் கலைச் சின்னங் களை வடிவமைத்துப் பணி செய்திட்ட சிற்பியின் பெயரும், கட்டுவித்த மன்னன் பெயரும் இடம் பெறுகின்றன. அதே நேரத்தில், நூலாசிரியர்களின் பெயர்களைத்தான், இலக்கண நூல்களில், ஏதோ இங்கொன்றும் அங்கொன்றுமாகக் காணலாமே தவிர அரசர்கள் பெயரோ, மாநிலங்களின் பெயரோ, மொழியின் பெயரோ நூல்களுக்குள் காணப்படவில்லை. இக் கலை மரபானது தனித்தவொரு மரபாகவே அன்று முதல் இன்று வரை இருந்து வருகிறது. வேறு எந்தவொரு உலகக் கலை மரபினையோ அதன் கூறுகளையோ கடனாகப் பெற்றோ, தழுவியோ வாஸ்துசில்பக் கலை மரபு தோன்றிட வில்லை என்பதையும் வலியுறுத்திச் சொல்லிட விரும்புகிறேன். `யவனத்தச்சரும், மராட்டக் கம்மரும், நண்டமிழ் நாட்டுக் கைவினைஞரும்' ஓரிடத்தில் ஒருமித்துப் பணி செய்திட்ட குறிப்பொன்றை சிலப்பதிகாரக் காப்பியத்தில் நாம் காண்கிறோமல்லவா?

நானும் இந்த் நூற்றாண்டில், 18 ஆண்டுகளுக்கு முன்பு "சிற்பச் செந்நூல்" என்ற சிற்பக் கலை சார்ந்த ஆய்வு நூல் ஒன்றை எழுதினேன். அந்நூலின் முகவுரையில் இக் கலை மரபைக் காத்து வளர்த்திட்ட மன்னர்களை நன்றி யுணர்வோடு அவர் தம் பரம்பரைகளைக் குறிப்பிட நேர்ந்ததே தவிர நூலின் உள்ளே எந்தவொரு பரம்பரையின் பெயரையும் இணைக்கவோ பேசிடவோ முடியவில்லை, பொருந்தவுமில்லை. பெருங்காரணம் யாதெனில், இந்த வாஸ்து சில்ப மரபு,

செம்மையானதொரு மரபாக வரலாற்றுக் காலத்துக்கு முன்னரே அமைந்து விட்டதேயாகும். இதன் அடிவாரம் எங்கேயோ உளது. அதன் இலக்கணங்களையும், கோட்பாடு களையும் மாற்றிடவோ, புதுப்பித்திடவோ எவராலும் முடிய வில்லை. ஆனால் இவற்றைப் பெருக்கிட முடிந்தது என்று சொல்லலாம். இந்த முறையிற்றான் நமது இயலும், இசையும், நடமும் அடி'முடி தெரியா நிலையில் இருப்பதாகச் சொல்லத் தோன்றுகிறது. அடிமுடி காண விழையும் போதுதான் குழப்பங்கள் தோன்றுகின்றன. நமது சமயம் கூட இப்படித்தானே உள்ளது என்றாலும் அடி' என்ற ஒன்று இருக்கிறதா என்று தேட வேண்டியதும், தெரிந்து கொள்ள வேண்டியதும் இக்காலத்தில் தேவையாகிறது. இல்லாவிடில் இந்த வாஸ்துக் கலைமரபே மறைந்தும் கைவிடப்பட்டும் விடுமோ என்ற அச்சம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. இக் கலைக்கு ஏற்பட்டிருக்கும் இன்றைய ஆதரவு அவ்வளவு வலுவாக இல்லை என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. பிற்காலச் சமயக் கொள்கைகளும் இதில் புகுந்து விட்டதால் சமயத்தை வெறுப்போர் இக்கலை மரபை மறைமுகமாகவும், நேரடியாகவும் ஒதுக்கித் தள்ளிவிட முயற்சிக் கிறார்கள். அதுமட்டுமல்ல, இந்த வாஸ்துக் கலை மரபு நூல்கள் சமஸ்கிருதத்தில் இருந்து வருகிறதால் இம்மொழி தெரியாதவர்கள் இம்மரபுக்கு ஆதரவு காட்டிடத் தயங்கு கிறார்கள். இயல், இசை, நடம் ஆகிய மூன்று துறைகளுக்குக் கிடைத்திட்ட பேராதரவு, இந்த வாஸ்துக்கலை மரபுக்கு நவ இந்தியாவில் கிடைக்கவில்லை என்பதையே நான் காணுகிறேன். ஒரு மாற்றான் தாய் மனப்பான்மை விரவி நிற்பதை இக்காலத்தே காண்கிறேன். இந்தக் கலை மரபின் `மூலத்தை' மறந்து விட்டதால், இல்லை, இந்த மூலம் மறைந்து விட்டதால் நாம் குழம்பிப் போனோம். இம்மரபு

யாரைச் சேர்ந்தது என்ற விஷயத்தில் ஒரு வினாக்குறி தோன்றி விடையின்றித் தாமரை இலை நீர்த்துளி போல காட்சி தருகிறது, தத்தளிக்கிறது. இந்த நிலையில் மேலை நாட்டுத் தொழில் மரபும் விஞ்ஞானமும் நம் நாட்டில் வெகுவாக வேரூன்றி விட்டதால், இக்கலை மரபு மறைந்து போய் விடுமோ என்ற அச்சமும் விசனமும் மேலிட்டு விட்டன. இவையெல்லாம் அறியாமையால் தோன்றியவை என்றே எனக்குச் சொல்லத் தோன்றுகிறது. எனவே என் பயணத்தை "வேர்களைத் தேடி" மேற்கொண்ட பயணம் என்று சொல்லுவேன். இஃதொரு ஆத்ம சோதனையே. It is a colourless search for truth. இந்தச் சோதனையைத்தான் அடிமுடி காணச் சென்ற பிரம்மனும், திருமாலும் செய்தார்கள் என்பேன். இந்த நிலையில் இந்த மூலத்தை நமது பண்டை மகரிஷிகள், பண்டை இலக்கியங்கள், பண்டை மரபு இலக்கணங்கள் மறைக்காமல் பேசியிருக்கின்றன. ஆனால் நாம்தான் அவற்றை விருப்பு வெறுப்பின்றிப் பார்த்து, ஆய்ந்து கண்டு கொள்ள, போற்றிடத் தவறி விட்டோம். இனிமேல் உள்ளது உள்ளபடி வெளிவந்து விடும்; வரவேண்டும். அறியாமையின் பால் நாம் இந்தத் தவற்றை ஒதுக்கிடவோ, சுமத்திடவோ முடியாது. இப்போது மக்களாட்சி நடைபெற்று வருவதால், இந்நாட்டு மக்கள் அனைவரும் நன்றாகப் படித்து, கல்வி கேள்விகளில், ஆராய்ச்சிகளில் சிறந்தவர்களாகவும், புதிய பாதையை வகுத்துக் கொண்டு புதியன காணும் திறனுடையவர்களாகவும், வடநாடு, தென்னாடு, நடுநாடு, கீழை நாடு, மேலை நாடு, ஆசிய நாடு, ஐரோப்பிய நாடு என்ற எந்தப் பாகுபாடும் இல்லாது எல்லா நாட்டு அறிஞர்களும் பண்டைச் சின்னங்களையும், நூல்களையும், மரபுகளையும் விருப்பு வெறுப்பின்றி ஆய்ந்து பல புதிய செய்திகளைத் தந்து கொண்டிருக்கிறார்கள். இனி இவற்றை ஏற்பதைத் தவிர வேறு

வழியில்லை என்றே சொல்லுவேன். உதாரணமாக அ, இ, உ,எ, ஒ என்ற ஐந்து ஒலிகளை - உயிரெழுத்துக்களை - மூல ஒலிகளாகக் கொண்ட தமிழ் இலக்கண மரபு, ஆங்கில இலக்கண மரபின் a, e, i, o, u க்களுக்கு எப்படி ஒத்து நிற்க முடிகிறது என்ற அளவுக்கு ஆராய்ச்சி முனைகள் எட்டிச் சென்றிட இன்று முடிகிறது. ஐந்து ஸ்வரங்களையே மூலஸ்வரங்களாகக் (ச, ரி, க, ப, த) கொண்டெழுந்த இசை மரபில், ஏழு ஸ்வரங்கள் ச, ரி, க, ம, ப, த, நி தோன்றியதற்கு ஒப்ப, ஐந்து மூல ஒலிகளையே உயிரொலிகளாகக் கொண்டு, அதன் பிறகு அவை ஏழு ஒலிகளாக(அ, இ, உ, எ, ஒ, ஐ, ஔ) என்று வளர்ச்சியுற்று, இறுதியில் 12 உயிர் ஒலிகளாக, (மேற்சொன்ன ஏழு ஒலிகளோடு அடிப்படையான 5 மூல ஒலிகளின் நெடில் ஒலிகளையும் (ஆ, ஈ, ஊ, ஏ, ஓ) சேர்த்து (5 + 2 + 5 = 12 ஒலிகள்) ஆயின என்ற இக்கால ஆய்வு வியப்பாக இருக்கிறதல்லவா? இசையில் இனிய ஒலிகள் அதாவது சப்த ஸ்வரங்களும் ஐந்து அனுஸ்வரங்களும் சேர்ந்து 12 ஆகத் தோன்றியது போல தமிழ் மொழியில் 12 உயிர் ஒலிகள் இவற்றுக்கு ஒத்து நிற்கின்றன. இதனைப் பார்க்கும் போது, தமிழ் ஒலியே இசையோசையாக - இசையொலியாக - இயல்பில் இருந்திடும் நுட்பம் ஒன்று தெளிவாகிறதல்லவா? இப்படியெல்லாம் இக்கால ஆராய்ச்சிகள் புதுமையாகவும், வலுவாகவும் சென்று கொண்டிருக்கின்றன. மேலும், சேக்ஸ்பியர் படைத்திட்ட பாத்திரங்களில் ஆண்டனியின் (ANTONY) கிளியோபேட்ராவைக் (CLEOPATRA) கேரள நாட்டு நங்கை என்று ஓர் அமெரிக்க ஆராய்ச்சியாளர், 25 ஆண்டுகள் தொடர்ந்து பல நாட்டு பண்டை இலக்கியங்களை ஆய்ந்து தேடிக் கண்டு நிறுவியுள்ளார் எனும் போது இக்கால ஆராய்ச்சியைச் சாதாரணம் என்று ஒதுக்கித் தள்ளிட முடியாதல்லவா? பிற நாட்டுப் பெண் என்று அந்த அமெரிக்கர்

கிளியோபேட்ராவை ஒதுக்கித் தள்ளி விடவில்லையே! மேலும் படித்தறிய முடியாது கிடந்த மொகஞ்சதரோ எழுத்துக்களை இப்போதுள்ள பேரறிஞர்கள் படித்துச் சொல்லுகிறார்கள். அதே போல அமெரிக்க நாட்டைச் சேர்ந்த மெக்சிகோவில் மாயன் என்ற ஒரு விஞ்ஞான மேதையானவன், தொன்மைமிகு கலாச்சாரம் ஒன்றை நிறுவி காலக்ஞானத்தில் (Science of Time) கூர்மதி படைத்தவனாகவும் காலத்தின் சின்னங்களாக பல தூண்களையும், பிரமிடுக் கட்டடங்களையும் (pyramidal structure and pillars) வேறுபல எழுத்தோவியங்களையும் செய்திட்டான் என்ற அளவில் இருந்த ஆய்வுகள் இப்பொழுது அந்த மாயன் என்பான் இந்திய நாட்டில் பிறந்த மயன் என்ற ஒரு கட்டடக் கலைஞன்தான் என்று, அவனுடைய கல்வெட்டுக்களைப் படித்தும் கட்டடக் கட்டுமானத்தையும், நுட்பத்தையும் சோதித்தும் சொல்லுகிறார்கள். இதுமட்டுமல்ல. கண்டு கொள்ளாமலும், கண்டு பிடித்துச் சொல்ல முடியாமலும் பல நூறு ஆண்டுகள் மறைந்து கிடந்த சூரிய சித்தாந்தம் என்ற இந்திய வானசாஸ்திரத்தின் மூல ஆசிரியனே இந்த மயன்தான் என்ற உறுதிப்பாடொன்று இக்காலத்தில் நிலவுகிறது. சூரிய சித்தாந்தத்தில் காணும் வானவியல் செய்திகள் மெக்சிகோவில் கட்டடங்களாகவும், சின்னங் களாகவும் இருக்கக்கூடும் என்ற அனுமானங்கள் வலுப் பெறத் தொடங்கியுள்ளன. எகிப்திய நாகரிகத்திற்கும் அங்கு தோன்றிய பிரமிடுகளுக்கும் இவனோ, இவன் பின்னோர்களோ காரணமாக இருக்க முடியுமா என்ற வினாக்கள் உலக அளவில் எழுந்து இப்போது அவை பேசப்பட்டும் ஆய்வுக்குள்ளாக்கப்பட்டும் வருகின்றன. இதே போல் சமஸ்கிருத மொழிக்கு முன்பாக பிரிதொரு மொழி மூல மொழியாக இருந்திருக்கிறது. அதனை பிராகிருதம் என்று சொல்லுவார்கள். இந்தப் பிராகிருதமே சமஸ்கிருதத்திற்கு

மூலம் மட்டுமல்லாமல் பாலி, அர்த்தமாகதி என்ற வேறு இரண்டு மொழிகளுக்கும் தாயாக இருந்திருக்கிறது என்ற கருத்தை பிராகிருத மொழி ஆராய்ச்சிகள் வெளிப் படுத்துகின்றன. இப்போது பிராகிருதத்தின் மூலமே தேடப்பட்டு வருகிறது. இங்ஙனம் வரலாற்றின் பல அடிமட்டங்களுக்கும் செல்லக் கூடிய ஆய்வுச் சூழ்நிலை யானது இந்திய மட்டத்திலும் உலக மட்டத்திலும் இன்று காணப்படுவதை நாம் மறந்து விடுதலோ மறுத்திடுதலோ இயலாது என்றும் தெரிகிறது. அந்த வரிசையில் இந்த மயனும், மாயனும் தேடப்பட்டு வருகிறார்கள்.

என்னைப் பொறுத்த வரையில், இந்திய வாஸ்துக்கலை மரபைப் பொறுத்த வரையில், இந்த வாஸ்துக் கலைத் துறைக்கு ஒரு விஞ்ஞானியாக இந்த மயன் இருந்திருக்கிறான் என்பதிலும், இவன் அதிசய விஞ்ஞான மரபு ஒன்றை இந்த மண்ணில் தோற்றுவித்திருக்கிறான் என்பதிலும் சந்தேகமே இல்லையாயினும் பெரும்பாலும் உலக நாடுகளில் இப்பொழுது மயன் - மாயன் பற்றி புதிய கருத்தொன்று நிலவி வருகிறது. 'வாஸ்து புருஷ மண்டலம்' என்ற ஓர் அபூர்வ விஞ்ஞானக் காட்சியே இந்திய வாஸ்துக்கலை மரபின் பிறப்பிடமாகவும் அடிப்படையாகவும் விளங்குகிறது. இது 8 x 8 = 64 சம சதுரங்களை உள்ளடக்கிய ஒரு பெரிய சதுரம். இதுதான் பிரபஞ்சம் என்ற கட்டுக் கோப்பின், இல்லை, கட்டடத்தின் கிடைப்படம் (plan of the universe) என்பது வாஸ்து விஞ்ஞான ரகஸ்யம். இதனைக் கண்டுபிடித்தவன் இந்திய மயன். இப்போது இந்த வாஸ்து புருஷ மண்டலமானது மெக்ஸிகோ வில் 'மாயன் காலண்டர்' என்ற பெயரில் இருப்பதாக வெளியாகியுளது. இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? இந்த மரபைச் சேர்ந்த சிற்பிகளைப் பொறுத்த வரையில் மயனின்

வாஸ்துக் கலை மற்றும் வாஸ்து விஞ்ஞானத் தொடர்பு பற்றி யாதொரு கருத்து வேறுபாடும் இப்பொழுதும் எப்பொழுதும் ஏற்பட்டதில்லை என்றாலும் 'மயன்- மாயன்' தொடர்பு பற்றிய கருத்தை வலுப்படுத்தவும் உறுதி செய்திடவும் அவன் கண்டிட்ட விஞ்ஞானத்தையும் அவ்வழி பிறந்திட்ட தொழில் நுட்பத்தையும், படைப்புகளையும் பொது மக்கட்குச் சொல்லவும் நான் என்னுடைய பல்வேறு பணிகளுக்கிடையே கடந்த 35 ஆண்டுகளாக ஆய்வு ஒன்றைச் செய்து வருகிறேன் என்பதை வெளிப்படுத்திட விரும்புகிறேன். இதைத்தான் 'வேர்களைத் தேடி மேற்கொண்ட பயணம்' என்று முன்பு குறிப்பிட்டேன். இந்த ஆராய்ச்சிக்கென்றே 'வாஸ்து புருஷன்' என்ற ஆராய்ச்சி இதழ் ஒன்றையும் ஆங்கிலத்தில் நடத்தி வருகிறேன் என்பதையும் முன்பொரு நிலையில் குறிப்பிட்டேன் நினைவிருக்கிறதா?

இதற்கென்றே என் சொந்தச் செலவில் International seminar on Mayonic science and technology என்ற கருத்தரங்கம் ஒன்றை சென்னையில் 1993 ஜனவரியில் நிகழ்த்தி உலகப் பேரறிஞர்களின் கருத்தைக் கேட்டேன். என் கருத்துக் களையும் சொன்னேன். அவர்கள் காட்டிய ஆர்வம், அவர்கள் எடுத்து வைத்த மேற்கோள்கள், அவர்களுக்கு ஏற்பட்ட வியப்பு என்னை மேலும் இப்பயணத்தைத் தொடர்ந்திடத் தூண்டிவிட்டது என்று சொல்ல விரும்புகிறேன்.

நான் இதற்கு வகுத்துக் கொண்ட பாதை வரலாற்றுப் பாதை அல்லாமல் ஒரு விஞ்ஞானப் பாதை மற்றும் தொழில் நுட்பப் பாதை என்பதை மிக அடக்கத்துடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த விஞ்ஞானப் பாதையை மேற் கொண்டதால் மேற்கே தோன்றிய மாயனும், கிழக்கே தோன்றிய மயனும் ஓரிடத்தில் ஒரு நாளில் சந்திப்பர் என்று

உறுதிப்படச் சொல்ல விரும்புகிறேன். இஃது எது போல் என்றால் சுதந்திரம் பெறுமுன் கவி பாரதி விடுதலைப்பண் பாடியது போல என்பேன். அதற்குரிய விஞ்ஞானத் தடையங்கள் தாமாகவே எனக்கு புலப்படுவது மட்டுமல்லாமல் அத்தடையங்கள் வேறு பல அறிஞர்கள் மூலமும் கிடைக்கப் பெறுகின்றேன். மயன்-மாயன் பற்றிய ஆய்வுகள் மேலும் செய்து, விஞ்ஞான ரீதியாக வாதிடவும், இருவரும் ஒருவரே என்று உறுதி செய்திடவும் இருக்கின்றேன் என்பதையும் சொல்லிக் கொள்கிறேன். என்னைப் பற்றி மேலும் ஒரு சில செய்திகள்.

வாஸ்து மரபானது காலத்தையும் இடத்தையும் (Time and space) மூலமாய்க் கொண்டு விந்தை பல செய்திட்ட ஒரு விஞ்ஞான மரபு என்பதை நான் நன்கு கண்டு கொண்டேன். காணவொண்ணாததும், ஆற்றலே மயமானதுமான ஒரு நுண்பொருளைக் கண்டு தெளிந்து அப்பொருளுக்கு வடிவமும் தந்திட்ட மரபு வாஸ்து மரபு என்பதை ஐயமின்றி உணர்கிறேன். இதைப் பறை சாற்றுவதில் நிரம்ப மகிழ்ச்சி கொள்கிறேன். இந்த மரபின் பயன்கள் இன வேறுபாடின்றி, இட வேறுபாடின்றி அனைவர்க்கும் கிடைக்க வேண்டுமென்று துடிக்கின்றேன். இதற்கு மறைமுக எதிர்ப்புகள் இருந்து வருவதையும் அறிவேன். எல்லாப் புதிய செய்திகளும் இத்தகைய மோதலைச் சந்தித்து இருக்கின்றன என்பதுதானே நம் நாட்டு வரலாறும், பிற நாட்டு வரலாறும். 'உலகம் உருண்டை' என்று சொன்னவனை என்ன பாடு படுத்தினார்கள்?

எனவே மேலெழுந்த வாரியாக, என்னுடைய கட்டுரையில் ஒரு சில செய்திகளைத் தந்திட விரும்பினேன், காட்டினேன். காரணம், நான் இந்த மரபில் பிறந்தவன். என் முன்னோர்

அனைவருமே இந்த மரபினர்தாம். பல நூறு ஆண்டுகளாக இந்த மரபிலேயே இருந்து வருகின்றோம். நானும் இன்று இந்த மரபை ஒழுகி வருகின்றேன். இதன் ஆற்றல் புரிந்தவன். இஃது உலக மக்களை ஒரே கண்ணால் பார்த்து அவர்தம் உயர் நலத்தில் அக்கறை கொள்ளச் செய்கிறது என்பதை உணர்ந்தவன். இவனது விஞ்ஞானக் கொள்கைகள் பன்னெடுங்காலத்துக்கு முன்னரே தோன்றி உலக நாகரிகங்களில் எங்கெங்கோ கலந்து விட்டதாயும் காண்கிறேன். பாசமேலிட்டால் நான் ஏதும் தவறு செய்திடல் கூடாது என்பதற்காகப் பிற ஆய்வாளர்களைத் தட்டி எழுப்பி அவர்களையும் மயன்பால் ஆராய்ச்சி செய்திடத் தூண்டு கிறேன். மனம் திறந்து பேசிட அழைக்கின்றேன். கிளியோபேட்ராவை ஓர் அமெரிக்க ஆய்வர் கண்டு தேர்ந்தது போல, நம் நாட்டு ஆய்வர் பெருமக்கள் மயனைக் கண்டு தேர்ந்திட உதவ வேண்டும் என்று விண்ணப்பிக்கிறேன். 'ஆராய்ச்சி' என்றால் இதுதான் ஆராய்ச்சி, பயனுள்ள ஆராய்ச்சி என்று முடிவாகச் சொல்லுவேன். மற்ற ஆராய்ச்சிகள் எல்லாம் பெருமை தரும். ஆனால் இந்த மயன் -மாயன் ஆராய்ச்சி பெருமையோடு மாந்தர் இனத்துக்கு நல் வாழ்வும் தரும் என்று கருதுகின்றேன். பாரத நாட்டுக்கு மேலுமொரு ஏற்றம் தரும் என்றும் நம்புகின்றேன்.

மயன் என்ற பெயரை எவராவது இக்காலத்தில் சொல்லக் கேள்விப்படுவார்களேயானால் அவனை தென்னாட்டுச் சிற்பி என்று எடுத்த எடுப்பிலேயே சொல்லி விடுவார்கள். பல புராண மேற்கோள்களையும் காட்டிடுவார்கள். இன்னும் ஒரு சிலர், விஸ்வகர்மா என்ற ஒருவன் வடநாட்டில் சிறந்த கட்டடக் கலைஞனாக இருந்தான் என்று சொல்லி, இந்த விஸ்வகர்மாவை வட நாட்டுத் தேவ சிற்பி என்றும் மயனைத் தென்னாட்டு அசுர சிற்பி என்றும் பிரித்தும் பேசுவார்கள்.

உண்மையிலேயே இவ்விருவர்களும் தனித்தனி மரபுகளைத் தோற்றுவித்துக் கொண்டவர்களா? அல்லது இருவர்களும் ஒருவர்தானா என்பதை நானும் தெரிந்து கொள்ள ஒரு காலத்தில் ஆசைப்பட்டேன். இந்த வாஸ்துக் கலை மரபின் விஞ்ஞானம் மற்றும் தொழில் அடிப்படைகள் அனைத்தும் நான் முன்பு சொன்னது போல காஷ்மீர் முதல் கன்னியாகுமாரி வரையிலும், கூர்ஜரம் முதல் வங்காளம் வரையிலும் ஒரே வகையினதாக இருப்பதை என்னால் காண முடிந்தது. இதற்கு எனது மரபு ஞானமும் மரபுத் தொழில் நுட்பமும் இரு கண்களாக இருந்து வழி காட்டின. இந்த நிலையில் நானும் சமஸ்கிருத மொழி படித்திருப்பதினால் தொல் பழம் நூல்களுக்குள்ளே ஓரளவு புகுந்து படிக்கவும் முடிந்தது. அதன் விளைவாகத்தான் சூரிய சித்தாந்தத்தில் மயனைக் கண்டேன். அதன் விளைவாகத்தான் மகாபாரதத்தில் விஸ்வகர்மாவாக மயனையே கண்டேன். அதனைத் தொடர்ந்து மேலும் ஆய்வு செய்ததின் விளைவாக மெக்ஸிகன் மாயனிலும் மயனைக் கண்டேன். ஒளிவு மறைவு இல்லாமல் மேலும் சொன்னால், பண்டைக் கலாச்சார விஷயங்கள் எதுவாயினும் அவற்றின் வேர்களை ஊடுறுவிப் பார்க்கும் போது எங்கும் எதிலும் நான் இப்பொழுதெல்லாம் மயனையே காண்கிறேன். மீண்டும் சொல்கிறேன், இந்தக் கலை மரபின் மீதும் இந்தக் கலையின் மீதும் நான் கொண்டுள்ள பாசமிகு நேசத்தால் மட்டுமல்ல, இந்த மரபையும் மரபு ஞானத்தையும் ஓரளவு துய்த்து விட்டதால் இப்படி பிதற்றிட முற்பட்டு விட்டேன். மயன் அடைந்திட்ட விஞ்ஞான எல்லை இருக்கிறதே அதனை எந்தவொரு அளவுகோலினாலும் மதிப்பிட முடியாது. எத்தகைய ஒளி கொண்டும் அந்த முடியைத் தொட்டிட முடியாது. உலக இனங்களை ஒன்றுபடுத்தி, உலக கலாச்சாரத்துக்கு நல்லதொரு தளமும்

அமைத்து விட்டிருக்கிறான் இந்த மயன். எனவே அவனையும் அவன் தந்திட்ட அரிய விஞ்ஞானத்தையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டாமா? இந்த நிலையில், எவரும் என் கருத்துக்களை மறுத்துக் கூறினால் விசனப்படவும் மாட்டேன். போற்றிக் கூறினால் கர்வமும் கொள்ள மாட்டேன். உண்மையைச் சொன்னால் உளம் மகிழ்ந்து, காணமுடியாத ஒன்றைக் கண்டு கொண்ட மன நிறைவோடும், அமைதியோடும், உவகையோடும் வாழ்வேன். உலக நாகரிகத்திற்கும் பண்பாட்டுக்கும், மக்கள் இணைப்புக்கும், உயர் நலத்துக்கும் இந்த மரபு காரணமாக இருந்ததை எண்ணி எண்ணி மகிழ்வேன். தொடர் வறுமையினையும் ஒதுக்கித் தள்ளி விட்டு இதனைச் சிக்கெனப் பிடித்து வாழ்ந்திட்ட ஏழைச் சிற்பிகளை பெருமையுடன் நினைவுகூர்வேன். அவ்வளவுதான்.

இந்த நிலையில் ஒருசில வரலாற்றுத் தடயங்களை மட்டும் இந்த உலகத்தின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப் படுகிறேன். ஒரு சில விஞ்ஞானத் தடயங்களையும் நுட்பங்களையும் இந்தக் கட்டுரைக்குள்ளே பார்த்திருப்பீர்கள். இந்திய மயன் வகுத்துத் தந்த அல்லது விதித்துத் தந்த மரபைப் பற்றி சிலப்பதிகாரம் என்ற வரலாற்றுக் காப்பியத்திலே அக்காப்பிய நூலாசிரியரான இளங்கோவடிகள் இப்படிப் பேசுகிறார். வடநாடு சென்று கொணர்ந்த கலைப் பொருட்களை தன் நாட்டுச் சிற்பிகளிடம் காட்டி மகிழ்ந்திட்ட ஒரு தமிழ் மன்னன் "நுண் வினைக் கம்மியர் காணா மரபின, மயன் விதித்துக் கொடுத்த மரபின இவைதாம்" என்று மயன் மரபை உச்சி மீது வைத்து மெச்சுகிறான்.

சிலப்பதிகாரக் காப்பியத்திலும் மணிமேகலை என்ற பிரிதொரு காப்பியத்திலும் ஓவியச் செந்நூல் என்ற ஒரு நூல் பேசப்படுகிறது. அந்த நூலுக்கு உரை காண முடியாமல்

அக்கால மக்கள் அதனைக் கைவிட்டு விட்டதாக உரையாசிரியர்கள் பேசுகிறார்கள். இந்த நூலின் ஆசிரியன் மயன் எனத் தெரிகிறது. இதை விடுத்து மகாபாரதத்தில், "மயனே விஸ்வகர்மன்" என்ற செய்தியானது மயன் வாயினாலேயே உறுதி செய்யப்படுவதைக் காண்கிறோம். பாரதத்தில் சிறப்பாகப் பேசப்படும் 'மயஸபா' என்ற மன்றம் ஒன்றை நிறுவுவதற்கு முன்பாக இந்த மயன் அர்ஜுனனிடம் சென்று தனது கட்டடக் கலை ஆற்றலை வெகுவாகச் சித்தரித்துப் பேசி பட்டியலிட்டுக் காட்டி, தானே விஸ்வகர்மன் என்றும் ஒரு மகா கவிஞன் என்றும் தன்னை அறிமுகப் படுத்திக்கொள்கிறான். "நான் விசுவகர்மன். தானவர்களின் மகாகவி" என்று மயன் தனது பேச்சைத் தொடங்கி தன் விருப்பத்தைப் புலப்படுத்திக் கொள்கிறான். "அஹம்ஹி விஸ்வகர்மா வை தானவானாம் மஹா கவிஹி :" என்பது அவனது அறிமுகச் செய்தியாகும். अहं हि विश्व कर्मा वै

दानवानां महाकवि: மகாபாரதக் குறிப்பிற்குப் பிறகு தோன்றிய புராணங்களில்தான் இவன் நிலை பிரித்துக் கூறப்படு வதாயிற்று. இது வேண்டுமென்று நிகழ்ந்து விட்டதாக நான் சொல்ல மாட்டேன். நம் நாட்டுப் புராணங்கள் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு காலங்களில் எழுதப்பட்டனவாகும். ஒரே இடத்தில் அமர்ந்து கொண்டு ஒரே தலைமையின் கீழ் எழுதப்பட்ட வரலாறு அல்லது கதை என்று ஏற்றுக் கொள்ள என்னால் முடியவில்லை. மகாபாரத ஆசிரியராகிய வியாசனே 18 புராணங்களுக்கும் ஆசிரியன் என்று சொல்வதும் பொருந்துவதாக இல்லை. வியாச மகாபாரதத்தில் மயனும் விஸ்வகர்மனும் ஒருவரே என்று ஐயமறக் காட்டிய வியாசன் பிற்காலத்தில் தொகுத்திட்ட புராணங்களில் அதே வியாசன், எப்படி வடக்கில் ஒருவனையும் தெற்கில் ஒருவனையும்

பிரித்து வைத்துக் காட்டியிருக்க முடியும்? இந்திரனைத் தேவன் என்று புராணங்கள் பேசிடும் நேரத்தில் அவற்றுக்கும் முற்பட்ட ரிக் வேதம் அதே இந்திரனை அசுரனாகக் காட்டுகிறது. ரிக் வேதமானது வருணனையும் அப்படியே அசுரனாகக் காட்டுகிறது. இப்படி வரலாற்றுத் தடயங்கள் முரண்பட்டு இருப்பினும் அவனுடைய பிறப்பிடங்களாக இருக்கும் வாஸ்து நூல்கள் புராண நூல்களைப் போல் அப்படியெல்லாம் குறைத்துப் பேசிடவும், பிரித்துப் பேசிடவும் இல்லை. தென் நாட்டு வாஸ்து சாஸ்திரங்களில் விஸ்வகர்மன் இப்பிரபஞ்சத்தைத் தோற்றுவித்த பரப்பிரம்மமாகவே கொள்ளப் படுகிறார் என்பதை கோடிட்டுக் காட்டிட விரும்புகிறேன். மயன் என்பது இயற்பெயர். விஸ்வகர்மன் என்பது அவனது சிறப்புப் பெயர். அவ்வளவுதான். பரத முனியின் நாட்டிய சாஸ்திரத்தில் கூட நாட்டியத்திற்கு இலக்கணம் தொகுத்த பரத முனிவர் நாட்டியரங்கத்தின் வடிவமைப்பை விஸ்வகர்மனின் வடிவமைப்பு என்று சொல்லுகிறாரே தவிர வடக்கு தெற்கு என்ற புள்ளி விவரங்களை அவர் குறிப்பிட்டார் இல்லை. எனவே புராணக் கூற்றை நாம் பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டாம். மூல நூல்களையும் தொல்பழம் இலக்கியங் களையும் வரலாற்றுக் காப்பியங்களையும் நாம் அறிந்து தேர்ந்திடல் போதும் என்று கருதுகிறேன். ஏன்? மகாபாரதத் திற்கும் முற்பட்டதும் ஆதிகாவியம் என்று சொல்லப் படுவதுமான இராமாயணத்தில் இந்த மயனை இமயத்திற்கு மேல் உயர்த்தி வைத்துப் போற்றிப் பேசுகிறார் வால்மீகி மகரிஷி என்றால் மயனின் மேதைக்கும் தனித் தன்மைக்கும் வேறு ஒரு அகச் சான்று தேவையா என்ன?

மயனை வால்மீகி ஒரு ஆத்ம ஞானியாகவும் ஒப்பற்ற விஞ்ஞானியாகவும் ஈடு இணையற்ற தொழில் நுட்ப

வல்லுனனாகவும் சித்தரிக்கின்றனர். "மயோ நாம மஹா தேஜோ மாயவீ வானரர் ரிஷப" என்பது வால்மீகி வாக்கியம்.

मयोनाम महातेजा मायावी वानरर्रिषभ

தொடர்ந்து கவியரசர் கம்பரும் அங்ஙனமே சித்தரிக்கின்றார். மயனைத் தெய்வத் தச்சன் என்றே பேசுகிறார்.

பூவரும் அயனொடும் புகுந்து
மூவகை உலகினும் அழகு முற்றுற
ஏவின இயற்றினன் கணத்தின் என்பரால்
தேவரும் மருள் கொளத் தெய்வத் தச்சனே. (யு.கா.6198)

மயன் தன்னை 'விஸ்வகர்மன்' என்று சொல்லிக் கொண்டதில் ஆழ்ந்த கருத்தொன்று அடங்கியிருப்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நான்கு வேதங்களில் வரும் வேதங்களில் இந்திரன், வருணன் முதலியோரை முக்கியமான தேவர்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுவதைக் கேட்டிருக்கலாம். ஆனால், உண்மையில் மிகப் பெரியதொரு தேவனை ஆராய்ச்சியாளர்கள் ஒதுக்கி வைத்து விட்டுப் பேசுகிறார்கள் என்று நான் கருதுகிறேன். இதனாலும் பாரதீய விஞ்ஞானத் தேற்றங்கள் அல்லது கருத்துக்கள் ஆய்வர் கவனத்துக்கு வராமல் போய் விட்டது என்று தெரிகிறது. புருஷசூக்தத்தில் காட்டப்படும் விஸ்வகர்மாவைப் பற்றியேதான் நான் இங்கே குறிப்பிடுகிறேன். கலை மரபிலே இவர் விராட் புருஷன் என்றும் விராட் விஸ்வபுருஷன் என்றும் விராட் விஸ்வப்பிரம்மன் என்றும் பேசப்படுகிறார். இவர் ஒரு விஞ்ஞானப் பொருள். இவரை, இவரது செயலை வைத்து, ஆங்கிலத்தில் Kinetic energy of the universe or manifest energy of the universe என்று சொல்லலாம். விஸ்வமாகிய ஞாலத்தைச் செய்பவர் ஆக்குபவர் - என்ற பொருளில்

விஸ்வகர்மா என்ற பெயர் வந்திருக்கிறது. இப்பிரபஞ்சத்தைத் தோற்றுவித்த ஆற்றல் மயமான பொருள் அல்லது செயல்படு பொருள் என்பது அச்சொல்லின் பொருளாகிறது. ஆங்கிலத்தில் `Creator of the Universe' என்று சொல்லுகிறோம். ஆனால் இவர் எப்படிப் படைக்கிறார்? ஆக்குவதற்குக் கையாளும் மூலப் பொருள் எது? கருவி எது? அளவு எது? என்ற கேள்விகளைத் தொடுத்து ஆய்வுக்குட்படுத்த முடியாமல் போய் விட்டது. எனவே, இந்த நிலையில், இந்தப் பொருளை, விருப்பு வெறுப்பின்றி ஆராய்ச்சி செய்திருந்தார் களானால், வரலாற்றுக் காலத்தில் நிகழ்ந்திட்ட பிரபஞ்ச விஞ்ஞான ஆராய்ச்சியில் குழப்பத்திற்கு மாறாக மாபெரும் திருப்பம் ஒன்று ஏற்பட்டிருக்கக் கூடும் என்று கருதுகிறேன். இதனை ஏன் விட்டு விட்டார்களோ தெரியவில்லை. இப்படித்தான் மயனையும் விட்டு விட்டார்கள். இருவரையும் பிரபஞ்ச நாடகத்தில் வரும் கற்பனைப் பாத்திரங்கள் என்று நினைத்து விட்டார்களோ என்னவோ தெரியவில்லை. வேதத்தில் விஸ்வகர்ம சூக்தம் என்று சொல்லப்படும் தத்துவம் ஒன்றுளது என்பதையும் இங்கே குறிப்பிட்டுச் சொல்லிடக் கடமைப்பட்டவனாகிறேன். இதையும் யாரும் பெரிது படுத்திக் கொள்ளவில்லை.

இந்த விஸ்வகர்மனைப் பற்றிய தியான சுலோகம் ஒன்றுமுளது. இந்த சுலோகமானது கிருஷ்ணயஜுர் வேதச் சார்புடைய ஓர் உபநிஷத்திலிருந்து (நாராயண யாக்ஞ கோபநிஷத்) கிடைத்ததாகச் சிற்பியர் சார்புடைய வித்வான்கள் அடிக்கடி குறிப்பிடுவார்கள். அவரது உருவ வர்ணனையும் கருத்தும் யாவை என்பதைக் கொஞ்சம் பார்த்திடுவோம்.

விஞ்ஞானச் செய்திகளை விஞ்ஞானச் செய்திகளாகவே காட்டிடாமல் அவற்றுக்கு உருவங்கள் கற்பித்து, நம்மோடு உறவாடவும், நடமாடவும், விட்டதினால்தான் நம் நாட்டு

விஞ்ஞானம் பற்றி நமக்குத் தெரியாமல் போனதோ என்று நினைக்கத் தோன்றுகிறது. அது மட்டுமல்லாமல், சமயத் துறைக்குள் இவை நுழைந்து விட்டதாலும், இவ்வடிவங்கள் எல்லாம் விஞ்ஞானப் பொருள்கள் என்று விமர்சித்திட முடியாமல் நம்மவர்க்கு மயக்கமும், தயக்கமும் ஏற்படுவ தாயின என்று நினைக்கிறேன். சமயத் துறையில் இவை எல்லாம் கடவுட் சின்னங்களாக (symbols) கொள்ளப் பட்டதாலும், கடவுள் வடிவங்கள் அல்லது கடவுளே என்று சொல்லத் தயங்கியதாலும் விஞ்ஞானமே சமயமாகி விட்ட நற் செய்தி–நுற்பச் செய்தி–மறைந்து நிற்பதாயிற்று. இதனால் அனுபவப் பொருளானது, அனுமானப் பொருளானது. இவை யெல்லாவற்றையும் பார்க்கும் போது விஞ்ஞானச் செய்திகளைக் கையாள்வதற்கென்று ஒரு பரிபாஷையே நம் மரபில் உருவாகியிருந்தது என்றும் தெரிகிறது. இதனைத்தான் mythological language 'உருவக மொழி' என்று சொல்லி வருகிறோம். இந்த பரிபாஷையில் ஆய்வுக்கு வராத சொல் 'விஸ்வகர்மா' என்றும் தெரிகிறது. அதோடு இவை கட்டுக் கதைகளாகத் தெரிவதற்கு இந்த உருவக மொழியே காரணமாகுமோ என்றும் நினைக்கத் தோன்றுகிறது. எனவே, இக்காலத்துக்கு இம்மொழி பொருந்தவில்லை என்பதைக் காண்கிறேன். எனவே இந்த உருவக மொழியை விஞ்ஞான மொழியாக மாற்றிச் சொன்னாலொழிய நம் நாட்டு விஞ்ஞானச் செய்தியை, 'நமக்கும் ஒரு விஞ்ஞானம் இருந்தது' என்ற கூற்றை, யாரும் நம்ப மாட்டார்கள், ஏற்க மாட்டார்கள் என்றும் எனக்குப் புரிகிறது .இந்த குறையைத்தான் நான் தவிர்த்திட முயற்சித்துக் கொண்டு இருக்கிறேன். வாஸ்து மரபு தொடர்புடையனவற்றைத்தான் நான் முதற்கண் பார்த்துச் சொல்லிட விழைகிறேன். அதே சமயத்தில், நமக்கு இந்த உருவக மொழியும் இன்றியமையாததாகவிருக்கிறது. இதனை


புறக்கணித்திடவும் முடியாது. காரணம், வாஸ்து விஞ்ஞான மானது பௌதிக விஞ்ஞானத்திற்கு அப்பாற்பட்டு நின்று, பிரபஞ்சத்தின் மூலப் பொருளையே தீண்டி, துய்த்து, அதன் செயலறிந்து, அந்தச் செயலின் பிரதிச் செயலாக பற்பல காரியங்களை மாந்தர் உய்வதற்கும் உயர்நலத்திற்கும் செய்து வெற்றி கண்டு, பழசாகப் போய் விட்டது. இதற்கு உதவியது இந்த பரிபாஷையே என்பேன். விஞ்ஞானத்தைப் பயன்படுத்தி மக்கள் நலம் பேணிட, மக்கள் நலத்துக்குக் கொண்டு செல்ல ஒரு தொழில் நுட்பம் வேண்டுமல்லவா? இந்தப் பரிபாஷையை அடிப்படையாகக் கொண்ட ஒரு தொழில் நுட்பவியல் சிற்பியர் மரபில் தோன்றிச் சுமார் நாலாயிரம் ஆண்டுகளைக் கடந்தும் விட்டது. இந்த technology தான் வாஸ்து சாஸ்திரம் என்ற பெயரில் நிலவுகிறது.'வாஸ்து தந்த்ரம்' என்ற பிரிதொரு பெயரும் உண்டுதான். 'தந்த்ரம்' என்றால் technology என்றுதான் நேரடிப் பொருள். இதனை architectonics என்றும் way of the shilpis என்றும் சொல்லுகிறார்கள். எனவே வாஸ்து வேதம் என்பது விஞ்ஞானமாகவும், வாஸ்து சாஸ்திரம் என்பது technology ஆகவும் விளங்குகின்றன. ஒன்று knowledge and wisdom மாகவும் பிரிதொன்று expertise என்றும் தெளிவாகிறது. இவ்விரண்டும் தனித்தனியான இடங்களில் இருந்திடாமல் ஒரே இடத்தில் ஒடுங்கிக் கிடக்கிறதை நான் தெளிவாகக் காண்கிறேன். இந்த விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் ஒருங்கிணைந்து செயல்பட்ட இடங்கள்தான் நடராசனின் அம்பலமும் அரங்கராசனின் அரங்கமும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நமது நாட்டின் விஞ்ஞான மூலங்கள் இங்கேதான் மறைந்திருக்கின்றன. அகச்சான்றாகவும், புறச் சான்றாகவும் அவை மிளிர்கின்றன.

மேலும் இந்தக் கலாச்சாரத்தின் (culture) ஒரு கிளையை Central America விலே மெக்ஸிகோ என்ற இடத்தில் மாயன்

நாகரிகத்திலும் காண்கிறேன். இது பற்றியும், இந்தக் கட்டுரை நூலில் பேசியிருக்கிறேன். இதனையும் ஆய்வாளர்கள் பார்த்து, உண்மையை மனம் திறந்து பேசிட அழைக்கின்றேன். இக்கருத்தை ஜீரணிக்க என்னால் முடிகிறது. இந்திய கலாச்சாரம் மொஹஞ்சதாரோவுக்கு அப்பாலும் இருப்பது எனக்கு நன்கு புலனாகிறது. நமது பாரத நாடு முழுவதும் இந்த மரபுக்கு இருந்து வரும் செல்வாக்கும், அதன் உயிர்ப்புத் தன்மையும் இன்றும் காண முடிகிறது. இவ்விரண்டும் இந்திய மண்ணில் புதையுண்டு போகுமானால் இந்திய கலாச்சாரமும் நாகரிகமும் இவ்வண்ணமே மறைந்து போகும். இதுதான் என் வேதனை. என்னால் முடிந்ததைத் தனியனாகவே இருந்து கொண்டு என் ஆய்வுப் பயணத்தை நடத்திக் கொண்டிருக் கிறேன். ஒரேயொரு ஆறுதலும் எனக்குண்டு. மேலை நாட்டு ஆய்வர்கள் இந்த வாஸ்து வேதத்தையும் அதிலிருந்து தோன்றிய தொழில் நுட்பத்தையும் வெகுவாக மதிக்கிறார்கள். ஓடி வந்து பேட்டி காணுகிறார்கள். வீடியோ படமெடுத்துச் செல்லுகிறார்கள். இத்தகைய ஆய்வில் அவர்கள் முன்னோடி களாகவும் இருக்கிறார்கள். தங்கள் வியப்பையும், வரவேற் பையும் வாயாரச் சொல்லி மகிழ்கிறார்கள். இவ்விரண்டையும் (science and technology) அவர்களிடம் ஒப்படைத்து விடுவதே நலமெனக் கருதுகிறேன். இப்படித்தான் பல பண்பாட்டுக் கூறுகளும், நாகரிக நுட்பங்களும் கடல் கடந்து முற்காலத்திலும் சென்றிருக்க வேண்டுமெனச் சொல்லத் தோன்றுகிறது. மேற்கே சென்று, மேற்குச் சாயம் பூசிக் கொண்டு மீண்டும் கிழக்கே வருதல்தான் வரலாற்றுக்கு மகிழ்ச்சி தருமோ என்று கருத வேண்டியவனாகிறேன். மீண்டும் நாம் எடுத்துக் கொண்ட பொருளுக்குச் செல்வோம்.


மயன் தன்னை விஸ்வகர்மனாக அறிமுகப் படுத்திக் கொண்டதின் நுட்பமென்ன என்பதுதானே இந்த உரையின்

இடையே மேற்கொண்ட ஆய்வு? எனவே இப்போது விஸ்வகர்மனை மேலும் சிந்திப்போம். உற்றுப் பார்ப்போம். இந்த விஸ்வகர்மாவானவர் ஐந்து தலைகளைக் கொண்டவராகச் சிற்பிகளால் கற்பிக்கப்பட்டிருக்கிறார். 'விஸ்வப்பிரம்மம்' என்றும்




ஐம் முகன்

'வாஸ்துப் பிரம்மம்' என்றும் சிற்பியர் மரபிலே சொல்லப்படுவதோடு, அப்பொருளையே பரம்பொருளாக, முழுமுதற் பொருளாக, நிலைப் பொருளாக, கலைப் பொருளாக சிற்பியர் வைத்துக் கொண்டுள்ளனர். இந்த விஸ்வப் பிரம்மத்தை ஆங்கிலத்தில் potential energy என்றும் குறிப்பிடலாம். விஸ்வகர்மனை உடல் தரித்த ஐமுகனை embodied energy என்று கூறலாம். இங்ஙனம் இரு பொருள்களும் இரண்டறக் கலந்து விளங்கும் ஒரு வியாபகப் பொருளே விண்பொருள் ஆகும். Energy என்று சொல்லப்படும் ஆற்றலுக்குள் - சக்திக்குள் - matter ஆகிய பிரிதொரு நுண்பொருள் சக்தியோடு உருகி ஒன்றித்துக் கிடப்பதாலும், அது நமது கண்களுக்குப் புலப்படு பொருளாக இல்லாததாலும் பிற்காலத்தில் முகங்களில்லா உருவமான விஸ்வப் பிரம்மமே 'லிங்கம்' ஆயிற்று. இஃது அனைத்துக்கும் மூலப் பொருளாகக் கொள்ளப்படுவதுமாயிற்று. இதனைத்தான் ஆகாஸம் அல்லது பரவெளி என்று சொல்லுகிறோம்.



லிங்கம்



முகலிங்கம்

தத்துவமாக விஸ்வப்பிரம்மமும், தத்துவத்தின் செயல் வடிவமாக விஸ்வகர்மனும் விளக்கமுறுவதைக் காண்க. இப்பொருளை மேலும் உற்று நோக்கினால், இந்த ஐந்து தலையுடைய விஸ்வகர்மனே பிற்கால சைவ சமயத்தின் ஐந்து முகமுடைய "சதாசிவம்" என்ற பெயர் தாங்கி வரும் உருமேனி என்று தெரிய வரும். காரணம், இந்த விஸ்வகர்மனின் ஐந்து தலைகளுக்குத் தனித்தனியே பெயர்களும் இருக்கின்றன. மனித உடலும் இருக்கின்றது. அம்முகங்கள் முறையே சத்யோ ஜாதம், வாமனம், தத்புருஷம், அகோரம், ஈசானம் என்று சொல்லப்படும். இதே பெயர்களைக் கொண்டதே சதாசிவ மூர்த்தத்தின் ஐந்து முகங்களுமாகும். முன்பு சுட்டிக் காட்டிய தியான ஸ்லோகத்தில் கீழ்க்கண்டவாறு விஸ்வகர்மனின் உருவம் வருணிக்கப்பட்டிருக்கின்றது.

'பஞ்ச வக்த்ரம் ஜடாபாரம், தஸ பஞ்ச விலோசனம்/சத்யோ ஜாதானனம் ஸ்வேதம் வாமதேவந்து கிருஷ்ணகம்/அகோரம் ரக்தவர்ணஞ்ச தத்புருஷந்து ஹரிதப் பிரபம்/ஈசானம் சியாம வர்ணஞ்ச ஸாரீரம் ஹேம வர்ணகம்/தசபாஹுசமாயுக்தம் கர்ணகுண்டலஸோபிதம்/பீதாம்பர தரம் தேவம் நாகயக்ஞோப வீதினம்/ருத்ராக்ஷ மாலாபரணம் வியாக்ர சர்மோத்தரீயகம்/

அக்ஷமாலாஞ்ச பத்மஞ்ச நாக சூல பினாகினம்/மேரும் விணாஞ்ச பாணஞ்ச சங்க சக்ர ப்ரகீர்த்திதம்/கோடி சூர்யப் பிரதீ காசம் சர்பஜீவதயாபரம்/தேவ தேவ மஹாதேவம் விஸ்வகர்ம ஜெகத்குரும்'.

पञ्जवकत्रं जटाभारं दश पंचविलोचनम् ।
सद्यो जातानन स्वेतं वामदेवन्तु कृष्णकम् ॥
अघोरं रकतवर्णंचं तत्पुरुषं हरित प्रभम् ।
ईशानं श्याम वर्णंच शरीरं हेमवर्णकम् ॥
दश बाहुसमायुक्तं कर्णकुण्डल शोभितम् ।
पीतांबर धरं देवं नागयज्ञोपवीतिनम् ॥
रुद्राक्षामालाभरणं व्याघ्रचर्मोत्तरीयकम् ।
अक्षमालांच पद्मंच नागशूलपिनाकिनम् ॥
मेरुं वीणां च बाणंच शखचक्र प्रकीर्तितम् ।
कोटि सूर्य प्रतीकाशं सर्वजीव दयापरम् ॥
देवदेव महादेवं विश्वकर्म जगत्गुरुम्

இதன் பொருள் பின்வருமாறு : "விஸ்வகர்மாவானவர் ஜெகத்துக்குக் குருவானவர். தேவர்களுக்கெல்லாம் மகாதேவனாக விளங்குபவர். இவர் ஐந்து முகங்களும் சடைமுடியும் பதினைந்து கண்களும் கொண்டு விளங்குபவர். அவரது சத்யோஜாதம் என்ற முகம் வெண்ணிறமும் வாமதேவமுகம் கருநிறமும், அகோரமுகம் செந்நிறமும், தத்புருஷமுகம் மஞ்சள் நிறமும், ஈசான முகம் கருநீல நிறமும் கொண்டு பொன்னிற மேனியுடன் அவர் விளங்குவார். மேலும் பத்துக் கைகளும் காதுகளில் குண்டலங்களும் இடுப்பிலே பட்டாடையும் உடுத்தியிருப்பார். நாகப் பூணுலும் ருத்ராக்ஷ மாலையும், புலித் தோலாடையும் அணிந்திருப்பார், அக்ஷ மாலை, பத்மம், நாகபாசம், சூலம், பினாகம் என்ற வில்,

மேரு, வீணை, பாணம், சங்கு, சக்கரம் ஆகிய சின்னங்களைக் கையிலே கொண்டிருப்பார்." இங்கே "மேரு" என்பது கோயில் விமானம் ஆகும். பிரமிடு என்ற சொல்லுக்கு நேரான பெயர் "மேரு" என்பதும் ஓர் அரிய பொருள். இது பற்றி ஸ்திரமான ஆய்வு செய்தே இங்கு குறிப்பிடுகிறேன்.

இந்த ஐந்து தலைகளுடைய அமைப்பு ஒரு விசித்திரமான தோற்றமாகும் (phenomenon). இக்காலத்தவர் இதனைப் பார்த்திருக்க மாட்டார்கள். முன்னொரு காலத்தில் பிரம்மனுக்கு ஐந்து தலைகள் இருந்தனவென்றும், பிற்காலத்தில் ஒன்றைக் கொய்து விட்டு பிரம்மனுக்கு நான்கு தலைகள்தான் என்று ஒரு புதிய மரபை ஏற்படுத்தி இன்றுவரை சமயத் துறையில் இஃது இருந்து வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் திருவையாருக்கு அருகில் கண்டியூர் என்ற திருத்தலத்தில் ஒரு தலை நீக்கப் பட்டதென்றும், அவ்வூரில் சிரத்தைத் துண்டித்ததினால் அவ்வூருக்கு சிரக்கண்டியூர் என்ற பெயர் வந்ததென்றும் ஸ்தல வரலாறு ஒன்றுமுண்டு. இந்தப் பிரம்மன் விஸ்வப் பிரம்மனையும் அவருக்கு ஐந்து தலைகள் இருந்ததையும் தெள்ளிதிற் புலப்படுத்துகிறதல்லவா? தலை துண்டிக்கப்பட்டதற்கு சரியான விவரம் தெரியவில்லை. இதிலேயொரு வரலாற்றுச் செய்தி புதையுண்டு கிடப்பதாக எனக்கு உணர்வாகிறது. இதற்குள் இப்போது நுழைய வேண்டாம். ஐந்து தலைகள் இருந்த செய்தியொன்றே போதும். அதுவும் அத்தலைகள் சிவனுக்கில்லாமல் பிரம்மனுக்கு இருந்தது என்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும். நம் நாட்டில் விஞ்ஞானமே சமயப் பொருளாகவிருப்பதை அறியாதாரின் செயலாகத் தெரிகிறது.

இன்னுமொரு முக்கியத்துவம் வாய்ந்த அர்த்தநாரீஸ்வரர் சிற்பம் திருவையாறு ஐயாரப்பன் கோயில் கருவறையின்

பின்புறக் கோஷ்டத்தில் உளது. இந்தப் படிமத்தின் வலது பக்கப் பாதியில் பெண் பாகமும் (உமையும்) இடது பக்கப் பாதியில் ஆண் பாகமும் (சிவனும்) காட்டப்பட்டிருக்கின்றன.



திருவையாறு அம்மையப்பர்


இதுதான் ஆதி "அம்மையப்பர்" வடிவம். அம்மையை முன் வைத்து அப்பனை அடுத்து வைத்துக் காட்டிய வடிவம். இது பல்லவர் காலத்தைச் சேர்ந்த எழிலார்ந்த வடிவம். இது தவறு என்று எடுத்து விடாது அப்படியே விட்டு விட்டார்களே, அதற்குரியோருக்கு எனது மகிழ்ச்சியையும் நன்றியையும் புலப் படுத்திக் கொள்கிறேன். காரணம் இதில் நுட்பமிகுந்த ஒரு விஞ்ஞானச் செய்தியுள்ளது. பிற்காலத்தில் இவ்விரண்டு பாகங்களும் இடம் புரண்டு விட்டதால் இது பற்றிய விஞ்ஞானமும் தடம் புரண்டு விட்டதெனலாம். இவற்றை இங்கே சொல்ல வேண்டிய அவசியம் யாதெனில், வரலாற்றுக் காலத்தில் விஞ்ஞான மயமாக இருந்த சிற்ப வடிவங்கள் சிதைவுக்குள்ளாகி விஞ்ஞானமும் சிதைந்து விட்டது. திருவையாறு தொடர்புடைய உமையொருபாகனின் உருவம் சாக்தவிஞ்ஞானக் கொள்கையினையுணர்த்தும் அமைப்பு. சாக்தக் கொள்கையானது அபரிமிதமான விஞ்ஞான நுட்பங்களைக் கொண்டதாகும். இதனைச் சாதாரணம் என்று ஒதுக்கி விட முடியாது. இந்தியச் சிற்பிகள் அனைவருமே

சாக்தர்கள்தான். சைவச் சார்புடைய சாக்தர்கள். பிற்காலச் சாக்தர்கள் அல்ல. சக்தியிலிருந்து ஆகாஸமாகிற சிவம் தோன்றி, அவ்வாகாஸமே சக்தியின் துணை கொண்டு அண்டபிண்டப் பொருள்களாகத் திரிபு அடைகிறது என்ற விஞ்ஞானச் செய்தியினை அந்த அர்த்தநாரிப் படிமத்தில் சக்தியை முன்வைத்த பாங்கில் காணலாம். Energy changes into space and space into spatial form என்பது அசைக்க முடியா விஞ்ஞானமன்றோ! இதிற்றான் $E = mc^2$ என்ற ஐன்ஸ்டீன் சூத்திரம் நன்கு விளக்கமுறுகிறது என்பேன். பிற்காலச் சைவத்தில் ஆகாஸத்தை (லிங்கத்தை) மூலப்பொருளாகக் கொண்டு அதற்குள் சக்தியை வைத்து, ஆகாஸமே சக்தியின் துணையால் அண்டபிண்டப் பொருள்களாக உருமாற்றம் கொள்கின்றது என்று ஒரு சமரசக் கருத்தின் அடியாய் உமை இடது பக்கம் வருவாளாயினள். இதெல்லாம் போக, நடராசப் படிமத்தில் கூட, சக்தி துடித்துத்தானே சிவனே ஆட முடிகிறதைக் காண்கிறோம். சக்தி இல்லையேல் சிவனில்லை என்ற கூற்றும் இதற்குத் துணை வருகிறதல்லவா? சிவசக்தி நடனத்தில் உமை தோற்கடிக்கப்பட்டாள் என்பது சமயக் கொள்கையின் வெற்றி வரலாறு: ஆனால் அது விஞ்ஞானத்தின் தோல்வியாயிற்று அல்லது தொய்வு ஆயிற்று என்பேன். உமை தோற்றாளோ இல்லையோ, அதிலே ஓர் அடிப்படை விஞ்ஞானக் கொள்கை அடிபட்டு விட்டதாக எனக்கொரு நினைப்பு. இதுபோலத்தான் ஐமுகன் நான்முகன் ஆனான் என்று நினைக்கிறேன். இதிலேயும் பிரபஞ்ச விஞ்ஞானக் கருத்தொன்று இம்மரபி லிருந்து கொய்யப்பட்டு விட்டதாகக் காண்கிறேன். இந்த நிலையில் நான்கு வேதங்களை அவர்தம் நான்கு முகங்கள் காட்டும் என்று சொல்லி, மரபில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி விட்டார்கள். என்றாலும் வாஸ்து விஞ்ஞானத்தின் அதிநுட்பப்

பொருளான - படமான - வாஸ்து புருஷ மண்டலத்தில் பிரம்ம பதத்தில் அமர்த்தப்படும் நான்முகப் பிரம்மனை 'வாஸ்துப் பிரம்மன்' என்று குறிப்பிட்டு, நான் குறிப்பிடும் பழைய வாஸ்து பிரம்மக் கருத்தை உணர்த்தியும், உறுதிப்படுத்தியும் இருப்பதைக் காண்கிறேன். இதற்குரிய தியான ஸ்லோகம் ஒன்று 'சிவாகம் தியான ரத்னாவளி' என்ற சிறு நூலில் காணப் படுகிறது. 'வாஸ்து புருஷ மண்டலத்தின் நடுப்பதத்தில்' என்று பொருள்பட 'கர்ணிகா மத்யே வாஸ்துப் பிரம்மானம் அர்ச்சயேத்' என்று அந்த ஸ்லோகம் முடிகிறது. இந்தியத் துணைக் கண்டத்திலே மிகத் தொன்மையான கோயில் என்று சொல்லப்படும் காசி விசுவநாதர் ஆலயத்தில் விஸ்வகர்மனின் திருவுருவம் பூசையில் இன்றும் உளது. அந்த ஊரில் கடைகள் தோரும் வைத்து விற்பனை செய்யப்படும் பொருளே பெரும் பாலும் விஸ்வகர்மனின் படிமங்களேயாகும். அதாவது வங்காளத்தில் விசுவகர்ம தத்துவம் பெரிதாகக் கொண்டாடப் படுகிறது. May Day யானது விஸ்வகர்ம தினமாக வங்காள அரசால் கொண்டாடப்படுகிறது என்றால் இதன் முக்கியத் துவத்தை யூகித்தறியலாம். பழமைக்கும், பழமையான பொருள்களிலேதான் நம் விஞ்ஞானம் மறைந்து கிடக்கிறது. நமது பண்டைப் பண்பாட்டிலேயும் இலக்கியங்களிலேயும்தான் அதனை அகழ்ந்தறிய வேண்டும். புதை பொருளாராய்ச்சியில் இவற்றை கண்டெடுக்க இயலாது. தொல்பொருள் ஆராய்ச்சி யானது நமது கலாச்சாரத்தை முழுமையாகக் காட்டி விட்ட தாகச் சொல்லிட முடியாது. அங்ஙனம் கருத்துக் கொண்டு விடாதீர்கள். மேலும் கர்நாடக மாநிலத்தில் விஸ்வகர்மாவுக்குக் கோவில்களும் பல உள. பஞ்சாப் மாநிலத்தில் விசுவகர்மக் கொள்கை விரிந்து நிலவுகிறது. சென்னை காளிகாம்பாள் கோவிலிலும் இப்போது விசுவகர்மனின் படிமத்தைக் காணலாம். சிற்பியர் வீட்டில் இமயம் முதல் குமரி வரை

இவரைப் பல நிலைகளில் காணலாம். தமிழகச் சிற்பிகள் தங்கள் வீட்டு விசேடங்களை முன்னிட்டு அனுப்பப்படும் அழைப்பிதழ்களில் 'விராட் விஸ்வப் பிரம்மனே நம: என்று குறிப்பிடத் தவறுவதில்லை. இந்தப் பின்னணியில் மேலும் விஸ்வகர்மப் படிம அமைதியைப் பார்ப்போம்.


விஸ்வகர்மனின் திருமேனி எப்படியுளது? நான்கு தலைகளை முறையே, கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய பிரதான திசைகளை நோக்குமாறு அமைத்து நான்கு தலைகளுக்கு இடைப்பட்ட இடத்தில் மேல்நிலையில் ஐந்தாவது தலையை அமைத்துக் காட்டிய காட்சியே விஸ்வகர்மத் திருமேனியாகும். பிற்காலச் சிற்பியர் அவ் ஐந்து தலைகளை வரிசையாகவும் வைத்துக் காட்டினார்கள்.



விராட் விஸ்வகர்மன்

ஆனால், முதலில் சொல்லிய முறையே பண்டைய முறையாகும். விஞ்ஞானக் கருத்தொத்த நெறியுமாகும். அதாவது முகங்கள் திசைகளைக் காட்டும். பிந்து பிளந்து நான்கு திசைகளில் பிரிந்தோடும் சக்திக் கோடுகளைக் காட்டும்.

(energy lines sprouting from `Bindu')இஃதொரு இந்திய Big bang theory ஆகும். இந்த முறையினைப் பிரிதொரு படிம அமைப்பில் அதே கருத்தில் இருப்பதைத் துலக்கமாகக் காட்டுவேன். பஞ்சமுக லிங்கம் என்ற ஒரு வடிவம் முற்காலத்தில் சமய வழக்கில் இருந்து வந்திருக்கிறது. இது பிற்காலத்தில் வழக்கொழிந்து போய் விட்டது. அத்தகைய



பிந்து வெடித்து
ஆற்றலின் ஓட்டம்
திசைகள் தோன்றல்

அமைப்பில் லிங்கத்தை நடுவிலே வைத்து, நான்கு திசைகளை நோக்கியதாய் நான்கு முகங்களை மார்பளவில் லிங்கத்தை ஒட்டியதாகவும், லிங்க பீடத்தின் மீது அமர்ந்ததாகவும் வைத்திருப்பார்கள். இதில் ஐந்தாவது முகமாகிய ஈசான முகத்தை லிங்கத்தலை மீது வைத்திடாமல் லிங்கத்தையே ஐந்தாவது முகமாகக் கொள்ளுவார்கள். நான்கு முகங்கள் நான்கு திசைகளைக் காட்டுவதோடு ஈசானமுகம் ஆகாஸத்தைக் குறிப்பதால் இவ் ஆகாஸம் கண்களுக்குத் தெரியவில்லை என்பதால், உடல் தரித்த உருவத்தை அங்கே வைத்திடவில்லை என்பது கருத்து. இதற்கு பஞ்சமுகலிங்கம் என்று பெயர். இது விஸ்வகர்மனின் ஒரு வகையான அமைப்பாகும். பிரிதொரு அமைப்பும் இருக்கிறது. இவ் வமைப்பில் ஈசான முகத்தின் மார்பளவு உருவத்தை லிங்க சிரசின் மீது வைத்து பஞ்சமுக லிங்கம் என்றும்

காட்டினார்கள். இவையெல்லாம் எப்படி மறைந்தன என்று எனக்குச் சொல்லத் தெரியவில்லை. ஆனால் இந்த அமைப்பு மிகப் பெரிய விஞ்ஞானக் கருத்தை உருவகிக்கிறது என்ற நுட்பத்தை மட்டும் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. மற்ற விஷயங்களைக் கால ஆராய்ச்சியாளர்களிடமும் சமய வரலாற்று ஆராய்ச்சியாளர்களிடமும் விட்டு விடுகிறேன். நான் மேற்கொண்ட விஞ்ஞான நுட்பத்தை மட்டும் விமர்சிக்க மேலும் செல்லுகிறேன்.

நான்முகப் பிரம்மனின் நான்கு முகங்கள் நான்கு வேதங்களைக் குறிப்பிடும் என்று சொன்னால், தர்க்க ரீதியாக ஐமுகப் பிரம்மனின் ஐந்து முகங்கள் ஐந்து வேதங்களைக் குறிப்பிட வேண்டுமல்லவா? ஆம். அப்படித்தான். அப்படியானால் அந்த ஐந்து வேதங்களின் பெயர்கள் யாவை என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? அவை முறையே ரிக், யஜுர், ஸாம, அதர்வண என்பதோடு 'பிரணவம்' என்ற பெயருடைய ஒரு வேதத்தையும் சேர்த்து ஐந்து வேதங்களாகச் சிற்பியர் மரபில் சொல்லி வருகிறார்கள். இந்தப் பிரணவ வேதத்தைச் சிற்பியர்தம் வேதம் என்று தொன்று தொட்டுச் சொல்லி வருவதையும் உற்று நோக்குக. அது மட்டுமல்ல. அதர்வண வேதத்தின் ஒரு பகுதி என்றும் அதனைச் சொல்வதுண்டு. இன்னொரு வேதனையான செய்தி. அதர்வண வேதத்தையே ஒதுக்கி விட்டு வேதங்கள் மூன்றுதான் என்று ஒரு காலத்தில் ஒரு சாரார் சொல்லி வைத்தார்கள். புருஷ சூக்தமும் பகவத் கீதையும் இதற்குச் சான்று என்பார்கள். காரணம் இதில் மூன்று வேதங்களே பேசப்படுகின்றன. ஆனால் சிற்பியர்தம் முன்னோர்கள் தங்களை இந்த அதர்வண வேதத்தைச் சார்ந்தோர் என்றே சொல்லிக் கொண்டார்கள். காரணம் உருவ வழிபாட்டுக்கு ஆதாரமான செய்திகள் இங்கே இருக்கின்றன. வாஸ்து

சூத்ரோபநிஷத் என்ற ஒரு நூல்கூட அதர்வண வேதச் சார்புடையதாகவும் உளது. உருவ வழிபாட்டுக்கு இலக்கணம் காட்டுகிறது இந்நூல். வேள்வி செய்தலைப் பெரிது படுத்தி வலியுறுத்தும் மூன்று வேதங்களின் அடிக்கொள்கைக்கு மாறுபட்டிருப்பதால் இந்த வேதம் ஒதுக்கப்பட்டிருந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். இந்த நிலையில், நல்ல வேளையாக, ஐமுகன் நான்முகனாகத் திரிபுற்றது போல, நான்முகன் திரிமுகனாக மாறிவிடவில்லை. இந்த நான்முகனின் பெயரைக் காப்பாற்றிட அதர்வண வேதத்தையும் சேர்த்து நான்கென்று சொல்லிட நம் நாட்டு மூதறிஞர் முயன்று வெற்றியும் பெற்று விட்டார்கள். இதனால் சிற்பியர் வேதமும் தப்பித்துக் கொண்டு விட்டது. சிற்பிகளுக்கு வேதம் தேவையா என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? சிற்பிகள் வேத வித்துகளாக இருக்க வேண்டுமென்று வாஸ்து நூல்கள் வலியுறுத்துகின்றன. 'ஸ்தபதி : ஸர்வ சாஸ்தரக்ஞ : வேத விச்சாஸ்த்ரபாரக :' என்று வாஸ்து சாஸ்திரம் கூறுகிறது.

स्थपतिः सर्वशास्त्रज्ञः वेदविच्छास्त्रपारगः

பிறிதொரு காலத்தில் வேறொரு கருத்தும் நிலவுவதாயிற்று. வேதம் ஒன்றுதான் ஆனால் வியாசரால் வேள்வி நிகழ்ச்சியின் சௌகரியத்துக்காக நான்காகத் தொகுத்துக் கொடுத்தார் என்று. அப்படியானால் ஒன்றாய் இருந்த அந்த வேதத்தின் பெயர் என்ன? இந்த வினாவுக்கு விடை தருவது 'பாகவதம்'. ஒரு காலத்தில் வேதம் ஒன்றாக இருந்ததென்றும் அதன் பெயர் 'பிரணவ வேதம்' என்றும் சொல்லுகிறது. 'ஏகஏவ புரா வேத : பிரணவோ ஸர்வ வாங்மய :

एक एव पुरा वेद प्रणवो सर्ववाङ्मयः

இதுதான் சிற்பியர் சொல்லும் ஐந்தாவது வேதம் எனத் தெரிகிறது. ஸ்கந்தபுராணத்தில் பிரணவ வேதம் பேசப்படுகிறது.

(பழைய பதிப்பில் இருந்த ஒன்று புதிய பதிப்பில் இல்லை. அத்தியாயமே நீக்கப் பட்டு விட்டது.) ஸ்காந்தத்தில் நாகர காண்டத்தில் 'பிரண வேதம்' பேசப்படுகிறது. இப்பகுதி கன்னட மொழியில் விரிவுரை செய்யப்பட்டுள்ளது. அதில் வரும் முக்கிய ஸ்லோகங்கள் மட்டும் நல்லவேளையாக சமஸ்கிருதத்திலேயே இருந்து விட்டன. உரைதான் கன்னடத்தில் இருப்பதாயிற்று. இந்தப் பிரணவ வேதத்தைத் தெரிந்திருந்த சிவகுமாரனாகிய முருகன், நான்முகனாகிய பிரம்ம தேவனை ஓங்காரத்தின் பொருள் கேட்டிட, பிரணவப் பொருளை விளக்க முடியாத பிரம்மனைச் சிறையில் அடைத்திட்ட நிகழ்ச்சியை ஒரு கதையாகக் கேட்கிறோம். இதுதானே சுவாமிமலை 'தகப்பன் சாமி'யின் கதை. ஆனால் அதனை ஊடுறுவிப் பார்க்கும் போது, முருகன் எதிர் பார்த்தது விஞ்ஞான விளக்கம் என்று உணர்வாகிறது. இது பற்றிய விஞ்ஞான நூலைத்தான் 'பிரணவ வேதம்' என்று சொல்லியிருக்க வேண்டும் என்று எனக்கு சொல்லத் தோன்றுகிறது. இந்த விளக்கத்தை திருச்சிற்றம்பலவன் கோயில் தத்துவத்திற் காண்கிறேன். நானும் ஒரு சிறிது விளக்கியுமிருக்கிறேன். இவற்றையெல்லாம் விடுத்து ஐமுகப் பிரம்மனுக்கு வேறொரு விஞ்ஞானக் கருத்திருப்பது இப்போது எனது 'வேர்களைத் தேடிடும் பயணத்தில்' சந்தித்திருக்கிறேன். இதனைக் குறிப்பாக ஏற்கனவே சொல்லி விட்டேனல்லவா? எனினும் இதனைத் தனிநூலாக எழுதி அறிஞர் உலகத்துக்குப் படைத்திடவிருக்கிறேன்.

நாம் விளக்கிக் காட்டிட முற்பட்ட பொருள் ஐமுகப் பிரம்மனாகிய விஸ்வகர்மனும், மயன் அப்பெயரைச் சூடிக் கொண்டதின் சூக்குமக் கருத்தும்தானே? எனவே இதுவரை சொல்லி வந்த செய்திகளெல்லாம் ஒரு புறமிருக்கட்டும். விஸ்வகர்மன் என்ற பெயர் இந்தப் பிரபஞ்சத்தை ஆக்கி,

அதற்குள் பல்வேறு உயிரினங்களைப் படைத்துக் கொடுத்த மூலப் பொருள் அல்லது கடவுள் என்பதுதான் அச்சொல்லின் உண்மையான கருத்தாகும். அப்படியிருக்கையில், மயன் தன்னை 'கடவுளுக்கு ஒப்பான விஸ்வகர்மன்' என்று சொல்லிக் கொண்டதில் ஏதாவதொரு நுட்பம் இருக்க வேண்டுமல்லவா? தற்புகழ்ச்சியாகவோ, சமுதாயத்தில் அந்தஸ்து பெறுவதற் காகவோ, புனைந்துரைக்கப்பட்டதாகவோ இந்தச் சிற்பக்கலை மரபினர் விஷயத்தில் இல்லை என்பதை நான் ஓரளவு நன்றாகவே புரிந்து கொண்டிருக்கிறேன். இதனைக் கொஞ்சம் அழுத்தமாகவே சொல்லிட விரும்புகிறேன். பொதுவாக, விஸ்வகர்மர் என்ற இந்தச் சிற்பியர் ஞாலத்தைப் படைத்த விஸ்வகர்மனை ஒத்து என்னதான் செய்து விட்டார்கள்? அங்ஙனம் செய்தவை பரம்பொருளாகிய அந்த விஸ்வகர்மனுடைய செயலுக்கு எங்ஙனம் ஒப்பாகும்? இவற்றைச் சொல்ல முற்பட்டால் இவர்தம் மரபு விஞ்ஞானம் இதற்குப் பின்னணியாகவிருப்பதை நன்கு புரிந்து கொள்ளலாம். வேதங்களிலே விஸ்வகர்மனைப் பற்றி வரும் செய்திகளை எல்லாம் தொகுத்து ஒரு சேர ஆராய்ந்தால் இந்த நாட்டின் கலாச்சார வேர்கள் முற்றிலும் வெளிப்பட்டு நிற்கும். இதனை யார் செய்யப் போகிறார்கள்? இதனை ஒரு Research project ஆக இக்கால இளைஞர்கள் எடுத்துக் கொள்ள வேண்டிய காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. இதற்கு ஒரு Chair கூடப் பல்கலைக் கழகத்தில் ஏற்படுத்தலாம். இக் காலத்தில் எதை எதையோ ஆய்கிறார்கள். ஆனால் நான் சொல்லும் பொருள் நமது கலாச்சார வேர்களை மட்டும் அறிவதற்கல்ல, அதற்கு அப்பால் உள்ள விஞ்ஞான மூலத்தைக் கண்டு தேர்ந்திடவும், அதனால் பயன் எய்திடவும் உதவும்.

மீண்டும் எடுத்துக் கொண்ட விஷயத்துக்கு வருவோம். ஒரு கருத்தை அல்லது ஒன்றைப் படைப்பதற்கோ, அல்லது உருவகப்படுத்துவதற்கோ, உணர்வு அல்லது ஆசை மட்டும் இருந்திட்டால் போதாது. உணர்ந்த வண்ணம் அல்லது ஆசைப்பட்ட வண்ணம் அதனை ஆக்குவதற்கேற்ற, பிரதி செய்வதற்கேற்ற அளவுப் பிரமாணங்கள் மிகமிகத் தேவையாகுமல்லவா? இன்னும் நுட்பமாகச் சொன்னால் உணர்வுற்ற பொருள்களை உருவகித்திட ஓர் அளவுகோல் தேவை. அல்லது ஓர் அளவியல் தேவை. எனவே இந்த ஞாலத்தைப் படைத்த விஸ்வகர்மன் பற்பல உயிரினங்களைப் படைத்தற் பொருட்டு ஒரு வகையான அளவுகோலை அல்லது அளவியலைக் கையாண்டிருப்பானல்லவா? அவன் படைத்தனவெல்லாம் material forms அல்லவா? கண்களால் பார்த்தறியும் பொருள்கள் அல்லவா? எனவே, எத்தகைய அளவுகோலை விஸ்வகர்மன் பயன்படுத்துகிறான் என்ற நுட்பத்தை இந்த வாஸ்து விஞ்ஞான மரபு கண்டு தேர்ந்து. அந்த நுட்பத்தை மரபுச் சிற்பியர் கைகளிலே கொடுத்து, வழிமுறை கற்பித்து, அவர்களைக் கையாளவும் விட்டு, அவ்வழி பிறப்பித்த அனைத்துப் பொருள்களையும் உயிர்ப்புள்ள பொருள்களாக ஆக்கித் தரச்செய்து விட்டான் என்பதையும் இந்த ஏட்டில் சுட்டிக் காட்டி இருக்கிறேன். இதனைக் கண்டு சொன்னவனே மயன் ஆகிய அந்த வஸ்து விஞ்ஞானிதான். இக்காரணம் பற்றியே மயன் தன்னை 'விசுவகர்மா' என்று புலப்படுத்திக் கொண்டான். இதைத் தெரிந்து கொண்டு செயலாற்றிய மரபுச் சிற்பியர்களும் தங்களை 'விசுவகர்மர்' என்று சொல்ல வேண்டியவர்கள் ஆனார்கள். மிகையொன்றுமில்லையே. இஃதொரு தொழிற் பெயரே ஆகும்.

மேற்சொன்ன அளவு முறையை இந்த ஏட்டில் கோடு காட்டியிருக்கிறேனே தவிர விளக்கிச் சொல்லவில்லை. இந்தப்

பொருளை இப்போது எடுத்துக் கொண்டால் அஃதே தனி நூலாகிவிடும். எடுத்துக் கொண்ட பொருளை விட்டு வெகு தூரம் சென்றவனாகி விடுவேன். எனவே என்மீது கோபம் கொள்ளாதீர்கள். உங்கள் உள்ளத்தில் நான் கிளறி விட்ட ஆர்வம் தணியாதிருக்கும் என்று நம்புகிறேன். அந்த நூல் வெளிவரும் வரை பொறுத்திருங்கள். சமயத் துறையானது வரலாற்றுக் காலத்தில் 12 வது நூற்றாண்டுக்குப் பிறகு விஞ்ஞானத்தை விட்டு வெகு தூரம் செல்ல நேர்ந்ததால் நமது கலாச்சாரத்தில் ஒரு சில குழப்பங்கள் ஏற்படுவதாயின. இவற்றைப் போக்கி நமது சமயமானது secular, scientific and universal என்று காட்டிடவே இந்நூலில் பல முயற்சி களுக்கிடையே இந்த முயற்சியையும் செய்திருக்கிறேன். இந்தியப் பண்பாட்டில் விஞ்ஞானமே சமயமாகவும், சமயமே விஞ்ஞானமாகவும் உளதென்பதை தெரிந்தவரை, முடிந்தவரை காட்டியுள்ளேன்.

இசைத் துறையானது ஒரு விஞ்ஞான அடிப்படை கொண்டு அனுபவத்துறையாக விளங்குகிறதைப் போல, வாஸ்து மரபு என்பதும் அதே விஞ்ஞான அடிப்படையைக் கொண்டு அனுபவத் துறையாக இருந்து வருகிறது. இஃதொரு விந்தையன்றோ? நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானியர் திலகம் ஐன்ஸ்டீன் ஒன்று சொன்னான். எப்போது? $E = mc^2$ என்ற சூத்திரத்தை விளக்கி விட்டுச் சொன்னான். விஞ்ஞானமே சமயமானால் அச்சமயம் அனுபவ சமயமாகி, பயன்தரு துறையாகி நீடு நிலைத்து நிற்கும் என்று பொருள்பட science should be religion என்றான். அச்சமயம் பாரத நாட்டில் சிறப்பாகவுளதென்பேன். இந்த நிலைக்கு நமது சமயம் ஓங்கி நின்றிட வாஸ்து மரபின் பங்கு மகத்தானது என்றும் சொல்லுவேன். ஏன்? ஒரு காலத்தில் நம் சமயத்துக்கு வாஸ்து சமயம் என்றும் கோயிற் சமயம் என்றும் இரண்டு பெயர்கள்

இருந்தன என்ற செய்தியை ஆய்வறிஞர் தம் ஆய்வுக்கு வாஸ்து மரபிலிருந்து எடுத்து வைத்திருக்கிறேன் இந்தச் சிறு நூலில், பொருந்துமா? என்று ஆய்வு நிகழ்த்துவர் என்றும் நம்புகிறேன்.

இயலும் இசையும் நடமும் எங்ஙனம் universal லோ spiritual லோ எக்காலத்தும் எவர்க்கும் பொதுவானவையோ அதுபோல வாஸ்து மரபின் படைப்புக்களும் universal ஆகவும் spiritual ஆகவும் இருக்கின்றன என்று சொல்லிட விரும்புகிறேன். வாஸ்துக் கலை மரபில் இன, இட, இடர் பாடுகள் ஏதுமில்லை என்பேன். அரசன் தன் மகனையே அரசனாக்கியது போல, கவிஞன் தன் வழி வந்தோரை கவிஞனாக்கியது போல, இசைஞன் தன் மகனை இசைஞனாக பயிற்றுவிப்பது போல, வேதியர் தம் மக்களை வேதியராக்கியது போல, இந்த வாஸ்து சில்பமானது ஒரு சாராரிடம் இருந்து கொண்டு பாரம்பரியமாக வளர்ந்து விட்டது. வரலாற்றுக் காலத்துக்கு முந்திய காலம் தொட்டு, இந்த முறையை அரசர் முதல் ஆண்டி வரை ஆதரித்தும் போற்றியும் பேணியும் வந்திருக்கிறார்கள். தொழில் மரபுதானே! இதில் வேறு என்ன துவேஷத்திற்குரிய அம்சம் உளது? உலக நாடுகளின் பண்டைத் தொழிற் பண்பாட்டிலும் இதனைப் பார்க்கலாம். அக்காலத்து வாழ்க்கை முறையிலும் தொண்டு நெறியிலும் இந்த ஒழுகுமுறை வேரூன்றி விட்டது. இப்போது தமிழ்நாடு அரசின் முயற்சியால் இக்கலைஞானம் எல்லோர்க்கும் ஒரு கல்லூரி மூலம் கிடைத்து வருகிறது என்பதையும் இடையே சொல்லிட விரும்புகிறேன். இந்த முயற்சியில், இந்த மாற்றத்துக்கு நானும் எனது தந்தையார் திரு.வைத்தியனாத ஸ்தபதியும் முன்னோடிகளாக இருக்கிறோம் என்பதைப் பணிவுடனும் பெருமிதத்துடனும் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தகைய உள நெகிழ்வினால் நான் மரபு விஞ்ஞானத்தை

பொது மக்கள் முன்னிலையில் கடையாக விரித்திருக்கிறேன். கொள்வார் பல வந்து கொண்டிருப்பதால் என் கடை விரிவடையும் என்றும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதற்கு எவராவது இடையூறு செய்வார்களேயானால் இந்த 'இரும்பு' மேலைநாடு சென்று மினுமினுக்கும் பொருள்களாகத் திரும்பி நம்மிடையே வந்து சேரும் என்று சொல்லிடவும் நினைக்கின்றேன். எதுபோல எனில், தென்னாட்டில் பிறந்த மயன் வடநாடு சென்று அங்கே அவன் மரபுப்படி செய்த கலைப் பொருள்களைத் தென்னாட்டுக்கு எடுத்து வந்து, தன்னாட்டுச் சிற்பிகளிடம் காட்டிவிட்டு 'நுண் வினைக் கம்மியர்காணா மரபின' என்றும் 'மயன் விதித்துக் கொடுத்த மரபின இவைதாம்' என்றும் தென்புலத்து மன்னன் ஒருவன் சிலப்பதிகார வரலாற்றுக் காப்பியத்திலே சொன்னானே அது போல என்பேன்.

எனக்கு ஒரு வியப்பு நவீனகால விஞ்ஞானமானது தொட முடியாச் சிகரங்களையெல்லாம் தொட்டுப் பார்த்து, புகமுடியாச் சந்து பொந்துகளிலெல்லாம் புகுந்து விளையாடி அடைய முடியாத் தூரங்களையெல்லாம் கடந்து சென்று, வியத்தகு ஏற்றம் கொண்ட மாபெரும் விஞ்ஞானமாக விளங்குகிறது. அத்தகைய ஏற்றமிகு விஞ்ஞானத்திற்கு எங்ஙனம் நம்முடைய ஆகாஸத்தைப் பற்றிய ஆய்வு சித்திக்கவில்லை என்று எனக்குப் புரியவில்லை. நான் பெரும்பகுதி சொல்லி வந்த மரபு விஞ்ஞான நுட்பங்களோடு நவீன விஞ்ஞானம் பெரும்பாலும் ஒத்தும் போகிறது. அப்படி இருக்கையில், எப்படி இந்த நவீன விஞ்ஞானம் ஆகாஸத்தைப் பஞ்ச பூதங்களில் ஒன்றாக ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டது என்பது புரியவில்லை. இந்த நிலையில் ஆகாஸத்தை மூலப் பொருளாகவும் அறுதிப் பொருளாகவும் நம் நாட்டுப் பெரியோர்கள் ஏற்றுக் கொண்டதோடல்லாமல் அதனை

ஏற்றிப் போற்றி அனுபவப் பொருளாகவும் எப்படி மாற்றிக் கொள்ளவும் முடிந்தது என்று சிந்திக்கும் பொழுது, இக்கால விஞ்ஞானத்திற்குப் பிறிதொரு பக்கம் (other side) இருக்கிற தென்பது நன்கு புலனாகிறது. பாரத நாட்டில் வளர்ந்து வந்த விஞ்ஞானமானது இன்று நேற்றுத் தோன்றிய விஞ்ஞானம் அல்ல. சுமார் 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இவ்விஞ்ஞானம் ஸ்திரப்பட்டு விட்டதாக என் ஆய்வின் மூலம் நான் காண்கிறேன். இந்த ஏட்டில் நான் சொல்லிட முயற்சித்த ஆகாஸ விஞ்ஞானம் - space science இன் அடியாய்ப் பிறந்ததினால் விஞ்ஞானமே ஆகும் என்று சொன்னேன். அது மட்டுமல்லாமல் இந்த விண்ணையும் அதிலிருந்து வெளிப்பட்ட ஒரு பேராற்றலையும் கண்டு தேர்ந்திட்ட நம் நாட்டு விஞ்ஞானம் மிகப் பெரிய சாதனை ஒன்றைச் செய்திருக்கிறது. இந்த விஞ்ஞானம் பிரபஞ்சமூலத்தைத் தொட்டு விட்டது என்பேன். இதன் பயனாய் இந்தியர்களாகிய நாம் ஆன்ம சுகம் பெறக் கொடுத்து வைத்தவர்களானோம் என்றும் சொல்லுவேன். இந்த மூலத்தைத்தான் 'சக்தி' என்றும் 'ஆற்றல்' என்றும் 'ஒளி' என்றும் 'பிரம்மம்' என்றும் வேத மரபிலும் கலை மரபிலும் சொல்லி வருகிறோம். இதனாற்றான் இந்தியப் பண்பாடு ஜீவனுள்ள, உயிர்ப்புள்ள, காலங்கடந்து வந்தும் புதுமை மிகு பண்பாடாய் இருந்து வருகிறது என்பேன்.

இதுவரை சொல்லி வந்த மரபு விஞ்ஞானக் கருத்துக்களையும், மரபு இலக்கண நுட்பங்களையும் கேட்டு வந்த உங்களுக்கு இந்த நிலையில் கருத்தொன்று உளத்திலே உருவாகியிருக்க வேண்டுமென்று நினைக்கிறேன்.

இயல், இசை, நடம் என்ற மூன்று கலைத் துறைகளை இணைத்து 'முத்தமிழ்' என்று சொல்லி மகிழ்ந்து வருகிறோம், பெருமைப்படுகிறோம். இந்த இணைப்பும் இன்பமும் வெறும்

வரலாற்றுத் தொன்மையால் மட்டும் ஏற்பட்டதல்ல என்பதை இங்கே நினைவூட்டிடக் கடமைப்பட்டவனாகிறேன். பிறிதொரு அடிப்படைக் காரணம் உளதென்பதை நாம் ஆய்ந்தோமில்லை. அறிஞர்கள் இத்திசை நோக்கி ஆய்தல் வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உலகத்தில் தோன்றிய ஒவ்வொரு நாட்டிலும், அந்தந்த நாட்டு மக்கள் அவர்தம் உளப் பண்பாட்டுக்கு ஏற்ப, இயல், இசை, நடம், சிற்பம், கட்டடம் ஆகிய துறைகளில் ஒரு வகைப்பட்ட மரபை வளர்த்துக் கொண்டு அவற்றைப் போற்றியும் ஒழுகியும் வருகிறார்கள். அங்ஙனம் தோன்றிய கலை மரபுகளையும் நமது நாட்டில் தோன்றிய இயல், இசை, நட மரபுகளையும், சிற்ப, கட்டட மரபுகளையும் ஓர் ஆய்வு மேடைக்கு கொணர்ந்து அவற்றின் அடிப்படையினையும், அவை தோற்றுவிக்கும் காட்சிகளையும், அக்காட்சிகள் தூண்டிடும் இன்ப உணர்வுகளையும் அனுபவங்களையும் ஒரு பாற்கோடாமல் சோதனைக்குட் படுத்தினால் நமது நாட்டுக் கலைகள் தோற்றுவிக்கும் சுவை உணர்வுகளும் அவற்றால் ஏற்படும் பயனும் எல்லாவற்றையும் விஞ்சி நிற்கின்ற நிலையைக் காணலாம். இங்ஙனம் தனித்தும் உயர்ந்தும் நிற்பதோடு அல்லாமல் இவ்வுலகச் சூழலிலுருந்து நம்மை விடுவித்து இனமறியா வேறொரு சூழலுக்கும் அழைத்துச் சென்று அங்கே நம்மை உயர்த்திச் சொக்க வைத்து விடுவதையும் உணரலாம். இதனைத்தான், இந்த மூலத்தை உணர்ந்துதான் 'இசையாய் இசைப் பயனாய்' என்று சொல்லி அரியதொரு ஞால மூலத்தை பக்தி நெறியாளர் நமக்கு உணர்த்துவாராயினர். பிறிதொரு நாட்டின் கலை மரபானது தமது கலைகள் வழியாகப் பெற்ற இன்பத்தை இங்ஙனம் பேசியதாகத் தெரியவில்லை.

இருபதாவது நூற்றாண்டில் வாழ்ந்திட்ட அமர கவி பாரதியாரும் இக்கருத்தை வைத்துத்தான் 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்குங் காணோம்' என்று தானும் பாடி மகிழ்ந்து, நம்மையும் மகிழச் செய்தும், பெருமை கொள்ளவும் செய்திட்டார் என்பேன். இக் கூற்றானது மொழிக்கு மட்டுமல்லாது அம்மொழி வழித் தோன்றிய சிற்ப - கட்டட கலைகளுக்கும் பொருந்துமென்று அழுத்திக் கூறிட விரும்புகிறேன். இங்ஙனம் ஓர் அனுபவமும் கருத்தும் கொண்டிட ஏதாவதொரு அம்சம் பொது அடிப்படையாகவிருக்க வேண்டுமல்லவா? அப்படியானால் எதை வைத்து மகாகவி பாரதி அங்ஙனம் சொல்லியிருக்க வேண்டும்? ஒலியால் ஏற்படும் சொல்லும், சொல்லால் படைத்திடும் காட்சிகளும், காட்சிகளால் விளைந்திடும் இன்பமும், இதற்கெல்லாம் மேலாக இவ்வின்ப உணர்வினால் பெற்றிடும் சுகமாகிற பயனும்தான் காரணம் என்பதை நினைவிற் கொள்ளல் வேண்டும். இத்தகைய சுகத்தை நமக்கு இறுதியிலே வாய்த்திடச் செய்வது எது? இதுதான் ஆய்வின் குறிக்கோளாக இருந்திடல் வேண்டும் என்பதை ஆய்வர் பெருமக்களுக்குச் சொல்லிட விரும்புகிறேன். என்னைப் பொறுத்த வரைலயில் நான் இதனை வாஸ்துக் கலை மரபை முன்னிலைப் படுத்திச் சொல்லிட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாஸ்து மரபின் விடை யாதெனில், மொழிக்கு முதலானது - மூலமானது ஒலிதான். நமக்கென்று தனியொரு 'ஒலி' இருப்பதாகச் சொல்ல முடியாது, இதில் யாதொரு ஐயமும் இருப்பதற்கில்லை. இவ்வொலியானது மாந்தர் உள்ளத்தில் தானாகத் தோன்றி உலக மக்கள் அனைவர்க்கும் பொதுவாக விளங்கி, உலக மக்களை ஒரு குடைக்குக் கீழ் கொண்டுவந்து, இணைத்து வைக்கும் தன்மை படைத்தது. எது போலவெனில்

காற்று போல, தீ போல, நீர் போல, நிலம் போல என்று சொல்லலாம். இதனைத்தான் வேதமானது, ஒலி நிலையில் நாதப் பிரம்மம் என்றும், சொல் நிலையில் சப்தப் பிரம்மம் என்றும் சொல்கிறது. இவற்றைத் தமிழ் மரபில் ஒலி ஞாலம் என்றும் சொல் ஞாலம் என்றும், காட்சிகளை ஒலிச் சொற்கள் என்றும் ஒலிப் பொருள்கள் என்றும் சொல்லுகிறோம்.

இந்த நிலையில் ஒலி பற்றிய ஆய்வை நிறுத்திக் கொண்டு, ஒலியாலான பொருள்களையும் (aural forms) ஒதுக்கி வைத்துவிட்டு, கண்ணால் பார்த்தறியும் பொருள்களை (visual objects) மீண்டும் ஒரு முறை இவ் ஆய்வு மேடைக்குக் கொண்டு வருவோம்.

முன்னர் "விண்ஞானக் கோயில்கள்" என்ற கட்டுரையில் சொற் பொருள்களுக்கெல்லாம் மூலமாய் அமைவது 'ஓம் ஒலி' என்று கண்டோம்; விளக்கினோம். இதுபோல கண்ணால் பார்த்தறியும் காட்சிகளுக்கு மூலமாய் அமைவது 'ஓம் ஒளி' என்றும் பேசினோம். ஓம் ஒளியிலிருந்து தோன்றிய பொருள்களை ஒளிச் சொற்கள் என்று சொல்லலாம் தானே? அப்படித்தான் இயல்பில் உளதென்பதே வாஸ்து விஞ்ஞானம் உணர்த்திடும் பேருண்மையாகும். இதை வைத்து மேலும் பார்த்திட்டால் ஓம் ஒளியிலிருந்து தோன்றிடும் பொருள்களை ஒளிப்பொருள் என்று நிறுவிடலாமல்லவா? ஆம். இந்த ஆய்வு இப்படியே இருக்கட்டும்.

இலக்கணத் துறையிலே மொழிக்கு இலக்கணம் ஒன்றை வைத்துக் கொண்டிருக்கிறோம். இதற்கு மொழியிலக்கணம் என்று பெயர். பேசும் மொழியானது பிறருக்குப் புரிந்து அனுபவிக்கப்பட வேண்டுமென்ற காரணம் பற்றி இப்படிப்பட்ட இலக்கணம் ஒன்றைச் செய்து வைத்துக் கொண்டிருக்கிறோம். இந்த நிலையில் ஒன்றை நாம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது. நாம் பேசும் சொல்லெல்லாம் எதை

வைத்துப் பிறப்பிக்கப்படுகிறது? ஏற்கனவே உள்ள பொருள்களை வைத்தோ அல்லது புதிதாக உள்ளத்தில் உருவாக்கிக் கொண்ட பொருள்களை வைத்தோதான் அச் சொற்களானவை பொருளுணர்த்தும் சொற்களாக (uttered sound forms) பிறப்பிக்கப்படுகின்றன. அதாவது பொருளுக்கு நிகர்த்த சொல் பிறப்பதாகிறது. பொருளில்லையேல் சொல்லுமில்லை என்பது தேற்றமாகிறது. எனவே சொல்லைப் புரிந்து கொள்ள "சொல்லிலக்கணம்" ஒன்று தேவைப்படுமானால், சொல்லுணர்த்தும் பொருளைப் புரிந்து கொள்ள "பொருள் இலக்கணம்" என்ற ஒன்று இன்றியமை யாததாகிறதல்லவா? இந்த அடிப்படையிற்றான் பொருளுக்கொரு இலக்கண மரபு நம் நாட்டில் தோன்று வதாயிற்று. இதனை ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இந்தப் பொருளைத்தான் 'வஸ்து' என்று தமிழ் மரபிலும் சமஸ்கிருத மரபிலும் சொல்லி வருகிறோம் நடைமுறை வழக்கிலும் கண்ணால் பார்த்தறியும் எப்பொருளையும் வஸ்து என்ற சொல்லால் உணர்த்தி வந்திட்ட தமிழ்நாட்டின் பழைய பேச்சு வழக்கை ஒரு கணம் எண்ணிப் பாருங்கள். இங்ஙனம் இயற்றிய பொருள் இலக்கணத்தைத்தான் "வஸ்துலக்ஷணம்" என்றும் "வாஸ்துலக்ஷணம்" என்றும் சொல்லி வருகிறோம். இந்தக் கருத்தில் தோன்றிய சாஸ்திரங்களைத்தான் "வஸ்து சாஸ்திரம்" என்றும் "வாஸ்து சாஸ்திரம்" என்றும் சொல்லுகிறோம்.

இந்த நிலையில் மீண்டும் சொல்லிலக்கணத்தையும் பொருள் இலக்கணத்தையும் உற்றுப் பார்த்திடில் மகத்தானதொரு விஞ்ஞான அடிப்படை இவ்விரு இலக்கணங்களுக்கும் பொதுவாக அமைந்திருப்பது புலனாகும். இந்த விஞ்ஞான மூலத்தைத்தான் முன் சென்ற பக்கங்களில் பல நிலைகளில் குறிப்பிட்டு, சிற்றம்பலத்தையும்

திருவரங்கத்தையும் மையக் கருத்தாக வைத்துக் கொண்டு, வாஸ்து மரபில் காலூன்றி, விஞ்ஞானத் தத்துவம் ஒன்றைப் பேசிக் காட்டினேன்.

இந்த விஞ்ஞானத்தை மீண்டும் சுருக்கிக் காட்டி முத்தமிழ்ப் பிரச்சினைக்கு ஒரு விளக்கம் காண முற்படுகிறேன்.

இதற்கு எனக்கு ஆதரவுக்கை நீட்டுபவை இந்த 'வஸ்து' 'வாஸ்து' என்ற சொற்கள்தான். இச் சொற்களையும் மிக விரிவாக எனது கட்டுரையில் விமர்சித்திருக்கிறேன். அன்றாட உலகியல் பொருள்களைக் குறிப்பிட அச்சொற்களை நாம் பயன்படுத்தி வந்துவிட்டாலும் அச் சொற்களானவை மேலான விஞ்ஞானத் தத்துவச் சொற்களாக இருக்கும் தன்மையை விளக்கியிருக்கிறேன். வஸ்துவை eternal-substance என்றும் essence of the universe என்றும், ஆற்றல் என்றும் சக்தி என்றும் energy என்றும் நிறுவினேன். அந்த energy ஐ 'உணர்வு' என்றும் 'ஒளி' என்றும் மேலும் உறுதிபடவும், அறுதியிட்டும் சொன்னேன். கடவுளையே ஒளியாகக் காட்டினேன். இந்தப் போக்கில் விண்ணையே உணர்ச்சிமயமான நுண்பொருள் என்றும் விளக்கினேன். நம் அகவிண்ணும் உணர்ச்சிமயமான நுண்பொருளே என்று, சமன்படுத்தியும் பேசினேன். சொல்லுக்கும் பொருளுக்கும் பிறப்பிடம் இந்த அக விண் என்று காட்டி, இதனை அப்படியே மேல் நோக்கி எடுத்துச் சென்று புறவிண்ணும் உணர்ச்சி மயமான நுண்பொருள் என்றும் நிறுவி, ஞாலப் பொருள்கள் (Visual objects of nature) அனைத்தும் விண்ணின்றிழிந்த பொருள்கள் - விண் பெற்றுத் தந்த பொருள்கள் - என்றும் சொன்னேன். சக்தி மிக்க இந்த விண்பொருளைத்தான் வஸ்து புருஷன் என்று கூறினேன். இப்படிப்பட்ட ஆற்றலேமயமான பொருளைத்தான் விஞ்ஞானி ஐன்ஸ்டீன் 'E' ஆகக் கண்டார் என்று விளக்கி, விண்ணின்றிழிந்த பொருளே அவர் தம் mc^2

ஆக ஆனது என்று குறிப்பிட்டு இதனை "வாஸ்து புருஷன்" என்றும் சொன்னேன். இரண்டையும் சமன் படுத்திக் காட்டிய நுட்பத்தையும் விளக்கினேன்.

இறுதியாக ஒன்றைத் தொட்டுக் காட்டினேன். இந்த வஸ்து, வாஸ்து ஆகிய நுண்பொருள்களின் குணங்களாக - குணவடிவங்களாக - ஆடலனையும் அரங்கனையும் சித்திரித்தேன். குணங்களே இப்பூவுலகாகவும், பூவுலகப் பொருள்களாகவும் ஞாலப் பொருள்களாகவும் உருப்பெற்று வளர்வதாயின என்றும் என் சிற்றறிவுக்கு எட்டிய வரை விளக்கிச் சொன்னேன். இந்த குணங்களை வெளிப்படுத்திட (to manifest) உள்ளமாகிய அகவிண் ஆனது காலத்தைத் தோற்றுவித்து, காலமாத்திரைகளாக (கால-மா-திரைகளாக / கால அலைகளாக) கால அளவுகளாக (frequency of vibration/ rhythm) உருமாற்றம் கொள்கிறது என்றும் சொல்லி, இக் கால-அலைகள் எல்லாம் அகவிண்/புறவிண் தோற்றிய அலைகள் (subtle and gross waves) என்றும் சொல்லி, அவையெல்லாம் இயற்கையின் இயல்பு (குணம்) என்று காட்டினேன். இந்த விண் அலைகளே அகக் காட்சிக்கு (inner vision) மூலம், மூல ஆற்றல் என்றும் பேசினேன். இந்த அலைகளின் சீலமிகு கூத்தினை ஒளி நடம் என்றேன்; (Dance of the light) - இவ்வளவை தாளம் (rhythm) என்றும் காட்டினேன். இதுவே Dance of the sound - (சொல்) ஆகும் என்ற சொல்லி light form - மும் (Visual objects) sound form - மும் (aural forms) ஒன்றே என்றும் காட்டி இந்த sound and light ன் விஞ்ஞானச் சலனங்களை உற்றறிந்து அவற்றையே மொழி இலக்கணமாகவும் நம் முன்னோர் கொண்டதால் ஒலித் தமிழ் இனிமையாயிற்று என்றும், அங்ஙனமே ஒளித்தமிழும் இனிமையாகிட நேர்ந்தது என்றும், இரண்டும் ஒரே இலக்கண அடிப்படை கொண்டது என்றும் இங்கே இப்போது சொல்லிட விரும்புகிறேன்.

ஒலித்தமிழ் வகையைச் சார்ந்தது இயலும் இசையும் என்றால் ஏற்பீர்கள். ஏற்றுக் கொண்டு விட்டீர்கள். இப்போது சிற்பமும் கட்டிடமும் ஒளித்தமிழ் வகையைச் சார்ந்தது என்றால் ஏற்பீர்கள் என்று நம்புகிறேன். இவற்றைக் காதால் கேட்கும் தமிழ் என்றும் கண்ணால் பார்த்திடும் தமிழ் என்றும் பகுத்துக்கூறி இணைத்து வைக்கலாம். ஒலியும் ஒளியும் ஒன்றித்த தமிழ்தான் 'நடம்' எனப்படுகிறது. எனவே இயல் இசை நடம் என்பதை முத்தமிழ் என்று சொல்லிடும் போது சிற்பத் தமிழையும், கட்டிடத் தமிழையும் சேர்த்து ஐந்தமிழ் என்று சொல்லிட வேண்டுமென்று அறிஞர் பெருமக்களை வேண்டிக் கொள்கிறேன் ஒரே இடத்தில், ஒரே வயிற்றில் பிறந்திட்ட இந்த ஐந்து குழந்தைகளைத்தான் மனதில் வைத்து பஞ்ச மரபு என்ற ஓர் ஆழமிகு உருவகமே (metaphor) தோன்றியது நமது கலை மரபில் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். பிரபஞ்சத்தில் தோன்றிய அனைத்தும் ஐந்தைந்தாக - ஐயொலி, ஐயுலோகம், ஐவண்ணம், ஐம்புலன், ஐம்பொறி, ஐந்தொழில், ஐந்து கிரஹம், ஐம்பூதம் என்று கணித்தறியப்படுவதும் இக்கருத்தை வைத்து ஞாலத்துக்கே பிரபஞ்சம் என்று பெயர் சூட்டியிருப்பதும் தக்க சான்றுகளாகும் என்பதை கோடிட்டுக் காட்டிட விரும்புகிறேன்.

இக்கருத்தை தஞ்சையில் நிகழ்ந்த தமிழ் மாநாட்டில் 4.1.95 ம் நாள் அன்று அறிஞர் முன் படைத்தேன். அந்நாள் தொட்டாவது ஐந்தமிழ் என்று வழங்கிடச் செய்யலாமே என்று வேண்டுகோளும் விடுத்தேன். பல நூறு ஆண்டுகள் ஒதுக்கமுற்றுக் கிடந்த இந்த பஞ்ச மரபுச் செய்தியை என் உளத்தே முகிழச் செய்திட்ட 'வஸ்து' வையும் 'வாஸ்து' வையும் மனம் மொழி காயத்தால் இறைஞ்சுகின்றேன்.

வாழ்க ஐந்தமிழ் ! வளர்க வாஸ்து மரபு !!

விண் - ஞானக் கோயில்கள்

பொருள் அடைவு
(Subject-Index)

வை. கணபதி ஸ்தபதி

விண் - ஞானக் கோயில்கள்

பொருள் அடைவு (Index - subject)

அ

ஆ

இ

ஈ

உ

ஐ

ஒ

ஓ

க

ச

ஞ


த

ந

ப

ம

மேற்கண்ட 'பொருள் அடைவினை'த் தொகுத்தளித்த டாக்டர். எஸ்.பி.சபாரத்னம் அவர்களுக்கு வாஸ்து வேத ஆய்வு நிறுவனம் தனது நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறது. — *நூலாசிரியர்.*



TEMPLE IS NOT MERELY A HOME OF GOD BUT A FORM OF GOD AS WELL.

प्रासादं पुरुषं मत्वा पूजयेत् मन्त्रवित्तमः

TEMPLE BUILDING IS AN EMBODIED ENERGY